வட்டி
(interest)

அ. சுப்பையா

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

த.பா.நி. (க.வெ.) வரிசை எண்—476

வட்டி

ஆசிரியர்

அ. சுப்பையா, எம்.ஏ.,
பேராசிரியர், பொருளாதாரத்துறை,
அ.வ.அ. கல்லூரி,
மாயூரம்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition—July, 1973

T.N.T.B.S. (C.P.) No. 476

INTEREST

A. SUBBIAH

Price Rs. 3-65

'Published by the Tamil Nadu Text Book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.'

Printed by
ELANGOVAN PRINTERS,
23, Muthu Mudali Street,
Royapettah, Madras-14.

அணிந்துரை

திரு. இரா. நெடுஞ்செழியன்
(தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதின்மூன்ருண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் பி.ஏ. வகுப்பு மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்றுவந்தனர். 1968ஆம் ஆண்டின் தொடக்கத்தில் புகுமுக வகுப்பிலும் (P.U.C.), 1969ஆம் ஆண்டிலிருந்து பட்டப்படிப்பு வகுப்புகளிலும் அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளிலும் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித் தர முன்வந்த நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ் வகையில், கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்க்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு மதுரைப் பல்கலைக்கழகம் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

பல துறைகளில் பணிபுரியும் பேராசிரியர்கள் எத்தனையோ நெருக்கடிகளுக்கிடையே குறுகிய காலத்தில் அரிய முறையில் நூல்கள் எழுதித் தந்துள்ளனர்.

வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், தத்துவம், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் தனி நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்ற இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்ருன 'வட்டி' என்ற இந் நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 476 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 511 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு கல்வி, சமூகநல அமைச்சகத்தின் மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்டத்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

உழைப்பின் வாரா உறுதிகள் இல்லை; ஆதலின், உழைத்து வெற்றி காண்போம். தமிழைப் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம் பெறவேண்டும். அதுவே தமிழன்னையின் குறிக்கோளுமாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக.

இரா. நெடுஞ்செழியன்

பொருளடக்கம்

1. வட்டி வீதமும் அதன் தொன்மையும்

பொருளியல் துறையில் வட்டி வீதக் கொள்கையைப் போன்று சர்ச்சைக்குரியவை வெகுசில கோட்பாடுகளே. மாறுபட்ட எண்ணங்களை உருவாக்கிய, தவருகப் புரிந்துகொள்ளப்பட்ட, தாக்குதலுக்கும் காப்புக்கும் இலக்கான சில பொருளியல் கோட்பாடுகளிலே இதுவே தலையாயது. கீன்ஸ் பிரபுவின் பொருளியல் 'பொதுக் கோட்பாடு' வெளியீட்டுக்குப் பின்பும் வட்டி வீதக் கோட்பாட்டைச் சார்ந்த சர்ச்சைகள் அடங்கவில்லை. மாறுக, மேலும் பல சர்ச்சைகளை அது வளர்த்துவிட்டது. ஆகவே, நம்முடைய பணி மிகக்கடினமான ஒன்று. அது வட்டிவீதக் கோட்பாடுகளைச் சீர்தூக்கிப் பார்த்து, மாறுபட்ட கருத்துக்களுக்கிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி, பொருளியல் வல்லுநர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க கொள்கையமைப்பை ஏற்படுத்துவதே ஆகும்.

வெகு நாட்களாக நமக்குத் தெரிந்திருப்பவை இருவகையான வட்டிக் கோட்பாடுகளே. பணச் சார்புள்ள வட்டிக் கோட்பாடுகள் ஒருவகை; பணச் சார்பற்ற வட்டிக் கோட்பாடுகள் மற்ருெரு வகை. இவை ஒவ்வொன்றும் பொருள் சார்புள்ளது (objective), மனச்சார்புள்ளது (subjective) என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. பாம் பாவர்க், ஃபெட்டர் போன்றவர்கள் மனச்சார்புள்ள பணச் சார்பற்ற கோட்பாட்டை விளக்கினர். அவர்களின் கூற்றுப்படி வட்டி வீதம் தனி ஒருவரின் காலத்தேர்வைப் பொறுத்தது. பொருள் சார்புள்ள பணச் சார்பற்ற கோட்பாட்டை விளக்கியவர்கள் விக்ஸெல், நைட் என்ற இருவராவர். இவர்களுடைய கருத்துப்படி வட்டி வீதம் முதலில் இறுதிநிலை உற்பத்தித் திறனின் விளைவே ஆகும். இர்விங்ஃபிஷர் போன்ருேர் வட்டி

வீதத்தைப் பணச்சார்பற்ற கோட்பாட்டின் மூலம் மனச் சார்புள்ளதும் பொருள் சார்புள்ளதுமான வகைகளிலே விளக்கினர்.

பணச் சார்புள்ள வட்டிக் கோட்பாட்டைப் பொருளாதாரப் பெரும் புலவர் கீன்ஸ் விளக்கிப் பிரபலப்படுத்தினர் (பரப்பினர்). வட்டி வீதம் முழுக்க முழுக்கப் பணச்சார்புள்ளது என்ருலும், வட்டி வீதம் பணத்தின் தேவை, அளிப்பு என்னும் இவற்ருல் நிர்ணயிக்கப்படுகிறது என்ருலும், லெர்னர், ராபின்ஸன் போன்ருேர் மனச் சார்புள்ள காரணியையும், ராபர்ட்ஸன், ஹேபர்லர், (Haberler) ஒஹ்லின் (Ohlin) போன்ருேர் பொருள் சார்புள்ள காரணியையும் முக்கியமானவையாகக் கருதுகின்றனர். மனச் சார்புள்ள துறையிலிருந்து நோக்குங்கால் வட்டிவீதம் நீர்மை விருப்பத்தின் விளைவே ஆகும். அதாவது, வட்டிவீதம் பணத்தின் நீர்மைத் தன்மையைத் துறப்பதற்காகக் கொடுக்கப்படும் ஊதியமே. பொருள் சார்புள்ள துறையிலிருந்து பார்க்கும்பொழுது, கடன் நிதியின் (Loanable Funds) தேவை, அளிப்பு இவைகளின் விளைவே வட்டி வீதம். ஒரு குறிப்பட்ட கால அளவில் ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைக் கடனுகப் பெறுவதற்குக் கொடுக்கப்படும் விலேயே வட்டி வீதம். ஆக, ஐந்து விதமான வட்டிக் கோட்பாடுகள் – இரண்டு பணச் சார்பற்ற, இரண்டு பணச் சார்புள்ள, இரண்டையும் ஒருங்கிணைத்த ஒன்று- உள்ளன. ஒவ்வொரு கோட்பாடும் அதனதன் எடுகோள்களுக்குட்பட்ட சூழ்நிலேக்குஏற்றதாக இருக்கிறது. ஆகவே, எல்லாக் கோட்பாடுகளேயும் அறிந்து கொள்வது இன்றியமையாததாகிறது.

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒருவரிடம் ஒரு குறிப்பிட்ட அளவு பொருளியல் வளங்கள் (Economic Resources) உள்ளன. அவற்றை எதற்குப் பயன்படுத்தவேண்டும் என்று சிந்தித்துச் செயல்படும் உரிமை அவருக்கு உண்டு. பணத்தை ரொக்கமாக வைத்துக் கொள்வதா, பத்திரங்களிலே (Securities) முதலீடு செய்வதா, உற்பத்திக்குப் பயன்படுத்துவதா, நுகர்வுக்காகப் பயன்படுத்துவதா என்ற வினக்கள் எழுகின்றன. இவைகளுக்காகப் பணத்தைப் பயன்படுத்துவதால் இவைகளிலிருந்து அவருக்கு விளைவுகள் கிடைக்கும். இவைகளிலிருந்து கிடைக்கும் இறுதிநிலே விளைவுகளே ஒப்பிட்டுப் பார்த்துப் பொருளியல் வளங்களேப் பயன்படுத்த வேண்டியிருக்கிறது. இப்படிப் பயன்படுத்தும்பொழுது அவர் உச்ச அளவு இலாபத்தை எதிர்பார்க்கிருர். இறுதிநிலே ஆராய்ச்சியின்படி (Marginal Analysis) வளங்களே அதன் பல உபயோகங்களில் இறுதிநிலே

விளைவுகள் சமமாக இருக்கும்படி பங்கிட்டு உச்ச இலாபத்தை அடையலாம். இம்மாதிரியான முடிவுகளைத் தனிஒருவர் மட்டுமல்லாது வணிக அமைப்புக்களும், வங்கிகளும், அரசுகளும் கூட எடுக்கவேண்டியுள்ளது. பொருளியல் பகுத்தாய்விலே, ஒரு மாதிரி அமைப்பின் அல்லது பிகு (Pigou) கூறுவது போல ஒரு மாதிரி ஆங்கிலேயரின் சீரான முதலீட்டிலிருந்து கிடைக்கும் விளைவின் இறுதி வீதத்தைக் குறிப்பது வட்டி வீதம். விவரணம் (thesis), எதிர் விவரணம் (antithesis) தொகுப்பு (synthesis) என்ற நன்கு தெரிந்த முறையிலே வட்டிக் கோட்பாடும் வளர்ந்து வந்திருக்கிறது. கூற்று (proposition) எதிர்க்கூற்று (Counter Proposition) இவை உருவாகி, இறுதியாக மாறுபட்ட கருத்துக்கள் ஒருங்கிணைக்கப்பட்டு வட்டிக் கோட்பாடு உருவாகியிருக்கிறது. ஒவ்வொரு கோட்பாடும் ஒவ்வோர் உண்மையை விளக்குகிறது. இவைகள் எல்லாவற்றையும் ஒரு குடையின்கீழ்க் கொண்டுவர முடியும். காலத்தேர்வுக் கோட்பாட்டு நுகர்விலிருந்து கிடைக்கும் இறுதிநிலை விளைவு, வீதத்தை வலியுறுத்துகிறது. உற்பத்தித் திறன் கோட்பாடு உற்பத்தியிலிருந்து கிடைக்கப்பெறும் இறுதிநிலை விளைவு வீதத்தை வலியுறுத்துகிறது. நீர்மைத்தன்மை விருப்பக் கோட்பாடு ரொக்கத்திலிருந்து கிடைக்கும் இறுதிநிலை விளைவு வீதத்தை வலியுறுத்துகிறது. இறுதியாகக் கடன் நிதிக்கோட்பாடு பத்திரங்களிலிருந்து கிடைக்கப் பெறும் இறுதிநிலை விளைவு வீதங்களுக்கு முதலிடமளிக்கிறது. இவை ஒவ்வொன்றும் முக்கியமானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூழ்நிலையிலே முதன்மை பெறுகின்றது. கேம்பிரிட்ஜ் பொருளியல் வல்லுநர்கள், ஸ்வீடன் நாட்டு வல்லுநர்களின் வட்டிக் கோட்பாடுகளின் சிக்கல்களைத் தவிர்த்து ஒருங்கிணைக்கப்பட்ட — எல்லோரும் ஒப்புதலளிக்கக் கூடிய—வட்டிக் கோட்பாட்டைத் தெளிவாக்குவதே நம் நோக்கம்.

வட்டிக் கோட்பாட்டைப்பற்றிப் பல புத்தகங்களிருப்பினும், இப் பிரச்சினையின் எல்லா அம்சங்களையும் (aspects) விவரிக்கின்ற வெளியீடு ஒன்று மிகக் தேவை. வட்டிக் கோட்பாட்டைச் சார்ந்த பல விதமான கருத்துக்களைக் கூறி அவைகளை ஒருங்கிணைக்க முயன்றிருக்கிறேன். சிறப்பாகப் பணச்சார்புள்ள கருத்துக்களுக்கு அதிகக் கவனம் செலுத்தியிருக்கிறேன். மதிப்புக் கோட்பாட்டையும், பணக் கோட்பாட்டையும ஒருங்கிணைப்பதற்காகவும் வாதாடியிருக்கிறேன்.

நான் பல பொருளியல் வல்லுநர்களிடமிருந்தும், பல புத்தகங்களிலிருந்தும் பல கருத்துக்களை எடுத்தாண்டு

இருக்கிறேன். சிறப்பாக நான் பயன்படுத்தியிருக்கும் புத்தகங்கள்—

Bohm bawerk : Positive Theory and Capital and Interest

Keynes : General Theory

Fraser : Economic Thought and Language Wicksells Lectures

Lindahl : Studies in the Theory of Money and Capital

பிரச்சினை

நினைவிற்கு அப்பாற்பட்ட நாள் முதலே (மிகப் பழங்காலத்திலிருந்தே) வட்டிக் கோட்பாடு ஒரு நீதிப் பிரச்சினையாகவும், பொருளியல் பிரச்சினையாகவும் இருந்துவந்திருக்கிறது. யூதச் சட்டத்தின்படி (Mossaci Law) யூதர்களிடையே வட்டிக்குக் கடன் கொடுப்பது கண்டிக்கப்பட்டிருக்கிறது. அரிஸ்டாடில் அதை இயற்கைக்கு மாறுபட்டதெனக் கருதினர். ரோமன் கத்தோலிக்க மடாலயம் அதை நவீன காலம் வரை தடைசெய்தது. இன்றும் சோஷலிஸவாதிகள் அதைக் கண்டனம் செய்கின்றனர். இருப்பினும் அது தொன்றுதொட்டு வருகின்ற ஒரு பிரச்சினை. ஆனால், வணிகர்களைப் பொறுத்தவரை வட்டி என்பது கொடுக்கப்பட வேண்டிய ஒன்று. பொருளியல் வல்லுநர்கள் வட்டியை நியாயமென்றே கருதுகின்றனர். ஆனால், நிரூபிப்பதற்கான அவர்களுடைய கருத்துக்கள் மிகமிக மாறுபட்டிருக்கின்றன. பேராசிரியர் ஹேபர்லர் கூறுவது போல வட்டிக் கோட்பாடு வெகுகாலமாகவே பொருளியலின் பலவீனமான பகுதியாக இருக்கிறது. மற்றப்பகுதிகளைக் காட்டிலும் வட்டி வீதத்தை விளக்குவதிலும், நிர்ணயிப்பதிலும் பொருளாதாரப் புலவர்களிடையே கருத்துவேறுபாடுகள் அதிகமாக உள்ளன. இந்தப் பிரச்சினை நவீன பணக் கோட்பாட்டின் ஒரு தலையாய பிரச்சினையாக உள்ளது. வட்டிக் கோட்பாட்டைப் பயிலுபவர்கள் மாறுபட்ட பல கோட்பாடுகளைக் கற்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அவைகளின் அடிப்படைக் கருத்துகளைப் படித்து உண்மைகளைத் தெரிந்தெடுத்துப் பல சூழ்நிலைகளுக்கும் பொருந்தக் கூடிய ஒரு வட்டிக் கோட்பாட்டை உருவாக்க வேண்டியிருக்கிறது. அதற்கான முயற்சியே இந்நூல்.

இதைத் தொடங்கு முன் ஆய்வின் இயல்பையும் முறையையும் தெளிவுபடுத்திக் கொள்வது நலம். பொருளியலின் பொருளைப் பற்றியும் முறையைப் பற்றியுமான விவாதங்கள் உள்ளன. ஒவ்

வொரு பொருளியல் வல்லுநரும் தமக்குத் தாமே பொருளியல் ஒரு பாஸிடிவ் இயலா? தரஞ்சூழ் இயலா? என்ற வினாவை எழுப்பிக் கொண்டு விடைகாணவேண்டியது இன்றியமையாததாகிறது. இதுபற்றி ஒன்றுபட்ட கருத்துக்கு இடமில்லை. இருவகைகளையும் தனித்தனியே கருதினாலும் இரு வகைகளுக்குமுரிய சிறப்பு வெளிப்படுகிறது. பொருளியல் சார்ந்த வட்டிப் பிரச்சினையைச் சமூகத்தைச் சார்ந்த வட்டிப் பிரச்சினையிலிருந்தும், அரசியலைச் சார்ந்த வட்டிப்பிரச்சினையிலிருந்தும் வேறுபடுத்த வேண்டும். பாம் பாவர்க் அவர்களின் கருத்துப்படி மூலதனத்திற்கு வட்டி கொடுக்கப்பட வேண்டியதுதானா? அது நேர்மையானதா? பயனுள்ளதா? நல்லதா? வட்டி அப்படியே இருக்க வேண்டியதுதானா? மாற்ற வேண்டியதா? நீக்கப்பட மேவண்டியதா? இவைகளுக்கு விடை கூறுகிறது சமூக அரசியலைச் சார்ந்த வட்டிப் பிரச்சினை. கோட்பாட்டைச் சார்ந்த பிரச்சினை காரணங்களை விவாதிக்கிறது. சமூகத்தைச் சார்ந்த பிரச்சினை வட்டியின் விளைவுகளைப்பற்றி விவாதிக்கிறது. கோட்பாட்டைச் சார்ந்த பிரச்சினை உண்மை, பொய்மை இவற்றைப்பற்றி விவாதிக்கிறது. கோட்பாட்டைச் சார்ந்த வட்டிப் பிரச்சினை சூழ்நிலையையும் அவசியத்தையும் விவாதிக்கிறது. செயல்முறையில் கோட்பாட்டைச் சார்ந்த பிரச்சினை முதலிடம் பெறுகிறது.

பகுத்தறிவு முறையையும், தொகுத்தறிவு முறையையும் ஆய்வில் வேறுபட்ட இடங்களில் மாறுபட்ட விகிதங்களில், பேராசிரியர் மார்ஷல் கூறுவது போலப் பயன்படுத்தலாம். நடப்பதற்கு வலக்காலும், இடக்காலும் தேவையாக இருப்பது போலப் பொருளியல் ஆய்விற்கு இரு முறைகளுமே தேவை. சிலர் கோட்பாட்டை மட்டும் பயன்படுத்துகின்றனர். சிலர் புள்ளியியல் விவரங்களைப் பயன்படுத்திக் கணக்கிடுகின்றனர். இரண்டு முறைகளும் தேவை. கற்பிதக் கோட்பாடு தேவை. அவற்றைச் சோதனை செய்ய வேண்டியிருக்கிறது. அவற்றுடன் புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட உண்மைகளை ஒருங்கிணைக்க வேண்டியிருக்கிறது. மேலும் பழைய கோட்பாடுகள் புதிய சூழ்நிலைக் கேற்ப, நடப்புக் கேற்ப, உண்மைகளுக் கேற்பத் திருத்தியமைக்கப்பட வேண்டியிருக்கின்றன.

முதலில் வட்டிப் பிரச்சினையையும் பிறகு வழக்கிலிருக்கின்ற வட்டிக் கோட்பாடுகளையும் திறனாய்வு செய்யலாம். இறுதியாக வழக்கிலிருக்கின்ற கோட்பாடுகளிடையே உள்ள உண்மைகளை ஒருங்கிணைத்து உண்மைக்குகந்த ஒரு கோட்பாட்டை உருவாக்கலாம்.

வட்டி என்பது கடன்வாங்கப்பட்ட தொகையின் உபயோகத் துக்காகக் கொடுக்கப்படும் தொகை என்பது தற்காலத்தில் பொது வாக வளர்ந்து வரும் ஒரு கருத்து. ஆனால், பொருளியல் வல்லு நர்கள் அதை நாட்டு வருவாய்ப் பங்கீட்டில் ஒரு பிரச்சினையாகவே கருதுகின்றனர். அவர்கள் முதலை ஓர் உற்பத்திக் காரணியாகக் கருதி, அந்த முதலின் வருவாயாக வட்டியைக் கருதுகிறார்கள். உற்பத்திக் காரணிகளிடையே நாட்டு வருவாயைப் பங்கிடுவது, உற்பத்திக் காரணிகளின் விலையை நிர்ணயிப்பதே ஆகும். ஆகவே, வட்டி என்பது முதலின் பணிக்கு அல்லது உபயோகத்துக்குக் கொடுக்கப்படும் ஒரு விலையே.

ஒருவர் தாம் ரூ. 100 வைத்திருந்தால் ஒரு சாதாரணச் சூழ் நிலையில் இடுக்கண் ஏதுமின்றி அந்த 100 ரூபாய்களிலிருந்து ஒரு நிரந்தரமான நிகர வருவாயைப் பெற முடியும். முதலாவதாக, அவர் அந்த ரூ. 100ஐ ஓர் ஆண்டுக்கு மற்றொருவருக்குக் கடனாகக் கொடுத்து, அந்த ஆண்டு இறுதியிலே அவர் கொடுத்த ரூ. 100 மட்டுமல்லாமல் மேலும் ரூ. 5 அதிகமாக (வட்டமாக)ப் பெற்றால், கடன் கொடுத்தவர் எச்ச வருவாயாக ரூ. 5ஐப் பெறுகிறார். குறு கிய நோக்கிலே இதுதான் வட்டி. இதைப் பொருளியல் வல்லுநர் கள் 'கடன் வட்டி' அல்லது 'ஒப்பந்த வட்டி' (Contractual Interest) எனக் கருதுகின்றனர். இரண்டாவதாக அவர் அந்தத் தொகை யைக் கடனாகக் கொடுக்காமல் ஒரு சிறிய தொழிலிலே முதலீடு செய்தார் என்று கொள்வோம். உற்பத்தி செய்த பொருள்களி டையே மதிப்பு அப் பொருள்களை உற்பத்தி செய்வதற்காகச் செய்த செலவை விடச் சாதாரணச் சூழ்நிலையில் அதிகமாக இருக்கும். இந்த எச்ச மதிப்பு, இயற்கை வட்டி (Natural Interest) என வழங்கப்படுகிறது. இதை மூலதனத்தின் இலாபம் அல்லது மூல தனத்தின் வருவாய் என்றும் கூறலாம். இயற்கை வட்டி பரவ லான கருத்துக்களை உள்ளடக்கியிருக்கிறது. எந்த விதமான முதலீட்டிலிருந்தும் கிடைக்கும் வருவாயைப் பொதுவாக இது குறிக்கிறது.

வட்டிக் கோட்பாடு இருவகையான விஷயங்களைத் (Phenomena) தெளிவாக்க வேண்டியிருக்கிறது. ஒன்று, வட்டியினு டைய தோற்றம் அல்லது காரணம். கடன் கொடுத்தவர் அந்த ரூ.100-க்கு எச்ச வருவாயாக ரூ. 5 பெறுவது ஏன்? இரண்டாவ தாக, வட்டிக்கோட்பாடு வட்டி வீதத்தை நிர்ணயிக்கின்ற காரணி களையும் (forces) தெளிவுபடுத்த வேண்டியிருக்கிறது. வட்டிவீதத் தினுடைய தேவையையும் வட்டி வீதத்தைத் தீர்மானிப்பதைப் பற்றியும் விளக்குவது வட்டிக் கோட்பாட்டின் தலையாய பணி.

முதலாவதாக, 'முதல்' என்ற சொல்லின் பொருள்பற்றித் தெளிந்துகொள்ள வேண்டும். மூலதனம் என்பது பணத்தைக் குறிக்கிறதா? உற்பத்திச் சாதனங்களைக் குறிக்கிறதா? அல்லது பொதுவாகச் செல்வத்தைக் குறிக்கிறதா? மூலதனத்தைச் சார்ந்த இந்தப் புதிரை விடுவித்துவிட்டால் வட்டிப் பிரச்சினையின் முக்கால் பங்குக்குத் தீர்வு கண்டுவிட்டோம் எனக் கொள்ளலாம். மாறாக, பொருளியல் துறையிலே மூலதனக் கோட்பாடு மிகச் சிக்கலான ஒன்று. விவாதத்துக்குரிய பல வட்டிக் கோட்பாடுகள் தோன்றியமைக்கு மூலதனத்தைச் சார்ந்த சிக்கலே காரணம் இது இரண்டு விதமான வட்டிக் கோட்பாடுகளை உருவாக்கிற்று. ஒன்று, பணச் சார்பற்ற உண்மை மூலதனக் கோட்பாடுகள். இங்கு மூலதனம் என்பது உருவமுள்ள பண்டங்கள் என்ற உண்மை மூலதனத்தைக் குறிக்கின்றது. இந்த உண்மை மூலதனத்தின் விலையே வட்டி வீதம். 'இந்த வட்டி வீதம் முதலின் இறுதிநிலை உற்பத்தித் திறனாலும், காலத்தேர்வு போன்ற மனத்தைச் சார்ந்த காரணிகளாலும் நிர்ணயிக்கப்படுகின்றது'- என்பார் ஹேபர்லர். பணத்தைச்சார்ந்த வட்டிவீதக் கோட்பாடுகள் இரண்டாவதுவகை. இங்கே மூலதனம் என்பது கடன் நிதி (credit), நாணயம் போன்ற பண மூலதனத்தைக் குறிக்கிறது. கடன் நிதி, நாணயம் இவைகளின் தேவை, அளிப்பு வட்டி வீதத்தை நிர்ணயிக்கிறது. இந்த இருவகையான கருத்துக்களிடையே உண்மையான மோதல் ஏற்பட்டது. உண்மை மூலதனம், பண மூலதனம் இவைகளைச் சார்ந்த சர்ச்சைகளைப் போக்கி இவைகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் எந்த அளவுக்கு அவை வெற்றிபெற்றன என்று சொல்வது கடினம்.

மூலதனம் ஓர் உற்பத்திக் காரணியாக இருப்பதனால், மூலதனத்தைப் பற்றிய ஆய்வில் அதன் பணியைப் பற்றிய இயல்பையும் கருத வேண்டியுள்ளது. மூலதனத்தைப் பயன்படுத்த ஒரு விலையை ஏன் கொடுக்க வேண்டியிருக்கிறது? எவ்வளவு வட்டி கொடுக்க வேண்டும்? என்ற கேள்விகளுக்கும் விடையளிக்க வேண்டும். ஆகவே மூலதனத்தின் சந்தை, மூலதனத்தின் தேவை, அளிப்பு இவைகளைச் சார்ந்த காரணிகளையும் நாம் ஆராய வேண்டும்.

அடுத்து, காலக் கெடுவைப் பற்றியும் ஆய்வு செய்தல் வேண்டும். கடன் வட்டியாக இருந்தாலும், இயற்கை வட்டியாக இருந்தாலும் வட்டி உருவாவதற்குக் காலக் கழிவு தேவையான ஒன்று. நிகழ்காலப் பண்டங்களுக்கும் வருங்காலப் பண்டங்களுக்குமிடையே உள்ள மாற்று வீதம் வட்டி வீதத்தைப் பாதிக்கிறது.

வணிக நடவடிக்கைகளிலே உடன் நடவடிக்கைகள் (spot transactions), எதிர்கால நடவடிக்கைகள் என உண்டு. ஆனால், கடன் நடவடிக்கைகளிலே ஒரு புறம் உடன் நடவடிக்கையும், மறுபுறம் எதிர்கால நடவடிக்கையும் ஏற்படுகின்றது. கடன் நடவடிக்கைகள் காலத்தால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. வட்டிக் கோட்பாட்டைச் சார்ந்த பொருளியல் ஆய்விலே ஏற்படுகின்ற பல சிக்கல்களுக்குக் 'காலம்' ஒரு காரணம். உற்பத்தி, மாற்று, நுகர்வு, இவைகளில் காலக்கழிவினால் ஏற்படும் விளைவுகளை ஆராயவேண்டியது இன்றியமையாததாகிறது. தனிநபர்களின் காலத் தேர்வு நிகழ்காலத் தேவைகள், வருங்காலத் தேவைகளின் இன்றியமையாமை நிகழ்காலப் பண்டங்கள், வருங்காலப் பண்டங்களின் ஒப்பு மதிப்புகள் இவைகளையும் ஆராய வேண்டியுள்ளது. பொருளியல் அமைப்பு, ஆய்வு இவைகளில் காலம் ஓர் இயக்கு நிலையை உண்டாக்குகிறது. மக்கள்தொகை மாறுபடலாம்; சமுதாயத்தின் பழக்கங்கள், விருப்பங்கள் மாறுபடலாம்; மூலதனம் குவியலாம்; உற்பத்தி முறைகள், வணிக அமைப்புக்கள் பெருத்த மாறுதல் அடையலாம். இம்மாதிரியான இயக்க நிலை, பொருளியல் துறையிலே பெருத்த மாறுதல்களை ஏற்படுத்துகிறது. வணிகக் கணக்கீடுகள் கவிழ்கின்றன; உற்பத்தி, நுகர்வு இவைகளுக்கிடையே உள்ள சமன்பாடு பாதிக்கப்படுகிறது. ஆகவே வட்டி வீதத்துக்கும், மேலே குறிப்பிட்ட ஐந்து வித மாறுதல்களுக்குமிடையேயுள்ள தொடர்பை அறிய வேண்டியுள்ளது.

மூன்றாவதாக, இந்தப் பிரச்சினை பணம், பணத்தைச் சார்ந்த பிரச்சினைகளோடும் தொடர்பு கொண்டுள்ளது. பணச் சார்புள்ள வட்டிக் கோட்பாடுகளை ஒப்புக்கொண்டால், பணம் மிகவும் இன்றியமையாததாகிறது. அப்படி இல்லாவிட்டாலும்கூட வட்டி வீதத்தை நிர்ணயிப்பதிலே பணம் ஒரு முக்கியப் பங்கைப் பெறுகிறது. பணத்தைச் சார்ந்த மாற்றுப் பொருளாதாரத்திலே பணவிலை முறை முக்கியத்துவம் அடைகிற பண்டமாற்று, பெரும்பாலும் இப்பொழுது நடைபெறுவதில்லை. கடன் நடவடிக்கையிலே இரு பக்கங்களிலும் நடவடிக்கைகள் பணத்தின் மூலமாகவே நடைபெறுகின்றன. பணம் பண்டங்கள், பணிகளின் மதிப்பை நிர்ணயிக்கிறது. பொதுவாக, பணத்தையே மூலதனமாகக் கருதுகிறார்கள்.

வட்டிவீத மாறுதல்கள், பொதுவிலை மாறுதல்கள் இவை இரண்டும் தொடர்புள்ளனவாகப் பொருளாதார நிபுணர்கள் கருதுகிறார்கள். வணிக வங்கிகள் பணத்தைச் சேகரித்து விநியோகிப்பதிலும், பணத்தை உற்பத்தி செய்வதிலும் பெரும் சக்தி

படைத்திருக்கின்றன. அவை, சரியான வட்டிவீதக் கொள்கையை ஒட்டிப் பொருளாதாரத் துறையைக் கட்டுப்படுத்தி வழி நடத்திச் செல்ல முடியும். பொருளியல் துறையிலே உச்ச உற்பத்தி, வேலைவாய்ப்பு, நலம் இவைகளை ஏற்படுத்த முடியும். அதனால்தான் பொருளாதார வல்லுநர்கள் வட்டி வீதத்தைப் பொருளாதாரத் துறையை ஒழுங்குபடுத்தும் கருவியாகக் கண்டனர். பேராசிரியர் ஹிக்ஸ் இந்தக் கருத்தைக் கொண்டிருந்தார்.

வட்டி வீதம் பலவகைப்படும். ஆனால், உலகிலே பலவிதமான வட்டி வீதங்கள் இருக்கின்றன. காரணம், ஆபத்துக்கள், வட்டி நீடிக்கும் காலம், இயல்பான இலாபம் இவைகள் மூலதனச் சந்தை நன்ருக உருவாக்கி வளராத நாடுகளிலே முதலை(principal) இழக்கின்ற ஆபத்து, கடன் கொடுப்பவர்களுக்கு நிறைய இருக்கிறது. ஆகையால், கடன் ஈவோர் அதிகமான வட்டி வீதத்தைக் கேட்டுப் பெறுகிருர்கள். இதில் மிகுதியும் ஆபத்துக்காகக் கொடுக்கப்படுபவையே. அதனால்தான் இந்தியாவில் முல்தானிகள் 50 முதல் 70 விழுக்காடு வரை வட்டி வாங்குகிருர்கள். மூலதனச் சந்தை நன்ருக உருவாகி வளர்ந்து விட்ட நாடுகளிலே கூட, மாறுபட்ட பல ஆபத்துக்கள் இருப்பதால் வட்டி வீதங்களும் மாறுபடுகின்றன. இந்த வட்டிவீத மாறுபாட்டிற்குக் கடனின் காலமும் ஒரு காரணம். பொதுவாக, கடனின் காலம் அதிகமாக இருந்தால் வட்டி வீதம் அதிகமாக இருக்கும். வாரம், அமைப்பாளரின் இலாபம் இவைகளும் இதில் சேர்ந்திருப்பதால் வட்டி வீதம் மாறுகின்றது. இவ்வாறு ஆபத்துக்காகக் கொடுக்கப்படும் ஊதியம், அமைப்பாளரின் இலாபம் இவைகள் சேர்ந்த வட்டியை மொத்த வட்டி (gross interest) என்கின்றனர். மற்ற ஊதியங்கள் சேராத, முழுதும் மூலதனத்திற்கான ஊதியத்தை மட்டும் நிகர வட்டி (net interest) என்கின்றனர். நிகர வட்டியைக் கண்டுபிடிக்கும்போதுகூட 'மற்றவை மாருதிருப்பின்' (ceteris paribus) என்ற சொற்ரெடரைப் பயன்படுத்துகிரோம். இது சில சமயங்களில் உண்மைக்குப் புறம்பாகவும் இருக்கலாம்.

வட்டி வீதம் முதலாளித்துவ முறைக்கு மட்டுந்தான் சிறப்பாகப் பொருந்துகின்றதா? எல்லா விதமான பொருளியல் அமைப்புகளுக்கும் இன்றியமையாததா? இது இறுதிப் பிரச்சினை.

தொடக்கம்

தொன்றுதொட்டே வட்டிக்குக் கடன்கொடுப்பது விவாதத்துக்குரிய ஒன்ருக இருந்துவந்திருக்கின்றது. 18-ஆம் நூற்ருண்டின் தொடக்கம் வரை அந்த விவாதம் மதச்சார்புள்ளதாகவும், அரசியல்

சார்புள்ளதாகவும் இருந்தது. அதை ஒரு பொருளியல் பிரச்சினை யாகவே ஒருவரும் கருதவில்லை.

கிரேக்க நாட்டில் வட்டிக்குக் கடன் கொடுப்பதை அரிஸ்டா டில் போன்ற பெரியோர்கள் கண்டித்தனர். வட்டியைச் சார்ந்த சர்ச்சைகளில் இவர்களின் கருத்து பெரும்பங்கு வகித்தது. பணம் என்பது, வறண்ட சாரமற்ற ஒன்று. அது வட்டியைப் பெறமுடியாது என்கிருர் அரிஸ்டாடில். பரிவர்த்தனையை எளி தாக்குவதும், மனிதனின் தேவைகளைத் திருப்தி செய்வதும் பணத்தைப் பயன்படுத்துவதற்கான நோக்கங்கள். அதுதான் பணத்தின் இயல்பான பயனுமாகும். வட்டியைப் பெற்றுத் திரட் டும் ஒரு சாதனமாகவும் பணம் இருக்கமுடியாது. ஆகவே, வட் டிக்குக் கடன் கொடுத்துப் பணத்தைத் திரட்டுவது, பணம் திரட்டும் வழிகளிலேயே இயற்கைக்குப் புறம்பான ஒன்று.

ரோம் நாட்டில் வட்டிக்குக் கடன் கொடுப்பது இயற்கைக்கு மாருன ஒன்ருகக் கருதப்பட்டது. வெகு நாட்களாகக் கிரேக்க நாட்டிலும், ரோம் நாட்டிலும் வட்டி வாங்குவது கண்டிக்கப்பட்டது. பேராசிரியர் நைட் கூறுவது போல, கிரீஸ், ரோம் நாடுகளில் செல்வர்களின் வருவாய் நிலத்திலிருந்தே பெரிதும் கிடைத்தது. அவர்கள் சமூகத்திலே மதிப்புள்ளவர்களாகத் திகழுவதற்காக, வட்டிக்குப் பணம் கொடுப்பதை எதிர்த்தனர். முதலுடையோன் பெரிய அளவிலே கடன் கொடுத்து வட்டி வாங்கி, பழைய செல் வர்களைப் போல் வாழ வகை செய்துகொண்ட பிறகு, வட்டிக்குக் கடன் கொடுப்பதற்கான எதிர்ப்புக்கள் மறைந்தன. வணிகம் வளர வளர, சட்டமும் வட்டி வாங்குவதற்கு இசைந்தது. ஆனல், சட்டம் வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்தியது. விலக்குப்போய் கட்டுப்பாடு வந்தது.

இடைக்காலத்திலே, கடன் வாங்கிய பணத்திற்கு வட்டி கொடுப்பது கடும் வட்டி எனக் கருதப்பட்டது. இதைப் புனித விதிகளும் (Canon Law), கிறித்துவ மடாலயமும் மிக வன்மையாகக் கண்டித்தன. மதத்தின் அடிப்படையிலேயும், ஒழுக்க நெறி யின் அடிப்படையிலேயும் கடும் வட்டி தடை செய்யப்பட்டது. இடைக்காலத்திலே மதத்தை உச்சியிலே கொண்ட மதிப்பு வரிசையில் (Prierarchy of values) உட்கொண்டதாகவே கருதி னர். பொருளியல் நடவடிக்கைகளை நேர்மையற்ற எல்லா வித மான மாற்றுக்களுமே கண்டிக்கப்பட்டன. கடும் வட்டி வாங்கு வதும் நேர்மையற்ற மாற்றையே குறிக்கிறது. ஆகவே கண்டிக் கப்பட்டது. மாற்றில் எளியவரைப் பயன்படுத்தி, வலியவர் இலாபம்

அடையும் நேர்மையற்ற இலாபத்தையும் கடும் வட்டி என்று கருதலாயினர். வாணிகம், மாற்று இவைகளில் நியாயவிலை (Just Price) என்னும் கொள்கையைப் பயன்படுத்தினர். பேராசிரியர் எரிக்ரோல் கூறுவது போல நியாயவிலை சிறந்தது; முக்கியமானது. அந்த விலையைவிட அதிகமாக நிர்ணயிப்பது ஒழுக்க நெறிக்கு முரண்பட்ட செயலாகும். பொதுவாக, வழக்கமான (பழக்கமான) விலையே நியாயவிலையைக் குறித்தது. வணிகம், தொழில் இவை சிறிய அளவிலேயும் வளராத சந்தையும் மடாலயத்தின் ஆதிக்கம் நிறைந்து இருந்த சமுதாயத்தில் பழக்கப்பட்ட விலை உண்மைக்குப் புறம்பானதாகவோ, இயற்கைக்கு மாறானதாகவோ கருதப்படவில்லை.

இந்தப் பரந்த அடிப்படையிலேதான் கடும் வட்டி எதிர்க்கப்பட்டது. கடும் வட்டிக்கு எதிராகக் குறிப்பாகச் சில வாதங்களும் எழுந்தன. அந்தக் காலத்தில் நுகர்வுக்காகவே ஏழைகள் பெருவாரியாகக் கடன்களைப் பெற்றனர். சில சமயங்களில் வேளாண்மை பயனைத் தராததாலோ, வேளாண்மையில் பயன்படும் கால் நடைகள் செத்து மடிவதாலோ இன்னல்கள் ஏற்படும்பொழுது விவசாயிகள் கடன் பெற்றனர். வட்டிக்குக் கடன் ஈவோரும், வணிகரும் ஏகபோக உரிமை பெற்றிருந்தனர். ஆகவே, அவர்கள் கடன் வாங்குவோரின் இன்னல்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தினர். ஏழைகளின் இன்னல்களைத் தமக்குச் சாதகமாக்கிக்கொண்டு, கடன் கொடுத்து வட்டி வாங்குவது என்பது முறையற்ற ஒரு செயலாகும். இலாபகரமான முறையில் பணத்தை முதலீடு செய்ய இயலாததால் பணத்தைக் கடன் கொடுப்பதால் கடன் கொடுப்பவருக்கு இழப்பு ஏதுமில்லை. ஆகவே, கடும் வட்டி வாங்குவதை எதிர்ப்பதற்கு இடைக்காலத்திலே அரிஸ்டாடில் உரைத்த பணத்தின் வறண்ட தன்மை என்ற வாதம் பெரிதும் பயன்படுத்தப்பட்டது. ரோமானியச் சட்டம் உடனடியாகப் பயன்படும் நுகர்வுப் பண்டங்களையும், தொடர்ந்து பயன்படும் நுகர்வுப் பண்டங்களையும் வேற்றுமைப் படுத்தியது. இதன்படி பணம் உடனடியாகப் பயன்படும் நுகர்வுப் பண்டங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது—பணத்தைக் கொடுத்துப் பயன்படுத்த முடியும். ஆகவே, பணத்தின் உபயோகத்திற்கு விலை ஏதும் கேட்கக்கூடாது; பணத்தை மட்டுமே திருப்பப் பெறலாம்.

அடுத்ததாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பணத்தைக் கொடுத்து உதவுவதற்கு வட்டி பெறப்பட்டது. ஆனால் காலம் கடன் கொடுப்போர், கடன் வாங்குவோர் இருவருக்கும் பொதுவானது. காலத்தினால் வட்டியை உருவாக்க முடியாது. இந்த விவாதங்

கனைக் கொண்டு கிறித்துவ மடாலயம் கடும் வட்டி வாங்குவதை வன்மையாகக் கண்டித்துத் தடைசெய்தது. பதின்மூன்ரும் நூற்ருண்டிலே கடும் வட்டிக்குத் தடை உச்சநிலையில் இருந்தது.

ஆளுல், இடைக்காலத்திலே கடன் வாங்குவோர் பணத்தை வணிகத்திற்காகப் பயன்படுத்தி இலாபம் சம்பாதிப்பார்களேயாளுல், அவர்களிடமிருந்து வட்டி பெறுவதற்குத் தடையேதுமில்லை. மேலும், கிறித்துவ மடாலயமும் புனித விதிகளும் (Canon Law) நிலத்தின் அல்லது தொடர்ந்து பயன்படக்கூடிய பண்டங்களின் சேவைக்காகவும் கொடுக்கப்படுகிற வாரத்தைக் கண்டிக்கவில்லை. காரணம் இயற்கையாக உற்பத்தி செய்யப்படுவதே வாரம்; மனிதனிடமிருந்து பெறப்படுவதன்று. நிலத்தின் வாரச் செலவுகளை வாங்கவும் விற்கவும் முடியும். கடன் கொடுப்பவன் குறிப்பிட்ட காலத்தில் அப் பணத்தைத் திரும்பப் பெறவில்லையாளுல் கடன் கொடுப்பவனுக்குக் கடன் வாங்கியவன் ஈட்டுத்தொகை ஒன்று கொடுக்க வேண்டும். இந்த ஈட்டுத் தொகையை ரோமன் சட்டம் 'Intersse' என்று கூறுகிறது. இதையே ஆங்கிலத்தில் 'Interest' என்று கூறுகிரேும். கடன் திருப்பிப்பெற முடியாத ஆபத்து இருந்தால் முதலுக்கு வட்டி தர வேண்டும். ஆகவே, தூயவட்டி அல்லது நிகர வட்டி வாங்குவது சட்டத்திற்குப் புறம்பானதாகக் கருதப்பட்டது—இடைக்காலத்தில் நியாயமான வாரத்தைப் பெறுவதற்கோ, இலாபத்தைப் பெறுவதற்கோ தடை ஏதும் இருக்கவில்லை. ஆளுல், கடன் கொடுத்து வட்டி வாங்குவது பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. வணிகத்திற்காகக் கடன் கொடுத்து, சிறு தொகையை அதிகமாகப் பெறுவது வட்டியென்றும், நுகர்வுக்காகப் பணம் கொடுத்துத் தொகையைப் பெறுவது கடும் வட்டியென்றும் கூறப்பட்டது.

கிறித்துவ மடாலயத்தின் எதிர்புக்கிடையேயும், பொருளாதார வளர்ச்சியுடனே வட்டி வாங்கும் வழக்கமும் வளர்ந்து வந்தது. தொழில்களும் வணிகமும் வளரவளரக் கடன் கொடுத்து வட்டி வாங்குவது பெரும் அளவில் நடந்துவந்தது. கிறித்துவ மடாலயம் தடைசெய்தும்கூடப் பலர் பல்வேறு மறைமுகமான வழிகளில் கடன் கொடுத்து வட்டி பெற்றனர். பதிளுன்காம் நூற்ருண்டிலே மடாலயத்தின் கொள்கைகள், புனித விதிகள் (Canon Law) ஆகியன நடைமுறை பொருளாதார நடவடிக்கைகளுக்கு ஒவ்வாதவையாக இருந்தன. ஆகவே, கடும் வட்டிக் கோட்பாட்டின் பல மாறுதல்கள் ஏற்பட்டன. நாம் முன்பு பார்த்தபடி காலம் தாழ்த்துத் திருப்பித்தரப்படுகின்ற கடனுக்கு அல்லது முதலுக்கு வட்டி பெறலாம். இதைப் பயன்படுத்தக் கடன் கொடுப்போர் கடனைத்

திருப்புதற்குக் குறுகிய கால அளவையே நிர்ணயித்தனர். பெரும் பாலும் கடன் வாங்கியவர்கள் அந்தக் குறுகியகால அளவுக்குள் கடனைத் திருப்ப முடியாது. ஆகவே, வட்டி கொடுக்க வேண்டிய வர்களாயினர். வணிகத்துறையிலே நிர்வாகப் பொறுப்பற்ற கூட் டாளிகளாக இருந்து பணத்தை மட்டும் கொடுத்து வட்டியைப் பெறுவது மற்றொரு முறை. மேலும், கடன் கொடுத்து உதவியவர் அந்தத் தொகையைத் தாம் இலாபகரமாகப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பை இழந்துவிட்டதாகக்கூறுவாரேயானால், அந்த இழப்பை ஈடுசெய்ய அவர் வட்டி பெறலாம் என்று இடைக்காலச் சட்டம் எடுத்துரைத்தது. இதையும் பயன்படுத்திப் பலர் வட்டி பெற்றனர்

கடும் வட்டிக்கான எதிர்ப்பைப் பலவீன மாக்கியதில் மதச் சீர் திருத்தத்திற்கு எவ்வளவு பங்கிருந்தது என்று கணிப்பது கடினம். மார்ட்டின் லூதர், ஸ்விங்லி போன்றோர் அவசியத்திற்காகக் கடன் கொடுத்து வடடி வாங்குவதை ஆதரித்தனர். பேகன்கூட இதை ஆதரிக்கிறார். 'வட்டியைத் தடைசெய்தால் கடன் கொடுக்கும் நடவடிக்கையையே தடை செய்வதாகும், என்கிறார் பேகன். இவை களைப் போன்றவற்றினாலும் கிறித்துவ மடாலயத்தில் ஆதிக்கம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்ததாலும், மதச்சார்பற்ற சக்தி வளர்ந்ததாலும் வட்டிக்குக் கடன் கொடுப்பது கொஞ்சம் கொஞ்ச மாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் கடும் வட்டியின் மேலுள்ள தடைகள் நீக்கப்பட்டன. இங்கிலாந் திலே எட்டாம் ஹென்றியின் (கி.பி.1545) காலத்திலே இந்தத் தடை நீங்கியது. மற்ற நாடுகளும் இங்கிலாந்தைப் பின்பற்றின. பல நாடுகளில் வட்டி வீதம் கட்டுப்படுத்தப்பட்டது. கடும் வட்டி என்ற சொல்லின் பொருளும் குறுகியதாகியது. அதிக வட்டியைத் தான் கடும் வட்டி என்று கருதினர். சாதாரணமான வீதத்தை வட்டி என்று கூறினர். இங்கிலாந்தில் எட்டாம் ஹென்றியின் காலத்தில் பத்து விழுக்காடே சட்டரீதியாக அதிகபட்ச வட்டி வீதமாக இருந்தது. பின்பு வந்த சர்ச்சைகள் வட்டி வீதம் எவ்வளவு இருக்க வேண்டும்? நியாய வட்டி எவ்வளவு? என்பதைக் குறித்து எழுந்தனவே தவிர, வட்டி வாங்கலாமா? கூடாதா? என் பதைப் பற்றி அன்று. ஸர் தாமஸ் கல்பெபர், ஸர் ஜோசையா சைல்ட், ஃப்ரான்ஸிஸ் பேகன் போன்றோர் உயர்ந்த (அதிக) வட்டி வீதத்தை எதிர்த்தனரே தவிர, வட்டி வாங்குவதையோ கொடுப் பதையோ எதிர்க்கவில்லை.

பதினாறும் நூற்றாண்டில் இறுதியிலே கடும் வட்டியின் மீதான தடைகள் நீங்கிய போதும், மேலும் இரண்டு நூற்றாண்டுகளுக்கு வட்டி வசூலிப்பது நீதியா? நேர்மையா? என்பது மதச்சார்புள்ள

சர்ச்சையாகவும், அரசியல் சார்புள்ள சர்ச்சையாகவும் இருந்தது. இந்த வட்டிப் பிரச்சினையை ஒரு பொருளியல் பிரச்சினையாகவே எவரும் கருதவில்லை. ஒழுக்கநெறியின் அடிப்படையிலும், மதத்தின் அடிப்படையிலும் கடும் வட்டி வசூலிப்பது தாக்கப்பட்டது; தடை செய்யப்பட்டது. பதினேழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் கடும் வட்டி வாங்குவதற்கான தடைகள் தாக்கப்பட்டன. கடும் வட்டியைத் தடைசெய்த சட்டங்கள் சட்டப் புத்தகத்திலிருந்து மறைந்தொழிந்தன. ஆனாலும் கோட்பாட்டைச் சார்ந்த பிரச்சினை தீர்ந்துவிட்டதாகக் கருத முடியாது; பணத்தை இலாபகரமாகப் பயன்படுத்த முடியும். ஆகவே, அதற்கு வட்டி கொடுக்கப்பட வேண்டும். ஆடம் ஸ்மித் இந்தக் கருத்தை வலியுறுத்திகிறார். கடன் வட்டி இயற்கை வட்டியை வைத்து விளக்கப்படுகிறது. இருந்தும் கடன் வட்டிப் பிரச்சினை இன்னும் தீர்ந்தபாடில்லை. கடந்த பல நூற்றாண்டுகளில் கடும் வட்டியைக் குறித்த சர்ச்சைகள் எழுந்ததால் நுணுக்கமான வட்டிக் கோட்பாடு உருவாகவில்லை. முதலில் வட்டி தடை செய்யப்பட்டது; பிறகு கட்டுப்படுத்தப்பட்டது. வட்டி வீதம் கட்டுப்படுத்தப்பட்டபோது பொருளியல் சிந்தனையாளர்கள் வட்டி வீத மாறுதல்களின் விளைவுகளை ஆராய்ந்து அறிந்தனர். பொருளாதாரத் துறையில் எளியவர்களாக இருந்தவர்களைச் சர்வாதீனம் பெற்ற கடன் கொடுப்போர்களிடமிருந்து காப்பாற்ற வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்தினர். வட்டி வீத மாறுபாடுகளின் விளைவுகளைக் குறித்த ஆய்வு வட்டியின் பொருளியல் முக்கியத்துவத்தை விளக்கியது. பொருளியல் புரட்சி ஏற்பட்டதன் காரணமாக வட்டியைப்பற்றி அதிகமாக ஆராய வேண்டியிருந்தது. எனவே, வட்டிக் கோட்பாடு கொஞ்சம் வளர்ந்தது.

இடைக்காலத்திலே வட்டிக்குத் தோன்றிய எதிர்ப்பு பிறகு வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்தியது. இவை யெல்லாம் பொருளாதாரத் துறையில் எளியவர்களாக இருந்த சமூகத்தினரைக் காக்கவும், அவர்களுடைய நலத்தைப் பேணவுமே எழுந்த கருத்துக்களாகும். இடைக்காலத்திலே கடும் வட்டிக்கு இருந்த தடைக்குப் பொருளியல் நோக்கம் இருந்ததாகப் பேராசிரியர் சீன்ஸ், முதலில் இறுதிநிலை உற்பத்தித் திறனை வட்டி வீதத்திலிருந்து வேறுபடுத்தி இரண்டுக்குமுள்ள தொடர்பைக் காட்டுவதற்காக இடைக்காலத்திலே பல்வேறு முறைகளைப் பயன்படுத்தினார்.

இருபதாம் நூற்றாண்டில் பொருளாதாரச் சுயேச்சை, தானாகவே இயங்கும் பொருளியல் துறை இவைகளினுடைய நம்பிக்கை குறைந்து வருகின்றது. ஆகவே, ஒழுக்க நெறியைப் பொருளியல்

கொள்கைகளுக்கு மிகவும் பயன்படுத்துகின்றனர். தானுக இயங்கும் பொருளியல் துறைச் சக்திகளைக் கட்டுப்படுத்திப் பெருவாரியான மக்களின் நலனை நாடுவதே அரசின் கடமையாகக் கருதப்படுகிறது. இந்த நலம் பொருளியலைச் சார்ந்த நலமாகவே கருதப்படுகிறது; மதத்தைச் சார்ந்த நலமாக அன்று. முன்காலத்திலே மக்களின் நலனை மதத்தைச் சார்ந்த அமைப்புக்கள் பேணிக்காத்தன. இருபதாம் நூற்ருண்டிலே இந்தப் பணியை அரசு செய்கின்றது.

மெர்க்கண்டலிஸ்ட் பொருளியல் வல்லுநர்கள், தொழிலதிபர்கள் (முதலாளிகள்), ஃபிஸ்யோகிரேட்ஸ் எனும் பொருளியல் வல்லுநர்கள்

பதினைந்தாம் நூற்ருண்டின் இறுதியில், இடைக்காலம் முடிந்து புதுமைக் (நவீன)காலம் தொடங்கியது. கலை மறுமலர்ச்சி, மதச் சீர்திருத்தம் (Reformation), நாட்டு உணர்ச்சியின் வளர்ச்சி, சட்ட இயலில் இயற்கை விதி என்னும் கருத்தின் வளர்ச்சி, அரசியல் எண்ணங்களின் வளர்ச்சி இவைகளெல்லாம் கிறித்துவ மடாலயத்தின் அதிகாரத்தைக் குறைத்துச் சமுதாயப் பிரச்சினைகளைப் பகுத்தறிவுப் போக்கில்-விஞ்ஞான முறையில் அணுக வழிவகுத்தன. இந்த மகிழ்ச்சிகரமான மாறுதலினல் பெரும்பயன் பெற்றது பொருளியலே. இவை வணிகத்துறை முதலாளித்துவம், தொழில் துறை முதலாளித்துவம் ஆகியவற்றுடன் சேர்ந்து, பகுத்தறிவு ஆய்வு முறையில்-விஞ்ஞான ஆய்வு முறையில், பொருளியல் கோட்பாடுகள் தோன்றுவதற்கான விதைகளைத் தூவின. இடைக்காலத்தின் முடிவிற்கும், ஆடம் ஸ்மித் எழுதிய ‘ நாடுகளின் செல்வம்’ என்ற புத்தகத்தின் தோற்றுவாய்க்கும் இடைப்பட்ட காலத்தில், பொருளியல் கோட்பாடுகள் (Theoretical Economics) வெகுவாக உருவாயின. மெர்க்கண்டலிஸ்டுகள், ஃபிஸியோகிரட்டுகள் போன்ற பொருளியல் முறைகள் உருவாயின. இந்தக் காலத்தின் எழுத்தாளர்களைப்பற்றி நாம் நிறையப் படிக்கவேண்டியிருக்கிறது. ஆனல், நாம் வட்டிப் பிரச்சினையைச் சார்ந்த கோட்பாடுகளை உருவாக்கிய சிலரைப் பற்றித் தெரிந்துகொள்ளல் நலம். இடைக்காலத்தின் முடிவிலே வட்டி தேவையானதென்று கருதப்பட்டது. ஆனல், கடும் வட்டி மட்டும் கட்டுப்படுத்தப்பட்டது. இதற்குக் காரணம் மெர்க்கண்டலிஸ்டுகளின் எண்ணங்களே. இவர்களுக்குப் பின்னல் வட்டியை ஆராய்ந்தவர்கள் வட்டி மாறுதல்களில் தொழில்துறை, வணிகத்துறை விளைவுகளைப் பற்றியே பெரிதும் ஆராய்ந்தனர். இவர்களில் பேகன், ஜோசய்யா சைல்ட், சர் தாமஸ் கல்பிப்பர், டெட்லி நார்த், தாமஸ் மன்லீ, தாமஸ் மன,

சர் வில்லியம் பெட்டி, ஜான் லாக், டேவிட் ஹியூம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களெல்லாம் வட்டி வீத மாறுதல்களினுல் தோன்றக்கூடிய விளைவுகளைப் பெரிதும் ஆராய்ந்தாலும் கூட, கொஞ்சம் கொஞ்சமாக வட்டியின் இயல்பைப்பற்றிய ஒரு புதிய கருத்தை உருவாக்கினர். வட்டி என்பது ஒரு திட்டமான கைக்கோளினுல் உருவாக்கபடுவதன்று; பொருளியல் காரணிகளால் உருவாக்கப்படுகின்ற ஒரு திட்டவட்டமான கருத்து (Objective Phenomena). இதற்குப்பின் இயற்கை என்ற கருத்துப் பொருளியலில் பெரும்பங்குபெற்றது. எடுத்துக்காட்டாக இயற்கை விதிகளுக்கு மாருக, சிவில் விதிகள் (Civil Laws) அல்லது உரிமைகளைப் பற்றி விதிகள் உருவாக்குவது பயனற்றதே என்று சர் வில்லியம் பெட்டியின் கருத்தைக் கூறலாம். வட்டி, முதலில் தேவை அளிப்பு இவைகளினுல் உருவாகின்ற ஒரு சந்தை விலை என்ற கருத்து 17ஆம் நூற்ருண்டின் இறுதியிலே நிலவியது. ஸர் டெட்லி நார்த் என்பார் முதலில் அளிப்பை அதிகரிக்க வட்டி வீதத்தை ஏற்ற வேண்டும் என்று கூறினர். ஆனல் 17ஆம் நூற்ருண்டில் வாழ்ந்த பொருளியல் வல்லுநர்கள், மூலதனத்தின் தேவையைப் பற்றியே பெரிதும் கருதினர். அவர்கள் வட்டி வீத மாறுதல்களின் வணிகத்துறை விளைவுகளை ஆய்ந்தனர். உயர்வீத வட்டி, முதலீட்டைக் குறைக்கும். எதிர்பார்க்கப்படுகிற இலாபம், வட்டி வீதத்தைவிடக் குறைவாகவே இருக்கும். குறைந்த வட்டி வீதமே ஆங்கிலேய வணிகர்கள் சிறப்பாக வெளிநாட்டினருடன் குறிப்பாக டச்சுக்காரர்களுடன் போட்டியிட வெகுவாக உதவியது. ஆகவே, உயர்வீத வட்டியை இவர்கள் எதிர்த்தனர்.

ஆக, வட்டிக் கோட்பாடு உருவாகத் தொடங்கியது. ஆனல் வட்டி வீதத்தைப் பற்றிய தெளிவின்மை மிகுந்திருந்தது. முதலாவது வட்டி கொடுப்பதை ஒட்டிப் பேசக் காரணம் எதுவும் காட்டப்படவில்லை. வட்டி என்பது நிலத்திற்குக் கொடுக்கப்படும் வாரத்திலிருந்து உருவாக்கப்பட்டதால் வட்டி என்பதும் வாரத்தைப் போன்று ஓர் எச்சம் என்ற கருத்து நிலவியது. இரண்டாவதாக, பணம், முதல் இரண்டுக்கும் உள்ள வேறுபாட்டைச் சார்ந்த தெளிவின்மை. பணம்தான் முதலா? பண்டங்கள்தாம் முதலா? என்ற விஞ இன்றும் எழுகின்றது. இதைச் சார்ந்த சர்ச்சை, பதினேழாம் நூற்ருண்டின் இறுதியிலே தொடங்கியது. பழைய காலத்திலிருந்து மெர்க்கண்டலிஸ்ட் காலத்தின் முடிவு வரை பணமும் முதலும் ஒன்ருகவே கருதப்பட்டன. ஆகையால்தான் மதிப்புமிக்க உலோகங்களால் ஆன பணத்தைச் சேகரித்து வைப்பது பழமையான ஒரு வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. கிரீஸ், ரோம், போன்ற நாடுகளிலும் இடைக்காலத்திலும் பெருமதிப்புள்ள உலோகங்களைச்

சேகரித்து வைப்பது என்பது குறிக்கோளாகவே இருந்தது மெர்க்கண்டலிஸமும் வணிகத்துறை முதலாளித்துவமும் இந்த வழக்கத்தையும் குறிக்கோளையும் ஊக்குவித்தன. பொருளியல் நடவடிக்கைகளில் தலையாயது வணிகம். வணிக மாற்றுகளினால் தான் செல்வம் பெருகியது என்ற நம்பிக்கை இருந்தது. ஆகவே நாடுகள் பணத்தையும், மதிப்புள்ள உலோகங்களையும் சேகரித்து வைப்பதை நாட்டுக் கொள்கையாகவே கொண்டன. மெர்க்கண்டலிஸ்டுகள் தங்கத்தைத் தேடி ஓடினர்; பொன்னைப் போற்றினர்; பண்டங்களைப் பிறருக்கு விற்க விரும்பினர்; பிறருடைய பண்டங்களை வாங்குதலை அரிய செயலாக்கினர். வெளிநாட்டு வணிகத்திலே இக்கொள்கைகளை பெரிதும் பின் பற்றினர். ஏற்றுமதி எச்சத்தைப் பெரிதும் வலியுறுத்தினர். ஏற்றுமதி எச்சமே நாட்டிற்குத் தங்கத்தைத் தருவிக்கும். அதற்காகவே சட்டங்களை இயற்றினர்.

ஆக, மெர்க்கண்டலிஸ்டுகள் பணத்தையும் மூலதனத்தையும் ஒன்றாகவே கருதினர். ஹெக்ஷர் என்பார் மெர்க்கண்டலிஸம் என்ற நூலில் (Volume II—Page 200) கூறுவது போல அவர்களுக்குப் பணம் என்பது இன்றைய வழக்கிலிருக்கும் சொற்றொடரைப் பயன் படுத்திக் கூறினால் நிலத்தைப் போன்ற ஓர் உற்பத்திக் காரணியேயாகும். சிற்சில சமயங்களில் இயற்கைச் செல்வத்திலிருந்து மாறுபட்ட செயற்கைச் செல்வமாகவும் கருதினர். "மூலதனத்திற்குக் கொடுக்கப்படும் வட்டி பணத்தை வாடகைக்கு எடுப்பதற்காகக் (Payment for the renting of money) கொடுக்கப்படும் ஓர் ஊதியமே. இந்த ஊதியம் நிலத்திற்குக் கொடுக்கப்படும் வாரம் போன்றதே'. பெரும் பணத்தைச் சார்ந்தே வணிகம் நிகழ்கிறது. பணமின்மையால் வணிக மந்தம் ஏற்படும். பணத்திற்கு மிகுந்த தேவையிருந்ததனால், வட்டியைக் குறைந்த வீதத்தில் நிலை நிறுத்துவதற்குக் கட்டுப்பாடுகளை விரும்பினர். இந்தக் கருத்தினை சர் ஜோஸையா செல்ட், சர் தாமஸ் கல்பெப்பர் போன்றோர் வெளிப்படையாகவே கூறினர். குறைந்த வட்டி வீதம் வணிகத்தை ஊக்குவிக்கும். குறைந்த வட்டி வீதம்தான் செல்வம் உருவாவதற்கான காரணமேயன்றி விளைவு அன்று எனச் சிலர் வாதிட்டனர். கிடைக்கும் பணத்தின் அளவினைப் பொறுத்தே வட்டி வீதம் அமையும். பணத்தின் அளவு மிகுதியாக இருப்பின் வட்டி வீதம் குறைவாக இருக்கும். மாறாகப் பணத்தின் அளவு குறைவாக இருப்பின் வட்டி வீதம் உயர்ந்து இருக்கும். பணம் என்பது அந்தக் காலத்தில் பெரும் பாலும் உலோகப் பணமாகவே இருந்தது. மேலும் கீன்ஸ் "பொதுக் கோட்பாட்டில் கூறுவது போல, வட்டி வீதம் நீர்மை விருப்பத்

தைச் சார்ந்திருந்தது என்றும் மெர்கண்டலிஸ்டுகள் அறிந்திருந் தனர். குறைந்த செல்வ நீர்மை விருப்பத்தையும், வளர்ந்து செல் பணத்தின் அளவினையும் கூடவே கருதினர். அவர்களில் பலர் வட்டி வீதத்தைக் குறைப்பதற்குப் பணத்தின் அளவினை அதிகரிக்கவேண்டு மென்றனர். வட்டி வீதம் தானுகவே சரியான நிலைக்கு வந்து விடும் என்று அவர்கள் கருதவில்லை யாதலால், உயர்ந்த அளவு வட்டி வீதத்தினைச் சட்டத்தினுல் நிலைநிறுத்த வேண்டும் என்றனர். மெர்க்கண்டலிஸ்டுகளின் வட்டி வீதத்தைப் பற்றிய கருத்து, குறைபாடுகள் உடையதாக இருந்தாலும், வட்டி வீதம் என்பது ஒரு பணப்பிரச்சினை என்ற அவர்கள் கருத்து மிகச் சிறந்த ஒன்று. ஆனுல் எக்காரணத்தினுலோ இந்தக் கருத்தும் பின்னுல் வந்த பொருளியல் வல்லுநர்களால் ஒதுக்கப் பட்டது. இருப்பினும் இந்தக் காலத்தில் பணக் கோட்பாட்டின் ஒரு பகுதியே வட்டி வீதம் என்ற கருத்து நிலைத்து நிற்கிறது.

ஆனுல் சிறிது சிறிதாக வட்டியின் பண அளவுக் கருத்து மறைந்து, செல்வ அளவுக் கருத்து வளர்ந்தது. இம்மாறுதல் தொழில் முதலாளித்துவ முறை தோன்றியதன் விளைவாகும். வணிக முதலாளித்துவ முறையின் போது பணமும் முதலும் ஒன்ருகவே கருதப்பட்டன. ஆனுல் வணிக முதலாளித்துவமுறை தேய்ந்து, தொழில் முதலாளித்துவ முறை வளர்ந்த நேரத்தி லிருந்து மூலதனம் என்பது பங்காக (இருப்பாக) அதாவது முதற் கருவிப் பொருளாகக் கருதப்பட்டது. செல்வத்தை உருவாக்கும் திறன் மாற்றுக்கு மட்டுமல்லாது, உற்பத்தித் துறைக்கும் இருப்ப தாகக் கருதப்பட்டது. ஆகவே வட்டி வீதம் நாட்டின் செல்வத் தைப் பொறுத்திருக்கிறது. பணத்தினளவைப் பொறுத்ததன்று. வெகு நாட்களாக மூலதனத்தைப் பற்றிய இருவிதமான கருத்துக் களும் நிலவின. ஜான்லாக், டேவிட் இருவரும் அதற்கு விளக்க மளித்தனர்.

லாக் வட்டிக் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு மிகுதியாக ஒன்றும் செய்யவில்லை. அவருடைய கூற்றுப்படி வட்டி என்பது நிலத்தின் வாரத்தைப் போன்ற எச்சமே. பணத்தின் பயனுக்குக் கொடுக்கப் படும் ஊதியமே வட்டி. ஆனுல் லாக் வட்டி வீதத்துக்கும் பணத் தின் அளவுக்கும் உள்ள தொடர்பை, அகத்தைச் சார்ந்த முறையில் விளக்கினுர். பணத்துக்கு இருவித மதிப்புக்கள் உள்ளன. வட்டி வீதம் பணத்தின் பயன் மதிப்பைக் காட்டுகிறது. இப்படிப் பார்க் குங்கால் இது நிலத்தின் இயல்பை ஒத்திருக்கிறது. பணத்தின் பயன் மதிப்பு அல்லது வட்டி வீதம், பணத்தின் அளவு (பணத்தின் சுழல் வேகமும் கருதப்படுகிறது) வணிக நடவடிக்கைகளின் மதிப்

யைச் சார்ந்திருக்கிறது. பணத்தின் மாற்று மதிப்பு இந்த வகையில் பண்டங்களின் இயல்பை ஒத்திருக்கிறது. இந்த மாற்று மதிப்பு பண அளவையும், சந்தையில் இருக்கும் மொத்தப் பொருள்களையும் சார்ந்திருக்கிறது. ஆக, லாக் இந்த இரட்டைப் பண அளவுக் கோட்பாடுகளின் தந்தையாகிறார். (Keynes General Theory-p. 343) ஆனால் கீன்ஸ் கூறுவது போன்று, நீர்மை விருப்பத்தால் ஏற்படும் மாறுதல்களை லாக் ஒதுக்கிவிட்டார். லாக்கும் கூட பணம், மூலதனம் இரண்டையும் ஒன்றாகவே கருதினார். லாக் வட்டி வீதக் குறைப்பினால் விலை மட்டத்தின் நேர்முக விளைவு ஏற்படாது. வட்டி வீதக் குறைப்பு, ரொக்க ஏற்றுமதி உற்பத்தி அதிகரிப்பு போன்ற மாறுதல்களினால் மறைமுகமாக விலைமட்டத்தில் மாறுதல்களை ஏற்படுத்தும்.

டேவிட் ஹ்யூம் என்பார் பணத்திற்கும், மூலதனத்திற்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் காட்டிய முதல் பொருளியல் வல்லுநர் எனக் கருதப்படுகிறார். குறைந்த வட்டி வீதமும், பெருவாரியான பண அளவும் சேர்ந்தே காணப்பட்டாலும் கூட, குறைந்த வட்டி வீதம் என்ற விளைவு பண அளவு மிகுதியினால் ஏற்படுவது என்ற கருத்தை வன்மையாக எதிர்த்தார். ஆகவே லாக்கைப் போல் ஹியூமும் வட்டி வீதம் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்படுவதை எதிர்த்தார். பண அளவு மிகுதியாகவோ குறைவாகவோ இருக்கலாம். இது வட்டி வீதத்தை ஒன்றும் செய்யாது. ஆனால் குறைவாகவோ மிகுதியாகவோ உள்ள பண்டங்களின் இருப்பு, உழைப்பு என்னும் இவையே வட்டி வீதத்தைப்பெரிதும் பாதிக்கின்றன. ஹ்யூம் தம்முடைய கோட்பாட்டை விளக்குவதில் லாக்கைப் பின்பற்றினார். பண அளவுதான் விலை மட்டத்தை உறுதி செய்கிறது. மிகுதியான பண அளவு உழைப்பின் விலை, பண்டங்களின் விலை இவைகளை அதிகரிக்கச்செய்யும். வட்டி வீதத்தை இது குறைக்க முடியாது. தொழில், வணிகம் இவைகளின் வளர்ச்சியினால் பெருவாரியாக மதிப்பு மிக்க உலோகங்கள் கிடைத்தன. இது வட்டி வீதத்தைக் குறைத்தது. ஆகவே குறைந்த வட்டி வீதம், மிகுதியான பணம் இவையிரண்டும் இணைபிரியாமல் இருந்தன. ஹ்யூம் வட்டிப் பிரச்னையைப் பணத்தினிடமிருந்து பிரித்தாலும், தொழில் வணிகம் இவைகள் பெரிதும் பணத்தைப் பொறுத்ததே என்பதை நன்கு அறிந்திருந்தார். பண அளவு மிகுதியானால் விலைமட்டம் உயரும். விலை மட்ட உயர்வு தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும். ஆனால் எல்லா விலைகளும் நிலையான பிறகு தொழில்கள் பாதிக்கப்பட மாட்டா.

கடன் வாங்குபவரின் தேவை, நாட்டின் செல்வம், வணிகத் துறையில் கிடைக்கும் இலாபம் என்ற மூன்று காரணிகள்-வட்டி

வீதத்தை உறுதி செய்கின்றன. கடன் தேவை அதிகமாக இருந்தாலும், தேவைக்கேற்ற செல்வத்தின் அளிப்பு இல்லாமலிருந்தாலும், (வணிகத்துறையில் இலாபம் அதிகமாக இருந்தாலும்) வட்டி வீதம் உயர்ந்து இருக்கும். வட்டியும் இலாபமும் ஒன்றை ஒன்று சார்ந்து இருப்பவை. கடன் தேவை குறைவாய் இருந்தாலும், செல்வத்தின் அளிப்பு தேவையை விட அதிகமாய் இருந்தாலும், வணிகத் துறையில் இலாபம் குறைவாய் இருந்தாலும் வட்டி வீதம் குறையும்.

ஹ்யூம் வட்டிப் பிரச்சனையை விளக்கினார். ஆனால் வட்டி வீதத்தை உறுதி செய்யும் மூன்று காரணிகளின் விளக்கம் அரை குறையாக உள்ளது. கடன் தேவையைப்பற்றி மனத்தத்துவக் (அகத்துறை) காரணிகளைக் கொண்டு மிக ஆழ்ந்து ஆராய்ந்து உள்ளார். ஆனால் இலாபம் வட்டி இவற்றினிடையே உள்ள தொடர்பை மேலெழுந்த வாரியாகவே கருதி உள்ளார். இருந்தாலும் வட்டியைப் பற்றிய அவர் கருத்து ஓர் புரட்சிகரமானது. அவருக்கு முன் வட்டியைப் பற்றிய பணமிகு கருத்து மேல் ஓங்கி இருந்தது. இவர்களுடைய முயற்சியினால் பொருள் மிகுதி எண்ணம் சிறந்தோங்கியது. இருப்பினும் இப்பொழுது முதலில் கூறப்பட்ட கருத்துக்கு முக்கியத்துவம் (சிறப்பு) ஏற்பட்டு உள்ளது.

இதுவரை இங்கிலாந்தின் பொருளியல் வல்லுநர்களின் வட்டியைப் பற்றிய கருத்துக்கள் ஆராயப்பட்டன. பிரான்சு நாட்டின் பிச்யோகிராட்கள், குறிப்பாக டர்காட் என்பார் சிறப்பாக வட்டிக் கோட்பாட்டை எடுத்து இயம்பி உள்ளார். க்வேஸ்நே என்பார் பிச்யோகிராட்களின் தலைவர். அரசினர் வட்டி வீதத்தை நிர்ணயிக்க வேண்டும் என்பது அவர் கருத்து. அதை நிர்ணயிக்கும் முறையைக் கூட அவர் குறிப்பிட்டுள்ளார். அதாவது கடன் கொடுக்கப்படும் தொகைக்குச் சமமான மதிப்புள்ள நிலத்தில் இருந்து கிடைக்கும் வருவாயை வட்டியாக நிர்ணயிக்க வேண்டும். இந்த வட்டி வீதத்துக்கு மிகுதியான அளவு வட்டியைக் கடன் ஈவோர் வசூலிக்கக் கூடாது.

வட்டியின் இயல்பைப்பற்றி மிக நுணுக்கமாக அறிந்து இருந்தார் டர்கோ. வட்டி என்பது பணத்தின் உபயோகத்திற்காகக் கொடுக்கப்படும் விலை என்ற கருத்தை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. கேவலம் ஒரு குறிப்பிட்ட அளவு மதிப்பை ஒரு குறிப்பிட்ட காலத்துக்குப் பயன்படுத்துவதற்காகக் கொடுக்கப்படும் ஒரு விலை தான் வட்டி என்ற டர்கோவின் கருத்தை எடுத்து இயம்பினார்.

பொருள்களின் மதிப்பு காலத்தைச் சார்ந்தது; காலவேறுபாடு மதிப்பில் வேறுபாடுகளை ஏற்படுத்துகிறது என்ற கருத்துக்களை முதல் முதலாக வலியுறுத்தியவர் டர்கோ. அவர் அடிக்கடி 'காத்திருத்தல்' (Waiting) என்ற சொல்லை உபயோகப்படுத்தினர். ஆகவே மூலதனம் மதிப்புடையது. மதிப்பின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான பயன் ஒரு தனிப்பட்ட உற்பத்திக் காரணியாகவே அவரால் கருதப்பட்டது. மூலதனத்தின் தேவை, அளிப்பு—குறிப்பாக—தேவை இவைகளை நன்கு ஆராய்ந்தார். மூலதனத்தைப் பயன்படுத்த அநேக உற்பத்திப் பிரிவுகள் போட்டி போடுகின்றன. ஆனல் இது (இந்த மூலதனம்) நிலம் வாங்குவதற்கு மட்டுமே என்பது இவர் கருத்து. ஆஸ்திரிய நாட்டுப் பொருளியல் வல்லுநர் பாம் பாவர்க் இந்தக் கோட்பாட்டின் குறைபாடுகளைக் கண்டார். நிலத்தில் இருந்து வாரம் பெறும் வாய்ப்பின் காரணமாக வட்டி உருவாகின்றது என்று விளக்கினர் டர்கோ. ஆனல் இது சுற்றி வளைத்துத் தரப்படும் விளக்கம் என்பது பாம்பாவர்க்கின் கருத்து. ஏன் என்ருல், நிலத்தின் மதிப்பு மூலதனத்தின் மீது கொடுக்கப்படும் வட்டி வீதத்தால் உருவாக்கப்படுகிறது என்றும் டர்கோ கூறுகிருர். மூலதனத்துக்கு ஏன் வட்டி கொடுக்கப்படுகிறது? வட்டி நிலம், மூலதனம் இவற்றிடையே ஏற்படும் மாற்றுக்குக் காரணம் ஆகி, இந்த மாற்றின் விளைவாகவும் ஆகின்றது. ஆனல் வேறு சிலர், டர்கோவின் கோட்பாட்டை பாம்பாவர்க் சரியாக ஆராயவில்லை என்று கருதினர். நடப்பு வட்டி வீதத்தைக் கருதாமல் நிலத்தின் மதிப்பைத் தனியாக டர்கோ விளக்கினர் என்பது ஃபெட்டர் என்பவருடைய கருத்து. நிலத்தின் மதிப்பு அளிப்பு, தேவை இவைகளால் உறுதி செய்யப்படுகிறது. வருவாய்க்குத் தகுந்தவாறு முதலீட்டை மாற்றக் கூடும். இருந்தாலும் அந்த வருவாய் வீதம் வேறு, சந்தையில் நிலவுகின்ற வட்டி வீதம் வேறு. முதலாக்கக் கருத்தை நிலத்தின் மதிப்புக்கு மட்டுமே பயன்படுத்திய அவர் வீடு போன்ற மூலதனத்திற்கு அவர் இதைப் பயன்படுத்தவில்லை. ஆகவே பெட்டர் இந்தக் கோட்பாட்டை வரையறுக்கப்பட்ட முதலாக்கக் கோட்பாடு எனப் பெயர் இட்டார்.

குறைபாடுகள் இருப்பினும் டர்கோவின் வட்டிக் கோட்பாடு சிறந்த ஒன்று. மூலதனம் என்பது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான குறிப்பிட்ட அளவு மதிப்பு என்ற அவருடைய கருத்தின் தெளிவுக்கு மேலான கருத்து வேறெதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை. நிலத்தின் முதலிட்டு வீதம் என்ற கருத்து பொருள் இயல்துறை வளர்ச்சிக்கு அவர் அளித்த தனிப்பட்ட (சொந்தமான) கருத்தாகும்.

தொன்மைப் பொருளாதார வட்டிக் கோட்பாடு

வரலாற்று வரிசைப்படியாக அடுத்த வளர்ச்சி ஆடம் ஸ்மித் போன்ற தொன்மைப் பொருளாதார வல்லுநர்களின் வட்டிக் கோட்பாடுகளாகும். ஆடம் ஸ்மித், ரிகார்டோ, ஜே. எஸ். மில் மற்றும் பொருளியல் துறை முன்னோர்களைத் தொன்மைப் பொருளியல் வல்லுநர்கள் என்று கார்ல் மார்க்ஸ் கருதுகிறார். ஜே. எஸ். மில், மார்ஷல், எட்ஜ்வொர்த், பிகு போன்றோர் ரிகார்டோவின் பொருளியல் கோட்பாடுகளை நெறிப்படுத்தினர். ஆகையால் இவர்களையும் தொன்மைப்பொருளியல் வல்லுநர்கள் என்று கீன்ஸ் கருதுகிறார். நாம் கீன்ஸ் ஸின் கருத்தை எடுத்துக் கொள்வோம்.

இவர்களுடைய வட்டிக் கோட்பாடுகளின் அடிப்படைக் கருத்துக்கள் ஏறத்தாழ ஒன்றாக இருக்கின்றன. எனினும் ஆடம் ஸ்மித், ரிகார்டோ போன்றோரின் கருத்துக்களை முதலில் ஆராயலாம். ஆடம் ஸ்மித் புதியதான வட்டிக் கோட்பாடு ஒன்றை ஏற்படுத்தவில்லை. ஆனாலும் காஸல் என்பார் கூறுவது போல, முன்பே வழக்கிலிருந்த கருத்துக்களைத் திரட்டி, மிக எளிமையான முறையில் சிறப்பாக எடுத்துக் கூறினார் ரிகார்டோ ஆடம் ஸ்மித்தின் கருத்துக்களுக்கு பெருகூட்டி, நெறிப்படுத்தி, அதன் முரண்பாடுகளைக் களைந்து நமக்கு அளித்தார். திறனுள (Scientific) செல்வத்தின் பணியினைச் சார்ந்த பகிர்வுக் கோட்பாட்டை ஆடம் ஸ்மித் உருவாக்கவில்லை. செல்வத்தின் ஆக்கத்தையே அவர் பெரிதும் கருதினார். ஆங்கிலப் பொருளியல் எழுத்துலகில், பகிர்வு என்ற கருத்தைப் பெரிதும் பரப்பியவர் ஆடம் ஸ்மித் ஆவார். இருப்பினும் பகிர்வுக் கோட்பாட்டுக்கு அவருடைய புத்தகத்தில் முதன்மையான இடம் அளிக்கப்படவில்லை. விலைக் கோட்பாட்டின் ஒரு பகுதியாகவே சேர்க்கப்பட்டிருக்கிறது. அவர்தம் கூற்றின்படி ஒரு பொருளின் விலை விவரம், கூலி, இலாபம் போன்றவையாக பிரிக்கப்படுகிறது. ரிகார்டோ கூட மதிப்பு பகிர்வு இவைகளுக்கு முதன்மையான இடம் அளித்தாரே தவிர உற்பத்திக் காரணிகளை ஆய்ந்து அவைகளின் பணிகளைச் சார்ந்த பகிர்வுக் கோட்பாட்டை உருவாக்கவில்லை. ஆடம் ஸ்மித் ரிகார்டோ இருவருமே பகிர்வுப் பிரச்சினை ஆக்கத்துக்குப் பயன்படும் உற்பத்திக் காரணிகளுடைய வேலைகளின் விலைப்பிரச்சினையாகக் கருதவில்லை. நிலச்சொந்தக்காரர்கள், தொழிலாளிகள், முதலாளியான தொழில்வாய்ப்புத்தருவோர் இவர்களுக்குச் சமூகத்தின் மொத்த வருமானத்தைப் பிரித்துக் கொடுப்பதைச் சார்ந்த ஒரு பிரச்சினையாக மட்டுமே கருதினர். பொருளின் விலையில் பங்கு பெறாத, எச்சமான வாரத்தை நிலச்சொந்தக்காரர்களின் பங்காகவும், ஊதியத்தைக் கூலியாட்களின்

பங்காகவும், இலாபத்தை முதலாளியான தொழில்வாய்ப்புத் தருவோரின் பங்காகவும் கருதினர்.

இருவருமே முதலாளியின் பணிகளையும் தொழில் துணிவோரின் பணிகளையும் வேறுபடுத்திக் கருதவில்லை. முதலாளியையே தொழில் துணிவோனாகக் கருதி, வட்டியை ஒருவித இலாபமாகக் கருதினர். மூலதனத்தின் இலாபத்தையே (Profits of Stock) கருதினர் இலாபம் உருவாக, மூலதனம் இருக்கவேண்டும் எனக் கருதினர்.

ஆடம் ஸ்மித், ரிகார்டோ இருவரும், மூலதனத்தைப் பயன்படுத்தி அதிலிருந்து பெரும் வருவாயை இலாபம் எனக் கருதினர். மொத்த இலாபம், நிகர லாபம் இவைகளையும் வேறுபடுத்திக் கண்டனர். பணத்தைப் பயன் படுத்துவதற்காக, கடன் கொடுப்பவர் வாங்கும் (விதிக்கும்) விலையே வட்டி எனவும் கூறினர். வட்டி என்பது இலாபத்திலிருந்து பெறப்படுகின்ற வருவாய் என்றும் கூறினர். கடன் கொடுத்தவர் அப்பணத்தைப் பயன்படுத்தாமல் கடன் கொடுத்ததற்காக, கடன் பட்டவர் ஈட்டுத் தொகையாக வட்டியைக் கடன் கொடுத்தவருக்குக் கொடுக்கிறார். இருப்பினும் மொத்த இலாபத்தையும், நிகர வட்டியையும் தொடர்ச்சியாக வேறுபடுத்திக் காணவில்லை அவர்கள். ஆக நிகர வட்டியைப் பற்றியோ, அதை உருவாக்கும் சக்திகளைப் பற்றியோ அவர்கள் மிகுதியாக ஒன்றும் ஆராயவில்லை.

இவ்விருவருடைய மூலதனத்தின் இயல்பைப் பற்றிய கருத்துக்களை ஆராய்வோம். ஆடம் ஸ்மித் "நாடுகளின் செல்வம்" என்னும் நூலை எழுதுங்கால், 'மூலதனம்' (Capital) என்னும் சொல் பரவலாக வழக்கில் இல்லை. 'இருப்பு' (Stock) என்னும் சொல்லே மிகுதியாக வழக்கில் இருந்தது. இருப்பு (Stock) என்னும் சொல் பலதரப்பட்ட பொருள்படுமாறு பயன்படுத்தப்பட்டது. வணிக நிறுவனத்தின் முதலீடாகப் பயன்பட்ட பணத்தை இருப்பு என்றனர். நிறுவனத்தின் நிகர சொத்துக்களையும் அது குறித்தது. ஆக்கத் துறையில் பயன்படும் பொறிகளைக் கூடக் குறித்தது அச்சொல். வட்டி ஈன்ற பணத்தொகையையும் குறித்தது அச்சொல். ஆடம் ஸ்மித் தமது "சொற்பொழிவுகளில்" மூலதனம் என்ற சொல்லைக் கடைசியாகக் குறிப்பிட்ட பொருள் படும்படியாகவே பயன்படுத்தினார். "நாடுகளின் செல்வம்" எழுதும் பொழுது இருப்பு அல்லது மூலதனம் என்ற சொல்லை, பணவருவாய் அல்லது இலாபம் தரக்கூடிய உற்பத்திக்காகப் பயன்படும் செல்வத்தைக் குறிப்பதற்குப் பயன்படுத்தினார். ஆகவே உணவு, உடை,

கட்டிடங்கள், கச்சா (மூல)ப்பொருள்கள், இயந்திரங்கள் இவைகள் உற்பத்திக்குப் பயன்படுமாயின் அவைகளையும் மூலதனமாகக் கருதினார். உணவு உடை, இவைகள் தனிமனிதனுக்குச் செல்வமாக இருக்கலாம். ஆனால் சமூக நோக்கிலே பார்த்தால் அவைகளைச் செல்வமாகக் கொள்ள முடியாது. ஏறத்தாழ ரிகார்டோவும் மூலதனத்தைப் பற்றிய இதே கருத்தைத்தான் கொண்டிருந்தார். மூலதனம் என்பது உழைப்பினால் ஆக்கப்பட்டது. (உழைப்பினால் உருவாவதே மூலதனம். அது உழைப்பின் அளவின் உருவம் என இருவருமே கருதினர். முதலாளித்துவ உற்பத்தி முறை சுற்றுவழி முறை-காலம் தேவைப்படுகிற முறை என்பதை ரிகார்டோவும் உணர்த்தினார்) முதல் உருவாவதற்கு—திரண்டு வருவதற்கு—பெருகுவதற்குச் சிக்கனம் (Parsimony) தேவை. சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் பொழுது, நுகர்வைத் தியாகம் செய்து, சேமிக்க முடிகிறது. இந்தத் தியாகத்திற்கு ஒரு வெகுமதி (Reward) கொடுத்தால்தான் சிக்கனத்தைக் கடைப்பிடித்துச் சேமிப்பார்கள்.

உற்பத்தித் திறன் கோட்பாடு, நுகர்வுத் தவிர்ப்புக் கோட்பாடு (சுரண்டல் கோட்பாடு) இவைகளின் வித்துக்களை ஸ்மித், ரிகார்டோ இருவரின் எழுத்தோவியங்களில் காண்கிறோம்.

மூலதனத்தை ஆக்கத்துறையில் பயன்படுத்தும் பொழுது ஆக்கப்படும் பொருள்களுக்கு அதற்குப் பயன்பட்ட உழைப்பின் மதிப்பை விட மிகுதியான மதிப்பு ஏற்படுகிறது என்கிறார் ஸ்மித். உற்பத்தி வட்டிக் கோட்பாட்டின் விதையை இங்கே காண்கிறோம். ரிக்கார்டோவின் கூற்றுப்படி சேமிக்கப்பட்ட உழைப்பே (Stored-up Labour) மூலதனம். உடனடி உழைப்பைவிட சேமிக்கப்பட்ட உழைப்பின் (மூலதனத்தின்) உற்பத்தித் திறன் மிகுதியானது. ஆக ரிகார்டோவும் உற்பத்தித்திறன் கோட்பாட்டுக்கான வித்திட்டார் எனக் கூறலாம். ஜேம்ஸ் மில் என்பார் ரிகார்டோவைப் பின்பற்றியவர். சேமிக்கப்பட்ட அல்லது முடக்கப்பட்ட உழைப்பே மூலதனம் என்கிறார். இலாபம் என்பது சேமிக்கப்பட்ட மூலதனத்திற்காக கொடுக்கப்படும் ஊதியமே என்று கருதினர்.

ஜே எஸ். மில். "பொருளியல் கொள்கைகளை எழுதிய பொழுது, நாஸ்ஸா வில்லியம் ஸீனியர் என்பார் வட்டியின் நுகர்வுத் தவிர்ப்புக் கோட்பாட்டை உருவாக்கினார். நுகர்வுத்தவிர்ப்புக்கான வெகுமதியே வட்டி எனக் கருதினார். ஜே. எஸ். மில்லும் இதை ஆதரித்தார். மொத்த இலாபத்திலிருந்து மேற்பார்வைக்கான உழைப்பு, திறன் இவைகளுக்கான ஊதியத்தை (Remuneration) இவைகளைக் கழிவு செய்தபின் கிடைப்பது வட்டி. நுகர்

வுத் தவிர்ப்புக்கான வெகுமதிதான் வட்டி என்றும் மில் உணர்ந்தார். இலாப வீதம், பணத்தின் அளவு வட்டி வீதம் இவைகள் சம்பந்தத்தைப் பற்றிய மில்லின் கருத்து ஸ்மித், ரிகார்டோவின் கருத்துக்களைப் பெரிதும் ஒத்திருந்தது. மில்லின் ஊதிய நிதிக் கோட்பாடு சர்ச்சைக்குரியதாக இருந்ததால், மில்லும் மற்றோரும் வட்டிக் கோட்பாட்டைப் பற்றி அதிகம் சிந்திக்கவில்லை. இந்தச் சர்ச்சை வட்டிக் கோட்பாட்டின் வளர்ச்சியைப் பாதித்தது என்று கூடச் சொல்லலாம்.

மூலதனத்தின் உழைப்பு வட்டி வீதத்தைப் பொறுத்தது என எண்ணினர். வட்டி வீதம் குறைந்தால் மூலதனக் குவிப்பு (பெருக்கம்) குறையும் என்று கருதினர். இக்கருத்து ஸ்மித், ரிகார்டோவிடம் கடன் வாங்கப்பட்ட கருத்தாகும். ஆனால் இக்கருத்து உறுதி செய்யப்படவில்லை.

பொருளியல் வல்லுநர், ஆல்பிரட் மார்ஷல் நான்கு உற்பத்திக் காரணிகளின் பணியைச் சார்ந்த பகிர்வுக் கோட்பாட்டை உருவாக்கினார். அளிப்பு, தேவை சக்திகள் மதிப்பை உருவாக்கும். அளிப்பைப் பொறுத்தவரை எதிர்பார்ப்புகளும் (Prospectiveness), தேவையைப் பொறுத்தவரை உற்பத்தித்திறனும் (Productiveness) வட்டி வீதத்தை உருவாக்குகின்றன. சீனியரின் நுகர்வுத் தவிர்ப்பை விடுத்து, பொறுத்திருத்தல் (Waiting) என்றதை உருவாக்கினார். மூலதனத்தை அளிப்பவர் நுகர்வைத் தள்ளிப் போடுகிறார்; சேமிக்கிறார்; கொடுத்தபின் பொறுத்திருக்கிறார். சேமிப்பைக் கடனாகக் கொடுத்தபின் பொறுத்திருந்து தியாகம் புரிவதற்கு வெகுமதி தேவை. இது அளிப்புப் புறம். மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித் திறனைப் பொறுத்தே மூலதனத்திற்குத் தேவை உண்டாகிறது. இது தேவைப் பக்கம். மூலதனத்தின் தேவை, அளிப்பு இவை இரண்டினாலும் ஏற்படுகின்றது வட்டி வீதம்.

இதுவரை தொன்மைப் பொருளியல் வல்லுநர்கள் ஒவ்வொருவரின் தனிப்பட்ட கருத்துக்கள் விளக்கப்பட்டன. இனி தொன்மைப் பொருளியல் துறையின் வட்டிக் கோட்பாட்டின் சிறப்பான இயல்புகளைக் காண்போம். தொன்மைப் பொருளியல் வட்டிக் கோட்பாட்டில் கண்டுபிடிக்கப்பட வேண்டியவைகள் இரண்டும், சமன்பாடுகள் இரண்டும் உள்ளன. சேமிப்பின் அளவு முதலீட்டின் அளவும், வட்டி வீதம் ஆகிய இரண்டும் கண்டுபிடிக்கப்பட வேண்டியவை (Unknowns). இரண்டு சமன்பாடுகளில், ஒன்று தேவைச் சமன்பாடு. மூலதனத்தின் தேவை, அதன் இறுதி நிலை உற்பத்தித்

திறனைப் பொறுத்து இருக்கிறது. மூலதனத்தின் இறுதி நிலை உற்பத்தித்திறன் ஒருகால அலகுக்கு இவ்வளவு மூலதனம் முதலீடு செய்யப்படுகிறது என்பதைப் பொறுத்தது. இறுதி நிலை உற்பத் தித்திறன் வட்டி வீதத்துக்குச் சமமாக இருக்கும் நிலையில் முதலீடு நிறுத்திக் கொள்ளப்படும். ஜே. எஸ். கீன்ஸ் பிரிவு (Lord J. M. Keyness) கூட இந்தக் கருத்தை வலியுறுத்தினர். ஆனால் இறுதி நிலை உற்பத்தித் திறன் (Marginal Productivity) என்பதற்குப் பதிலாக, இறுதி நிலைச் செயல் திறன் (Marginal Efficiency)என்ற சொற்றொடரை உபயோகிக்கிறார். இரண்டாவது சமன்பாடு அளிப்புச் சமன்பாடு. அளிப்புப்புறம் இருந்து பார்த்தால், சேமிப் புக்காக அல்லது நுகர்வுத் தவிர்ப்புக்காகக் கொடுக்கப்படும் சன் மானமே வட்டியாகும். மூலதனத்தின் அளிப்பு அல்லது தனிமனி தர்கள் சேமிக்க விரும்பும் தொகை (இத்தொகை முதலீட்டுத் தொகைக்குச் சமமாக உள்ளது), வட்டி வீதத்தைப் பொறுத்து இருக்கிறது. இந்தச் சமன்பாட்டை கீன்ஸ் பிரபு மறுக்கிறார். இந்த இரண்டு சமன்பாடுகளையும் வரைபட வளைகோடாக (Curve) அமைத்தால், அவை, ஒரு பொருளின் தேவை அளிப்பு வரை கோடுகளைப் போன்றே உள்ளன. சேமிப்பு, அளிப்பு வளை கோடு கள் ஒன்றை ஒன்று வெட்டிக் கொள்ளும் இடம் வட்டி வீதத்தை உறுதி செய்கின்றது. சேமிப்பின் அளிப்பு சேமிப்பின் தேவையை விட அதிகமானல் வட்டி வீதம் குறைகிறது. அதனால் முதலீடு சேமிப்பும் அளிப்பும் ஒன்றோடு ஒன்று சமமாக இருக்கும் வரை பெருகுகிறது. சேமிப்பின் தேவை சேமிப்பின் அளிப்பை விட அதிகமானல் வட்டி வீதம் உயரும். முதலீடு குறைந்து மீண்டும் தேவையும் அளிப்பும் சமன்படுகின்றன. வட்டி சேமிப்புக்காக அளிக்கப்படும் ஒரு சன்மானம் என்ற கருத்தை கீன்ஸ் பிரபு தாக் கினர். ஏனெனில் ஒருவர் சேமிப்பார். ஆனால் வட்டிக்கு அதைக் கடன் கொடுக்கமாட்டார். மற்றொருவர் தான் சேமிக்காத—தன் முன்னோர்களிடம் இருந்து பெற்ற பணத்தைக் கடனாகக் கொடுத்து வட்டியைப் பெறுகிறார். ஆகவே கீன்ஸ் பிரபுவின் கூற்றுப்படிப் பணத்தைக் கடனாகக் கொடுப்பதற்கு, அல்லது, பணத்தின் நீர் மைத் தன்மை (ரொக்கத்தன்மை) விட்டுப் பிரிவதற்காகக் கொடுக்கப்படும் விலையே வட்டி. ஆனால் வட்டி சம்பாதிப்பதற்கு அல்லது ஈட்டுவதற்குச் சேமிப்பு இன்றியமையாதது. சேமிப்பு இல்லையானல் கடன் கொடுக்கப் பணமும் இல்லை. விட்டுப் பிரிய ரொக்கத் தன்மையும் இல்லை. ரொக்கத்தன்மையற்ற சேமிப்புக்கா கக் கொடுக்கப்படும் சன்மானமே வட்டி. இது தனி மனிதனைப் பொறுத்தவரை பொருந்தும். ஆனல் வங்கிகளைப் பொறுத்த வரை பொருந்தாது. ஏனெனில் வங்கிகள் சேமிக்காமலே கடன் உற்

பத்தி செய்து உற்பத்தி செய்த கடனைக் கொடுத்து வட்டியை ஈட்டுகின்றன. சேமிப்பு, முதலீடு இவைகளின் சமநிலையைப்பற்றிய கருத்துக்களில் தொன்மைப் பொருளாதார வல்லுநர்களுக்கும் கீன்ஸ் பிரபுவுக்கும் கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் எல்லோருமே ஒரு குறிப்பிட்ட கால அளவில் சேமிப்பும், முதலீடும் சமமாக இருக்கின்றன என்ற கருத்தைக் கொண்டிருந்தனர் சமுதாயத்தின் மொத்தச் சேமிப்பும் மொத்த முதலீடும் சமம். தனி மனிதனின் சேமிப்பும் முதலீடும் சமமாக இருக்க வேண்டும் என்பதில்லை. சமமாக இல்லாமலும் இருக்கலாம். பண முடக்கம், சேமிப்பு முதலீட்டுச் சமன்பாட்டை மாறுபடுத்தலாம். தனி மனிதனைப் பொறுத்தவரையில் முதலீட்டை விட அதிகமாகச் சேமிக்கலாம். ஆனால் சமுதாயத்தைப் பொறுத்தவரையில் ஒருவர் பணத்தை முடக்கினால் இன்னொருவர் முடக்கப்பட்ட பணத்தை வெளிக்கொணர்கிறார். ஆகவே இந்தப் பண முடக்கம் தேவை அளிப்புச் சம நிலையைப் பாதிப்பதில்லை. இக்கருத்துக்களைப் பொறுத்தவரையில் அவர்களிடையே கருத்து வேறுபாடு இல்லை. வட்டி வீதம் இந்தச் சமநிலையை ஏற்படுத்துகிறது என்று தொன்மைப் பொருள் இயல் வல்லுநர்கள் கருதினர். ஆனால் கீன்ஸ்ஸோ வருவாய் நிலை மட்டுமே இந்தச் சமநிலையை உருவாக்குகிறது என்று கருதினார்.

2. ஆஸ்திரிய மூலதனக் கோட்பாடு

உற்பத்திக் காரணிகளில் நிலத்தையும், உழைப்பையும் "சுய" அல்லது "முக்கிய" உற்பத்திக் காரணிகள் என்று சொல்கிறோம். அவைகளுடைய அளிப்பு (Supply) நிலையானது. ஆனால், முதல் அல்லது அசல் (Capital) உருவாக்கப்பட்ட அல்லது இடைநிலைக் காரணி. அதனுடைய அளிப்பு, கடந்த காலத்தில் அதனுடைய உற்பத்திக்காகச் செலவான நிலத்தையும் உழைப்பையும் பொறுத்து இருக்கிறது. முக்கிய உற்பத்திக் காரணிகளுக்கும், உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக் காரணிகளுக்கும் உள்ள வேறுபாடுதான் பாம்பாவர்க் என்பவருடைய வட்டிக் கோட்பாட்டுக்கு அடித்தளமாக அமைந்திருக்கிறது. முழுமை அடைந்த பொருள்களின் மதிப்புடன் சேர்க்கப்படுகின்ற முழு நிகர மதிப்பு சுய அல்லது முக்கிய உற்பத்திக் காரணிகளுக்குச் செலுத்தப்பட்ட தொகைக்குச் சமமாக இருக்க வேண்டும்.

நேர்முக உற்பத்தியைவிட, "சுற்று வழி" உற்பத்தி முறைதான் நேரம் செலவழிந்தாலும் சிறந்தது. ஏனெனில் உற்பத்தி அல்லது வெளிப்பாடு (ontput) அதிகம். முதல் அல்லது அசல் மூலமாகத்தான் இத்தகைய சிறந்த சுற்றுவழி முறையைப் பின்பற்ற முடியும். மீனவன் ஒருவன் கையினால் பிடிக்கும் மீன்களின் எண்ணிக்கையைவிட வலையினால் பிடித்தால் இன்னும் எண்ணிக்கை அதிகமாகும். வலையினால் பிடிப்பது சுற்றுவழி (round-about) உற்பத்தி முறை. வலையைப் பின்னுவதற்கு முதல் தேவை. மேலும் நேரமும் செலவழிகிறது. இங்கு நேரம் என்பது வெளிப்பாடுக்கும் இடுமானத்திற்கும் இடையே உள்ள இடைக் காலத்தைக் (time-lag) குறிக்கிறது. வெறுங் கைகளைவிட வலையினால் அதிக மீன் பிடிப்பதைத்தான் முதலின் சட உற்பத்தித் திறன் என்று கூறுகிறோம், இத்தைய சட முதல் ((Physical capital) ஒரு நிகர மதிப்புள்ள பொருளைத் தருமானால், உற்பத்தி அளவு அதிகமாகாமல் கவனிக்கப்பட வேண்டும். ஏனெனில்

உற்பத்தி மிக அதிகமானால் நிர்மாணிப்பதற்கும் சீரமைப்பதற்கும் ஈடுகட்டும் அளவு, பொருளின் மதிப்பு குறைந்து விடும். எனவே முதற்கருவிப் பொருள்களின் உற்பத்திக்கு ஒரு தடை இருக்க வேண்டும். இத்தடை சுற்றுவழி உற்பத்தி முறையிலேயே இருக்கிறது. முதலீடு செய்த பின் மீண்டும் நமக்குக் கிடைக்கின்ற விளைவுக்கு (return) ஆகின்ற நேரத்தையே "காலம்" என்பது குறிக்கிறது. சுற்றுவழி உற்பத்தி முறையில் விளைவு கிடைக்கக் காலம் அதிகமாகிறது. எனவே அதுவே ஒரு தடை.

உற்பத்திக் கோட்பாட்டிலேயே, நேரான முறையைவிட, சுற்றுவழி முறைதான் உற்பத்தியை அதிகப்படுத்தும் என்பது முக்கியமான—மூலாதாரமான கூற்று ஆகும். ஆனால் சுற்றுவழி நேரம் செலவுள்ளதாக இருப்பது அவசியம்தான். ஏனெனில் எந்த அளவுக்கு நேரம் அதிகம் செலவாகிறதோ அந்த அளவுக்கு உற்பத்தியின் அளவும் அதிகமாக இருக்கும். ஆனால் அன்றாட வாழ்க்கையைப் பார்க்கும் போது தொழில் நுட்பத் திறமையை நிலையாக வைத்துக் கொண்டு, குறைந்த நேரம் செலவாகும் முதலீட்டினால் உற்பத்தியை அதிகமாக்க முடியாதா? முதலீடு என்பது உற்பத்தி நேரத்தை அதிகமாக்குவதற்கே உள்ள ஒன்றா? என்ற கேள்விகள் எழுவது இயற்கை.

முதலீட்டின் மட்டத்தை (level of investment) நிலையானதாக வைத்துக் கொள்வோம். தற்போது வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற குறைவு சுற்றுவழி உற்பத்தி முறையையே ஏற்றுக் கொள்ளும்படி ஊக்கப்படுத்தும்.

மூலதனத்தை நிலையான முதல் (fixed capital) புரளும் முதல் (circulating capital) என இருவகைப்படுத்தலாம். உற்பத்தியில் தொழிலாளருடன் ஒத்துழைப்பது புரளும் முதலின் வேலை அன்று. ஆனால் பிரயோகிப்பதற்கும் வெளிப்பாடு வெளிவருவதற்கும் இடையில் உள்ள காலத்தில் தொழிலாளரை ஆதரிப்பதே அதன் வேலையாகும். பாம்பாவர்க்கின் கூற்று இதுதான். தொழிலாளரின் எண்ணிக்கையை நிலையாக வைத்துக் கொண்டு பார்த்தால், உற்பத்தி நேரம் வளர வளர ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படும் புரளும் முதலும் வளர வேண்டும். இலாபகரமாக உற்பத்தி நேரத்தை வளர்ப்பது வட்டி விகிதத்தைச் சார்ந்து இருக்கிறது.

வட்டி தோன்றுவதற்கான காரணங்கள் :

காலக்கழிவினை (agio) நினைத்துப் பார்த்து, வட்டி கொடுப்பது நியாயம் என்று பாம்பாவர்க் முடிவு கட்டுகிறார். எதிர்காலத்தை

விட, நிகழ்காலத்தைச் சற்று அதிகமாகவே மதிப்பு இடுகிறோம். அல்லது எதிர்காலத்திற்குக் குறைவான முக்கியத்துவம் அளிக்கிறோம் என்றும் கூறலாம். எனவே வருமானத்தை நிகழ்காலத்திலேயே செலவு செய்து நிறைவு அடைய வேண்டும் என்று எவரும் நினைப்பது இயற்கை. பொருளைச் சேமித்து அசல் என்று அளிக்கிறான் என்றால், எதிர்காலத்திற்காக நிகழ்காலத்தைத் தியாகம் செய்கிறான் என்றே பொருள்படும். இந்தச் செயல் அவனுடைய சுய அல்லது இயற்கையான விருப்பத்திற்கு மாறான ஒன்று ஆகும்.

எதிர்காலத்தில் உபயோகத்திற்கு வரக்கூடிய பொருள்களை விடத் தற்போதைய பொருள்களின் அளிப்பிற்கு (Supply) ஏன் மக்கள் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்? பாம்பாவர்க் இத்தகைய செயலுக்குக் காரணமாக மூன்று சூழ்நிலைகளைக் குறிப்பிடுகிறார்.

எதிர்காலத்தைக் குறைத்து மதிப்பிடுவது :

நம் கண்களுக்குத் தொலைதூரத்தில் உள்ள பொருள்கள் சிறிய பொருள்களாகத் தோன்றுவது போல, காலத்தினால் தொலைவிலுள்ள பொருள்களின் மதிப்பும் குறைவாகவே தோன்றுகிறது. கற்பனைச் சக்தி குறைவாக இருப்பதாலும், மன வலிமை குறைவாக இருப்பதாலும், வாழ்க்கையின் நிலையிலாத் தன்மையாலும் எதிர்காலம் குறைத்து மதிப்பிடப்படுகிறது என்று பாம்பாவர்க் கூறுகிறார். இந்தக் காரணத்தை மென்ஜர், வீசர் மற்றும் பலரும் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது எனக் கூறுகின்றனர். எதிர்காலத்தையும், நிகழ்காலத்தையும், ஒன்றாகவே மக்கள் மதிப்பிடுவர் என வீசர் கூறுகிறார். நடைமுறையில் எதையும் பார்க்கிற அறிவுத் தெளிவுள்ள ஒருவனுக்கு நிகழ்காலத்தில் உள்ள ஒரு பொருளைப் போலவே, எதிர்காலத்தில் உபயோகத்திற்கு வரப்போகிற பொருளும் முக்கியத்துவம் உள்ளதாக இருக்கிறது என்று விக்ஸடீட் கருதுகிறார்.

2. நிகழ்கால அளிப்பில் இருக்கும் பற்றாக்குறை :

ஒரு பண்டத்துக்கு இருக்கும் தேவையை வைத்துப் பார்க்கும் போது அதனுடைய அளிப்பு, பற்றாக்குறை உடையதாய் இருக்கிறது. ஆனால் எதிர்காலத்தில் அளிப்பு, தேவையை விட வளர வழியிருக்கிறது. அப்போது பண்டங்களுக்கு பற்றாக்குறையினால் ஏற்படுகிற மதிப்பு குறைகிறது. ஆகையினால் இப்போதுள்ள பொருள்களின் மதிப்பு எதிர்காலத்தில் வரப்போகிற பொருள்களின் மதிப்பை விட அதிகமாக இருக்கிறது. மேலும் நுகர்

வோரை இருவகையாகப் பிரிக்கலாம். முதல் வகையினர் நிகழ் காலத்தில் தேவைகள் பல உடையவர்களாகவும், இடர்ப்பாடுகள் உடையவர்களாகவும் இருக்கின்றனர். 2. இரண்டாவது வகையினருக்கு அத்தேவைகளை நிறைவு செய்ய எதிர்காலத்தில் வாய்ப்பு இருந்தாலும், தற்போதைய பொருள் வசதி பற்றுக்குறையினால் நிகழ்காலப் பொருள்களை விரும்புகின்றனர். எனவே எதிர் காலப் பொருள்களை விரும்புகின்றனர்.

3. நிகழ்காலப் பொருள்கள் வருங்காலப் பொருள்களை விட, தொழில் நுட்பப்போக்கில் அதிகமதிப்புடையவையாய் இருக்கின்றன. நிகழ்காலப் பொருள்களைச் சுற்றுவழி உற்பத்தி முறையில் ஈடுபடுத்தி வருங்காலத்தில் பொருள்களின் உற்பத்தியைப் பெருவாரியாகப் பெருக்க முடியும்.

மேற்கூறிய மூன்று கூற்றுக்களில் முதலிரண்டு கூற்றை ஏற்றும், அமெரிக்கப் பொருளியல் வல்லுநர் இர்விங்ஃபிசர் எழுதியுள்ளார். காலத்தேர்வை (time preference) வட்டி தோன்றுவதற்குக் காரணமாகக் கூறுகிறார். அத்துடன் முதலின் இறுதி நிலை உற்பத்தித் திறனையும் காரணமாகக் காட்டுகிறார். எதிர்காலத் தேவை நிறைவுகளைவிட நிகழ்காலத் தேவை நிறைவுகளையே மக்கள் பெரிதும் விரும்புவதால் நிகழ்காலத்திலேயே வருமானத்தைச் செலவு செய்கிறார்கள். அவ்வாறு நிகழ்காலத்தில் செலவு செய்வதைக் குறைத்து, வருங்காலத்திற்குச் சேமித்து வைத்துக் கடன் கொடுப்பதற்குத் தூண்டுகோலாக அமையும் தொகையே வட்டி வீதம் ஆகும்.

மேற்கூறிய மூன்று கூற்றுக்களைப் பார்க்கும்போது, நிகழ்காலப் பொருள்களின் இறுதிநிலைப் பயன்பாடு, அதே பொருள்களின் வருங்காலப் பயன்பாட்டை விட அதிகமாக இருக்கிறது. மனோதத்துவக் காரணங்களால் வருங்காலப் பொருள்கள் குறைவாக மதிப்பிடப்படுகின்றன என்பதை முதல் இரண்டு கூற்றுக்களும் வலியுறுத்துகின்றன. உற்பத்தித்திறனை அடிப்படையாகக்கொண்ட தொழில் நுட்பக் காரணங்களால் வருங்காலப் பொருள்கள் குறைவாக மதிப்பிடப்படுகின்றன என்பதை மூன்றாவது கூற்று வலியுறுத்துகிறது. சுற்றுவழி உற்பத்தி முறையின் இறுதிநிலை உற்பத்தித் திறனால் வட்டி நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால், இங்கேயும் கூட வட்டியின் தோற்றுவாய், பொருள் சார்பற்ற (Subjective) தாகவே உள்ளது. மூன்றாவது கூற்று தேவை நிலையிலிருந்தே செயல்படுகிறது. ஆகவே இந்தக் கூற்று மட்டும் வட்டி வீதத்தை

நிர்ணயிக்க முடியாது. முதலிரண்டு கூற்றுக்களில் ஏதாவது ஒன்று செயல்படுவது இன்றியமையாததாகிறது.

பாம்பாவர்க் கூற்றுப்படி வட்டி பொருள் சார்பற்ற முறையில் எவ்வாறு தோன்றுகிறது என்று காண்போம். உற்பத்திச் சாதனங்கள் எதிர்காலப் பொருள்கள் ஆகும். எனவே நிகழ்காலப் பொருள்களைவிட இம்மாதிரியான பொருள்கள் குறைத்து மதிப்பிடப்படுகின்றன. ஆனால் காலப்போக்கிலே இந்த வருங்காலப் பொருள்கள், அதாவது உற்பத்திச் சாதனங்கள் நிகழ்காலப் பொருள்களாக மாறுதல் அடைகின்றன. முன்பு வருங்காலப் பொருள்களாக இருந்தபோது அப்பொருள்களுக்கு இருந்த மதிப்பிற்கும், அவை தற்போது நிகழ்காலப் பொருள்களாக மாறிய பிறகு இருக்கும் மதிப்பிற்கும் இடையே உள்ள வேறுபாடுதான் வட்டி ஆகும்.

பாம்பாவர்க் உற்பத்தி நுகர்வு போன்ற துறைகளில் காலத்திற்கு முக்கியத்துவம் அளிக்கிறார். நுகர்வுத் துறையில், எதிர்காலப்பொருள்கள் குறைத்து மதிப்பிடப்படுகின்றன. உற்பத்தித் துறையில் நிகழ்காலப் பொருள்களைச் சுற்றுவழி உற்பத்தி முறையில் பயன்படுத்தி, தரமான பொருள்கள் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன. இக்காரணத்தினால் வருங்காலப் பொருள்களை விட,நிகழ்காலப் பொருள்களுக்குப் போட்டிச் சந்தையில் 'பிரிமியம்' அல்லது (agio) அளிக்கப்படுகிறது. முதல் காரணி அளிப்பையும், இரண்டாவது காரணி தேவையையும் பாதிக்கிறது. முதலாவது வட்டி ஏன் கொடுக்கப்படுகிறது என்றும், இரண்டாவது வட்டி எப்படிக் கொடுக்கப்படுகிறது என்றும் விளக்குகிறது. எனவே வட்டி என்பது சுரண்டல் அன்று என்றும், பொருளாதார ரீதியாக இயற்கையாகவே எழுகின்ற ஒன்று என்றும் பாம்பாவர்க் கூறுகின்றார். எனவே வட்டி சோஷலிச சமுதாயத்தில் கூட தோன்றும் என பாம்பாவர்க் வலியுறுத்துவதன் மூலமாக மார்க்சினுடைய எச்ச மதிப்பு விளக்கத்திற்கு மாறுபடுகிறார்.

ஆனால், பாம்பாவர்க்கினுடைய அடிப்படைக் கூற்றே தவறானது. நுகர்வுத் தவிர்ப்புக் கோட்பாட்டுக்கும், கால விருப்பக்கோட்பாட்டுக்கும் வேறுபாடு ஏதும் இல்லை என ஒரு சாரார் கூறுகின்றனர். பாம்பாவர்க் வட்டி உருவாதற்கான மூன்று கூற்றுக்களைப் பற்றி விளக்கினாலும்கூட, முதலிரண்டு பொருள் சார்பற்ற (Subjective) கூற்றுக்களே, வட்டி, நீண்ட காலத்திற்கு இருப்பதை விளக்குகின்றன. மூன்றாவது கூற்றான தொழில் நுட்ப மேன்மை வட்டியை விளக்கவில்லை. பாம்பாவர்க் கண்டனம் செய்த உற்பத்தித் திறன் கோட்பாடுகளைப் போலவே இதுவும் குறைபாடுடையதாய் இருக்

கிறது. சுற்றுவழி உற்பத்திமுறை சிறப்புடையதாக இருந்தாலும் ஏன் பரவலாகப் பயன்படுத்தப்படவில்லை? ஏன் அரியதாய் இருக்கிறது? சாதனங்களின் தேவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது உற்பத்திச் சாதனங்கள் அரியனவாய் இருக்கின்றன. முதலிரண்டு பொருள் சார்பற்ற காரணிகளே காரணம் ஆகும். இக்காரணிகள் தான் மதிப்பு உருவாவதற்கும் காரணம் என்பது ஆஸ்திரியப் பொருளியல் வல்லுநர்களின் இறுதியான முடிவாகும்.

எதிர்காலப் பொருள்களைவிட நிகழ்காலப் பொருள்களை விரும்புகிற காலவிருப்பமானது எல்லோருக்கும் பொருந்தும் என்று கூறிவிடமுடியாது. செலவுக்கேற்ற வருவாய் இல்லாதோரும், புதிதாகத் தொழில்களை ஆரம்பிப்போரும், சுருங்கக் கூறின் கடன்வாங்குவோர் அனைவரும் நிகழ்காலப் பொருள்களுக்குச் சிறிது அதிகமாகவே மதிப்பு அளிக்கின்றனர். ஆனால் கடன் வழங்குவோருக்கு இது பொருந்தாது. நாகரிக வளர்ச்சியில் நிகழ்காலத்தைவிட எதிர்காலத்திற்கே அதிக முக்கியத்துவம் அளிக்கிறோம். எண்ணற்ற காரணங்களால் நம்முடைய வாழ்க்கைக்கு அப்பால் கூட நினைத்துப் பார்க்கிறோம். நமக்குப் பின்னால நம் புகழ் நிலவ வேண்டும் என்ற ஆர்வம் நமக்கு இருக்கிறது. இக்காரணத்தினால்தான் பல்கலைக் கழகங்களைத் தோற்றுவித்தல், 'பிரமிடு'கள் கட்டுதல போன்றவைகளில் ஏராளமாகச் செலவு செய்கிறோம். நம் உறவினரிடம் இருக்கும் அன்பால் அவர்களுடைய நலனுக்காகச் சேமித்து முதலீடு செய்கிறோம். இதுபோன்று இன்னும் எத்தனையோ குறிக்கோள்கள் ஒவ்வொருவருடைய மனத்திலும் இருக்கின்றன.

காலத்தினால் முற்றும் வேறுபட்டுத் தோன்றுகிற பொருள்களின் மதிப்பை ஒப்பிடுவதே பாம்பாவர்க் கோட்பாட்டின் முக்கியக் குறைபாடு ஆகும். "தேவையான பொருளின் தற்போதைய அளிப்பு நிலையினால் திருப்தி செய்கிற பகுதியான தேவைகள் அல்லது முழுமையான தேவைகளின் மிகக்குறைந்த முக்கியத்துவமே ஒரு பொருளின் இறுதி நிலைப் பயன்பாடாகும்" என்று பாம்பாவர்க்கே விளக்குகிறார். இந்த விளக்கத்துடன் "ஒரு குறிப்பிட்ட நுகர்வுக்காலம்" என இணைத்துக்கொண்டால் குறைபாடு நன்கு விளங்கும். மேற்கூறிய விளக்கத்தை நிகழ்கால, எதிர்காலப் பொருள்களுக்குப் பயன்படுத்திப் பார்த்தால், எதிர்காலப் பொருள்களின் அளிப்பு, நுகர்வுக்காலம் ஆகிய இரண்டையும் காண அறுதியிட்டுக் கூற இயலாமையால் எழுகிற இடர்ப்பாடு விளங்கும்.

ஆனால் பாம்பாவர்க்கினுடைய முதல் கூற்றில் சில உண்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. இர்விங் ஃபிஷர், ஃபிராங்க் ஃபெட்

டர் போன்றோர் இதைத் தெளிவுபடுத்துகிறார்கள். சிலருடைய வாழ்க்கையில் அவர்கள் எதிர்காலத்தில் இருக்கப் போவதாக நம்பும் நிலையைக் காட்டிலும், சிறிது அதிகமாக நிகழ்காலத்திலேயே வசதி படைத்தோராய் இருக்கின்றனர். ஆனால் வேறு சிலருக்கும் நிகழ்கால வசதி குறைவாகவும், எதிர்காலம் நம்பிக்கையூட்டுவதாகவும் இருக்கிறது. மேற்கூறிய இருவகையினரும் சந்தையில் சந்தித்தால் எதிர்காலச் செல்வத்திற்காக நிகழ்காலப் பொருள்கள் பரிவர்த்தனை செய்துகொள்வது இயற்கை. பண்டமாற்றுச் சந்தையாக இருந்தால், கடன் கொடுப்பவன் தற்போது கொடுக்கும் பொருளின் அளவைவிட எதிர்காலத்தில் சிறிது குறைவாகப் பெற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறான். ஆனால் பணப் பொருளாதாரத்தில் கடன் கொடுப்பவன் அசலையாவது திரும்பப்பெற விரும்புகிறான். ஏனெனில் பணத்தைச் சேமிக்க ஏதும் செலவு கிடையாது. ஆனால் கடன் வாங்க ஆர்வமுள்ளவர் கடன் தொகைக்கு மேலாக ஒரு பிரிமியம் கொடுக்க நினைப்பதே, கடன் வழங்குவோரை வட்டி வசூலிக்கும்படிச் செய்கிறது. இதற்காகக் கடன் வழங்குவோர் எந்தத் தியாகமும் செய்யவில்லை. தேவை எழும்போது நிறைவு செய்யத் தொடர்ந்த வருமானம் இல்லாததால் கடன் வாங்குகின்றனர் என்பதைப் பொதுவாக நாம் காண்கிறோம். ஆனால் இந்த விளக்கத்திலும் ஒரு குறைபாடு இருக்கிறது. தற்போதைய தொழிற்சாலை உலகத்திற்கு மிக இன்றியமையாதது உற்பத்திக் கடன். இதனால் எழுகிற தேவையை மறந்து, நுகர்வுக்காக வாங்குகிற கடனுக்கு முக்கியத்துவமும் இந்தக் கோட்பாடு அளிக்கிறது.

வட்டி தோன்றுவதற்கான மூன்று காரணங்களை விளக்கிய பிறகு, வட்டி எப்படி உறுதி செய்யப்படுகிறது என்பதை பாம்பாவர்க் விளக்குகிறார். உற்பத்தியில் எழுகின்ற வட்டியை 'இயற்கை' வட்டி என்றழைக்கிறார். இந்த இடத்தில் கூலி, வட்டி ஆகிய இரண்டுக்கும் இடையே உள்ள உறவினை விளக்கி, கிளாசிகல் கூலி நிதிக் கோட்பாட்டுக்கு ஒத்த ஒரு வட்டிக் கோட்பாட்டினைத் தருகிறார். பாம்பாவர்க்கின் கோட்பாட்டின்படி மூன்று முக்கிய காரணிகள் வட்டியைப் பாதிக்கின்றன. அவை, 1. தேசியப் பிழைப்பு நிதித்தொகையின் அளவு, 2 அந்நிதியைக் கொண்டு வாழ்வளிக்கப்பட வேண்டியோரின் எண்ணிக்கை 3, முதற்செறிவு கொண்ட உற்பத்தி முறையைப் பரவலாகக் கடைப்பிடிப்பதால் ஏற்படுகின்ற உபரி என்பன.

வட்டியும் கூலியும் தலைகீழ் விகிதத்தில் வேறுபடுகின்றன. ஏனெனில், பிழைப்பு நிதியில் ஏற்படும் அதிகரிப்பு, கூலியை அதிகரித்து வட்டியைக் குறைக்கிறது. இது எவ்வாறெனில், உழைப்

பின் மதிப்பு அந்த உழைப்பின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்ற உற்பத்திப் பொருளைச் சார்ந்து இருக்கிறது. அவ்வுற்பத்திப் பொருள் உற்பத்திச் செய்முறையின் கால அளவைச் சார்ந்து இருக்கிறது. இந்தக் கூலியிலிருந்து துவங்கலாம் என்று ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கூலி நிலையானதாக இருப்பதில்லை. எனவே கிடைக்கக்கூடிய உழைப்பு முழுவதையும் வாங்கும் அளவுக்கு உழைப்பு நிதி இருக்கிறது என்று கருதி ஆரம்பிக்கலாம். இந்த நிலையில் மக்கள் தொகையை நிலையாக வைத்துக் கொண்டு, உழைப்பு நிதியை அதிகப்படுத்தினல் கூலி உயராமல் உற்பத்திக்காலம் அதிகமாகும். உற்பத்திக்காலம் எந்த அளவுக்கு அதிகமாகிறதோ அந்த அளவுக்குப் பொருள்களின் உற்பத்தியும் குறைந்த வீதத்தில் அதிகமாகும். வட்டி வீதம் தற்போது முதலின் இறுதிநிலை உற்பத்தித் திறனல் நிர்ணயிக்கப்படுகிறது. உற்பத்திக்காலம் நீரும் போது இறுதிநிலை உற்பத்தித்திறன் குறைகிறது. எனவே பிழைப்புநிதி உயர்த்தப்படும்போது வட்டிவீதம் குறையும். ஆனல் பொருள் உற்பத்தியில் ஏற்பட்டிருக்கின்ற அதிகரிப்பு உழைப்பாளர்களிடையே பங்கிடப்படுகிறது. எனவே கூலி உயர்கிறது. இதுபோலவே மக்கள் தொகை பெருகுவதாகவும். பிழைப்பு நிதியை நிலையானதாகவும் கொண்டால் கூலி குறையும்; வட்டி வளரும். ஏனெனில் உற்பத்திக்காலம் குறைக்கப்படுவதால் முதலின் உற்பத்தித்திறன் அதிகரிக்கிறது. எனவே வட்டிவீதம் குறைவதோ, கூலி உயர்வதோ-உற்பத்திக்காலம் விரிவுபடுதலின் அறிகுறி எனலாம்.

உற்பத்திக்காலம் போன்ற பலவகையில் இக்கோட்பாடு கூறப்பட்டாலும், முதல் உழைப்பு ஆகிய உற்பத்திக் காரணிகளிடையே செல்வம் எவ்வாறு பிரிக்கப்படுகிறது என்பதை இக்கோட்பாடு விளக்குகிறது. ஒரு நாடு பொருளாதார வளர்ச்சியுறும்போது வட்டிவீதம் குறைவதும், கூலி உயர்வதும் பொது நியதியாகும். ஆனல் அது நடைமுறைக்கு அப்பாற்பட்டதென்றும், நிறைவுப் போட்டியைக் கருத்தில் கொண்டது என்றும், நிலையான சூழ்நிலையைக் கொண்டது என்றும் குறை கூறலாம். ஆனல் முதல் செறிவு கொண்ட உற்பத்தி முறையில் விளைகின்ற அதிக உற்பத்தி இந்நிலைக்குக் காரணமாக இருந்த முதலுக்கு மட்டுமல்லாமல் உழைப்புக்கும் சொந்தம் என்பதை இக்கோட்பாடு தெளிவுபட விளக்குகிறது.

தொன்மைப் பொருளாதார வல்லுநருடைய பிழைப்பு நிதியுடன் தன் பிழைப்பு நிதி பல வகைகளில் ஒத்து வருவதை பாம்பர்வர்க்கே அறிவார். எனவே இவைகளுக்கு இடையே உள்ள

ஒரு சில வேறுபாடுகளை விளக்குகிறார். உணவு, மற்றும் முக்கிய மான தேவைகள் மட்டுமில்லாமல் உழைப்பாளர்களின் வாழ்க் கைத் தரத்தை அதே நிலையில் நீடிக்கத் தேவையான எல்லாவற் றையுமே பிழைப்பு நிதி என்று பாம்பாவர்க் கூறுகிறார். எனவே உற்பத்தி நிலையில் முழுமை பெறாத பொருள்களும், ஏன், உற்பத் திக் காரணிகளுங் கூடப் பிழைப்பு நிதி என பாம்பாவர்க் கோட் பாடு கூறுகிறது. எனவே முதல் என்பது பொதுவாகச் செல்வம் தான். இவ்வாறு முதலைச் செல்வமாகக் கொள்வதால் முன்னுக் குப் பின் முரணான கருத்துக்கள் தோன்றுகின்றன. ஏனெனில் முற் பகுதியில் முதல் என்பது முதற் பொருட்கள் என விளக்கம் தருகிறார். முதற்பொருட்கள் எவ்வாறு செல்வமாக முடியும்? முதற்பொருள் என்பது சமூகக் கருத்தாகவும், பொதுவாக, செல் வம் என்றழைக்கப்படுகின்ற முதல் தனி ஒருவரின் கருத்தாகவும் கொள்ளப்படுவதே இந்த முரண்பாட்டுக்குக் காரணம். முதற் பொருட்கள் வட்டியைத் தோற்றுவிப்பதில்லை என்பதை பாம்பா வர்க் தெளிவுபடக் கூறுகிறார். நிகழ்காலத் தனிப்பட்ட சொத்தை, எதிர்காலத் தனிப்பட்ட சொத்துக்காக மாற்றிக் கொள்வதாலேயே வட்டி தோன்றுகிறது. உற்பத்தி என்பதல்லாமல் மாற்றம் செய்து கொள்ளுதல் என்ற காரணத்திற்காகவே வட்டி தோன்றுகிறது என்றுகூடச் சொல்லலாம்.

கூலி, வட்டி ஆகிய இரண்டுக்கும் உள்ள தொடர்பைப் பற்றிய அவருடைய கோட்பாடும் முரணானது. பாம்பாவர்க் 'காலக்கழிவு' விதியைத் தவிர்த்து உற்பத்தித்திறன் கோட்பாட்டை உருவாக்கி யுள்ளார்.

கூலி நிதி விதி போன்றவைகளைக் கலந்து உற்பத்தித்திறன் கோட்பாட்டினைத் தெளிவில்லாமல் விளக்க முற்பட்டிருக்கிறார் என்று கூறலாம். உற்பத்திக் காலத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிற இறுதிநிலை உற்பத்தித் திறன் வட்டிக்கோட் பாடுதான் பாம்பாவர்க்கினுடையது. பாம்பாவர்க்குக்குப்பின் வந்த ஆஸ்திரியச் சீடர்கள் இக்கோட்பாட்டைச் சரியானதாக ஏற்றுக் கொண்டு 'காலக்கழிவு' கோட்பாட்டைக் கைவிட்டனர்.

பாம்பாவர்க்கினுடைய கோட்பாடு இருவகையான எண்ண முடையவர்களை உருவாக்கியது. அமெரிக்கப் பேராசிரியர் இர்வின் பிஷர், பிராங்க் பெட்டர் போன்றோர் காலவிருப்பக் கோட்பாட்டை ஏற்றுக் கொள்ளுகின்றனர். நட்விக்சல், ஹேயக் போன்றோர் காலவிருப்பக் கோட்பாட்டை ஒதுக்கி, முதலினுடைய உற்பத்தித் திறனுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றனர். விக்சல், பாம்பாவர்க்கி

னுடைய இறுதிநிலை உற்பத்தித்திறன் கோட்பாட்டைத் திருத்தி முழுமையாக்குகிறார். இப்புதிய கோட்பாடு, வட்டி வீதத்துக்கும் விலை நிலவரத்துக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறது.

அடுத்து ஆஸ்திரியக் கோட்பாட்டில் மிக முக்கியம் வாய்ந்ததும், மிகவும் சர்ச்சைக்குரியதுமான ''உற்பத்திக்காலம்'', ''முதலீட்டுக்காலம்'' ஆகிய இரண்டையும் எடுத்துக் கொள்வோம். மேற்கூறிய இரண்டும் பாம்பாவர்க்கினால் முதன் முதலாகக் கூறப்பட்டு, அவருக்குப்பின் வந்தவர்களில், சிறப்பாக விக்சல், பேரோ, ஹேயக் முதலியோரால் முழுமை எய்தப் பெற்றவையாம்.

முதலில் சுற்றுவழி உற்பத்தி முறையை எடுத்துக்கொள்வோம். நேர்வழி உற்பத்தி முறையைவிடச் சுற்றுவழி உற்பத்தி முறையினால் உற்பத்தியை அதிகரிக்கலாம் என்பது பொதுவான உண்மை. ஆனால் இந்த முறை சிக்கனமானது என்று கூறுவதற்கில்லை. சிக்கனமான முறைகள் சுற்றுவழி உற்பத்தி முறைகளாக இருக்கலாம். ஆனால் சுற்றுவழி உற்பத்தி முறைகள் எல்லாம் சிக்கனமானவை என்று சொல்வதற்கில்லை. பல குறுகிய நேர உற்பத்தி முறைகள் கூட திறம்படைத்தவைகளாக இருக்கின்றன. சுற்றுவழி முறையினால் பொருள்களின் உற்பத்தி அளவு அதிகரிக்குமேயொழிய அவற்றின் மதிப்பு அதிகரிப்பதில்லை. தொழில் முயல்வோனுக்குக் குறைவான இலாபமே கிடைக்கும். ஒரு குறிப்பிட்ட உழைப்பையும் முதலையும் கொண்டு இலாபம் கிடைக்க வேண்டுமானால், ஒரு குறிப்பிட்டநிலை வரை தான் உற்பத்தி முறையை நீட்டிக்கலாம். எனவே சுற்றுவழி உற்பத்தி முறைக்கும் ஓர் எல்லை உண்டு. ஏனெனில் காலத்தினால் நீண்ட உற்பத்தி முறையானால் மிக நீண்ட நேரம் காத்திருக்கவேண்டியிருக்கிறது. அந்த அளவுக்கு நுகர்ச்சியையும் தள்ளிப் போட வேண்டியிருப்பதால், காத்திருப்பதை மக்கள் விரும்புவதில்லை.

சுற்றுவழி உற்பத்தி முறை என்ற தெளிவான பொதுக் கருத்தை மனத்தில் கொண்டு உற்பத்திக்காலம் என்ற கருத்தை பாம்பாவர்க் விளக்குகிறார். ஆஸ்திரியப் பொருளாதார வல்லுநர்களின் வணிகச்சுழல் மற்றும் முதல் கோட்பாடுகளில் இக் கருத்தே முக்கிய பகுதியாக அமைந்து இருக்கிறது. பின் தோன்றிய விக்சல், பேரா. ஹேயக் போன்றோர் இதைத் திருத்தி தங்கள் கோட்பாட்டுக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொண்டாலும், பாம்பாவர்க்தான் இக்கருத்தை முதலில் தோற்றுவித்தவரும் வலியுறுத்தியவரும் ஆவார். இதுபோலவே இக்கருத்தை மேற்கொண்டு விரிவுபடுத்தியதில் ஜெவன்ஸ் முதல் நிற்கிறார்.

உற்பத்திக் காலம் என்பது சுய உற்பத்திக் காரணிகளின் செயல்களுக்கும், அதன் விளைவான வெளிப்பாட்டை நுகர்வோர் நுகர்வதற்கும் இடையே சராசரியாகக் கழிந்த நேரம் ஆகும். உற்பத்திக் காலத்தைக் கணக்கிடும்போது வரையறையற்ற அல்லது முழு (absolute) நேரத்தை நாம் எடுத்துக் கொள்ளக்கூடாது. உதாரணமாக ஒரு பண்டத்தின் உற்பத்திக்கு 100 நாட்களின் உழைப்புத் தேவை எனக்கொண்டால், இந்த 100 நாட்களில் பண்டம் முழுமை அடைய 10 வருடங்கள் முன்னதாக 1 நாள் செலவிடப்பட்டிருக்கும். 9 வருடங்கள் முன்னதாக 1 நாளும், இதுபோலவே 8, 7, 6, 5...... 1 வருடம் முன்னதாக ஒவ்வொரு நாளும் செலவிடப்படுகிறது. மீதம் 90 நாட்கள் பண்டம் முழுமையடையும் முன்பு உடனேயே செலவழிக்கப்பட்டிருக்கின்றன. எனவே இப்பண்டத்தின் சராசரி உற்பத்திக்காலம்.

$$\frac{\Sigma 10\times 1,\ 9\times 1,\ 8\times 1\ .....2\times 1,\ 90\times 0}{100} = \frac{55}{100}$$

$$= \quad 11/20 \qquad \cdot 55 \text{ வருடங்கள்.}$$

இதைத் திரு. என். கால்டர் என்பவர் ஆஸ்திரிய முதல் கோட்பாட்டின்படி குறிக்கோள் உள்ள பொருளாதார அமைப்பு என்ற முழுமை, ஒரு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தி ஆகிய இரண்டிலும் முதல் தனித்தன்மை வாய்ந்த, மற்றவைகளிலிருந்து வேறுபட்ட உற்பத்திக் காரணி, ஒரே தன்மைத்தான (Homogeneous) அலகுகளால் அளக்கக்கூடியது. இந்தக் காரணிக்கு விலையே வட்டி. முதல், வட்டி ஆகிய இரண்டும் 'உழைப்பு, நிலம்' என்ற இரு காரணிகளைப் போல் பகிர்வுக் கோட்பாடு, உற்பத்தி அமைப்பு ஆகியவற்றுக்குள் கொண்டுவரப்படக் கூடியவை.

ஆஸ்திரியக் கோட்பாட்டை விமர்சனம் செய்பவர்கள் முதற்பொருள்களுக்கும், மற்ற உற்பத்தித்திறன் வாய்ந்த கருவிகளுக்கும் வேறுபாடு காணமுடியாது என்பதை மறுக்கின்றனர். இதையே சுய உற்பத்திக் காரணிகளுக்கும், உற்பத்தி செய்யப்பட்ட காரணிகளுக்கும் அல்லது நிலையான அல்லது நிலையற்ற வளங்களுக்கும் வேறுபாடு காணமுடியாது என்றும் கூறலாம். எந்த ஒரு மூலமும் நிலையானதன்று. ஏனெனில் எல்லாவற்றுக்கும் நிர்வாகச் செலவாகிறது. மற்றொரு போக்கில் காண்போமானால் உற்பத்திக் காரணிகளை அதே திறனுடையனவாய் இருக்க, பராமரிப்புச் செலவு (maintenance) தொடர்ந்து நடைபெறுமானால் மூலங்கள் நிலையுள்ளவை எனக்கூறலாம். எனவே நிலையான, நிலையற்ற மூலங்

கள் இடையேவேறுபாடு காண முடியாது. இதுபோலவே சுய உற்பத்திக் காரணிகளுக்கும், உற்பத்தி செய்த உற்பத்திக் காரணிகளுக்கும் வேறுபாடு காணமுடியாது. ஏனெனில் மூலங்கள் சுய உற்பத்திக் காரணிகளைக் கொண்டும், உற்பத்தி செய்த உற்பத்திக் காரணிகளைக் கொண்டும் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே சுய உற்பத்திக் காரணிகளைக் கொண்டே உற்பத்தி செய்த காரணிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்ற ஆஸ்திரியக் கோட்பாடும் தவருனதாகும். மேற்கூறிய கருத்துக்களே உற்பத்திக் காலம் என்ற கருத்தை அழித்து விடுகின்றன.

இரண்டாவதாக, மூலங்கள் அதே திறனுடையனவாய் நிலை நிறுத்தவும், பழுதானவைகளை மாற்றவும் ஆகின்ற செலவுகளுக்கும் வேறுபாடு காண்பது அரிது. எனவே முதல் என்பது காலப் போக்கில் மாற்றுவதற்கு உதவுவது என்று கூறுவதைவிட, உற்பத்தித்திறனை நிலைபெறச் செய்ய உதவுவது என்று கூறுவதே சிறந்தது.

மேற்கூறியவாறு சுய காரணிகளுக்கும், உற்பத்தி செய்த காரணிகளுக்கும் நிலையான, நிலையற்ற மூலங்களில் வேறுபாடு காண முடியாது என்று கூறினாலும், திரு. கால்டர் என்பவர் பெருகுகின்ற பெருகாத மூலங்கள் என்பவைகளை விளக்குகிருர். இதை அடித்தளமாக வைத்து முதல் மூலங்கள், முதலற்ற மூலங்கள் என மூலங்களை இருவகைப்படுத்துகிருர். இவ்வேறுபாடு வட்டியை ஒரு பகிர்ந்தளிக்கக் கூடிய பகுதியாகவும், அது முதலின் இறுதிநிலை உற்பத்தித்திறனை நிர்ணயம் செய்யப்படுவதாகவும், கூலிக்கும் வட்டிக்கும் உள்ள தொடர்பாகவும் விளக்குகிறது, முதல் அதிகரித்தால் வட்டி குறையும் என்பது தெரிந்த உண்மை. எனவே முதலும், குறைந்துசெல் பயன்பாட்டு விதிக்கு உட்பட்டதுதான். மூலதன வளப்பொருள்களுக்கும் மூலதனமற்ற வளப்பொருள்களுக்கும் அடிப்படையான வேறுபாடு இல்லாவிட்டாலும் மேற்கூறிய விதி செயல்பட வேறுபாடுகள் உபயோகமுள்ளவையாக இருக்கின்றன. மனிதர்கள் எல்லோருக்கும் பொதுவான சில குணங்கள் இருந்தாலும், அவர்களிடையே இருக்கின்ற தனித்தன்மைகளால் தனித்தனி வகைகளாகப் பிரிக்கின்ருேம். அதுபோலவே மூலதன வளப்பொருள்களுக்கும் இடையே வேறுபாடு காண்பது இன்றியமையாதது.

உற்பத்திக் காரணி என்ற கருத்தும், உற்பத்திக் காரணிகள் என்ற பழைய பாகுபாடும் நிறைந்த குறைபாடுகளையுடையதும் திருப்தியற்றதுமான கருத்தாகும். ஒவ்வொரு காரணியின் வகுப்

யிலும் உள்ளாகவே மாற்றி உபயோகப்படுத்திக் கொள்ளும் வகை அதிகமாகவும், வெளிக்காரணிகளை அவ்வாறு அதிகம் செய்ய இயலாமலும் இருக்கக் காண்கிறோம். இன்றைய தினம் மூலதனம் என்பது "தாமதம்" என்பதோடு சேர்த்துப் பார்க்கப்படுகிறது. மேலும் "தொழில்துணிவு" என்ற ஒரு காரணி புதிதாகக் காணப்படுகிறது. இவை நுட்பத்திறமையை ஒட்டிய காரணிகள் இல்லை.

பொருளாதாரக் கோட்பாட்டில் பழைய பாகுபாடாகிய நான்கு விதமான பிரிவுகள், முக்கியமாக இரண்டு காரணிகளினால் பின்பற்றப்படுகின்றன. முதலாவது, பொருளாதார வல்லுநர்கள் கையிலுள்ள கொள்கையைக் கைவிட மனமில்லாமை; இரண்டாவது, நான்கு வகையான பாகுபாடு ஒரு கலைமதிப்பைப் பெற்றிருப்பது.

சராசரி உற்பத்திக் காலத்தை வட்டிவிகிதம் குறைக்கவோ, கூட்டவோ செய்வதுதான் முக்கியமான ஒரே பணி என்ற ஆஸ்திரியக் கருத்து தப்பானது. வட்டிவிகிதம் குறைந்தால் உற்பத்திக் காலம் நீட்டிக்கப்படுகிறது என்று ஆஸ்திரியப் பொருளாதார வல்லுநர்கள் விவாதிக்கிறார்கள். காலத்தைக் காட்டாமல் நேரத்தை வற்புறுத்திக் கூறுவதுதான் ஆஸ்திரியக் கோட்பாட்டின் தவறாகும்.

ஆஸ்திரியக் கோட்பாட்டில் கண்டுபிடிப்புகளுக்கு இடமில்லை. இவைகள் தாம் உற்பத்திக் காலத்தைக் குறைக்கப் பயன்படுகின்றன. இவைகள் சில முதலீடுகளை உபயோகமற்றவைகளாக ஆக்கி, எதிர்பார்ப்பில் ஏமாற்றத்தை விளைவிக்கின்றன.

உற்பத்திக்காலம் என்ற கருத்தை வணிகச் சுழலை ஆராய்ந்த எயக், மீசஸ் (Mises) ரூப்கி (Rohke) போன்ற பொருளாதார வல்லுநர்கள் அதிகமாகக் கையாண்டிருக்கின்றனர். இயற்கையான, அல்லது சமநிலை வட்டியைவிடப் பண வட்டிவிகிதம் குறைக்கப்படுவதால் கடன் அதிகப்படுமேயானால், வளப்பொருள்களின் பங்கீடு சீர்கெட்ட முறையில் அமைவதோடு, உற்பத்தியின் மூலதன அமைப்பில் கோணலும் ஏற்படும். வட்டிவிகிதம் குறைவாக இருக்கும் போது வளப்பொருள்கள் நடுத்தரப் பொருள்கள் உற்பத்திக்கு அதிகம் பயன்படுத்தப் படுகின்றன. நுகர்வோர் பொருள் ஒவ்வொன்றின் அளவைக்கும் அதிக மூலதனம் உபயோகப்படுத்தப்படும். இது முதற்கருவிப் பொருள், நுகர்வோர் பொருள் இவைகளின் தராதர அளிப்பை மாற்றிவிடும். நுகர்வோர் பொருள்களின் அளிப்பு அவைகளின் தேவைகளைவிட அரிதாகும். இதற்கு

மாறுன நிலை மூலதனப் பொருள்களுக்கேற்படும். நுகர்வோர் பொருள்களின் விலை உயரும். முதற்கருவிப் பொருள்களின் விலை குறையும்.

உற்பத்தி, கால அளவைப் பொறுத்திருக்கிறது. காலத்தை அளப்பதில் குறைகள் காணப்படுகின்றன. எதிர்காலத்தை உறுதியாகக் கணக்கிட்டுக் கூற முடிந்தால்தான் கால அளப்பு சரியான முறையில் அமையும். எப்படியும் உற்பத்தியில் காலம் நீண்டுகொண்டே போகிறது. உற்பத்தி, நீட்டிக்கப்பட்ட கால உற்பத்தியாகிறது.

3. கடன் தரும் வட்டிக் கோட்பாடு

"உள்ளாற்றலுடைய முதலீடு"

முழு வேலைவாய்ப்பு இருப்பதாகக் கருதிக் கொள்ளக்கூடிய ஒரு பொருளாதாரத்தில் மொத்த வெளிப்பாடானது (output) கிடைக்கக் கூடிய உழைப்பையும், மூலவளத்தையும், பழமையிலிருந்து மரபுடைமையாக்கப்பட்ட உற்பத்தி செய்தலையும், மாறுபட்ட உற்பத்தி விளைவுகளின் நிலையிலுள்ள கையிருப்புப் பொருள்களையும், மேலும் உற்பத்திக் கலைத் திறன்களையும் பொறுத்து இருக்கின்றது. உற்பத்தியின் ஒரு பகுதி, ஒரு குறிப்பிட்ட காலத்தில் நுகர்ந்த நுகர்வுப் பொருள்களை உட்கொண்டுள்ளது. மற்றொரு பகுதி உற்பத்திக் கருவிகளை உட்கொண்டுள்ளது. மேலும் மற்றொரு பகுதி முடிவு பெறப்படாத நிலையிலுள்ள பொருள்களையும், நுகர்வுப் பொருள்களையும் கொண்டுள்ளது.

மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்ய உதவும் கருவிப் பொருள்களின் வழங்கு முறை முதலீடு ஆகும். மொத்த முதலீடு என்பது கிடைக்கக்கூடிய மொத்த உற்பத்திக் கருவிகளின் கூடுதலில் நுகர்வுப் பொருள்களின் உற்பத்திக்குத் தேவையான உற்பத்திக் கருவிகளின் வேறுபட்ட அளவாகும். முழு வேலைவாய்ப்பு நிலையில் இந்த அளவு அமையப்பெற்றால், மேற்கொண்டு அதிகரிக்கக்கூடிய முதலீட்டின் நிகழ்ச்சி, குறையும் நுகர்வுத் தன்மையின் செலவிழப்பைப் பொறுத்துத்தான் முடியும். உற்பத்திக் கருவிகள் முழு அளவு பயனிடப்படாமலிருந்தால், முதலீட்டுப் பொருள்களையும் நுகர்வுப் பொருள்களையும் ஒரே நேரத்தில் அதிகரிக்க முடியும். முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்கக் கூடிய, பயனிடப்படாத உற்பத்தி எண்கூறுகள் உள்ளாற்றலுடைய முதலீடு என்று அழைக்கப்படும் (Investment Potential). உள்ளாற்றலுடைய முதலீட்டின் அளவையும் தன்மையையும் குறிக்கக் கீழ்வருவனவற்றை ஆய்ந்து ஆராய வேண்டும். உள்

ளாற்றலுடைய முதலீட்டின் உற்பத்திக் காரணிகள் தொழில் நுணுக்க ரீதியில் நிறைவு உடையதாக அமைய வேண்டும்.

1. பொருத்தமான உழைப்பின் அளிப்பு, போதிய அளவு இல்லாததால் சிக்கலான கருவிகளை உபயோகிக்க இயலாது. தற்போதைக்கு நிறைவுஉழைப்புப் பெறும்வரை இந்தத் தற்காலிகமாக உபயோகப்படாத கருவிகளை உண்மையான உள்ளாற்றலுடைய முதலீட்டில் சேர்த்துக் கொள்ள இயலாது. அதிகமான வேலை வாய்ப்புக்கள் இல்லாத நேரங்களில் உபயோகப்படுத்தப்படாத உற்பத்திக் கருவிகள் பலவகைப்படுத்தப்பட்ட அளிப்பு சாதாரணமாகக் கிடைக்கிறது. மேலும் அவற்றின் இயற்கையான பயன் குறிப்பிட்ட அளவிற்குத் தரமாக உள்ளது. பிற்பாடு உள்ளாற்றலுடைய முதலீடு, கூடிய அளவில் முழுமையாகப் பயனீடு செய்யப்படும் பொழுது, எல்லா உற்பத்திக் கருவிகளையும் சரியான விகிதங்களில் பயன்படுத்துவது மிகவும் கடினம். இந்தப் படிப்படியான செயல்முறை என்பதுதான் உற்பத்தி இக்கட்டு நிலையை (Bottle neck) அடைதல் எனபபடும்.

எப்பொழுதுமே மாருத தேவை நிலையினுல் மாறுபட்ட தேவை நிலைகளுக்கு ஏற்ப, உற்பத்திக் கருவிகளையும் செய்முறைகளையும் உடனடியாகச் சரிப்படுத்த முடியாத நிலை இல்லாமையினுல் எப்பொழுதும் சில பயனில்லாத உற்பத்திக் கருவிகள் இருக்கும். இந்தக் காரணங்களினுல் திட்டமிடப்படாத முதலாளித்துவப் பொருளாதாரம் எந்தக் காலத்திலும் இருக்கக் கூடிய உற்பத்திக் கருவிகளைக் கொண்டு, ஒரு சரியான முழுவேலை வாய்ப்புத் தன்மையை அடைய முடியாது. கிடைக்கக்கூடிய பொருள்களின் உபயோகமானது தொழில் துறையைச் சார்ந்த உற்பத்திக் கருவிகளுக்கேற்ப, தேவையின் மொத்தத்தையும் இனத்தையும் ஆய்ந்தாராய்ந்து சரிசெய்யும் வாய்ப்பைச் சார்ந்துள்ளது. இந்த விதத்தில் கூட்டுத் தேவை, கிடைக்கக்கூடிய உற்பத்திக் கருவித் தன்மைகளுடன் தொடர்புபடுத்தக் கூடியது.

திட்டமிடாத பொருளாதாரத்தைக் காட்டிலும் திட்டமிட்ட பொருளாதாரம் பெரிய நற்பயன் அளிப்பதாகும். ஆகையால் உள்ளாற்றலுடைய முதலீட்டின் அளவும் தன்மையும் சமூகப் பொருளாதார முறைமையின் நடத்தையுள் கட்டுண்டது ஆகும்.

3. நுகர்வோர் பொருள்களின் இருப்பைவிட மொத்த நுகர்வின் அளவானது மாறும் பொழுதெல்லாம் உள்ளாற்றலுடைய முதலீடு மாறும். முதலாளித்துவப் பொருளாதாரத்தில் முதலீடு

மாறும் பொழுதெல்லாம் நுகர்ச்சி தானுகவும் அதே வழியிலும் மாறும் தன்மையாயிருப்பது குறிப்பிடத்தக்கவகையில் முக்கிய மானது. முதலீடு அதிகரிக்குங்கால் அதிகமான ஆட்கள் வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். நாட்டின் வருமானம் (தேசிய வருமானம்) அதிகமாகிறது. மேலும் இந்த அதிகரிப்பின் ஒருபகுதி நிச்சயமாக நுகர்வோர் பொருள்களில் செலவிடப்படுகிறது. ஆகையால் முழு வேலைவாய்ப்புத் தன்மை இல்லாத நிலையில், அதிகரிக்கும் முதலீடு, உள்ளாற்றலுடைய முதலீட்டை முதலீட்டுக்காகக் கிடைக்கக் கூடிய உற்பத்திக் கருவிகளின் உபயோகத்தின் மூலமும், நுகர்வோர் பொருள்களின் அதிகமான தேவையின் மூலமும் உற்பத்தியின் மூலமும் குறைக்கின்றது. இந்தப் பெருக்கத்தின் விளைவு (Multiplir Effect) திட்டமிட்ட முதலீட்டின் அளவையும் காலத்தையும் முடிவு செய்யும் பொழுது மிகுந்த சிரத்தையுடன் சிந்திக்க வேண்டியதாகும். விரும்பத்தக்க முழு வேலைவாய்ப்பு நிலை அடையும் நேரத்தில் முதலீட்டுப் பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பும், நுகர்வோர் பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பும் இணக்கமாகச் சமநிலை அடைவதுதான் இந்த உயரிய குறிக்கோளாகும். இந்த நேரத்தில் சமநிலையை நிறைவேற்ற முடியாத நிலை, அது முழு வேலை வாய்ப்பு நிலை தொடர்வதைத் தடுப்பதால் ஒரு தோல்வியேயாகும்.

"கடன் நிதி அளிப்பின் வெவ்வேறு மூலங்கள்"

(The d fferent sources of the supply of Lonable Funds)

முதலீட்டு நிதி அதிகமான அளவில் பயனில்லாது இருக்கும் பொழுது முடிவுகளைச் சாதனங்கள் சரி செய்யும் நிலை திட்டமிட்ட பொருளாதாரத்தின் பெரிய நன்மையாகும். உபயோகம் திட்டமிடப்படாத பொருளாதாரத்தின் ஓர் அடிப்படையான, திட்டமிடப்படாத பொருளாதாரத்தில் தடங்கலில்லாத விருப்ப நுகர்வைப் பொறுத்துக் கிடைக்கக்கூடிய உற்பத்திக் கருவிகளின் உபயோகம் என்பது ஓர் அடிப்படை இக்கட்டாகும். தடங்கலில்லாத விருப்ப நுகர்வு என்பது மக்கள் தாம் இன்ன பொருளை நுகர வேண்டும் என்பதைத் தடையில்லாமல் தீர்மானிப்பதோடு மட்டுமல்லாமல், தங்களுடைய பண வருமான எல்லைக்குள் தாங்கள் எவ்வளவு நுகர வேண்டும் என்பதையும் தீர்மானம் செய்வதாகும். மேலும் உள்ளாற்றலுடைய முதலீட்டிடை நேரத்தைச் செலவழிக்கும் உற்பத்திச் செய்முறைகளில் உபயோகிப்பது பற்றி தனிப்பட்டவர்களோ அல்லது கூட்டமோ முழுமையிலும் முடிவு செய்ய வேண்டும். பல்லாயிரக்கணக்கான மக்கள் தனித்தனி நிலையில் செயல்படும் பொழுது, நுகர்வோர் பொருள்களின் உற்பத்தியும் முதற்கருவிப் பொருள்களின் உற்பத்தியும் முழு வேலைவாய்ப்பு

நிலையில் பொருளாதாரத்தின் அதிக அளவு மொத்த உற்பத்திக்குச் சரியாக இருப்பது என்பது நம்ப முடியாததாகும். எப்படியிருந்த போதிலும், இல்லாவிட்டால் முழு வேலைவாய்ப்பு நிலையில் சம நிலையை அடைவது என்பது நிகழக்கூடியதாகும். இந்தப் பிரச்சினை கடன் வட்டிக் கோட்பாடுகளுக்கு வழிகாட்டுகிறது.

சில கோட்பாட்டு வல்லுநர்கள் (Theorists) யார் தங்களுடைய வருவாயைக் குறைவாகச் செலவழிக்கிறார்களோ அவர்கள் காத்திருக்க (waiting) முன் வருகிறார்கள் என்பர். மற்றவர்களில் முதலீடு செய்ய ஆவலாயுள்ளவர்களுக்குக் காத்திருப்பு (waiting) தேவைப்படுகிறது. காத்திருப்பின் அளிப்பும் தேவையும் வட்டியால் (காத்திருப்பின் விலை) சமமாக்கப்படுகிறது (இந்தக் கூற்று முன்பே மறுக்கப்பட்டு விட்டது). குறைவாகச் செலவழிப்பவர்கள் கொடுக்க முன் வரக்கூடியதும், நேரத்தைச் செலவழிக்கும் உற்பத்தி செய்முறைகளுக்குத் தேவையானதும் பணமே ஆகும். (பணம் என்பது ரொக்கமாகவோ அல்லது கணக்கிலோ வைத்து இருப்பது அன்று. பணம் என்பது உற்பத்தியில் செலவழிப்பதாகும்). கடன் சந்தையில் பணத்தின் அளிப்பு தேவை கூட்டுத்தொகை என்பது கடன் தரும் நிதிகள் ஆகும். கடன் தரும் நிதிகள் முதலீட்டு நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதை அழுத்திக் கூறும்பொழுது நாம் முதலீடு செய்யக் கூடிய நிதிகள் என்ற சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். 'நாணயம்' அல்லது பணமுதல் என்பவைகளும் தகுந்த பதில் சொற்றொடர்களாகும்.

கடன் நிதிகளின் அளிப்பை வசப்படுத்தும் முக்கியமான காரணக் கூறுகள் :

1. கடன் நிதிகளின் அளிப்பு சேமிப்பால் தனியுரிமைப்பாட்டுடன் தீர்மானிக்கப்படுகிறது என்று அடிக்கடி சொல்லப்படுகிறது. ஆராய்வுக்குரிய ஒரு நேரத்தில் ஒரு மனிதன் முந்திய காலத்தில் அவன் பெற்ற வருமானத்தை நுகர்வோர் பொருள்கள் வாங்குவதற்காக முழுவதையும் செலவழிக்காவிட்டால் அவன் சேமிக்கிறான் என்று சொல்லப்படுகிறது. ஆகையால் மொத்தச் சேமிப்பு அல்லது பொருளாதார அமைப்பின் சேமிப்பு என்பது, 'A' என்ற காலத்தில் சம்பாதித்த மொத்தப் பண வருமானத்தில், 'B' என்ற பின் தொடரும் காலத்தில் நுகர்ச்சிக்காகச் செலவழித்த மொத்தப் பணத்தின் கழிவு ஆகும். ஒரு மனிதன், தன்னுடைய முந்திய சேமிப்புக்களைச் செலவழித்து, தன்னுடைய நுகர்ச்சியை அதிகப் படுத்தத் தீர்மானம் செய்தால் செலவழித்தல் நடைபெறுகிறது. மொத்தச் செலவழிப்பு (Dissaving) மொத்தச் சேமிப்பைக் காட்டிலும்

குறைவாக இருக்கின்றது என்று அனுமானம் செய்தால் நாம் செலவழிப்பின் இயல்பையுணர்ந்து மொத்தச் சேமிப்பு அதன்படியாகக் குறைவதை எண்ணிப்பார்த்து அதன் மூலம் கவலை கொள்ளலாம். பொருளாதார அமைப்பு அதனுடைய மூலதனத்தைத் தொடர்ந்து (செயலாற்றுவிட்டால்) நிலைநிறுத்தாவிட்டால் அந்த அமைப்பு முழுவதும் செலவழிப்பு என்று சொல்லப்படுகிறது.

தனிப்பட்டவர்களின் சேமிப்பைத் தவிர வியாபாரக் கார்ப்பரேஷன்களின் சேமிப்புக்களும் இருக்கின்றன. இந்த நிறுவனங்கள் தங்களுடைய பங்குதாரர்களுக்கு இலாப ஈட்டின் தொகையைப் பணவருமானமாகக் கொடுப்பதற்குப் பதிலாக, அவற்றில் ஒரு பகுதியை மூதலீட்டுக்காக நிறுத்தி வைத்துக்கொள்கின்றன. முதலீடு அந்த நிறுவனத்திற்குள் நடைபெறுவதால், இந்தச் சேமிப்புக்கள் சந்தையின அளிப்பு நிலையில் காணப்படுவதில்லை. அல்லது நாம் இவற்றை அளிப்பின் ஒரு பகுதியாகக் கணக்கிட்டால் (கணக்கிட வேண்டும் என்றால்) தேவைப்பக்கம் சமஅளவிற்கு அதிகரித்திருக்கிறது என்ற அனுமானத்தால் அவற்றைச் சமநிலை செய்ய வேண்டும் இந்த நிறுவனச் சேமிப்புக்களின் செய்முறைகள் தொடர்ந்து இருக்கக்கூடிய தன்மையால் முதலீட்டுச் செய்முறைகள் தொடர்பறுந்து போகலாம். இந்த நிலையில் கடன் சந்தையில் தற்காலிகமாகச் சில கடன் நிதிகள் உண்மையாகவே கடன் கொடுக்க முன் வரலாம்.

2. சேமிப்புக்கள் (செலவழிப்பு நீங்கலாக) சந்தையில் மக்கள் விலை கூறுவதற்காகக் கிடைக்கப்பெற்றால் அவை கடன் நிதிகளின் அளிப்பைச் சேர்ந்து உருவாக்குகின்றன. உண்மையில் இந்தக் கடன் சந்தைக்கு மாற்றப்படும் சேமிப்புக்கள் அதிகக் கால இடைவெளியில்லாமல் நடைபெறும் என்ற ஒரு முன் எண்ணம் உறுதியாக இருக்கிறது. ஏனென்றால் பணத்தின் தற்காலிக உபயோகத்திற்காக வட்டி கொடுக்கப்படுவதால் ஓரளவிற்கு நடைபெறுகிறது. இது, ரொக்க விருப்ப நோக்கங்கள் மக்களிடம் வலிவாக இருக்கும்போது வட்டி வருமானத்தை (இழந்தும்கூட) தங்களுடைய பண இருப்பு நிலையை அதிகரிக்க மக்கள் எண்ணுகிறார்கள். இந்தச் செயல்தான் குவிப்பு (Hoarding) எனப்படுவது. இது நடைமுறைக் குறைவிலோ அல்லது பணத்தின் வேகக் குறைவிலோ முடிகிறது. இந்த இடத்தில் ஒன்று குறிக்க வேண்டும். ஒரு தனி ஆள் அல்லது நிறுவனம் அதிகமான பண இருப்பைக் கைவசமாகக் கொள்ளும் பொழுது, மக்களின் அல்லது நிறுவனங்களின் பண இருப்பும் உடன் நிகழ்ச்சியாகக் குறையாவிட்டால் அது நடக்காது என்பது மொத்தப் பணம் அதிகரித்திருக்கிறது

என்ற அனுமானத்தில்தான் முடியும். பண இருப்புக்கள் அனைத்தும் மொத்தப் பணத்திற்கும் சமமாக இருக்கிறது. ஆகையால் குவிப்புச் செய்முறை மொத்த இருப்புக்களின் கூடுதல் என்று விரித்து உரைக்க முடியாத ஒன்றாகும். குவிப்பு என்ற சொல்லானது ஒன்று முயற்சியுள்ளது; பண இருப்புக்குப் பதிலாகச் செயலற்ற பண இருப்பின் அதிகரிப்பாகும் அல்லது பணச் சுழற்சி வேகத்தின் நேரிடைக் குறைவாக இருக்கவேண்டும். குவிப்பு, கடன் நிதிகளின் அளிப்பு என்று தொகையைக் குறைக்கின்றது. 'அ' என்ற ஒரு நேரத்தில் பெறப்பட்ட பணம் நுகர்வோர் பொருள்களுக்காகவோ அல்லது முதலீட்டுக் காரணங்களுக்காகவோ செலவு செய்யப்படவில்லையாகையால், அது இந்த நேரத்திலோ அல்லது பிற்பாடோ (அது குவிக்கப்படாத வரையில்) வருமானமாக ஆகத் தவறுகின்றது. சேமிப்புகள் முயற்சியுள்ள கடன் நிதிகளாக ஆவது மட்டும் தடுக்கப்படவில்லை. இந்தச் சேமிப்புகளின் பிறப்பிடம் நாட்டின் வருமான காலத்திற்கும் குறைக்கப்படுகின்றது. மற்றொருபக்கத்தில் குவிக்காத நிலை, முந்தைய வருமான காலத்தில் கட்டப்பட்ட கடன் நிதிகளின் அளிப்பாகும். ஆகையால் கடன் நிதிகளின் மொத்த அளிப்பு என்பது உடனடியாக முன்சென்ற வருமான காலத்தில் தன்னிலையில் சம்பாதிக்கப்பட்ட வருமானத்தின் ஒரு பகுதியாகும்.

3. தத்துவ ரீதியான பண அளவின் மாறுதல்களால் குவிப்பு, செலவழிப்பு இல்லாத நிலை (Dishoarding) இரண்டும் ஈடுகட்டப்பட முடியும். குவிப்பைப் பண இருப்புக்களின் அதிகரித்த தேவை என்ற நிலையில், இந்த அதிகரித்த தேவையைக் கூடுதலான பணத்தை ஆக்குவதன் மூலம் மனநிறைவு செய்து, சமாளிக்க முடியும். செலவழிப்பினால் அதிகரிக்கும் பணப் பெருக்கத்தைப் பண அளவைக் குறைப்பதன் மூலம் சரிக்கட்ட முடியும். ஆனால் பணக்கட்டுப்பாட்டு நிறுவனமும் வணிக வங்கிகளும் இதைவிட அதிகமாகவே செய்ய முடியும். அவைகள், குவிப்பையோ செலவழிப்பையோ ஈடுசெய்வதற்குத் தேவையான அளவைவிட அதிகமாகவே பணத்தை உற்பத்தி செய்தோ, அழித்தோ கடன் தரும் நிதியின் அளிப்பினை மாற்ற முயற்சி செய்யக்கூடும். மத்திய வங்கியும் வணிக வங்கிகளும் வெற்றிகரமாகப் பணத்தை உற்பத்தி செய்யக்கூடிய நிலையில் கடன் தரும் நிதி, பொதுமக்களின் ரொக்க இருப்பை வைத்துக் கொள்ளும் தன்மையை மட்டுமல்லாமல், முதலீட்டு நோக்கத்திற்கான கடன் தரும் நிதியின் தேவையையும் பொறுத்துள்ளது. எனினும் கடன் தரும் நிதியின் அளிப்பை நிர்ணயிக்கும் காரணிகளில் பணக்கட்டுப்பாட்டு நிறுவனம் அல்லது வணிக வங்கிகள், ஆகியவைகளின் நடவடிக்கைகள் முக்கியமாகும். இந்த அளிப்பின் மாறுதல்களின் விளைவுகள், குவிப்பு, செலவழிப்

பின் விளைவுகளை ஒத்ததாகும். பண அளிப்பின் அதிகரிப்பு கடன் தரும் நிதியின் அளிப்பை அதிகரிப்பதோடல்லாமல், அடுத்த வருவாய் காலத்தின் மொத்த வருவாயை அதிகரிக்கும் தன்மையுடைய தாயுள்ளது, பணத்தின் அளிப்பு குறைக்கப்படும்பொழுது இதற்கு நேர்மாறான தன்மை நிலவுகிறது. பாங்குக்கடன் செலாவணிச் சிருட்டியினால் அதிகரிக்கப்படும் கடன்தரும் நிதியின் அளிப்பு நாட்டின் வருவாயை, பொருள் உற்பத்தியின் வாயிலாகப் பெருக்கும். இந்த உற்பத்திப் பெருக்கு உபயோகப்படுத்தப்படாத உற்பத்திக் காரணிகள கிடைப்பதைப் பொறுத்து உள்ளது.

4. கடன் தீர்ப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்படும் பங்கு விகிதம் கடன்தரும் நிதியின் அளிப்பிற்கான வழிவகைகளில் ஒன்றாகும். இந்தப் பங்கு விகிதம் உண்மை மூலதனத்தின் மொத்த அளவை அதிகரிக்க உதவாது. ஆகையால், இருக்கக்கூடிய மூலதனத்தைப் பராமரிக்க மட்டுமே பயன்படும் நிதியை, கடன்தரும் நிதி அளிப்பில் சேர்த்துக்கொள்ள முடியுமா என்பது வினவுக்குரியதாக இருக்கின்றது. ஆனால் மேற்படிப் பங்குவிகிதம் மற்றக் கடன் நிதிகளைப் போன்றே குறிப்பிடத்தக்கதாக இருக்கின்றது. நாம் மொத்தச் சேமிப்பு, நிகர சேமிப்பு இரண்டையும் வேறுபடுத்திக் கண்டோமானால் மேற்படி பங்கு விகிதத்தையும் சேமிப்பு என்று கருதமுடியும். மூலதனத்தைப் பராமரிப்பதற்காகத் தனியாக வைக்கப்பட்டிருக்கும் பணம் கடன்தரும் நிதியின் புதிய அளிப்பைப் போன்ற குணங்களையுடையது. பராமரிக்கப்பட்டதாக நினைத்துக் கொள்ளக்கூடிய மூலதனப் பொருள்களுக்கு முற்றிலும் மாறுபட்ட மூலதனப் பொருள்களை உற்பத்தி செய்ய மேற்படிப் பங்கு விகிதத்தைப் பயன்படுத்தலாம். மூலதனப் பொருள்களின் திறனை அதிகரிப்பதற்கான இந்த மாற்றமும், நுட்பவினைமுறை, தேவை இவற்றிலுள்ள மாற்றங்களைச் சரிசெய்தல், செலவழிப்பின் (மூலதனம் செய்யாமல்) நோக்கங்களுக்காக இந்தப்பணத்தை உபயோகப்படுத்துதற்கான வாய்ப்பு ஆகியவை கடன் தீர்ப்பிற்கான ஒதுக்கீட்டுப் பங்கு விகிதத்தைக் கடன் நிதி அளிப்பின் ஒரு பகுதியாகச் சேர்த்துக் கொள்வதற்கான காரணங்களாகும்.

நடைமுறை மூலதனத்தின் புரளல் (Turu over of working capital) கடன் தீர்ப்பதற்கான ஒதுக்கீட்டுப்பங்கு விகிதத்தைப் போலவே, கடன் தரும் நிதி அளிப்பின் மற்றொரு வழிவகையாகிறது. மேற்படி ஒதுக்கீட்டுப் பங்கு விகிதம் நிலையான மூலதனத்தின் ரொக்க நிலையைக் குறிக்கிறது. நடைமுறை மூலதனம், சுழலும் நிதியாக அதிகமான ரொக்க நிலையை உடையதாகவும், உற்பத்திப் பொருள் விற்பனை செய்யப்படும் பொழுது எல்லாம்

பண உருவத்தைத் திரும்பப் பெறுகின்றதாயும் எண்ணப்படுகின்றது. உற்பத்தி நிலைகள் தொடர்ச்சியாக இல்லாதபொழுது, இந்தப்பணம் குறுகியகாலச் சந்தையில் தற்காலிகமாகக் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு (நேரத்திலும்) கால அளவிலும் கடன்தரும் நிதியின் சராசரி அளிப்பு அதிகரிக்கப்படுகிறது என்று கொள்ள முடியாது. ஆனால் இந்தப் பணம் கொடுக்கப்படும் காலத்தின் அளவு, கடன் தரும் நிதி அளிப்பின் அமைப்பில் முக்கிய காரணியாகும். மேலும், கடன்தரும் நிதியின் அளிப்பினை அதிகரிக்கும் முக்கிய காரணியாக இல்லாவிட்டாலும்கூட, நடைமுறை மூலதனத்துக்கான இந்தத் தற்காலிக அளிப்புக்கள், கருதக்கூடிய பணச் சந்தையில் குறுகியகால நிதிகளின் அளிப்பில் ஏற்படும் திடீர்க் குறைவுகளைக் கணக்கிடுவதால் குறிப்பாக உதவுகின்றன. இந்த நிதி ரொக்க நிலை, சுழல்கின்ற நிலை உடையதாகக் கருதப்பட்டாலும், உற்பத்திப் பொருள்கள் (வெளிப்பாடு) விற்பனையாகாத நிலையில் குறைந்ததாகிறது. தற்காலிகமாக அந்த நிதியை மீண்டும் அளிக்க இயலாது.

மக்களின் வருமானத்தில் எவ்வளவு சேமிக்கலாம், எவ்வளவு நுகர்வுக்காகச் செலவழிக்கலாம் என்ற தீர்மானத்தைப் பாதிக்கின்ற பொருளாதாரக் கொள்கைகள் எல்லாமே கடன்தரும் நிதியின் அளிப்பினைத் தீமானிக்கின்ற கடைசிக் காரணியாக நாம் கொள்ளலாம். இவற்றுள் முக்கியமான வரிக்கொள்கைகள் மூலதன ஆக்கம், பொதுநலப் பாதுகாப்பு நிதிகளை உருவாக்கும். இவற்றைத் தூண்டுதல் செய்யவோ அல்லது குறைக்கவோ செய்யும்.

பல துறைகளிலிருந்து பெறப்படும் கடன் தரும் நிதி பண அலகுகளாக (Monetary units) உள்ளது. இவ்வாறாக இந்த அளிப்பின் ஓரினத்தன்மை பொருளாதாரத்தின் எந்தச் சந்தையிலுமே காணப்படாத ஒப்பற்ற ஒன்றாகும். இந்தப் பண ஓரினத்தன்மை பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பணத் தோற்றுவாய்களின் வேற்றுமைகளை மறைக்கின்றது. கடன் நிதி அளிப்பில் உள்ள சில மாறுதல்கள் பண ஓட்டத்தின் அளவை மாற்றாது. இந்த மாற்றங்களைச் சேமிப்பு அளிபபின் மாற்றங்களாகத் தொன்மைப் பொருளாதாரக் கோட்பாடு (Classical Theory) திருத்திக் கூறியது. பணத்தின் செயற்சுழற்சியை அதே நேரத்தில் மாற்றாத கடன் நிதி அளிப்பு மாற்றங்கள், நுகர்ச்சியில் அளவு மாற்றங்கள், நுகர்ச்சியில் அதே அளவு மாற்றம் செய்கிறது. நுகர்வோர் பொருள்களில் உள்ள இந்த மாற்றம். பொருளாதாரத்தின் எதிர்கால உற்பத்தித் திறனில் சில விளைவுகளை ஏற்படுத்தும். ஆனால்

நுகர்ச்சியிலிருந்து முதலீட்டுக்கோ, அல்லது முதலீட்டிலிருந்து நுகர்ச்சிக்கோ மாற்றம் செய்யப்படும் வளங்களைக் கடினமாக்கும் மாற்றத்தின் விளைவுகளைத் தவிர மற்ற பணத்தின் வடிவாக உள்ள மொத்தத் தேவையின் பரிமாணத்தையும், மொத்த வருமானத்தையும், அல்லது மொத்த வேலைவாய்ப்பையும் மாற்றுது. பணச் சுழற்சி வேகம், குவிப்பு அல்லது குவிப்புக் குறைப்பு அல்லது பண அளவு, கடன் உற்பத்தி அல்லது கடன் சுருக்கம் ஏற்படுகின்ற மாறுதல் கடன் தரும் நிதியின் அளிப்பில் மாறுதல் செய்வது முற்றிலும் மாறுபட்ட விளைவுகளை உடையது. பணத்தின் செயற் சுழற்சியில் உள்ள மாற்றம் பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் பணவீக்க அல்லது பணவாட்ட விளைவுகளை (செலுத்துகிறது) ஏற்படுத்துகிறது. செலவழித்த மொத்தப் பணத்தின் அளவிலுள்ள மாற்றங்கள் மொத்தத் தேவை, மொத்த வருவாய், மொத்த உற்பத்தி இவைகளின் மீது செல்வாக்குச் செலுத்துகின்றது. பண வருமானத்தின் அதிகரிப்பு மொத்த உற்பத்தியை (வெளிப்பாடு) எவ்வாறு செயல்படுத்துகிறது அல்லது கருதப்படுகின்ற கால அளவில் மேலும் இவைகளிடையே உள்ள தொடர்பு எப்படியிருக்கும் என்ற வினவின் பதில் உபயோகப்படுத்தப்படாத உள்ளாற்றலுடைய முதலீட்டின் நிலையைப் பெரும்பாலும் பொறுத்துள்ளது.

கடன் தரும் நிதியின் தேவை அட்டவணை

கடன் தரும் நிதியின் தேவை உற்பத்தியாளர்களின் தேவையோ அல்லது நுகர்வோர்களின் கடன் தேவையோ ஆகும். நாம் நுகர்வோர்களின் கடன் தேவையை முதலீட்டு நிதியின் தேவையாகக் கருதலாம். ஆனால் நுகர்வோர் கடன் தேவை தொழில் துணிவோரின் முதலீட்டுத்தேவையாகக் கருதப்படவேண்டும். முதலீட்டுத் தேவை நிதிகளில் ஒரு வழியில், நேர நுகர்வு நிலைகளில் பயன்படுகின்ற உற்பத்திச் சாதனங்களின் மறைமுகத் தேவை எனக்கொள்ளலாம். இந்த நிலையில் பெரும்பாலான நுகர்வோர் கடன்கள் கால நுகர்வு நிலைகளின் நிதி நோக்கத்திற்காக அதேமாதிரி பயன்படுத்தப்படுகின்றன என்பது தெளிவாகின்றது. நீடித்த நுகர்வுப் பொருள்களின் தேவைகளுக்கான காத்திருப்பு (Waiting) உற்பத்திக் காலத்தோடு சேர்த்துக் கொள்ளப்படவேண்டும். ஆகையால் இந்தக் காத்திருப்பு நிலையைக் கடன் தரும் நிதிகளின் தேவையின் ஒருபகுதியாகக் கணக்கிடவேண்டும். பொதுநோக்கில் நுகர்வோர் கடனும் உற்பத்தியாளர்கள் கடனைப் போல முக்கியமானது. அவைகள் உற்பத்திக்காகக் கொடுக்கப்படும் கடன் தரும் நிதியின் அளிப்பைக் குறைப்பதாகக் கருதக் கூடாது.

முதலீட்டு நோக்கத்திற்கான கடன்தரும் நிதியின் தேவைகளை நிர்ணயிக்கின்ற காரணிகளைப்பற்றி எந்தவிதக் கருத்து வேறுபாடும் இல்லை. கடன்தரும் நிதிகளான தேவை திட்டமிட்ட முதலீட்டிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற இலாபத்தைப் பொறுத்திருக்கின்றது. பலதரப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களைக் குறைந்து செல் இலாபவிகிதத்தில் வரிசைப்படுத்தலாம். இலாபத்தின் அளவு கடன் தரும் நிதிக்காகப் போட்டிபோடும் தொழில் முனைவோரின் ஆவலையும், அவர்கள் எதிர்பார்க்கும் இலாபத்தை விட சிறிதளவு குறைவாகக் கொடுக்கக்கூடிய தன்மையையும், நிர்ணயம் செய்கின்றது. தொழில் நுணுக்கங்கள் உள்ளதாக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் முதலீட்டு நிதிகளைக் குறைந்து செல் வட்டிச்செலவில் அதிகமாக உபயோகிக்கும் தொழில் முனைவோரின் எண்ணிக்கை அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் தேவை அட்டவணை இன்றியமையாததாகும். வேறுபட்ட குறுகியகால, நீண்டகால மற்றும் இவற்றைச் சேர்ந்த உட்பிரிவுகளிலும், ஒரு குறிப்பிட்ட வட்டி விகிதத்தில், முதலீட்டு நிதியின் சந்தைத் தேவை தன்னிச்சைத் தேவைகளின் அளிப்புக்குச் சமமாக இருக்கும்.

கடன் தரும் நிதித் தேவையின் ஒரு பகுதி முதலீட்டுப் பொருள்களின் (மறைமுகத்) தேவையைக் காட்டிலும் ரொக்க இருப்புக்களின் தேவை என்பது பொருத்தமாகும். ஒரு குறிப்பிட்ட அளவிற்கு, முதலீட்டு நிதிகளின் அளிப்புத் தொகையும் இந்த வட்டிகளின் விகிதத்தைப் பொறுத்துள்ளது. வட்டி, கடன்தரும் நிதிகளின் விலை என்ற நிலையில், அந்நிதியின் தேவையும், அளிப்பும் ஒரு சில வட்டி விகிதங்களில் சமமாக்கப்படும் என்று நாம் அனுமானம் செய்து கொள்ள வேண்டும். அதே நேரத்தில் இந்தச் சமநிலை வட்டி விகிதங்கள் முழுவேலை வாய்ப்பு நிலையிலுள்ள பொருளாதாரச் சமநிலையைக் குறிக்காது.

வட்டி விகிதங்களில் உள்ள மாறுதல்களினால் கடன்தரும் நிதிகளின் தேவையின் பிரதிபலிப்பு அல்லது தேவை அட்டவணையின் நடப்பு இலாப எதிர்நோக்கைப் பொறுத்துள்ளது. முதலீடு என்பது நேரம் செலவாகும் நிலைகளை மேற்கொள்வது என்றிருப்பதால் கடன்தரும் நிதிகளின் தேவை தற்பொழுதைய இலாபத்தை மட்டும் பொறுத்தது என்று அனுமானிப்பது தர்க்க முறையற்றதாகும். இலாப எதிர்நோக்கு (anticipation) கடந்தகால அனுபவத்தையும் தேவை நிபந்தனைகளிலும் அடக்க விலையிலும் ஏற்படுகின்ற மாற்றங்களின் அளவீடுகளையும் சார்ந்து இருக்கின்றது.

கடன் தரும் நிதியின் அளிப்பு அட்டவணை

கடன் தரும் நிதியின் அளிப்பு தற்பொழுதைய நிபந்தனை களின் விளைவு என்பதைவிட, எதிர்நோக்குகளின் விளைவு என்பது பொருத்தமாகும் .ஏனெனில் நம் எதிர்காலச் சேமிப்பு இன்றைய அளிப்பு நிலையை நேரடியாகப் பாதிக்கிறது. நடைமுறையில் இக்கூற்ருனது பொய்யான தன்மையுடையதாக இருக்கின்றது. எதிர்கால இலாபத்தைக்கருதி ஒருமனிதன் கடன் கேட்கலாமே யன்றி, அதற்கான சேமிப்பை அவன் இப்பொழுது அளிக்க முடி யாது. நல்ல எதிர்காலத்தை எதிர்நோக்கும் ஒரு மனிதன் நுகர் வோர் கடன் திட்டம் மூலமாக அவனுடைய செலவைப் பெருக்கு வது மட்டுமல்லாமல், தன்னுடைய சேமித்த சொத்து வருமானம் ஆகியவற்றின் தற்பொழுதைய உபயோகத்தைப் பற்றியும் பல் வேறு முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கிறது. நிகழ்கால நுகர்ச்சி, சேமிப்பு, பதுக்கல் ஆகியவைகள் எதிர்நோக்குகளுடன் பிணைந்து கிடக்கின்றன. உண்மையிலேயே ஏற்கனவே அளிக்கப்பட்டது அவ்வளவும் நிச்சயமாக எதிர்காலச் சேமிப்புகள் ஆக மாட்டா. ஆனால் வருமானம் சொத்து ஆகியவைகளைப் பல்வேறு உபயோகங் களுக்குப் பிரித்து அளிப்பது எதிர்கால வருமானத்தின் எதிர் நோக்குகளால் செல்வாக்குப் பெறுகிறது.

இம்மாதிரியாக, கடன் தரும் நிதியின் அளவை இன்றைய வட்டி விகிதங்கள் மட்டுமேயன்றி எதிர்கால வருமானம், வட்டி விகி தங்களைப் பற்றிய எதிர்பார்ப்புக்களும்கூட நிர்ணயிக்கின்றன. மக் களின் சேமிப்பு, நுகரும் பழக்கங்கள் போன்றவை எவ்வாறு நடப்பு வட்டிவிகிதங்களின் எதிர்பார்ப்புக்கள் முதலியவற்றில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்றவாறு பிரதிபலிக்கும் எனச் சொல்வது மிகவும் கடினம். ஒருவேளை அடிப்படை எடுகோள், மேலும் மேலும் அதிக வட்டி ஏற்பட்டால் மக்கள் அதிகமாகச் சேமிக்க நினைப்பார்கள் என்பதாக இருக்கலாம். ஆனால் பேராசிரியர் கசல் (cassel) என் பாரும், மற்றவர்களும் வட்டிவிகிதம் உயர்ந்தால் நிலையான வரு வாய் உள்ளவர்கள் முன்பைவிடச் சேமிப்பைக் குறைக்க நினைப்பார் கள் என்று எடுத்துக் கூறி யிருக்கிருர். வருமானத்தில் மாறுதல் ஏற்பட்டால் சேமிப்பில் மாற்றம் காணலாம், இதற்கு ஒரு சட்டம் இருப்பதாகவே வைத்துக்கொள்ளலாம். அதாவது, வருமானம் உயர்ந்தால் நுகர்வு உயர்கிறது; அந்த அளவுக்கு சேமிப்பு உயரு வதில்லை.

குவிப்புகூட வட்டிவிகிதத்தைப் பொறுத்திருக்கிறது. வட்டி விகிதம் குறைந்திருந்தால் மக்கள் பணத்தைக் கையில் அதிகம்

வைத்திருக்கமாட்டார்கள். வட்டி விகிதம் அதிகமானல் ரொக்க விருப்பத்தை விரும்பாமல் கடன் கொடுக்கும் சந்தையில் தங்கள் பணத்தைக் கொடுத்து இலாபம் சம்பாதிக்க ஆசைப்படுவார்கள்.

கடன் தரும் நிதி அளிப்பு அட்டவணையின் குறையாதெனின், வருமானத்தின் மாற்றங்கள் வட்டிவிகித மாற்றங்களைவிட அதிக செல்வாக்கைச் செலுத்தக்கூடும் என்பதை விலக்கிவிட்டது.

4. கீன்சின் ரொக்க விருப்பக் கோட்பாடு

கீன்சு எடுத்துக் காட்டுகிற வட்டிக் கோட்பாடு பணவியல் மூலம் விளக்கும் கோட்பாடு என்று சொல்லலாம். இது உண்மை வட்டிக் கோட்பாடாகிய தொன்மைக் கோட்பாட்டுக்கு நேர்மாறானது. வட்டி என்பது பணவியல் சம்பந்தப்பட்டது என்கிறார் கீன்சு. காரணம் வட்டி வீதம் பணத்தை வைத்துத்தான் கணக்கிடப்படுகிறது. பணத்தின் அளிப்பையும் தேவையையும் பொறுத்துத்தான் வட்டி கணக்கிடப்படுகிறது. ரொக்க விருப்பை விட்டுக் கொடுப்பதற்காகக் கொடுக்கப்படும் சன்மானமே வட்டி என்று கீன்சு கூறுகிறார். பணம் எல்லாப் பொருள்களையும்விட அதிக நீர்மைத் தன்மையுடையது. ஆகையால் மக்கள் பணத்தை ரொக்கமாகக் கையில் வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். ஆகவே, அவர்களை, நீர்மை விருப்பை விட்டுக்கொடுக்கச் சொன்னால் அதற்கு ஈடு கட்ட சன்மானம் கொடுக்கவேண்டும். இந்தச் சன்மானம் வட்டியாகக் கொடுக்கப்படுகிறது. நீர்மை விருப்பம் எவ்வளவு அதிகம் இருக்கிறதோ அவ்வளவு அதிக வட்டி அந்த நீர்மை விருப்பை விட்டுக் கொடுக்கக் கேட்கப்படுகிறது.

மற்ற பொருள்களின் விலையைப் போலவே, வட்டியின் வீதமும் பணத்தின் அளிப்பு, தேவைகளைக்கொண்டே நிர்ணயிக்கப்படுகிறது. நீர்மை விருப்பம் ஒரு சமுதாயத்தில் அதிகம் ஏற்படக் காரணம், சமுதாயத்தின் தேவைகளை நிறைவு செய்ய ரொக்கம் வேண்டிய அளவு வைத்துக்கொள்ள வேண்டியிருப்பதே. கீன்சு இந்தத் தேவைகளை மூன்று தலைப்பில் விவரிக்கிறார்.

1. பேர ஊக்கி

2. எச்சரிக்கை ஊக்கி

3. யூகவாணிக ஊக்கி

இந்த மூன்றின் காரணமாக ஏற்படுகின்ற பணத்தின் தேவையானது பணத்தின் மொத்தக் கூடுதல் தேவை எனலாம். பணத் தேவை என்பது பணத்தைக் கையிருப்பாக வைத்துக்கொள்வதற்கு ஏற்படும் தேவையே என கீன்சு வாதப்படிக் கூறலாம். மேற்கண்ட மூன்று விதமான காரணங்களுக்காகப் பணம் உண்மையிலேயே மக்கள் கையிருப்பாக வைக்கப்படுகிறது. சமுதாயத்தின் பணத்தேவை அதிகரிப்பதும், குறைவதும் சமுதாயத்தில் கை இருப்பு வைத்துக்கொள்ள விரும்புவது அதிகமா குறைவா என்பதைப் பொறுத்திருக்கிறது. பணத்தின் தேவை அதிகரித்தால் அதன் வட்டி வீதம் அதிகரிக்க ஏதுவாகும். அதேபோல் பணத்தின் தேவை குறையுமானல் வட்டி வீதம் குறையும். தேவைப் பெருக்கம் எப்போதுமே வட்டி வீதத்தை உயர்த்துவதில்லை. தேவைப்பெருக்கம் உயரும்போது அதே அளவுக்குப் பண அளவும் உயருமேயானல் வட்டி வீதம் மாருது. நீர்மை விருப்பம் வட்டி வீதத்திஞல் மாற்றப்படுகிறது. வட்டி வீதம் உயர உயர நீர்மை விருப்பம் குறையும், வட்டி வீதம் குறையக் குறைய நீர்மை விருப்பம் அதிகமாகும்.

பொருளாதாரத்தில் பண அளிப்பு எவ்வளவு கிடைக்கிறதோ அதைப்பொறுத்துத்தான் வட்டிவீதம் அளிப்பு வழியில் நிர்ணயிக்கப்படுகிறது. பண அளிப்பு, பொருள் அளிப்பிலிருந்து வேறுபடுகிறது. பொருள் அளிப்பு ஓர் ஓட்டம். பண அளிப்பு ஒரு தேக்கம். இது ஓர் உண்மை. ஏனென்ருல் பொருள் இடைவிடாது உற்பத்தி செய்து நுகரப்படுவதில்லை. அதனுடன் பண அளிப்பு பண ரொக்க அளிப்பு என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். மேலும் சமுதாயத்தின் மொத்தப் பணத்தேவை அந்தச் சமுதாயத்தில் உள்ள அத்தனைபேர்களுடைய மொத்தப்பணக் கையிருப்பு அளிப்புக்குச் சமமாகும். மக்களின் நீர்மை விருப்பை அரசு நேரடியாகக் கட்டுப்படுத்த முடியாது. ஆனல் பணத்தின் தேவை அளிப்பு எப்போதும் அரசிடம் உள்ள ஒரு காரணி. பல நாடுகளின் பண அளிப்பைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு நிதி அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இந் நிதிஅதிகாரிதான் மத்திய வங்கி. நிதி அதிகாரி நீர்மை விருப்பத்தின் மீது அவ்வளவாகச் செல்வாக்குச் செலுத்தமுடியாது. ஒரு சாதாரணப் பொருளின் அளிப்பு அதன் விலையில் ஏற்படுகிற விளைவுதான் பணத்தின் அளிப்பு வட்டி வீதத்தின் மேல் இருக்கும். பண அளிப்பு உயர்ந்தால் வட்டிவீதம் குறையும். பண அளிப்பு உயரும்போதெல்லாம் வட்டி வீதம் குறைவதில்லை. பண அளிப்பின் அதிகரிப்பு பணத்தேவையின் அதிகரிப்புக்குச் சமமானல் வட்டி வீதம் பாதிக்கப்படாது. இருந்தாலும், பண அளிப்புக் கட்டுப்பாடு அரசிடம் உள்ள ஓர்

ஆற்றல் வாய்ந்த ஆயுதம். இதனுல் வட்டிவீதத்தைக் குறைத்து முதலீடு, வேலை வாய்ப்பு முதலியவற்றை அதிகப்படுத்த முடியும். பண அளிப்பு, வட்டி வீதத்தை மாற்றினுலும் வட்டி வீதத்தால் மாற்றப்படுவதில்லை. ஏனென்ருல் உயர் வட்டி வீதத்தைத் தடுக்க நிதி அதிகாரிகள் பண அளிப்பை உயர்த்த வேண்டும். அது அவர்கள் கையில் உள்ளது.

கீன்சின் கூற்றுப்படி வட்டி வீதமும் சமுதாயத்தின் நீர்மை விருப்பமும் சமமாகும்.

கீன்சின் ரொக்கவிருப்பக் கோட்பாட்டின் சில உள்அம்சங்கள் :

1. வட்டிவிகிதத்திற்கும் பத்திரத்தின் விலைகளுக்கும் இடையே உள்ள தலைகீழ்த் தொடர்பு. கீன்சு விளக்கிக் கூறிய ரொக்கவிருப்பக் கோட்பாட்டின் உட்கருத்து யாதெனில், வட்டிவிகிதமும் பத்திர விலைகளும் ஒன்றுக்கொன்று தலைகீழ்த் தொடர்புள்ளது எனலாம். அதாவது பத்திர விலைகளும் வட்டிவிகிதமும் எதிர் எதிர்த் திசைகளில் நகர்கின்றன—வட்டிவீதம் குறைந்தால் பத்திர விலைகள் உயரும்; வட்டிவிகிதம் உயரும்போது பத்திர விலைகள் குறையும். இதை ஓர் உதாரணத்தின் மூலம் எடுத்துக்காட்டலாம். அரசு பத்திரத்தை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளலாம். பத்திரத்தின் முகமதிப்பும் வட்டியும் அதில் அச்சடித்திருக்கக் காணலாம். ஒரு அரசு பத்திரம் எப்பொழுதுமே ஆண்டுதோறும் ஒரு நிலைத்த வருமானத்தைக் கொடுக்கிறது. ரூ. 100 முகமதிப்புள்ள ஒரு அரசு பத்திரம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 நிலைத்த வடடி கொடுப்பதாக வைத்துக்கொள்வோம். இப்போது அங்காடி வட்டிவீதம் ஆண்டு ஒன்றுக்கு 2 சதவீதமாகக் குறைந்தால் பத்திரத்தின் அங்காடி மதிப்பு ரூ. 200 ஆக உயரும். ஏனென்ருல் 2 சதவீதத்தில் ரூ.200 மதிப்புள்ள அங்காடிப் பத்திரத்தால்தான் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 வட்டியைக் கொடுக்க முடியும். இம்மாதிரி வட்டிவீதம் குறைவதின் காரணமாக, பத்திரத்தின் அங்காடி மதிப்பு உயருகிறது. அதே போல, வட்டிவீதம் 8 சதவீதத்திற்கு உயர்ந்தால் பத்திரத்தின் அங்காடி மதிப்பு ரூ. 50 ஆகக் குறையும். காரணம் 8 சதவீத வட்டிக்கு ரூ. 50 அங்காடி மதிப்புள்ள பத்திரந்தான் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 வட்டியைக் கொடுக்கமுடியும். வட்டி வீதத்தின் உயர்வு பத்திரத்தின் விலையில் தாழ்வை ஏற்படுத்துகிறது. ஆகவே பத்திரத்தின் விலையும் வட்டிவீதமும் தமக்குள் தலைகீழ்ச் சம்பந்தமுடையவைாக இருக்கின்றன.

பத்திரங்களில் ஊக வணிகம் பணத்தேவையை எப்படிப் பாதிக்கிறது என்பதைச் சற்றுப் பார்ப்போம். தற்போதைய பத்திர விலை

கள் மிக உயர்வாக உள்ளன என்றும், அவை நெடுநாட்கள் அந்நிலையில் இருக்கமுடியாதென்றும் அங்காடியில் ஊக வணிகர்கள் நம்புவதாக வைத்துக்கொள்வோம். அதாவது பத்திர விலைகள் உறுதியாக விழும் என்றோ, அல்லது வட்டிவீதம் உறுதியாக உயரும் என்றோ ஊக வணிகர்கள் நம்புகிறார்கள். இச் சூழ்நிலையில் ரொக்கத்தைக் கையிருப்பில் வைத்துக்கொண்டு பத்திரவிலைகள் குறையும் வரை காத்திருந்து பிறகு பத்திரங்களில் முதலீடு செய்வார்கள்.

தங்களிடம் பத்திரங்கள் இருந்தால் அவற்றை அப்போதைய உயர் விலைக்கு விற்றுவிட்டு ரொக்கத்தைக் கையிருப்பாக வைத்துக் கொள்வார்கள். பத்திர விலைகள் குறைந்தவுடன் தங்கள் ரொக்கத்தைக் குறைந்தவிலைப் பத்திரங்களை வாங்கப் பயன்படுத்துவார்கள். இதன் விளைவாக ரொக்கவிருப்பமானது உயரும்.

இதற்கு மாறாக ஊக வணிகர்கள் அங்காடியில் பத்திரங்களின் நடைமுறை விலைகள் குறைவு என்று கருதி அவை அவசியம் உயரும் என்றோ, வட்டி வீதம் அவசியம் வீழ்ந்துவிடும் என்றோ கருதுவதாக வைத்துக் கொள்வோம். இச் சூழ்நிலையில் அவர்கள் உடனே தங்கள் ரொக்கத்தைக்கொண்டு பத்திரங்களைக் குறைந்து நிலவும் விலைக்கு வாங்கி, பத்திரங்கள் விலைஉயரும்போது அப்பத்திரங்களை ரொக்கமாக மாற்றிவிடுவார்கள். இதன் விளைவாக ரொக்கவிருப்பம் அல்லது பணத்தேவை குறையும்.

இதனால் நமக்குப் புலப்படுவது யாதெனின் நடைமுறை வட்டி வீதம் குறைவாக இருந்தால் அது உயரும் என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள். கருங்கக்கூறின் பணத்தேவையானது பொருள், உத்தியோகத் தேவையைப் போன்றதே. குறைந்த விலையில் எப்படி மக்கள் பொருளையும் வேலையையும் அதிகம் வேண்டியும், அவைகளின் உயர்விலையில் குறைந்த விருப்பத்தையும் காட்டுகிறார்களோ, அதுபோல, பணத்தேவையும் குறைந்த வட்டிவீதத்தில் அதிகமாகவும், உயர்ந்த வட்டி வீதத்தில் குறைந்தும் தேவைப் படுகிறது.

பேராசிரியர் இக்சின் கருத்து

பண அளிப்பு எவ்வளவு உயர்ந்தாலும் வட்டிவீதம் பூஜ்ய நிலையை அடையாது. ரொக்க விருப்பம் பணத்திற்கு ஒரு அதிசயமான குணமாகையால் வட்டி வீதம் ஒரு குறித்த அளவுக்குக் கீழ் குறைக்க இயலாது. கீன்சின் கருத்துப்படி பணத்தேவையின்

வட்டி நெகிழ்ச்சிக்குக் காரணம் வட்டிவீதம் குறைவாக இருக்கும் போது, மக்கள் மனத்தில் வட்டிவீதம் குறைவாகவே இருந்துவிடுமா என்ற ஓர் உறுதியற்றநிலை ஏற்படுகிறது. அதனால் வட்டி எப்படியும் உயரும், பத்திரங்களின் விலை குறையும் என்று மக்கள் நம்புகிறார்கள். பத்திரங்களை வாங்காமல் ரொக்கத்தைக் கைவசம் வைத்துக்கொள்ளுகிறார்கள். கீன்சின் இந்த விளக்கத்தை. பேராசிரியர் இக்சு குறைகூறுகிறார். பணத்தின் உள்தன்மை ரொக்கமாகக் கூடிய சொத்து என்பதுதான் அடிப்படை விளக்கமே தவிர, வட்டி வீதத்தின் உறுதியற்ற நிலையன்று என்கிறார் இக்சு. பணம் ரொக்கத் தன்மையுடையதாக இருப்பதால் எந்த நேரத்திலும் எந்த உபயோகத்திற்கும் ஈடுபடுத்தக்கூடும். இந்த ரொக்கத்தன்மை பத்திரங்களிடத்தும் ஆவணங்களிடத்தும் காணப்படுவதில்லை. பத்திரங்கள் உடையோர் அவைகளை ரொக்கமாக்கக் கருதினால் செலவும் இடையூறுகளும் இல்லாமல் செய்யமுடிவதில்லை. ஆகையால் இக்சு சொல்வதுபோல் வட்டிவீதம் ஒரு போதும் பூஜ்யத்திற்கு வருவது இல்லை. ஏனென்றால் மற்ற சொத்துக்களைவிடப் பணம் ரொக்கத் தன்மையை உடையதாக இருக்கிறது. பண அளிப்பும் தேவையும் பண்ட அளிப்பையும் தேவையையும்விட வேறானது. பண்டத்தின் தேவைக்கு மேல் ஏற்படுகிற அளிப்பு பூஜ்யத்திற்குக்கொண்டு வந்துவிடும். பணத்தின் அளிப்பு தேவைக்கு மேல் ஏற்பட்டால் வட்டிவிகிதத்தைப் பூஜ்யத்திற்குக் கொண்டுவராது. காரணம் பணம் ரொக்க நிலையுடையதும் எந்த நேரத்திலும் பொருள்களையும் தொழில்களையும் வாங்கவல்லதும் ஆகும். ஆகையால் பணம் விரும்பப்படாமல் இருக்கப்போவதில்லை குறைந்த விகிதத்திலும் அதற்கு ஒரு விலை உண்டு. வட்டிவிகிதம் ஏன் பூஜ்யத்திற்கு இறங்காது? என்பதற்கு பேராசிரியர் இக்சு சொல்லும் காரணம் கீன்சு சொல்வதைவிடப் பொருத்தமானது என்று கூறலாம்.

கீன்சின் வட்டி ரொக்கவிருப்பக் கோட்பாட்டிற்கு மாற்றுக் கருத்து

கீன்சின் வட்டிக் கோட்பாடு முழுவதும் எதிர்ப்பற்ற ஒன்று அன்று என்று ஆன்சன் கூறுகிறார். கீன்சின் கோட்பாடு அவர் தொன்மைக் கோட்பாட்டில் காணும் அதே குறைபாடுகளை உடையதாக இருக்கிறது. முடிவு செய்ய இயலாத நிலையுடையதாக உள்ளது. மேலே எடுத்துக்காட்டிய வட்டிவிகிதம் ரொக்க விருப்பத்தினாலும் பண அளிப்பினாலும் நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் ரொக்கவிருப்பமே வருமான நிலையினால் நிர்ணயிக்கப்படுகிறது. வருமான நிலை தெரிந்தால்தான் ரொக்கவிருப்பம் தெரிந்துகொள்ள

முடியும். வருமான நிலையை நிர்ணயிக்க வட்டிவிகிதம் உதவுகிறது. தொன்மைக்கோட்பாட்டைப்போல் கீன்சின் கோட்பாடு குழப்பமுடையது என்று பேராசிரியர் ஆன்சன் கருதுகிறார். புதிய சம்பிரதாயத் தெளிவுரையும் கீன்சின் தெளிவுரையும் சேர்ந்து ஒரு போதிய வட்டிக் கோட்பாட்டை உருவாக்கிக் கொடுக்கின்றன என்று ஆன்சன் கூறுகிறார்.

பேராசிரியர் ஹென்றி ஆஸ்லிட் என்பவர் கீன்சின் வட்டிக் கோட்பாட்டில் கீழ்க்கண்ட காரணத்தைக் காட்டிக் குறை கூறுகிறார்.

முதலாவதாக, வட்டி விகிதத்தை உண்மைக்காரணிகள் நிர்ணயிக்கும் செல்வாக்கை மறுப்பதோ அல்லது ஒதுக்கிவிடுவதோ கீன்சின் வட்டிக் கோட்பாட்டிலுள்ள தவருன வாதம். மேலே விவரித்தபடி, வட்டி பணத்தின் நூதனக்காட்சி என்றும், உற்பத்தித்திறன், காலவிருப்பம் என்பன போன்ற உண்மைக்காரணிகள் வட்டி விகிதத்தில் செல்வாக்கு உள்ளன என்றும் கீன்சு நம்ப மறுக்கிறார். உண்மை யாதெனின் சுவீடன் நாட்டுப் பொருளாதாரப் பேராசிரியர் நட்விக்செல் சொன்னதுபோல, ஒரு முழுமையான வட்டிவிகிதக் கோட்பாட்டில் உண்மைக்காரணிகளும், பணக்காரணிகளும் இருப்பதை ஏற்றுக்கொண்டு சமரசம் செய்துகொள்ள வேண்டியதுதான். இக் கருத்தையொட்டிப் பார்த்தால் கீன்சின் வட்டிக் கோட்பாடு ஒரு தரப்பானது என்பதுபோல் காணப்படுகிறது. மேலும் பேராசிரியர் ஆஸ்லிட் கூறுவதுபோல, கீன்சின் கோட்பாடு தொன்மைக்கு முந்தியது; மெர்க்கண்டலிசம் போன்றது; மேலும் மிகவும் சாதாரணமானவனின் பொருளாதாரம் ஆகும்.

இரண்டாவதாக, வட்டிவிகிதம் ரொக்கவிருப்பத்தை விட்டுக் கொடுப்பதற்காக வெகுமானம் என்று விளக்கிக் கூறினல் தக்காளி விலைக்காகவும், வீட்டின் விலைக்காகவும் ரொக்கத்தைப் பிரிந்தான் என்பதைவிட உயர்ந்ததன்று. அதுவுமன்றி, முன்சேமிப்பு இல்லாமல் ரொக்கநிலையைப் பிரிவது முடியாது. வட்டிக்கு முதலீடு செய்வதற்கான நிதிகளை அடையச் சேமிப்பு அவசியமான ஒரு வழி. ஜேகப் வைனர் சொல்வதுபோல, சேமிப்பு இல்லாமல் ரொக்க நிலையற்ற சேமிப்புக்குக் கிடைக்கும் வருமானமே வட்டிவிகிதம் ஆகும்.

மூன்ருவதாக, கீன்சின் ரொக்கவிருப்பக் கோட்பாடு தெளிவாகத் தவறு என்று சொல்லப்படுகிறது. எந்த உண்மைகளை விளக்க முற்படுகிறதோ அவைகளுக்கு மாருன முறையில் செல்லுகின்றது. கீன்சு கோட்பாடு சரியென்ருல் பொருளாதார மந்தத்தின் போது வட்டிவிகிதம் மிக அதிகமாக இருக்கும். காரணம்—

அப்போது விலைகளின் வீழ்ச்சியினால் மக்களின் ரொக்கவிருப்பம் தீவிரமாக இருக்கும் ஆனால் பொருளாதார மந்தத்தின்போது தான் வட்டிவிகிதம் மிகக்குறைவாக இருக்கும். கீன்சின் வட்டி விகிதக் கோட்பாடு சரியென்றால் பொருளாதார வீக்கத்தின் உச்சத்தின்போது வட்டிவீதம் மிகக் குறைந்ததாக இருக்கும். காரணம்—எங்குப்பார்த்தாலும் நம்பிக்கை மிகுந்திருக்கும்போது மக்களின் ரொக்கவிருப்பம் மிகவும் பலவீனமாக இருக்கும். ஆனால் பொருளாதார வீக்கத்தின் உச்ச கட்டத்தில்தான் வட்டிவிகிதம் மிக உயர்ந்திருக்கும்.

நான்காவதாக, ரொக்கவிருப்பம் என்ற பதத்தின் உபயோகமே உபயோகமற்றதும் அனாவசியமானதுமாகக் கூறப்படுகிறது. அது வட்டிப் பிரச்சினையை அதிகக் குழப்பத்துக்கும், தெளிவின்மைக்கும் உள்ளாக்குகிறது. தெளிவின்மையைப் புலப்படுத்துவதோடு கீன்சின் கோட்பாடு முரண்பாடானதாகக் காட்டுகிறது. உதாரணமாக, ஒரு மனிதன் தன் நிதியைக் காலக் குறிவைப்புக்களாகவோ அல்லது குறுகிய காலக் கருவூல உண்டியலாகவோ வைத்திருந்தால் அவனுக்கு அவற்றின் பேரில் வட்டி கொடுக்கப்படுகிறது. ஆகையால் அவன் வட்டியையும் ரொக்கத்தையும் பெறுகிறான்.

மேலே குறிப்பிட்ட குறைபாடுகளைத் தவிர கீன்சின் வட்டிக் கோட்பாடு இன்னும் சில குறைபாடுகளை உடையதாக இருக்கிறது.

முதலாவதாக, கீன்சின் ரொக்கவிருப்பக் கோட்பாடு வட்டி விகிதத்திற்கு ஒரு குறுகிய விளக்கத்தைக் கொடுப்பதாகக் குறை கூறப்படுகிறது. ரொக்கநிலை விருப்பத்தை அது மூன்று நோக்கங்களோடு இணைக்கிறது. ரொக்கநிலை விருப்பமானது கீன்சு சொல்லுகிற மூன்று நோக்கங்களைத் தவிர, அவர் குறிப்பிடாத வேறு பல காரணிகளாலும் ஏற்படுகிறது என்று குறைகூறுவோர் சொல்லுகிறார்கள். இரண்டாவதாக, கீன்சு சொல்லுவது போல வட்டி ரொக்கநிலையை விட்டுக் கொடுப்பதற்காகக் கொடுக்கப்படும் வெகுமானம் அன்று. அதற்கு மாறாக வட்டி என்பது முதலின் உற்பத்தித் திறனுக்காக அதைக் கொடுப்பவனுக்குக் கொடுக்கப்படுகிறது. அதாவது வட்டி என்பது முதலின் உற்பத் தித்திறனுக்காகக் கொடுக்கப் படுவதேயாகும். மூன்றாவதாக, 'குவிப்பு' என்ற கருத்தை கீன்சின் வட்டிக்கோட்பாட்டில் நல்லமுறையில் விளக்கவில்லை என்று கூறப்படுகிறது. குவிப்பு மனச்சார்பை செல்வாக்கு உண்டாக்கும் காரணிகளையும், சமுதாயத்தில் சேமிப்புகளின் அளவையும் கீன்சு தெளிவாகக் கூறவில்லை. நான்காவதாக, வட்டிக் கோட்பாட்டைக் கீன்சு ஒரு படித்தான ரொக்கநிலை முறையாக

உருவாக்கிவிட்டார் என்று கூறப்படுகிறது. ரொக்கநிலை முறை ஒரு படித்தானதாக இல்லாமல் நடைமுறையில் பல்வேறு தரங்கள் இருக்கக்கூடும் என்பதைக் காண அவர் தவறிவிட்டார். இக்காலத்தில் வட்டி விகிதத்தில் காணப்படும் பல்வேறு முறைகள் ரொக்க நிலை விருப்பத்தில் காணப்படும் வேறுபாடுகளைத் தழுவியன என்பது நமக்குத் தெரியும். அன்றாட, வாராந்தர, 15 நாள் அல்லது ஒரு மாதகாலக் கடன்களின் மீது வட்டி விகிதம் வேறுபடுவது ரொக்கநிலை வேறுபடுவதினுல் என்று கொள்ளலாம். ஐந்தாவதாக, கீன்சின் வட்டிக்கோட்பாடு அளிப்பின் அடிப்படையில் நோக்கினுல் சிறு அளவே பயனுடையதென்று கீன்சின் விமரிசகர்கள் கருதுகிருர்கள். பண அளிப்பை அதிகப்படுத்தி எப்போதுமே வட்டிவிகிதத்தைக் குறைத்துவிட முடியாது. பண அளிப்பு அதிகமாகும்போது அதே விகிதத்தில் மக்கள் ரொக்கவிருப்பமும் அதிகமாஞல் வட்டிவிகிதம் மாருமலேயே இருந்துவிடும்.

கீன்சின் ரொக்கவிருப்பக் கோட்பாட்டின் முக்கியத்துவம்

இந்தக் கோட்பாட்டைக் கீன்சின் விமரிசகர்கள் குறைகூறினுலும்கூட, அது நவீனகாலப் பொருளாதாரக் கோட்பாட்டில் ஒரு முக்கிய இடத்தை வகித்து வருகிறது. முதலாவதாக, கீன்சின் ரொக்கவிருப்பக் கோட்பாடு வட்டியின் ஒரு பணவியல் கோட்பாடு. வட்டியை நிர்ணயிப்பதில் தொன்மைக் கோட்பாட்டின்படி ஒருவித இடமும் பணத்திற்குக் கொடுக்கப்படவில்லை.மாருக, மூலதனத்தின் சேமிப்பு, முதலீடு இவைகளுக்கே அது முக்கியத்துவம் கொடுத்திருந்தது. மூலதனம் என்ற சொல் பணம் என்ற பொருளில் பேசப்படாமல், பயன்தரும் நோக்கத்திற்காக உற்பத்தி செய்ய உதவும் அத்தனைச் சாதனங்களையும் குறிப்பதாகவே தொன்மைப் பொருளாதார வல்லுநர்கள் எண்ணினுர்கள். அதாவது தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் வட்டிவிகிதம் பணத்தின் தேவையினுலும் அளிப்பினுலும் நிர்ணயிக்கப்படுவதாக இல்லாமல், பொருள்கள், தொழில்கள், இவைகளின் தேவை அளிப்புக்களால் நிர்ணயிக்கப்படுவதாகக் கருதினுர்கள். அதனுல்தான் தொன்மைக்கோட்பாட்டை வட்டியின் உண்மைக்கோட்பாடாகச் சொல்லப்படுகிறது. ஆனுல் புதிய காலத்தில் எந்த ஒரு கோட்பாடும் பணத்திற்கு ஒரு நல்ல இடம் கொடுக்கவில்லையானுல், அந்தக் கோட்பாடு அவ்வளவு உகந்ததாகக் கருதமுடியாது. இக்காரணத்தினுல்தான் கீன்சின் கோட்பாடு தொன்மைக் கோட்பாட்டை வட்டியின் உண்மைக் கோட்பாடு என்ச் சொல்கிறது.

இரண்டாவதாக, வட்டியின் தொன்மைக் கோட்பாடு நிறைவுடை வேலைவாய்ப்பு என்ற ஒரு தப்பு எடுகோளைத் தழுவி இருந்தது. ஆனால் கீன்சின் கோட்பாடு ஒரு குறை நிறைவுடை வேலைவாய்ப்பு என்ற உண்மை எடுகோளைத் தழுவியதாக இருக்கிறது. ஒரு பொருளாதாரம் தானாகவே நிறைவுடை வேலைவாய்ப்பு நிலையை அடைகிறது என்ற தொன்மைக் கோட்பாட்டை கீன்சு குறைகூறியிருக்கிறார் என்பது மேலே காட்டப் பட்டிருக்கிறது. ஆகையால் அவர் தமது கோட்பாட்டைக் குறை நிறைவுடை வேலைவாய்ப்பு நிலை அடிப்படையில் அமைத்திருக்கிறார். இதை நிறைவுடை வேலைவாய்ப்புக்கும் குறை நிறைவுடை வேலைவாய்ப்புக்கும் உள்ள வேறுபாடு என்றுகூடச் சொல்லலாம் என்று டட்லி டில்லார்ட் கூறுகிறார்.

மூன்றாவதாக, பொருளாதார முறையில் பணத்தின் முக்கியப் பங்கை வற்புறுத்திக் கூறுவதன் மூலம், கீன்சின் வட்டி ரொக்க விருப்பக் கோட்பாடானது பணக்கோட்பாடு, உற்பத்தி, வேலை வாய்ப்புக் கோட்பாடு இவைகளை ஒருங்கிணைத்திருக்கிறது. பொருளாதாரக் கோட்பாட்டில் பழைய தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் பணத்திற்கு ஒரு முக்கிய இடத்தைக் கொடுக்கவில்லை. அவர்கள் பணத்தை ஒரு பரிவர்த்தனைச் சாதனமாகக் கருதினார்களே தவிர, உற்பத்தி, வேலைவாய்ப்பு இவைகளை நிர்ணயிப்பதில் அதிகப் பங்கு இருப்பதாக எண்ணவில்லை. ஆனால் கீன்சு உற்பத்தி வேலைவாய்ப்பு இவைகளை நிர்ணயிப்பதில் பணத்திற்கு ஒரு முக்கியப் பங்கு உண்டென்பதைத் தம்முடைய ரொக்கவிருப்பக் கோட்பாட்டின் மூலம் நிரூபித்துவிட்டார். பணம் பரிவர்த்தனை சாதனம் மட்டுமின்றி மதிப்பின் வைப்பாகவும் உள்ளது என்று எடுத்துக் கூறியுள்ளார். பணத்தின் தேவையைப் பணத்தை வைத்திருப்பதற்காகவே விரும்புவதாக கீன்சு கருதுகிறார். பணத் தேவை மாறுபட்டுக்கொண்டே யிருப்பதால் வட்டி விகிதத்தையும் மாற்றுகிறது. வட்டி விகிதத்தின் மாற்றம் முதலீட்டின் மொத்தத் தொகையை மாற்றுகிறது. முதலீட்டின் மொத்தத் தொகைதான் உற்பத்தி, வேலைவாய்ப்பு இவைகளை முக்கியமாக நிர்ணயிக்கின்றது. இம்மாதிரியாக, கீன்சின் வட்டிக்கோட்பாடு பணக்கோட்பாட்டிற்கும், உற்பத்தி, வேலைவாய்ப்பு இவைகளின் கோட்பாட்டிற்கும் இடையே ஓர் இணைப்பை ஏற்படுத்தியுள்ளது.

நான்காவதாக, ஓர் உயர் வேலைவாய்ப்பு நிலையைப் பராமரிப்பதற்குச் செம்மையான நிதி, வங்கி கைக்கோள்களின் முக்கியத்துவத்தை கீன்சின் ரொக்கவிருப்பக் கோட்பாடு வழங்கியுள்ளது. மேலே கூறியபடி வேலைவாய்ப்பின் அளவு முதலீட்டின் அள

வையே பெரும்பாலும் தழுவி நிற்கிறது. வட்டிவிகிதம் முன் கூறியதுபோல பணத்தேவை, அளிப்பைப் பொறுத்திருக்கிறது. ஆக உயர் வேலைவாய்ப்பு நிலையையடைய முதலீட்டின் அளவினை அதிகப்படுத்த வேண்டுமேயானால் பொருளாதார முறையின் பண அளிப்பை அதிகப்படுத்தி வட்டி விகிதத்தைக் குறைக்கவேண்டும். ஆகையால், பொருளாதார அமைப்பில் ஓர் உயர் வேலைவாய்ப்பு நிலையை அடைய வேண்டுமேயானால் மலிவான பணக் கைக்கோளை ஒரு சாதனமாகக் கொள்ளவேண்டும் என்பதை கீன்சு வலியுறுத்தியிருக்கிறார்.

ஐந்தாவதாக, கீன்சின் வட்டி ரொக்கவிருப்பக் கோட்பாடு, சேமிப்பு முதலீடு இரண்டிற்குமிடையே சமத்துவம் எப்படி ஏற்படுகிறதென்பதைத் தெளிவுபடச் சுட்டிக்காட்டுகிறது. தொன்மைக் கோட்பாட்டின்படி சேமிப்பு முதலீடு இவற்றின் சமத்துவமே வட்டி விகித நிலையில் ஏற்படும் மாறுதல்களினால் உண்டாக்கப்படுகிறது. அல்லது வட்டி விகிதம் சேமிப்பு முதலீட்டிற்கு இடையே சமச்சீர் நிலையை உண்டுபண்ணக்கூடிய சாதனமாக அமைகிறது. இதற்கு மாறாக, கீன்சின் ரொக்கவிருப்பக் கோட்பாடானது, சேமிப்பு முதலீட்டிற்கிடையே ஏற்படும் சமத்துவ வட்டிவிகிதத்தில் ஏற்படும் மாறுதல்களினால் இல்லை என்றும், வருமானங்களின் நிலையில் ஏற்படும் மாறுதல்களினாலேயே ஏற்படுகின்றது என்றும் எடுத்துக் காட்டுகிறது.

இறுதியாக, கீன்சின் வட்டி ரொக்கவிருப்பக் கோட்பாடு அவருடைய உற்பத்தி வேலைவாய்ப்புக் கோட்பாட்டை உறுதி செய்வதற்குத் தேவையாக இருக்கிறது. வட்டிவிகிதம் உற்பத்தி வேலைவாய்ப்புக்களை நிர்ணயிக்க எவ்வளவு முக்கியம் என்று நமக்குத் தெரியும். ஆகையால் உற்பத்தி வேலைவாய்ப்புக் கோட்பாடு ஒரு நிறைவான வட்டிக்கோட்பாடு இல்லையானால் தனித்தியங்க முடியாது. நிறைவானதும் முடிவு எடுக்க உதவுகிற முறையில் அமைந்தது மாகிய ஒரு வட்டிக்கோட்பாடு ரொக்கவிருப்ப எண்ணமில்லாமல் ஏற்படமுடியாது.

நாம் மேலே சொன்ன முக்கியமான மூன்று வட்டிக்கோட்பாடுகளை ஆராய்ந்தோம். எதுவுமே தனியாக எடுத்துக்கொண்டால் வட்டிக்குத் திருப்தியான ஒரு விளக்கத்தைக் கூற இயலாது. ஆகையினால் பேராசிரியர்கள் இன்சு, லெர்னர் போன்ற பொருளாதார இயலினர் இந்த மூன்று கோட்பாடுகளிலிருந்தும் முக்கிய மூலங்களை ஒன்று சேர்த்து ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கியிருக்கிறார்கள். இக்கோட்பாட்டின்படி (முடிவெடுக்கக்கூடியு

கோட்பாடு எனலாம்) வருமான நிலையோடுகூட வட்டிவிகிதம் கீழ்க்கண்டவைகளால் நிர்ணயிக்கப்படுகிறது.

1. முதலீட்டின் இறுதி நிலைத்திறன்
2. துய்ப்பின் நாட்டம்
3. ரொக்கவிருப்பப் பட்டியல்
4. மொத்தப் பணத்தின் பரிமாணம்

ரொக்கவிருப்பமும் வட்டி விகிதமும்

வட்டிவிகிதத்தை நிர்ணயிக்கின்ற ரொக்கவிருப்பத்தைச் சற்று ஆழ்ந்து கவனிப்போம். ரொக்கவிருப்பமானது மூன்று நோக்கங்களைத் தழுவியது. அவையாவன ;-

1. உடனடிச் செலவு நோக்கம்
2. எச்சரிக்கை நோக்கம்
3. ஊகலாப நோக்கம்

என்பன.

மேலே சொன்ன மூன்று நோக்கங்களுக்காகச் சமுதாயத்தில் தனித்தனியே நாம் பணம் வைத்திருக்கிறோம் என்ற எண்ணம் தோன்றக்கூடும். அது தவறு. எல்லாவற்றிற்கும் சேர்த்துச் சமுதாயத்தில் சேர்த்து வைப்பது ஒரே ஓர் இனந்தான். அதிலிருந்துதான் மூன்று விதச் செலவினங்களுக்கும் பணம் செலவிடப் படுகிறது. ஒவ்வொரு நோக்கத்திற்குமென்று ஒரு கட்டாயத் தெளிவான பிரிவு கிடையாது. ஊகலாபத்திற்காக என்று நினைத்து வைத்திருக்கும் ரொக்கம் உடனடிச் செலவுக்குப் பயன் பட்டவும், அதேபோல ஒன்றுக்கு வைத்திருப்பது மற்றொன்றுக்குப் பயன்படவும் கூடும்.

1. உடனடிச் செலவு நோக்கம்:- உடனடிச் செலவு நோக்கை இருவகையாகப் பிரிக்கலாம். (அ) நுகர்வோர் உடனடிச்செலவு நோக்கம். (ஆ) வணிகர்களின் உடனடிச் செலவு நோக்கம். சாதாரண நுகர்வோர் எப்போதுமே தம்வசம் கொஞ்சம் ரொக்கத்தை இரு காரணங்களுக்காக வைத்திருக்க வேண்டியிருக்கிறது. முதலாவதாக அன்றாடத் தேவையான உணவுப்பொருள்கள், துணிமணிகள் இன்னும் மற்ற பொருள்களை வாங்கவேண்டியிருக்கிறது. இரண்டாவதாக, அவருக்கு ஊதியம் குறித்த காலத்திலேதான்— வாரமோ, மாதமிருமுறையோ அல்லது ஒரு முறையோதான்—

கிடைக்கிறது. அன்றடம் கூலி கிடைத்தால் ரொக்கத்தைக் கட்டாயமாகச் சேர்த்துவைத்திருக்கத் தேவையில்லை. ஒவ்வொருவரும் கையில் ரொக்கமாக வைத்திருக்கவேண்டிய பணத்தின் அளவு 1. சொந்த வருமானத்தின் அளவு 2. சம்பளம் கிடைக்கும் நாட்களுக்கிடையே உள்ள இடைவெளி. என்னும் இரண்டு காரணிகளைப் பொறுத்திருக்கிறது. ஒருவருக்கு வருமானம் அதிகம் இருந்தால் கையில் அதிக ரொக்கத்தை வைத்திருக்கவேண்டியிருக்கும். ஏனென்றல் அவருடைய செலவு வருமானத்திற்குத் தகுந்தாற்போல இருக்கும். சம்பளம் வாங்கும் நாட்களுக்கிடையே நீண்டகாலம் இருப்பின் அப்போதும் கையில் ரொக்கம் அதிகம் வைத்துக்கொள்ளவேண்டும். மாதக்கூலி பெறுகிற ஒருவர் வாரக்கூலி பெறுகிற ஒருவரைவிட அதிக ரொக்கம் கையில் வைத்திருக்கவேண்டியிருக்கும். எனினும் இதில் முக்கியக் காரணி ஒருவரின் சொந்த வருமானத்தின் அளவேயாகும். சமுதாயம் வள்முள்ளதாக இருக்குமேயானல் அன்றடத் தேவைக்கு வேண்டிய பணத்தேவை அதிகமாக இருக்கும்.

சாதாரண நுகர்வோரைப் போலவே, ஒரு வணிகரும் அன்றடச் செலவைச் சமாளிப்பதற்காகக் கையில் ரொக்கம் வைத்திருக்க வேண்டும். அவர் தம் சிப்பந்திகளுக்குக் கூலியும் சம்பளமும் கொடுக்கவேண்டும்; மூலப்பொருள்கள் வாங்கவேண்டும்; போக்குவரத்துச் செலவும் இன்னும் இதர செலவுகளும் செய்யவேண்டும். ஒரு நிறுவனமோ அல்லது ஒரு வணிகரோ வைத்திருக்கவேண்டிய ரொக்கத்தின் அளவு அந்த நிறுவனத்தின் விற்பனைப்புரள்வையோ, அந்த வணிகரையோ பொறுத்ததாகிறது. ஒரு சமுதாயத்தை எடுத்துக்கொண்டால் அதன் ரொக்க இருப்புத்தேவை வணிகச்செயலின் நிலையைப் பொறுத்திருக்கிறது. வணிகப்பெருக்கம் அதிகமாக இருந்தால் ரொக்கக் கையிருப்பின் அளவும் அதிகமாக இருக்கவேண்டும். ஒரு பொருளின் விலை, கூலி இவற்றின் நிலையில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப ரொக்கக் கையிருப்பின் அளவும் உடனடிச்செலவு நோக்கத்திற்காக மாறுகிறது. சுருங்கக்கூறின் உடனடிச்செலவு நோக்கத்தை நிறைவு செய்வதற்காக வைத்திருக்கும் ரொக்க இருப்பின் அளவு, வருமானங்களின் பொது நிலையைபு பொறுத்திருக்கிறது. (நுகர்வோருக்குச் சொந்த வருமானமும் வணிக நிறுவனங்களுக்கு வணிக வருமானங்களும்).

எச்சரிக்கை நோக்கம் (ஊக்கி)

எச்சரிக்கை நோக்கினடிப்படையாகத் தோன்றும் பணத்தேவையை இரண்டு தலைப்புக்களில் ஆராயலாம். அவை (1) தனிப்-

பட்டோரின் எச்சரிக்கை நோக்கம் (2) வணிகரின் எச்சரிக்கை நோக்கம் என்பன. தனிப்பட்டவர்களும் பின் தேவைக்காக அல்லது எதிர்பாராத செலவுக்காகப் பணத்தை வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள். வேலையில் இல்லாமல் இருக்கலாம்; உடல்நலக் குறைவு ஏற்படலாம்; அல்லது விபத்துக்குள்ளாகலாம். இவ்விதத் துன்பங்களுக்காக ரொக்கப் பணத்தை வைத்துக்கொள்ளும் அவசியம் ஏற்படுகிறது. எச்சரிக்கை நோக்கத்தைப் பூர்த்தி செய்யத் தனி மனிதன் வைத்திருக்கவேண்டிய பணத்தின் அளவு அவனைப் பொறுத்தும், அவன் வாழும் அரசியல் பொருளாதாரச் சூழ்நிலைகளைப் பொறுத்தும் இருக்கிறது. அவன் அச்சம் அடைந்திருந்தால் அதிகப் பணத்தைக் கையிருப்பாகக் கொள்வான். தன்னம்பிக்கை உடையவனாக இருந்தால் குறைந்த தொகையையே வைத்துக்கொள்வான். எனவே எச்சரிக்கை நோக்கை நிறைவு செய்ய வைத்திருக்கும் பணம் ஒருவருடைய வருமானத்திற்கு மாறா விகிதத்தை உடையதாக இருக்கும் என்று சொல்வதற்கில்லை.

வணிகனுங்கூட வியாபாரத்தில் சில எதிர்பாராத செலவுகளைச் சமாளிப்பதற்காக ரொக்கக் காப்பு நிதி வைத்திருக்கவேண்டியிருக்கிறது. எதிர்பாராத, விரைவில் இலாபம் ஏற்படக்கூடிய சில வாய்ப்புக்கள் எதிர்காலத்தில் ஏற்படலாம். அதற்குத் தயாராகக் கையிருப்புப் பணம் இல்லையானால் அவ் வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்ளமுடியாது. இழப்பு ஏற்பட்ட காரணத்தினால் வணிகனுக்கு யாரும் கடன் கொடுக்காமல் இருந்து விடலாம். அல்லது அங்காடியில் நல்ல முறையில் பத்திரங்கள் வேண்டிய பொழுது, பத்திரங்களை ரொக்கமாக மாற்ற வசதிகள் இல்லாமலிருக்கலாம். பத்திரங்களின் அங்காடி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தால் வணிகர்கள் தங்கள் பத்திரங்களின் இருப்பைக் கொடுத்துவிட்டு வேண்டிய ரொக்கத்தைப் பெற்றுக்கொள்ளலாம். அப்போது அதிக ரொக்கத்தைக் கையில் முன்கூட்டியே வைத்திருக்கத் தேவையில்லை. உடனடிச்செலவு நோக்கத்திற்காக ஒரு வணிகன் தன்னுடைய சொத்துக்களில் எந்த அளவுக்கு ரொக்கமாக வைத்திருக்க வேண்டுமென்பதை முன்கூட்டியே வெளிப்படுத்திவிட முடியாது. அது ஏராளமானதும் மிகச்சிக்கலானதுமான காரணிகளைத் தழுவியிருக்கிறது. ஆகையினால் ஒரு வணிகனுக்குத் தன் சொத்தில் எவ்வளவு பங்கை ரொக்கமாக வைத்துக்கொள்ள வேண்டுமென்பது மிகவும் கடினம். அது வணிகனுடைய நிதி பற்றிய கைக்கோளைப் பொறுத்திருக்கிறது. செம்மையானதா அல்லது ஊதாரிக்கொள்கையா என்பதைப் பொறுத்தது). மேலும் அது பத்திரமான தொழிலா அல்லது துன்பமிகுந்த தொழிலா என்பதையும் பொறுத்தது.

ஊக வாணிக நோக்கம்

மூன்றுவித நோக்கங்களில் ஊகவாணிக நோக்கு வட்டி விகிதத்தை நிர்ணயிப்பதில் அதிகமான பங்கேற்கிறது. ஊகவாணிக நோக்குக்கூட வட்டி விகிதத்தினுல் நிர்ணயிக்கப்படுகிறது—வட்டி விகிதத்தில் இப்போது அல்லது நடைமுறையில் ஏற்படுகிற மாறுதல்களினுல் அன்றி, வருங்காலத்தில் ஏற்படுகிற மாறுதல்களினுலேயே நிர்ணயிக்கப்படுகிறது. நாம் முதலில் ஊகவாணிக நோக்கின் உட்பொருளேயும், அந் நோக்கை நிறைவு செய்ய மக்கள் ஏன் பணத்தை வைத்துக்கொள்ள விரும்புகிருர்கள் என்பதையும் புரிந்து கொள்ள முற்படுவோம். ஊகவணிக நோக்கின் பொருள் பொதுமக்கள் ஊகவணிக இலாபங்களே எதிர்கால வட்டி மாற்றங்கள் மூலம் அடையக் கருதிப் பத்திரங்களே வாங்கி விற்பதற்காக ரொக்கம் வைத்திருப்பதைக் குறிக்கும். ஊகவணிக நோக்கு என்ருல் எதிர்காலத்தில் இலாபம் அடைவதை அங்காடியைவிட நல்லமுறையில் தெரிந்து வைத்திருப்பதேயாகும் என்று கீன்சு இலக்கணங் கூறியிருக்கிருர். எதிர்காலம் எப்போதுமே நிலேயற்றது. அதேபோலத்தான் எதிர்கால வட்டி விகிதமும் இருக்கிறது. வட்டியின் எதிர்கால மாறுதல்களே முன்கூட்டியே அறிவது மிகக் கடினம். வட்டி விகிதத்தின் எதிர்காலம் நிலேயற்றதாக இருப்பதாலேயே ஊகவணிக நோக்கிற்காகப் பணத்தேவை அதிகப்படுகிறது. எதிர்கால வட்டி விகிதத்தை முன்கூட்டியே அறிய முடிந்தால் ஊகவணிக நோக்கிற்காகப் பணத்தை அதிகம் வைத்திருக்கத் தேவையில்லே. எதிர்கால வட்டி விகிதம் நிலேயற்றதாக இல்லேயாளுல் ஊகவணிக நோக்கிற்காக ரொக்கவிருப்பத்திற்கு ஆதாரமே இருக்காது. இதனுல்தான் அசைவிலா எடுகோள்களின் அடிப்படையில், உருவான தொன்மைக்கோட்பாட்டில் ஊகவணிக நோக்கிற்கு இடமில்லே. காரணம் தொன்மைக்கோட்பாட்டில் நிலேயற்ற தன்மையின் அம்சங்களே அகற்றிவிட்டார்கள். எதிர்காலத்தைப் பற்றிய அறிவு நம்மிடமில்லே; பெறவும் முடியாது என்ற அடிப்படையில் ஊகவணிக நோக்கிற்கான ரொக்கவிருப்பைத் தொன்மைக் கோட்பாடு தள்ளிவிட்டது. இதனுல் வட்டிக் கோட்பாட்டிற்கான ஓர் அடித்தளம் அகன்று விட்டது. பொதுமக்கள் எதிர்கால வட்டி விகிதத்தின் போக்கைத் தாங்களாகவே ஒருவாறு முன்னதாகச் சிந்தனே செய்து அதற்கேற்ப ரொக்கக் காப்பை வேறுபடுத்திக் கொள்கிருர்கள். செல்வம் மிக்கோர் இன்னும் மூன்று மாதங்கள் கழித்து வட்டி விகிதம் உயரும் (அல்லது பத்திரங்களின் விலே விழும்) என்று நினேத்தால், அதிலிருந்து நலன்களேப் பெறுவதற்காக வேண்டிய அளவு ரொக்க இருப்பை வைத்திருக்க விரும்புவார்கள். இதுபோல, செல்வம் மிக்கோர்

வட்டி விகிதம் மூன்று மாதங்களுக்குப் பிறகு விழும் என்று எண்ணு வார்களேயானல் (பத்திரங்களின் விலை உயரும்), மூன்று மாதகாலம் தாமதிக்காமல் இப்பொழுதே தங்கள் ரொக்க இருப்பைப் பத்திரங் களில் குறைந்த விலைக்கே முதலீடு செய்துவிடுவார்கள். எனவே, ஊகவணிக நோக்கிற்குத் தேவையான ரொக்க இருப்பை நடப்பு விகிதத்தைவிட எதிர்கால வட்டிவிகித மாற்றங்களே நிர்ணயிக் கின்றன.

செல்வம் மிக்கோர் அனைவரும் வட்டி விகிதத்தின் எதிர்காலப் போக்கைப்பற்றி ஒரே கருத்துக்கொண்டவர்கள் என்று சொல்ல முடியாது. செல்வமிக்கோர் அனைவரும் எதிர்கால வட்டி விகிதத் தின் போக்கைப் பற்றி ஒரே விதமான கருத்தைக் கொண்டவர்களா யிருந்தால், வட்டிவிகிதத்திலும் அல்லது பத்திரங்களின் விலையிலும் தீவிரமான ஏற்ற இறக்கங்கள் ஏற்படும். பொதுவாகச் செல்வம் மிக்கவர்களை அல்லது முதலீடு செய்வோர்களைப் பங்கு மாற்றுச் சந்தையில் காளைகள் என்றும், கரடிகள் என்றும் பிரித்திருக்கிறார் கள். வட்டி விகிதமும், பத்திரங்களின் விலைகளும் ஏன் நேர் மாறான திசைகளில் செல்லுகின்றன? ஓர் உதாரணம்—ரூ. 100 முக மதிப்புள்ள ஒரு பத்திரம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 சதவீதம் மாறா வட்டியைக் கொடுப்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது சந்தை வட்டிவிகிதம் ரூ. 2 சதவிகிதத்திற்கு விழுந்தால் பத்திரங் களின் சந்தை மதிப்பு ரூ. 200க்கு உயரும். ஆக வட்டி விகிதம் விழுந்தால் பத்திரத்தின் சந்தை மதிப்பு உயரும். இதே போல, வட்டிவிகிதம் ரூ. 8க்கு உயர்ந்தால், பத்திரத்தின் சந்தை மதிப்பு ரூ. 50க்கு விழும். வட்டிவிகிதத்தில் உயர்வு ஏற்பட்டால் பத்திரத் தின் விலையில் தாழ்வு ஏற்படுகிறது. இதனுல்தான் வட்டி விகித மும், பத்திர விலைகளும் எதிர்த் திசைகளில் நகருகின்றன.

மேலே கூறியபடி ஊகவணிக நோக்கிற்காக வைத்திருக்கும் பணம், வட்டி விகிதத்திலும் பத்திர விலைகளிலும் ஏற்படும் மாற் றங்களினால் அடையக்கூடிய ஊகவணிக லாபங்களிடையே வைக் கப்படுகிறது. ஆகவே ஊகவணிக லாபத்திற்காக வைக்கும் இருப்புக்கள் வட்டிவிகித மாற்றங்களுக்கு உணர்ச்சியுள்ளதாக இருக் கின்றன. ஊகவணிக நோக்கத்திற்காகப் பணம் வைத்திருப்ப தென்பது வட்டி விகிதத்தினுலும், பத்திர விலைகளினுலும், ஏற்படும் மாற்றங்களினுல் இலாபமடைய மட்டுமில்லாமல், எதிர்காலத்தில் பண்டங்களின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களினுலும் இலாப மடையக் கருதியே என்றுகூடச் சொல்லலாம். பண்டங்களை வியாபா ரம் செய்வோர் அவற்றின் விலை எதிர்காலத்தில் உயரும் என்று நினைத்தால் அப்போதே பண்டங்களை வாங்கிப் பின்னுல் இலாபத்

திற்கு விற்பார்கள். பணத்தை முடக்கிவைக்கும் மனச்சார்போ அல்லது ரொக்க விருப்பமோ குறையும். மாறாக, பண்டங்களின் விலைகள் எதிர்காலத்தில் இறங்கும் என்று நினைத்தால் பண்டங்களை அப்பொழுதே விற்று, பின்னால் ஏற்படும் நட்டத்தைத் தவிர்க்க நினைப்பார்கள். பணத்தை முடக்கிவைக்கும் மனச்சார்போ அல்லது ரொக்க விருப்பமோ அதிகரிக்கும். இதுபோல், ஊகவணிக நோக்கிற்காக வைத்திருக்கும் பணம் பத்திரங்களை வாங்கவும் விற்கவும் மட்டுமல்லாமல் பண்டங்களை எதிர்காலச் சந்தைகளில் வாங்கவும் விற்கவும்கூட என்று சொல்லவேண்டும்.

ரொக்கவிருப்புக்காக ஏற்படும் பணத்தேவையை மூன்று நோக்குகளின் வாயிலாக விவாதித்தோம். ஆனால் பணத்தின் தேவை சமுதாயத்தில் குவித்தல் மனச்சார்பினால்கூட ஏற்படலாம். சில சமயங்களில் இந்தியாவில் கிராம மக்கள் செய்வதைப்போல், மக்கள் குவித்தலுக்காகவே பணத்தைக் குவிக்கின்றனர். இந்தியாவில் முன்பே குவித்த செல்வத்தை மேற்சொன்ன மூன்று நோக்கங்களைக் கொண்டும் கணக்கிடமுடியாது. ஆனால் பணக்குவிப்பு சமுதாயத்தின் ரொக்கவிருப்பு அதிகரிப்பினால் வட்டிவிகிதத்தில் என்ன விளைவு ஏற்படுகிறதோ அதே விளைவை ஏற்படுத்துகிறது. பணக்குவிப்பு அதிகரித்தால் ரொக்கவிருப்பம் அதிகரிப்பினால் ஏற்படுகிற வட்டிவிகிதம் அதிகரித்தல் போல, வட்டிவிகிதம் அதிகரிக்கும். குவிப்பு அதிகரித்தால் ஒரு நாட்டின் பொருளாதார அமைப்பில் பல இடையூறுகளான விளைவுகள் உண்டாகும்; வட்டிவிகிதத்தை உயர்த்தி அது முதலீட்டையும் முழுவேலைவாய்ப்பையும் தடைசெய்கிறது.

சுருங்கக்கூறின், ரொக்கவிருப்பை ட 1 என்றும் ட 2 என்றும் இரண்டாகப் பிரிக்கலாம் ட1 என்பது வட்டி விகிதத்தில் ஏற்படும் மாறுதல்களினால் பாதிக்கப்படுகிறது. ட 2 என்பது நடைமுறை வட்டிவிகிதத்தினால் அல்லாமல் வட்டிவிகிதத்தில் ஏற்படும் எதிர்கால மாறுதல்களினால் பாதிக்கப்படுகிறது.

பண அளிப்பும் வட்டிவிகிதமும்

இதுவரை வட்டிவிகிதத்தை ரொக்கவிருப்பம் எவ்வாறு நிர்ணயிக்கிறதென்பதை விவரமாக விவாதித்தோம். இப்பொழுது இரண்டாவது நிர்ணய காரணியைப் பார்ப்போம் . அதாவது ரொக்கவிருப்பைவிடப் பண அளிப்பு அரசாங்கக் கட்டுப்பாட்டிற்கு அதிகமாகக் கீழ்ப்படிகின்ற ஒன்று. அது ஒரு நாட்டிற்குள்ளடங்கியது. பணஅளிப்பைக் கட்டுப்படுத்துவதின் மூலம்

வட்டிவிகிதத்தைக் கட்டுப்படுத்தி, பணவியல் அதிகாரிகள் நிறைவுடை வேலைவாய்ப்பை உயர்த்துவதற்குச் செல்வாக்குச் செலுத்த முடியும் (Influence). இதனால்தான் பண அளிப்பு வேலைவாய்ப்புக் கைக்கோளின் ஒரு கருவியாக முக்கியத்தைப் பெற்றிருக்கிறது. இக்கருவி வேலைவாய்ப்புக் கைக்கோளில் அவ்வளவு முக்கியமானதாதலின் இக்கருவியைத் தவறான வழியில் பயன்படுத்தக்கூடாதென்பது தானாகவே புலப்படுகிறது. இக்கருவியை ஒருசிறிது தவறாகப் பயன்படுத்தினால் பொருளாதார அமைப்பில் மிக மோசமான விளைவுகளை ஏற்படுத்திவிடும். பண அளிப்பு மிக அதிகமாகவோ அல்லது மிகக் குறைவாகவோ இல்லாமல் பணவியல் அதிகாரிகள் மிக இன்றியமையாததாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். மிக அதிகமான பண அளிப்பு பணவீக்கத்தை உண்டுபண்ணும்; மிகக் குறைந்த பண அளிப்பு பண வாட்டத்தையும் வேலையின்மையையும் ஏற்படுத்திவிடும். ஆகையால் பணவியல் அதிகாரிகள் மிகவும் கவனமாக இருந்து பொருளாதார அமைப்பில் அவ்வப்போது ஏற்படும் தேவைக்குத் தகுந்தாற் போன்று பண அளிப்பைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும்.

பண அளிப்பின் பொருள்—(பண அளிப்பென்றால் என்ன?) முதலின் பண அளிப்பு என்பதின் பொருளை ஆராய்வோம். அது எதைக்குறிக்கிறது? ஒரு நாட்டின் பண அளிப்பின் மூன்று கூறுகள் உள்ளன என்பது தெரிந்ததே. அவை தாள்பணம், உலோகப்பணம், வங்கி வைப்புக்கள் என்பன. முதலிரண்டு கூறுகளும் மையவங்கியின் முழுக்கட்டுப்பாட்டிலுள்ளன (மையவங்கி பொதுவாக அரசுடைமையானது). அரசாங்கம் மையவங்கிமூலம் பண அளிப்பின் மேல் முழுக்கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது. மைய வங்கியினால் அச்சிடப்படும் தாள் பணத்தை முறைப்படுத்தப் பலவித முறைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அது ஒரு தொழில் நுட்பச்சிக்கலாகையால் இங்கு விளக்கப்படவில்லை. வேலைவாய்ப்புக் கைக்கோள் சம்பந்தப்பட்ட வரையில் நோட்டு வெளியிடும் முறையில் வேண்டிய அளவு நெகிழ்ச்சி இருப்பது மிகவும் விரும்பத்தக்கது. நோட்டு வெளியிடும் முறையில் இணக்கமின்மை காணப்பட்டால் அது வளர்வீத வேலைவாய்ப்புக் கைக்கோளைக் கடைப்பிடிப்பதில் இடர்ப்பாட்டை விளைவிக்கும். நோட்டு வெளியீட்டுக்கும் உலோக ஒதுக்கிவைப்புக்கும் இடையே வைத்திருக்க வேண்டிய ஒரு தொடர்பை ஏற்படுத்துவதில் பணவியல் அதிகாரிகளின் விவேகத்தைச் சட்டக் கடமையினால் கட்டுப்படுத்தினால், நிறைவுடை வேலைவாய்ப்பை அதிகப்படுத்த பண அளிப்பானது ஒரு சக்தியுள்ள காரணியாக இராது. நோட்டு வெளியீட்டுக்கும் உலோகக்காப்பு இருப்புக்கும் இடையே ஒரு நிலையான தொடர்

இல்லையானல் அதுவே ஒரு நல்ல பணவாக்கக் கைக்கோளாகும் இதையொட்டியே பல நாடுகள் தற்காலத்தில் மையவங்கிகள் நோட்டு வெளியிடும் முறையைக் கட்டுப்படுத்துவதில்லை. நோட்டு வெளியீட்டு முறையில் ஒரு வளைந்து கொடுக்கும் தன்மை இருந்தால் ஒரு பொருளாதார அமைப்பை மையவங்கி சரிப்படுத்திக் கொள்ளமுடியும்.

5. வட்டிவிகிதங்கள்: குறுகிய, நீண்ட காலங்கள்

இதுவரையில் ஒரே ஒரு வித வட்டிவிகிதம் இருப்பதாகவே கொண்டோம். ஆனால் உண்மை அதுவன்று. நீண்டகால, குறுகிய கால வட்டி என்று பலவித வட்டிவிகிதங்கள் இருக்கின்றன. பல விதத் தனிப்பட்ட வட்டிவிகிதத்தைக் கொண்ட விதவிதமான கடன்கள் இருக்கின்றன. இவ்வித வட்டிவிகிதங்களுக்கிடையே உள்ள உறவு மிகச் சிக்கலான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றது. பலவிதமான வட்டிவிகிதங்கள் ஏற்படக் காரணங்கள் யாவை? நீண்டகால, குறுகியகால வட்டிவிகிதங்கள் இரண்டும் ஒரே திசையை நோக்கி நகர்கின்றனவா? இரண்டிலும் ஏற்படுகின்ற மாற்றங்களின் தராதர அளவு என்ன? இவ்விரண்டு விகிதங்களும் தகுந்த அசல் வட்டிவிகிதத்தைக் கூட்டி அதிலிருந்து கிடைக்கப்பெற்ற ஒரே ஒரு காரணி என்று கருதமுடியுமா? அல்லது இரண்டு விகிதங்களும் தனியான, மாற்றமுள்ள இனங்களா? இவைகளுக்கு விடைகாணும் இருசாரார்களுள், அதாவது, புள்ளி இயல் ஆய்வாளர்களுக்கும், கோட்பாட்டின் அடிப்படையில் ஆய்கின்றவர்களுக்கும் இடையே கருத்து ஒற்றுமை எப்போதுமே இருப்பதில்லை.

முதலில், வட்டிவிகிதங்களில் வேறுபாடுகள் இருப்பதற்குக் காரணங்களை ஆய்வோம். வட்டிவிகிதங்கள் பலவாகக்காணப்படுவதற்கு இரு காரணங்கள் உண்டு. (1) சில கடன்களில் பலவித ஆபத்துக்கள் வேறு சில கடன்களில் இருப்பதைவிட அதிகம் இருப்பதாகச் சந்தையில் கருதப்படுகிறது. (2) கடன்கள் பல வகையான காலத்திற்குக் கொடுக்கப்படுகின்றன.

(1) ஒரு குறித்த வட்டி விகிதத்திற்குச் சிறிது காலத்திற்குப் பணத்தைக் கடனாகக் கொடுத்தால் கடன் வாங்கியவன் கொடுத்தவனுக்குத் திருப்பிக் கொடுக்காத ஓர் ஆபத்தை விளைவிக்கலாம்.

இவ்வாபத்து கடன் வாங்குகின்றவர்களைப் பொறுத்து மாறுகிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி ஒரு சிலருக்கு நிச்சயம் உண்டு. அவர்களுடைய நாணயத்தன்மை மிக உயர்வாக இருக்கிறது. மாருக ஒரு சிலருடைய நாணயத் தன்மை மிகக் குறைவாக இருக்கிறது. நாணயம் குறைவாக உள்ள கடன் வாங்குபவர் வட்டி விகிதம் அதிகமாகவும், நாணயமிக்கவர் வட்டி விகிதம் குறைவாகவும் கொடுக்க நேரிடுகிறது. இதே காரணத்திற்காகவே, காப்புச் செய்யப்படாத கடன்களுக்குக் காப்பு செய்யப்பட்ட கடன்களைவிட அதிக வட்டி கொடுக்க வேண்டியிருக்கிறது.

கடன்கள் கொடுக்கப்படும்போது வேறு ஒருவிதமான ஆபத்தும் இருக்கிறது. கடனைத் திருப்பிக் கொடுக்கும்போது பணத்தின் மதிப்பு மிகுதியாகக் குறைந்து விடலாம். இக்குறைவை முன்கூட்டியே ஊகிக்கக்கூடியவன் அதற்கு ஈடுகட்டும் முறையில் அதிக வட்டியைக் கேட்டு வாங்கிவிடுகிருன்.

வட்டிவிகித வேறுபாடு வாங்கும் கடனை உபயோகப்படுத்துகிற காரணத்தைப் பொறுத்திருக்கிறது. ஓர் ஊதாரி ஆடம்பர நுகர்வுக்காகக் கடன் வாங்கிஞல் அக்கடனுக்கு அதிக வட்டி விதிக்கப்படும். ஏனென்ருல் அவன் திருப்பிக்கொடுக்கமாட்டான் என்கிற ஆபத்து இருக்கிறது.

அரசியல், சமுதாயக் காப்பைப் பொறுத்துக்கூட வட்டிவிகிதம் அமையும். அரசியல் கொந்தளிப்பும், காப்பின்மைகளும் வட்டி விகிதத்தை மிகவும் உயர்த்திவிடும்.

இம்மாதிரியான காரணிகள் வட்டிவிகிதத்தை உயர்த்திவிடுகின்றன. இக்காரணிகள் தனி ஒருவர் கடன் வாங்கும்போது மட்டுமல்லாமல், அரசோ, நகராண்மைக் கழகங்களோ கடன்வாங்கிஞலுங்கூட காணப்படுகின்றன. சில அரசுகளின் நாணயத்தன்மை மற்றவைகளின் நாணயத்தன்மையைவிட உயர்ந்ததாக இருக்கிறது. காப்புறுதிக் கட்டணம் உள்ள எந்தவித ஆபத்தும் வட்டி விகிதத்தை உயர்த்துவதில்லை. இக்காப்புறுதிக் கட்டணந்தான் வட்டிவிகித வேறுபாட்டிற்குக் காரணம்.

வட்டி விகித வேறுபாட்டுக்குக் காரணம் கடன் கொடுக்கப்படும் காலவரம்பு. ஒரு பக்கத்தில் கேட்டவுடன் திருப்பிக் கொடுக்கக்கூடிய கடன்கள் உள்ளன. இவைதாம் தனிமனிதர்கள் வங்கியில் வைத்திருக்கும் நடப்புவைப்புக்கள். இவைகளுக்கு வட்டியே கிடையாது. இப்பணத்தைப் போட்டிருப்போர் சிலவேளைகளில் வங்கிகளுக்கு ஏற்படும் செலவிற்காக ஏதேனும் கொடுக்கவேண்டி

யிருக்கும். வேறு ஒரு பக்கத்தில் திருப்பிக்கொடுக்க வேண்டாத கடன்களும் உண்டு. இவ்விரண்டிற்குமிடையில் கடன்கள் பல கால அளவைக்கு ஒரு நாளைக்கு, ஒரு வாரத்திற்கு, 50, 100 ஆண்டுகளுக்குக்—கொடுக்கப்படுகின்றன. கடன்கள் கொடுக்கப் படும் கால அளவுக்குத் தகுந்தாற்போல வகைப்படுத்தப்படுகின் றன. ஓர் ஆண்டுக்குக் குறைவாக எவ்வளவு காலத்திற்குக் கொடுந்தாலும் அது குறுகிய காலக்கடன் என்று சொல்லப்படுகிறது மாற்ற உண்டியல்களும் கருவூல உண்டியல்களும் இவைகளுக்கு எடுத்துக்காட்டுக்கள். இக் குறுகிய காலக் கடனுக்கு விதிக்கப்படும் வட்டிவிகிதத்திற்குப் பெயர் குறுகிய கால வட்டி. ஓர் ஆண்டுக்கு மேல் 5 அல்லது 7 ஆண்டுகளுக்குக் கொடுக்கப்படும் கடன்களுக்கு நடுத்தரக்கால அல்லது இடைக்காலக்கடன் என்று பெயர். இதற் கும் மேலான காலத்திற்குக் கொடுக்கப்படும் கடனுக்கு நீண்ட காலக்கடன் என்று பெயர். 'கான்சல்' கடன் பத்திரங்களும், 'டிபஞ்சர்"களும் இவற்றிற்கு எடுத்துக்காட்டுக்கள். நீண்டகால-குறுகிய காலக் கடன்களுக்குள்ள வேறுபாடுகளை வைத்துக்கொண் டால் நமக்குப் போதும். இங்கிலாந்தைப் போன்ற நாடு களுக்கு இவ்விருவிதக் கடன்களுக்குமிடையேயுள்ள வேறுபாடு மிக முக்கியமானது. அந்த நாட்டில் இருவிதப் பணச்சந்தைகள் உள் ளன. முதலாவது பணச்சந்தை (உண்மை) குறுகிய காலக்கட னைக் கொடுப்பது. மற்றையது நீண்டகாலக் கடன் கொடுப்பதில் தேர்ச்சி பெற்று விளங்குகிற மூலதனச்சந்தை. நீண்டகாலக் கடன்களுக்குள் இன்றும் ஒரு சிக்கல் இருக்கிறது. நீண்டகாலக் கடன்கள் நிரந்தரமானவைகளாக இருக்கலாம். அவை திருப்பித் தரமாட்டா. 'கான்சல்' கடன் பத்திரங்கள் இவ்வகைக்கு எடுத் துக்காட்டுக்கள். சில கடன்கள் ஒரு குறித்த காலத்திற்குப் பிறகு திருப்பிக் கொடுக்கப்படக் கூடியவையாக இருக்கலாம். இன்றும் சில கடன்களை வாங்குகிறவர் குறித்த காலத்திற்குப் பிறகு வேண்டுமானால் கொடுக்கலாம், கொடுக்காமலும் இருக்கலாம்.

பொதுவாக, நீண்டகாலக் கடன்களின் மீதான வட்டி விகிதம் குறுகிய காலக்கடன்களின் மீது இருப்பதைவிட அதிகமாகவே இருக்கிறது. இது பல காரணங்களினால் ஏற்படுகிறது. நீண்ட காலக்கடன் ஒருவன் கொடுக்கும்போது அவனுக்குப் பலவித ஆபத்துக்கள் நேரிடுகின்றன. அவையாவன; கடன் திரும்ப வரா மல் போய்விடுவது, சொத்தின் சந்தை மதிப்புக் குறைவது- அதி லும் கெடுவுக்கு முன்னாலேயே விற்க விரும்பும்போது சொத்தின் மூலதன மதிப்பு கூட, வட்டி விகிதம் உயர்வதால், குறைகிறது. அதாவது, நீண்ட காலக்கடன் ரொக்கத் தன்மையைக் குறைவாக உடையதாயிருக்கிறது. ஆகையால் நீண்ட காலக்கடன் கொடுப்

போர் உயர்வட்டிவிகிதத்தைக் கேட்கிருர்கள். இவ்விதம் கேட்பதற்கு நியாயம் உண்டு. குறுகிய காலக்கடன் குறைந்த ரொக்க விருப்பத்தை உடையதாக இருக்கிறது. பொதுவாக, இருவிதக் கடன்களும் சாதாரண சமயங்களில் ரொக்கத்தன்மை வாய்ந்தன. நெருக்கடிக் காலத்தில் இரண்டிற்கும் ரொக்கத் தன்மை அற்று விடுகிறது. குறுகிய காலக்கடனுக்குக் கொடுக்கப்படும் வட்டிவிகிதம் ரொக்க விருப்பத்தை விட்டுக்கொடுப்பதற்காக ஈடுசெய்யக் கொடுக்கப்படும் தொகை என்று கூறலாம்.

எதிர்கால நிலைகள் நிரந்தரமாக இருக்குமென்று முதலீடு செய்வோருக்கு நம்பிக்கை இருந்தால் நீண்டகால வட்டிவிகிதம் குறுகிய கால வட்டி விகிதத்தைவிடக் குறைவாக இருக்கலாம். குறுகிய காலக் கடன்களில் அடிக்கடி ஈடுபட்டுச் செலவிடுவதையும் இன்னல்களடைவதையும் அவர்கள் விரும்பமாட்டார்கள். அப்படியானல், நீண்டகால முதலீடு விரும்பத்தக்கதாகவும் நீண்டகால வட்டிவிகிதம் குறுகியகால வட்டி விகிதத்தைவிடக் குறைவாகவும் இருக்கும். ஆனல் இச்சூழ்நிலை நிலையற்ற தற்காலத்தில் ஏற்பட இயலாது.

நீண்டகால விகிதங்களைவிடக் குறுகியகால வட்டி விகிதங்கள் காலப்போக்கில் மிக அதிகமாக ஏற்றத்தாழ்வுடையனவாக இருக்கின்றன. இதற்குக் காரணம் வட்டிவிகிதங்களில் ஏற்படும் மாற்றங்கள் குறுகிய காலக்கடன் சந்தையினின்று தோன்றுவதே ஆகும். மேலும், பொதுமக்களுடைய ரொக்க விருப்பத்தில் மாறுதல்கள் பல காரணங்களினல் ஏற்றத்தாழ்வடைகிறது. (பொருளாதார) மந்த காலத்திலும் மறுமலர்ச்சியின் முற்பகுதியிலும் குறுகிய கால விகிதம் குறைவாக இருக்கிறது; ஏனென்ருல் பேரத்திற்கோ அல்லது இலாபத்திற்கோ வங்கிக்குத் தேவைப்படும் கடன்களும் அதிகப் பற்றும் குறைவாக இருப்பதினல் என்று சொல்லலாம். பொருளாதார வீக்கத்தின் உயர்நிலையில் நிதிக்கு ஏராளத் தேவை ஏற்படுவதால் குறுகியகால வட்டிவிகிதங்களின் ஏற்றத்தாழ்வுகள், பணத்தின் அளிப்பைக் காட்டிலும் தேவைகள் ஏற்படுகிற ஏற்றத்தாழ்வுகளின் நேரிடையான முடிவாகக்கூறலாம். குறுகிய காலக் கடன்களுடைய தேவை முழுவதும், தொழிலதிபர்களிடமிருந்தும், வணிகர்களிடமிருந்தும், அரசிடமிருந்தும் முக்கியமாக வருகிறது.

குறுகிய கால வட்டி விகிதங்கள் முழுவதும் கிளை வங்கிகளின் ஒத்துழைப்புடன் மத்திய வங்கியாலேயே நிர்ணயிக்கப்படுகின்றன என்பது மிக முக்கியமாகக் கவனிக்கவேண்டியதாகும். மத்திய

வங்கி முறை முழுவதுமாகச் செயல்படுகின்ற நாடுகளில் குறுகிய காலவட்டி விகிதங்கள் எல்லாம் மத்திய வட்டிவிகிதத்தைப் பின்பற்றி நகருகின்றன. மத்திய வட்டி விகிதமாவது நல்ல வாணிக உண்டியல்களைக் கழிவு செய்வதையே குறிக்கும். மத்திய வங்கி எளிதில் குறுகிய கால வட்டிவிகிதங்களைத் தீர்மானிக்கலாம். கடன்களுக்குத் தேவை மிக அதிகமாக உயரும்போதுங்கூட, பண அளிப்பை அதிகப்படுத்தி வட்டிவிகிதத்தை மத்திய வங்கி குறைவாக்கலாம். தேவைக்குத் தக்கபடி பண அளிப்பை மத்தியவங்கி சில கட்டுத்திட்டங்களுக் குட்பட்டு அதிகப்படுத்தலாம்.

நீண்டகாலக் கடன்களுக்குத் தேவை பல வழிகளிலிருந்து தோன்றுகிறது. மிக அதிகமான தேவை தொழில் நிறுவனங்களிலிருந்து வருகிறது. நிறுவனங்கள் ஏராளமான மூலதனத்தைப் பங்குகளை வெளியிடுவதின் மூலம் எழுப்பினுலுங்கூட, அவை நீண்டகாலத்திற்கு நிரந்தரமான வட்டியுடைய பத்திரங்களை டிபெஞ்சர்கள் அல்லது பத்திரங்கள்-வெளியிட்டு மூலதனம் சேகரிக்கின்றன. முதலீடு செய்வோரின் பலவித விருப்பத்திற்கிணங்கப் பலவகைப்பட்ட பத்திரங்கள் வெளியிடப்படுகின்றன. பண முதலீடு செய்வோர் தங்கள் பணத்தைப் பங்குச் சீட்டுகளில் முடக்க விரும்புவதில்லை. ஆனுல் தயங்காமல் பத்திரங்களை வாங்குகிருர்கள். அவர்கள் மாறி மாறி வரும் வருமாணத்தை விட, நிரந்தரமான ரொக்க வருமானத்தை, விரும்புகிருர்கள். இன்னும் முதலீடு செய்வோரில் பலர் வேறு விதமாக நடந்துகொள்கிருர்கள். அவர்கள் பத்திரங்களைவிடப் பங்குகளை அதிகம் விரும்புகிருர்கள். நீண்ட காலக் கடன்கள் தேவைப்படும் இடங்கள் அரசும், நகராண்மைக் கழகங்களுமாகும். இக்காலத்தில் இவை இரண்டும் மிக அதிக அளவில் கடன் வாங்குகின்றன. தளவாடங்களுக்கும், பொதுப்பணிகளுக்கும் அரசு கடன்வாங்குவது ஏராளம் என்று குறிப்பிடலாம். இன்றும் நீண்டகாலக்கடன், நுகர்வோர் விரும்பும் வீட்டு வசதிக்கும், கார் வாங்கவும், வானொலிப் பெட்டிக்காகவுமான நீண்டகால நுகர்வுப் பொருள்களை அடைய விரும்புவதால் ஏற்படுகிறது. இம்மாதிரியான தேவைக்கான கடன்கள் மிகவும் அதிகமாகின்றன.

நீண்ட காலக் கடன்களின் அளிப்பு பல வழிகளிலிருந்து வருகிறது. முதலாவதாக தனிஒருவருடைய சேமிப்பிலிருந்து கிடைக்கிறது. இரண்டாவதாக மிகப் பெரிய அளவிலும் வங்கிகள் கொடுக்கின்ற கடன்களாகும். இவ்வளிப்புக்களைத் தவிர, கூட்டுப் பங்குக் கம்பெனிகள் இலாப ஈவின் ஒரு பகுதியை விநியோகிக்காமலிருப்பதின் மூலம் அதிகமான சேமிப்பு கிடைக்கிறது. காப்புறுதிக் கழகங்களும் கடன் அளிப்பில் பங்கு கொள்கின்றன.

குறுகிய கால வட்டிவிகிதத்தை மத்திய வங்கி முழுவதும் கட்டுப்படுத்துவதைப்போல, நீண்டகால வட்டிவிகிதத்தைச் செய்வதில்லை. நீண்டகால வட்டி விகிதம், முதலீட்டிலிருந்து கிடைக்கக் கூடிய வருமானமானது, நம்பிக்கையினுலும், எதிர்பார்ப்பினுலும், அவரவர் விருப்பு வெறுப்பினுலும், மக்கள் தொகை மாற்றங்களினுலும், கண்டுபிடிப்புக்களினுலும் ஏற்படுகின்ற வேறுபாடுகளினுல் உண்டாகும் மாற்றங்களைப் பொறுத்து இருக்கின்றது, இச்சூழ் நிலையில் மத்திய வங்கியின் கைக்கோள் (Policy) முக்கியமான ஒரு காரணியாகும் (Factor). ஆனுல் நீண்டகால விகிதத்தைக் கட்டுப்படுத்த மத்திய வங்கிக்குக் கீழ்க்கண்ட காரணங்களினுல் முழுவதுமாக இயலவில்லை.

1. சட்டரீதியாகவும் வழக்கமாகவும் கையாளப்படும் சில முறைகள் நிதித்துறையினரை நீண்டகாலக் கடன்களைப் பராமரிப்பதைப் பாதிக்கின்றன. வங்கிகள் தங்கள் சொத்துக்களை ரொக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். நோட்டு வெளியீடு, கடன் வழங்குதல் முதலியவைகளை விரிவாக்கும் அதிகாரம் சட்டத்திற்குட்பட்டதாக இருக்கவேண்டும்.

2. நிதி அதிகாரிகள் ஏற்படுத்துகிற வட்டி விகிதம் நிரந்தரமானது என்பதில் பொதுமக்கள் நம்பிக்கையிழக்கலாம். அவர்கள் நிதி அதிகாரிகள் ஏற்படுத்திய ஒரு குறித்த விகிதம் முன்னேடித் திட்டமாகக் கருதலாம். மற்றும், பொதுமக்கள் தாங்கள் நினைக்கின்ற வட்டி விகிதத்தினின்றும் வட்டிவிகிதம் குறைந்தால் அது உகந்ததன்று என்று கருதக்கூடும். அதனுல் கீன்ஸ் என்பார் வட்டிவிகிதத்தை ஒரு வழக்கமான் ஒரு கட்சி என்று நினைக்கிருர். இப்படி இக்காரணங்களுக்காகப் பொதுமக்கள் நம்பிக்கையை இழப்பார்களேயானுல், அவர்களின் ரொக்க விருப்பம் அதிகரிக்கிறது. எவ்வளவு பணம் அதிகரித்தாலும் அதெல்லாம் ரொக்க விருப்பைப் பூர்த்தி செய்வதில் ஈடுபடுத்தப்படும்.

3. நிதி அதிகாரிகள் வட்டிவிகிதத்தை ஓர் அளவுக்கு மேல் அதாவது $1\frac{1}{2}$ அல்லது 2 சதவீதத்திற்கு மேல் குறைக்க முடியாது; அதற்குக் காரணம் வங்கிச் செலவும், ஆபத்துக்காப்புக் கட்டணச் செலவும் ஆகும்.

மத்திய வங்கி நீண்டகால வட்டிவிகிதத்தை முழுவதும் கட்டுப்படுத்த வேண்டுமானுல் சில சட்டதிட்டங்கள் தளர்த்தப்பட வேண்டும். வங்கி தானுகவே தீவிரமாகவும் அஞ்சாமலும் குறுகிய காலக் கடன்களையே கவனித்துக்கொண்டிருக்காமல், பலகாலங்களில்

முதிர்கின்ற (முடிகின்ற) நீண்டகாலக் கடன்களைக் கொடுக்க முன் வரவேண்டும்.

நீண்ட காலக் கடன்களில் முக்கியமாக இருவகைகள் உண்டு. ஒருவகை, அரசு பெறும் கடன்களாகும். மற்றொருவகை, நகராண்மைக்கழகங்களும் தொழில் நிறுவனங்களும் வாங்கும் கடன்களாகும். கான்சல், கடன் பத்திரங்கள் போன்ற நீண்டகால அரசுக் கடன்களில் முதலீடு செய்வதுதான் நீண்டகால முதலீட்டிலேயே பாதுகாப்பானது. இதில் பணம் திரும்பப் பெறமுடியாது என்ற அபாயமே இல்லை. ஆகையால்தான் அரசுப் பத்திரங்களின் வட்டி விகிதம் நீண்டகால வட்டிவிகிதமாகக் கருதப்படுகிறது. மற்றவர்கள் வாங்கும் நீண்டகாலக் கடன்களின் நிபந்தனைகளும் (terms) இந்த வட்டிவிகிதத்தைப் பொறுத்திருக்கிறது. நகராண்மைக் கழகங்கள் வாங்கும் கடன்களுக்கு வட்டிவிகிதங்கள் வழக்கமாக அரசு வாங்கும் கடன்களின் வட்டி விகிதங்களைவிட அதிகமாகத்தான் தீர்மானிக்கப்படுகிறது. தொழில் நிறுவனங்கள் வாங்கும் கடன்களுக்கு இன்னும் அதிகமான வட்டி தீர்மானிக்கப்படுகிறது. அந்த அதிக வட்டியின் அளவு, முதலோ வட்டியோ, அல்லது இரண்டுமோ வராவிட்டால் நஷ்டமாகும் தொகைக்குச் சரிக்கட்டும் தொகைக்கு ஈடுசெய்யுமளவுக்குச் சமமாக இருக்கும். வழக்கமாக இந்த விகிதம் (Gilt edged) பத்திரங்களின் விகிதத்தைவிட ஒன்று அல்லது இரண்டு சதவீதம் அதிகமிருக்கும். இம்மாதிரியான நீண்டகால வட்டிக்கட்டமைப்பில் (Gilt edged) பத்திரங்களின் வட்டிவிகிதம் ஒரு முக்கிய இடத்தை வகிக்கிறது. ஆகையால் இந்த வட்டி விகிதத்தை எந்தெந்தக் காரணிகள் நிர்ணயிக்கின்றன என்று ஆராய்தல் வேண்டும். இந்த விகிதம் கீழ்க்கண்ட ஒவ்வொரு காரணியாலும் அல்லது எல்லாக் காரணிகளாலும் செல்வாக்குச் (influence) செலுத்தப்படுகிறது.

1. நிதிச்சந்தை வணிக வங்கிகளிடமிருந்து கடன் வாங்கும் குறுகிய கால வட்டிவிகிதம்.
2. வங்கிகள் அரசுப் பத்திரங்களை வாங்குவதும் விற்பதும்.
3. அரசின் கடன் தீர்க்கு மாற்றலில் மக்கள் கொண்டுள்ள நம்பிக்கை.
4. தொழில் நிறுவனங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் இலாபம்.
5. பொதுமக்களின் ரொக்க விருப்பநிலை.

பொதுவாக, நீண்ட கால வட்டிவிகிதமும் குறுகிய கால வட்டி விகிதமும் இணைந்தே செல்லுகின்றன. இதற்கு ஒரு முக்கிய காரணம், நீண்டகாலக் கடனும் குறுகிய காலக்கடனும் முதலீட்டின் மாற்று வடிவங்களாகும் (Alternative forms). பத்திரங்களுக்கும், உண்டியல்களுக்கும் சக்திவாய்ந்த சந்தை இருப்பதால் தராதர நிலையிலும், தராதர அசைவிலும் நீண்ட-குறுகிய கால விகிதங்களுக்குள் நெருங்கிய இணைப்பு இருக்கிறது. பண்ட மாற்றுச் சந்தையிருப்பதினுல் நிதிகளை நீண்டகால மூலதனச் சந்தைக்குச் செலுத்த ஏதுவாகிறது. ஏனென்ருல், முதலீடு செய்வோர் தங்கள் நீண்ட காலப் பத்திரங்களை பண்டமாற்றுச் சந்தையில் விற்று ரொக்கம் பெறலாம். ஆகையால் நீண்டகால, குறுகிய காலச் சந்தைகளிடையே நிதிகளில் இடப் பெயர்ச்சி ஏற்படுகிறது. குறுகிய கால வட்டிவிகிதம் உயருமேயாஞல் முதலீடு செய்வோர் தங்கள் நீண்ட காலப் பத்திரங்களை விற்றுவிட்டுக் குறுகிய காலப் பத்திரங்களில் முதலீடு செய்யலாம். இது நீண்டகாலப் பத்திரங்களில் விலைகளைக் குறைப்பதால் நீண்டகால வட்டி விகிதத்தை உயர்த்துகிறது. குறுகிய காலவட்டி விகிதம் உயர்ந்தால் குறுகியகால முன் பணத்தை நிறுவனங்களும் மற்றவர்களும் வங்கியிலிருந்து வாங்குவதைத் தடுக்கிறது. ஆகையால் அவர்கள் பத்திரங்களை விற்கிருர்கள்; அல்லது நீண்டகாலக் கடன்களை வாங்குகிருர்கள். இது நீண்டகால வட்டி விகிதத்தை உயர்த்துகிறது. இது போல, கடன் வாங்குவோர்களுக்கும் கூட நீண்ட, குறுகிய காலக்கடன்கள் பணம் பெறும் இரு மாற்றுவழிகளாகின்றன.

நீண்ட, குறுகிய கால வட்டி விகிதங்கள் ஒன்ருக நகருகின்றன என்று சொன்ஞல், எது எதைப் பாதிக்கிறது என்ற விந்தையான பிரச்சினை எழுகிறது. இவை ஒன்றை ஒன்று பாதிக்கின்றனவா! அல்லது பொதுவான காரணங்கள் இவ்விரண்டு வட்டி விகிதங்களையும் பாதிக்கின்றனவா ? உண்மையில் எல்லாக் காரணிகளும் வேலை செய்யக் காண்கின்ரேம்.

நீண்ட கால வட்டி குறைவாஞல் தொழிலதிபர்களும், வியாபாரிகளும், குறுகியகால முன் பணத்திற்கு அதிக வட்டி கொடுப்பதைவிட்டு நீண்ட காலக்கடனை வாங்குகிருர்கள். மேலும் கையிலுள்ள இருப்புப் பணத்தை வங்கியில் போட்டு இலாபம் பெறுகிருர்கள்.

இப்பொழுது வங்கிகளில் முன் பணத்திற்குத் தேவை குறைவதால் வங்கிகளின் வருமானம் குறைகிறது. மேலும் வங்கிகளிலுள்ள வைப்புக்களுக்கு வட்டி அதிகம் கொடுக்க வேண்டி வருகிறது. மத்திய வங்கி உயர்ந்த விகிதத்தை ஏற்படுத்திஞலன்றி

வங்கிகள் தங்கள் முன் பணத்தின் மீதும், வைப்புக்கள் மீதும் வட்டி விகிதத்தைக் குறைக்கின்றன. நீண்ட காலக் கடனுக்குப் பதிலாகக் குறுகிய காலக் கடன் வாங்குவது அல்லது மறுதலையாகச் (Vice-versa) செய்தல் மிக அதிகமாகப் பரவியிருக்கக் காண்கிறோம்.

நீண்டகால, குறுகிய கால விகிதங்களைப் பாதிக்கக் கூடிய பொதுக் காரணங்கள் பல உள. போரும், போர்வரும் என்ற அச்சமும் இருவித வட்டி விகிதங்களையும் அடிக்கடி உயர்த்துகின்றன. வர்த்தகம் பெருகி நடக்கும் காலத்தில் செயற்படு முதலும் நிரந்தர முதலும் அதிகம் தேவைப்படுகிறது. இது இருவித வட்டி விகிதங்களையும் உயர்த்திவிடுகிறது. மறுபடியும், மந்த காலத்தில் செயல்படு முதலின் தேவை குறைவதால் அத்துடன் குறுகிய கால விகிதமும் குறைகிறது. சீர் கெட்ட வரவு-செலவுத் திட்டத்தினால் அரசாங்கமும், வீழ்ந்து போன தொழில் நிறுவனங்களும், நீண்ட காலக் கடன் காரர்களும் ஆகிய துயரத்தில் துவண்டோரிடமிருந்து கடன் தேவை ஏற்பட்ட போதிலும், நீண்ட காலவட்டிவிகிதம் சரிந்து விடுகிறது. குறுகிய கால முதலீட்டில் போடப்பட்ட நிதிகளும் நொடிந்து போய் (Liquidated) நீண்ட காலச் சந்தைக்கு மாற்றப்படுகின்றன. ஆகையால் நீண்ட கால நிதிகளின் அளிப்பு, தேவைக்கு மேல் அதிகப்பட்டு அதனால் நீண்ட கால வட்டியும் வீழ்ச்சியடைகிறது.

நீண்ட கால, குறுகிய கால விகிதங்கள் ஒன்றாய் மாறுவதனால் பொருளாதாரத் துறையினர். பலர் குறுகிய கால விகிதத்தின் மீது வங்கி முறையின் மூலம் செல்வாக்கைச் செலுத்தி நீண்டகால விகிதத்தைக் கட்டுப் படுத்தலாம் என்று கருத்துத் தெரிவிக்கின்றார்கள். அவர்களுள் 'கீன்ஸ்' என்பாரும் ஒருவராவர். குறுகிய கால வட்டி விகிதத்தில் ஏற்படும் மாறுதல்கள் ரொக்கப் பொருள்களில் முதலீடு செய்வதைப் பெரிதும் பாதிக்கின்றன என்ற 'ஆட்ரி' (Hawtery) யின் கூற்றை 'கீன்ஸ்' ஏற்றுக்கொள்ளவில்லை. குறுகிய காலவட்டிவிகிதத்தில் ஏற்படும் மாறுதல்கள் நீண்டகால விகிதத்தின் மீது செல்வாக்கைச் செலுத்தி முதலீட்டுச் செலவைப் பாதிக்கின்றன. 'மீட்' (Meade) போன்ற பொருளாதாரத் துறையினர், குறுகிய காலவிகிதத்தில் ஏற்படும் மாறுதல்கள் நீண்டகால விகிதத்தை ஒரு சிறிதே பாதிக்கின்றன என்றும், நீண்ட கால விகிதம் சந்தையிலுள்ள 'கரடி'த் தன்மையயும் 'எருது'த் தன்மையையும் பொறுத்தே இருக்கிறதென்றும், குறுகியகால விகிதத்தை அவ்வளவாகப் பொறுத்ததில்லை என்றும் கூறுகின்றனர். இதுவே உண்மையுமாகும். மத்திய வங்கி வெளிச்சந்தை நடவடிக்கையின் மூலமாகப் பத்திரங்களின் சந்தையில் வாங்கியும் விற்றும் நீண்ட

காலவட்டி விகிதத்தைக் கட்டுப் படுத்தலாம். அரசாங்கமும் ஒத்துழைத்தால் மத்திய வங்கியின் கட்டுப்பாடு மிக்க பயனுடைய தாக இருக்கும். நீண்டகால வட்டி விகிதத்தை மத்திய வங்கி உயர்த்த நினைப்பதாக வைத்துக் கொள்வோம். அதற்கு மைய வங்கி பத்திரங்களை விற்க வேண்டும். எல்லா இருப்பையும் விற்றும் கூட, பத்திரங்களின் விலைகளைக் குறைக்க முடியவில்லையானால் அர சாங்கத்தின் உத்தரவாதத்தின் பேரில் வங்கியே பத்திரங்களை வெளியிட வேண்டும்.

நீண்டகால வட்டி விகிதம் பெரும்பாலும் வெகு நாட்களுக்கு உயர்நிலையிலேயே இருக்கக் காண்கின்றோம். பல நூற்றாண்டு களாக பாபிலோனியாவில் வட்டிவிகிதம் 20% ஆக இருந்தது. எகிப்தில் முறையான வட்டி மாதத்திற்கு 2% ஆக இருந்தது. சோலன் (Solan) காலத்திய கிரேக்க நாட்டில் வட்டி 16% ஆக இருந்தது. இடைக்காலத்தில் யூதர்கள் 40% விதித்தார்கள். ஆனால் வங்கி முறை வளர்ச்சியடைந்த பிறகு வட்டிவிகிதம் மிகுதியாகக் குறைந்துவிட்டது.

இதுவரையில் கால அளவைப் பொறுத்து வட்டி விகிதம் மாறுவதைப் பார்த்தோம். இனி வட்டி விகிதம் வைப்புக்களுக்கும் கடன்களுக்கும் தகுந்தவாறு எவ்வாறு மாறுகிறது என்று கவனிப் போம். வங்கிகள் தாம் கொடுக்கின்ற கடன்களுக்கு, வாங்குகின்ற வைப்புக்களுக்குக் கொடுக்கின்ற வட்டி விகிதத்தைவிட அதிகமாக விதிக்கின்றன. வட்டி விகிதத்தில் இந்த வேறுபாடு ஏற்படக் காரணம், வங்கிச் செலவும், வங்கிச் சொந்தக்காரர்களுக்கு இலாபப் பங்கு கொடுக்க வேண்டியிருப்பதும் ஆகும். இவ்விரு விகிதங்களுக்கு மிடையே உள்ள வேறுபாட்டின் இறுதிநிலை வங்கியின் முற்றுரிமை யைப் பொறுத்திருக்கிறது.

தொழில் துணிவோருக்கு வைப்புக்களின் வட்டி விகிதத்தை விடக் கடன்களின் மீது விதிக்கும் வட்டி விகிதமே முக்கியமானது. காரணம் அவர்கள் கடன் வாங்கித் தொழில் நடத்துவதேயாகும்.

வட்டியின் பொதுக் கோட்பாட்டை ஆராய்வதிலிருந்து அதில் அடங்கிய சிக்கல் மிகுந்த சில குணங்கள் தெரிகின்றன. எந்த ஒரு நேரத்திலும் ஒரே ஒரு வட்டி விகிதம் இருப்பதில்லை. வளர்ச்சி மிகுந்து தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில், வங்கி முறை மேலோங்கியிருப்பதால் வட்டி விகிதங்கள் குறைவாக இருக்கின் றன. வங்கிகள் நிதிகளின் தேக்கமாக அமைகின்றன. எல்லா வற்றைக் காட்டிலும் வங்கிகள் பணத்தைப் பராமரிப்பதோடில்லா

மல் உற்பத்தி செய்பவைகளாயுமிருக்கின்றன. வங்கி வசதிகள் பெருகினுல் கடன் வாங்குவது எளிதாகும். அதற்கு வட்டியும் குறையும், வங்கி முறை பண அளிப்பைக் கட்டுப்படுத்துவதன் மூலம் வட்டி விகிதங்களைக் குறைக்கும். எந்த ஒரு நாட்டில் மத்திய வங்கி முறை மிக நன்ருகப் பரவியிருக்கிறதோ அங்கெல்லாம் வட்டி விகிதம் கட்டுப்படுத்தப்படுகிறது. இங்கிலாந்தில் மத்திய வங்கி முறை மிக நன்ருகப் பரவியிருப்பதால் வட்டி விகிதத்தை அமெரிக்காவிலிருப்பதைவிட நல்ல முறையில் கட்டுப்படுத்த முடிகிறது. வங்கி முறை இங்கிலாந்தில் சட்டங்களினுல் இறுக்கப்படாமல் வளைந்து கொடுத்து வேலை செய்கிறது.

இந்தியாவைப் போன்ற பெரிய துணைக்கண்டத்தில், விவசாயம் முக்கியத்துவம் பெற்றிருப்பதாலும், வங்கி முறை வளம் பெருததாலும் வட்டி விகிதம் அதிகமாக இருப்பதோடல்லாமல் வட்டி விகிதங்களில் ஒரு விதமான குழப்பமும் காணப்படுகிறது. வங்கி வசதிகள் பெருகாததனுல் உள்ளூர் 'லேவாதேவிக்காரர்'கள் வரம்பு மீறி வட்டி வாங்குகிருர்கள். இந்தியாவில் பணச் சந்தை ஒன்றிணைக்க முடியாதவாறு பல பிரிவுகளாக இயங்கக் காண்கிரேம். ஆகையால் பலவித வட்டி விகிதங்களுக்கிடையே ஓர் ஒற்றுமை இல்லை. வங்கி வீதம் (Bank Rate) மற்ற வீதங்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இயங்க முடியவில்லை.

6. வட்டி விதமும் விலை நிலையும்

புதுமைப் பொருளியற் கோட்பாட்டில் வட்டி வீதம், விலை நிலைகளிடையே உள்ள உறவினைப்போன்று, அதிகமான கருத்து வேற்றுமையுடைய கருத்து வேறு ஒன்றும் இல்லை என்றே கூறலாம். இக்கருத்தும் பொருளாதார ஆராய்ச்சிக்கு மட்டுமின்றிப் பொருளாதாரக் கொள்கைகளை மேற்கொள்வதற்கும் முக்கியமானவொன்றாக இருந்து வருகின்றது. கோட்பாட்டு அளவில், இக்கருத்தின் முக்கியத்துவம் மதிப்புக் கோட்பாட்டிற்கும் பணவியல் கோட்பாட்டிற்கும் இடையே உள்ள பிளவை ஒருங்கிணைக்கும் பாலமாக அமைந்துள்ளது. பொருளியல் நிபுணர்களிடையே பொருளாதாரக் கொள்கையின் முடிவான நிலை, அந்நிலையை அடைவதற்கான வழி, ஆகியவற்றில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன. பெரும்பான்மையான, பொருளாதார நிபுணர்களின் கருத்து என்னவெனில், சிக்கலும் குழப்பங்களும் நிறைந்த வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்துவதன் மூலம், விலைகளின் போக்கினை ஈர்க்க இயலும்; உற்பத்தி, மற்றும் வேலைவாய்ப்புக்களைச் சமூகத்தின் தேவைக்கு ஏற்ப மாற்றிக்கொள்ள முடியும் என்பதேயாகும். எனவேதான், பெரும்பான்மையோரால் வட்டி வீதம், பொருளாதாரத் திட்டத்தின் கட்டுப்பாடு இயக்கியாகக் கருதப்படுகின்றது. பின்வரும் பக்கங்களில் நாம் வட்டி வீதம், விலைகள் ஆகியவற்றின் இடையே உள்ள தொடர்பைக் காண்போம்.

விலைகளின் பொதுவான நிலையில் ஏற்படும் மாற்றங்கள் பொருளியல் நிபுணர்களிடமும், வணிகத்துறையினரிடமும் மிகுந்த அக்கறையை ஏற்படுத்தியுள்ளன. அத்தகைய மாற்றங்கள் பொருளாதார அமைப்பினையே தாக்குதலுக் குள்ளாக்குகின்றன. வியாபார ஊகங்களை அவைகள் நிலைகுலையச் செய்வதுடன், சமூகத்தின் பல்வேறு துறையினருக்கும் சேதம் உண்டாக்குகின்றன. அம்மாற்றங்கள் கடன் கொடுத்தோர், கடன் பெற்றோர் உறவினைத் தாக்கி, ஒருவருக்கு நன்மையையும், மற்றொருவருக்கு அளவற்ற

துன்பத்தையும் அளிக்கின்றன. பொதுவாக விலைகளின் நிலைமாற்றம் பெரும்பான்மையோருக்கு, குறிப்பாக நிலையான பணவருமானம் உடையவர்களுக்கு எதிராகவே அமைகின்றது. அத்தகைய மக்களில், ஊதியம் பெறுவோர், கூலி பெறுவோர் மற்றும் ஒரு நிலையான வட்டி வீதத்தில் பணம் கடன் அளிக்கும் முதலாளிகள் ஆகியோரைக் குறிப்பிடலாம். ஆனால் தொழில் துறையினரும், வியாபாரிகளும் விலை ஏற்றத்தினால் பயனடைகின்றார்கள். விலைகளின் பொது நிலையில் வீழ்ச்சி, எதிரிடையான விளைவுகளைத் தருகின்றது. இவ்விலை மாற்றங்கள் சமூகத்தினால் முன்னமேயே நிச்சயமாக எதிர்பார்க்கப்பட்டிருக்குமேயானால், இப் பின்விளைவுகள் ஏற்பட்டிருக்கமாட்டா. அந்நிலையில் மக்கள் தங்களுடைய தற்காலத்திய பேரங்களைப் பின்னால் எற்படக்கூடிய பண்டங்களின் விலை ஏற்றங்களுக்கு ஏற்றவாறு சரிசெய்து கொண்டுவிடுவார்கள். எனவே பின்னர் ஏற்படக்கூடிய மாற்றங்கள் முன்னதாகவே சமன் செய்யப்பட்டு விடுகின்றன. முடிவிற்கு ஏற்றவாறு வழிகளை மாற்றித் திறம்பட அமைத்துக் கொள்ளுதல் இயலக்கூடிய ஒன்றேயாகும். ஆனால் உண்மையான உலக மாற்றங்கள் சுழற்சி உடையதாகவும், மேலும் எதிர்காலத்தைப் பொறுத்தவரையில் நிச்சயமற்ற தன்மை நிறைந்ததாகவும் உள்ளது. பொதுவிலை—நிலை மாற்றங்களினால் சமூகத்திற்குக் கிடைக்கும் இறுதிப்பயன்களையோ அல்லது ஊறுகளையோ அளப்பது அரிது. சில பொருளாதார நிபுணர்கள் விலை ஏற்றம் சமூகத்திற்குப் பொதுவாகப் பலன் அளிப்பதே என்று கருதுகிறார்கள். எவ்வாறெனின் உயர்ந்த விலைகள் தொழில்துறை நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றன. பல சமயங்களில் இவ்வகை ஊக்கங்கள் குறைந்த கால அளவுடையனவாகவே இருக்கின்றன. இதற்கு மாறாகப் பல பொருளாதார நிபுணர்கள் நிலையான விலை நிலைக்காகப் பரிந்துரைத்துள்ளார்கள்.

சமூக நீதி என்னும் நோக்கில் பார்க்கும்போது, விலைகளின் பொதுநிலை மாற்றங்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகக் காணப்பட்டாலும், எல்லா விலைகளும் பரவலாக, சமமாக, ஒரே சமயத்தில் மாறுபடுமாயின் அது பொருளாதாரக் கோட்பாட்டிற்கு இயைந்து வராததாகவே அமைந்துவிடும். உண்மையில் சில விலைகள் மற்றவைகளைவிடக் கூடுதலாகவே மாற்றம் அடைகின்றன. அதாவது தொடர்பான விலைகளில்கூட (Relative prices) முக்கியமான மாறுதல்கள் இருத்தல் கூடும். தொடர்பான விலைகளில் ஏற்படும் மாற்றங்கள் தொழில்துறை நடவடிக்கைகளை ஈர்க்கின்றன. எல்லாப் பொருள்களின் உற்பத்தியும் அதிகரிக்கின்றது; அல்லது குறைகின்றது. சில பொருள்களின் உற்பத்தி மற்ற பொருள்களின் உற்பத்தியைவிட அதிகமாகப் பாதிக்கப்படுகின்றது. மேலும் எப்

பொழுதும் ஒருவகைப் பண்டங்களின் விலைகளும், மற்ற வகைப் பண்டங்களின் விலைகளும் மாறும்போது ஒன்றுக்கொன்று சிறிது காலதாமதம் ஆகின்றது. அதே சமயம் பொதுவிலை நிலையினால் தான் தொடர்பு விலைகளும் மாற்றம் அடைகின்றன என்று கருதி விடக்கூடாது. தொடர்பு விலைகளின் மாற்றங்கள் பொது விலை நிலை மாற்றங்களைவிட மிகவும் முக்கியத்தும் வாய்ந்தவையாகும். மேலும் இரண்டுமே ஒரே காரணத்தால் நிகழ்வனவாக உள்ளன.

வட்டிவீத மாற்றங்களுக்கும், விலைகள் மாற்றங்களுக்கும் இடையே ஏதாவது காரணிய உறவு முறை (Functional Relationship) உள்ளதா என்றும் பார்க்கவேண்டும். மேலும் அவ்வாறு ஏதாவது உறவு இருந்தால் அவ்வுறவின் தன்மையைக் கண்டுபிடித்தல் வேண்டும். இதன் தொடர்பாக இரண்டு கருத்துடைய நோக்குகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. முதலாவதாக எவ்வளவு தூரம் வட்டிவீத மாற்றங்கள் விலைநிலையின் மேல் செயற்படும் (Active) தூண்டுதலை (influence) விளைவிக்கின்றன என்பதனைப் பார்க்கவேண்டும். இரண்டாவதாக, எவ்வாறு வட்டி வீதமே, விலைநிலை மாறுதல்களினால் தூண்டப்படுகின்றது என்பதனையும் பார்க்கவேண்டும். பேராசிரியர் அடார்கர் அவர்களுடைய சொல்லலங்காரத்தைப் பயன்படுத்துவோமேயானால், நாம் முன்னதைச் செயல்படு (Active) குணமாகவும், பின்னதைச் செயல்படாக் (Passive) குணமாகவும் வட்டி விலைகள் உறவில் கொள்ள வேண்டும். வட்டி—விலைகள் உறவில் இந்தச் செயல்படு—செயல்படாக் குணங்களிடையே உள்ள வேறுபாடுகளை அறிந்து கொள்வது தவறாகப் புரிந்து கொள்ளுதல், குழப்பம் ஆகியவைகளை ஒதுக்கிவிட உதவியாக இருக்கும்.

வட்டி வீதத்திற்கும், விலைகளின் நிலைக்கும் இடையே ஏதோ உறவு உள்ளது என்பது குறித்து எவ்வித ஐயமும் இல்லை. ஏனெனில் வட்டிவீதம் மற்றும் விலை இரண்டுமே அடிப்படையில் பண இயலின் கூறுபாடுகள். விலைகளின் நிலை மற்றும் வட்டிவீத நிலை ஆகிய இரண்டுமே பணத்தின் அளவுகளைக் கொண்டுதான் தீர்மானிக்கப்படுகிறது. எனவே பணத்தின் அளவு, வட்டி—விலைகள் சிக்கலில் ஒரு முக்கியமான பங்கு வகிக்கின்றது.

நாம் முன்னர்க் கண்டபடி, மெர்க்கண்டலிஸ்டுகள் தாம் முதன் முதலில் பணத்தின் அளவிற்கும் வட்டி வீதத்திற்கும் தொடர்பு உண்டு என்று கருதினர்கள். அவர்கள் நிலைநிறுத்திய எண்ணம் எதுவெனில் பணத்தின் அளவே வட்டி வீதத்தைத் தீர்மானிக்கின்றது என்பது. ஜான் லாக்கி என்பார் பணத்தின் அளவு எவ்வாறு

வட்டி வீதம் மற்றும் விலைகளின் நிலை ஆகியவற்றைப் பாதிக்கின்றது என்பதனை விளக்கினார். ஆனால் வட்டிவீத மாற்றங்கள் விலைநிலையின் மேல் நேரிடையான விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்று அவர் கருதினார்.

டேவிட் ஹ்யூமின் காலத்திலிருந்து வட்டி வீதம் பணத்தின் அளவினால் தீர்மானிக்கப்படுகின்றது என்ற கோட்பாடு நிச்சயமாக மறுத்தொதுக்கப்பட்டது. பணத்தின் அளவு மாறுபாடுகளினால், பொது விலைநிலையின் மேல் அல்லது பண மதிப்பின் மேலேயே ஏற்படும் விளைவுகள் குறித்துக் கவனம் செலுத்தப்பட்டது. பணத்திற்கும் பொதுவிலை நிலைக்கும் இடையே உள்ள உறவினை விளக்க பண அளவுக் கோட்பாடு (Quantity theory of money) விரித்துரைக்கப்பட்டது. இவ்வாறு சில பொருளாதார நிபுணர்கள் பணத்தின் மதிப்பின் மேல் அல்லது பண அளவு மாறுதல்களினால் பொதுவிலை நிலையின் மேல் ஏற்படும் விளைவுகளைக் குறித்து ஆராய்ந்தனர். பின்னும் சிலர் பணத்தின் விலை அல்லது பண அளவு மாறுதல்கள் வட்டி வீதத்தின் மேல் ஏற்படுத்தும் விளைவுகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தினார்கள்.

பணஅளவு அதிகரிப்பினால் பொதுவிலை நிலை உயர்ந்து, தொழில்துறை ஊக்குவிக்கப் படுகின்றது. என்பதனைப் பொருளியல் நிபுணர்கள் நெடுங்காலத்திற்கு முன்னமேயே அறிந்திருந்தனர். டேவிட் ஹ்யூமும் இதை அறிந்திருந்தார். ஆனால் அவர் பண அளவு உயர்வு தொழிலுக்கும் வணிகத்திற்கும் சாதகமாக அமைந்ததற்குக் காரணம், அதன் விளைவுகள் காலதாமதமாக நேர்வதே என்று கருதினார். பல்வேறுபட்ட பொருள்களின் விலைகளில் மாறுதல்கள் முறையே ஏற்படுகின்றன வென்றும், மேலும் எல்லாப் பொருள்களுக்கும் விலை உயர்ச்சி பொதுவாக அமையும் பொழுது, தொழில் துறைக்கு அளிக்கப்பட்ட தூண்டுதல் மறைந்து விடும் என்றும் அவர் கருதினார்.

வட்டி வீதத்திற்கும், பணத்தின் அளவிற்கும் இடையே உள்ள உறவு குறித்து முதன் முதல் தெளிவாகக் கூறிய பொருளாதார அறிஞர், ஹென்றி தார்ன்டான் (Henry thornton) என்பார் ஆவார். அவர் வங்கிகள் தாங்கள் கடனாகத்தரும் பணத்திற்குக் கேட்கும் வட்டி வீதம், அக்கடன் பணத்தைத் தொழிலிலோ வணிகத்திலோ பயன்படுத்திப் பெறும் இலாபத்தை விட, எவ்வளவு காலம் குறைவாக இருக்கின்றதோ, அதுவரை வங்கிகளின் பண அளவு தேவைக்கு ஓர் எல்லையே கிடையாது என்ற கருத்தினை முன்வைத்தார்.

ரிகார்டோவும் அந்தக் கருத்தினையே கொண்டிருந்தார். அவர் வங்கிகள் மனம்வைத்தால் பொதுவிலை நிலையைக் கட்டுப்படுத்த இயலும் என்று கருதினர். வங்கிகள், இயற்கையான வட்டி வீதத்திற்கு அல்லது இலாப வீதத்திற்குக் குறைவான வட்டி வீதத்தில் கடன் அளித்தால், பணத்தின் தேவை அதிகரிக்கும் என்றும், மேலும் வங்கிகள் இந்த அதிகரித்த தேவையைச் சமாளிக்க முடியும் என்றும் கருதினர். மேலும் பண அளவு அதிகரிப்பு உற்பத்தியை அதிகரிக்காது, விலைகளைத்தான் உயர்த்தும் என்றும் கருதினர். இதற்குக் காரணம் முழுவேலைவாய்ப்பு இருப்பதாக அவர் கருதியதே ஆகும். அவ்வாறு இருக்குங்கால், பண அளவின் ஒவ்வோர் அதிகரிப்பும் விலைகளைத்தான் உயர்த்துமேயன்றி, உற்பத்தியை விரிவுபடுத்தாது.

ஆயினும் லாக்கி (Locke), புல்லர்டன் (Fullarton), ஜே. எஸ். மில் ஆகிய பொருளியல் அறிஞர்கள் வேறுவிதமான கருத்துக்களைக் கொண்டிருந்தனர். பத்திரங்களின் மேல் கடன் அளிக்கும் வாயிலாகவே, வங்கிகள் நோட்டுகளை வெளியிடுகின்றன என்ற அனுமானத்தைக்கொண்டு வங்கிகள் விலைகளைத் தூண்ட இயலும் சக்தியினைப் பெறவில்லை என்ற கருத்தை அவர்கள் கொண்டிருந்தார்கள். பணத்தின் தேவை அளவானது வணிகத்தின் தேவை அளவை முற்றிலும் சார்ந்துள்ளது என்ற கருத்து தவறான தொன்றாகும். வங்கிகள் தாங்கள் அளிக்கும் கடன்களுக்கான கட்டுப்பாடுகள், வீதங்கள் ஆகியனவற்றை மாற்றியமைப்பதன் மூலம், நேரிடையாகவே, சுழற்சியில் உள்ள மொத்தப் பண அளவையும் மாற்றமுடியும்.

இது காறும் சுழற்சியில் உள்ள பணத்தின் அளவிற்கும், வட்டி வீதத்திற்கும் உள்ள உறவு, மற்றும் பணத்தின் அளவு எவ்வாறு பொது விலை நிலையைத் தூண்டுகிறது என்பனபோன்ற சிந்தனை ஓட்டங்களைக் கண்டோம். அடுத்து, பணத்தின் அளவு அதிகரிப்பு, நேரிடையாகவோ அல்லது வட்டி வீதத்தின் மூலமாகவோ பொருள்களின் உற்பத்தியின்மேல் குறிப்பாக மூலதனப் பொருள்களின் உற்பத்தியில் மேல் ஏற்படுத்தும் விளைவுகளைக் குறித்த முக்கியமான சிந்தனை வரிசைகளைப் பார்ப்போம்.

ராபர்ட் மால்தஸ் தான் இப்பிரச்சினை குறித்து விவாதித்த முதல் பொருளியல் அறிஞர் ஆவார். அவர் அதிகரித்த பணத்தின் அளவு தொழில் துணிவோரிடம் சேர்ந்தால் அவர்கள் அதை எவ்வாறு மூலதனப் பொருள்களின் மேல் முதலீடு செய்வார்கள் என்பதையும், எவ்வாறு நாட்டின் உற்பத்தி அதிகரிக்கும் வரை

பொருள்களின் அதிகரித்த தேவை பொருள்களின் விலைகளை உயர்த்தும் என்பதையும், விளக்கியுள்ளார். தொழில் துறையினரும், வணிகர்களும் அதிக இலாபம் பெறுவதனால் சமூகத்தில் ஒரு பகுதி அநீதியினால் அல்லலுறும் என்றும் விளக்கியுள்ளார்.

இதுகாறும் ஆராய்ந்த இரண்டு வகையான எண்ணவரிசைகளையும் ஒருமுகப்படுத்த முன் வந்த பொருளியல் அறிஞர் நட்விக்சல் என்பவராவார். வட்டி, விலைகள் பிரச்சினை குறித்து விரிவாக விவாதிக்க முன்வந்த முதல் பொருளாதார அறிஞரும் அவரே ஆவார். மதிப்பு, பணம் குறித்த கோட்பாடுகளை ஒருமுகப் படுத்துவதிலும் முன்னரே முயற்சி செய்தார். தற்போது வட்டி, விலைகள் இடையே உள்ள உறவுபற்றிய அவர் கோட்பாட்டை விரிவாகக் காணலாம்.

விக்சலின் கருத்துப்படி விலைகளின் நிலை, மற்றும் உற்பத்தி ஆகியவற்றின் நகர்ச்சிக்கு முக்கிய காரணம், இயற்கை அல்லது சாதாரணமான (Normal) வீதத்திற்கும், மற்றும் பணம் அல்லது சந்தை வட்டி வீதத்திற்கும் உள்ள வேறுபாடேயாகும். விக்சலின் சாதாரண வட்டிவீதம் மூன்று குணங்களை உடையது. 1. அது பணப்புழக்கம் இல்லாத நிலையான பொருளாதாரத்தில் இயற்கை வட்டிவீதத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. அது சுற்று வழியிலான உற்பத்தி முறையினால் தீர்மானிக்கப்பட்ட உண்மையான முதலீட்டின் இறுதி நிலை உற்பத்தியாகும். 2. அது உண்மையான சேமிப்பின் தேவை மற்றும் அளிப்பிற்கு இடையே சமநிலையை ஏற்படுத்துகிறது. 3. அது விலை நிலையைப் பொறுத்தவரையில் நடுநிலையில் உள்ளது. மேலும் பொதுவிலை நிலையைச் சமனப் படுத்துகிறது. ஆயினும் சாதாரணமான வட்டி வீதத்தின் இந்த ஒவ்வொரு குணமும் போதுமான அளவிற்குத் தெளிவாக உள்ளதா? மேலும் சமநிலைக்கான இம் மூன்று கட்டுப்பாடுகளும் ஒரே தன்மையினவா? அல்லது ஒன்றுக்கொன்று அதே வட்டி வீதத்துடன் சம்பந்தம் உடையதா என்பன ஐயப்பாட்டிற்குரியனவாக உள்ளன.

முதலாவதாக, பணப்புழக்கம் இல்லாத அல்லது பண்டமாற்றுப் பொருளாதாரம் என்ற கருத்து தெளிவற்று, இடையூறுகள் உள்ளனவாக உள்ளது. பண்டமாற்றுப் பொருளாதாரம் என்பது நிலையான பொருளாதாரமா என்பதே ஐயத்திற்கு உரியது. பண்டமாற்றுப் பொருளாதாரத்திலும் பல பண்டங்கள் பலருக்குப் பணத்தின் வேலையைச் செய்துவரும். அத்தகைய பொருளாதாரத்தில் கூடச் சேமிப்பின் தேவையும் அளிப்பும் நேரடி

யாகச் சந்திக்கும் என்பதற்கு உறுதிகூற முடியாது. பணவியல் பொருளாதாரத்திற்குப் பதிலாகப் பண்டமாற்றுப் பொருளாதாரம் ஒரு சிறந்த முன்னமைப்பாக இருக்க முடியுமா என்பது மிகவும் ஐயத்திற்குரியது. பணவியல் பொருளாதாரமும் பண்டமாற்றுப் பொருளாதாரமும் அடிப்படையிலேயே வேறுபட்டனவாகும். பொருளாதாரத்தில் பணமும் இருந்து, நிலையான சம நிலையும் இருப்பதென்பது பொருந்திய ஒன்ருக இருக்க முடியாது. பண்ட மாற்றுப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரையில் உள்ள இத் தகைய சிக்கல்கள், பண்டங்களின் மூலமான கடன் புழக்கங்களைப் பொறுத்த வரையில் இயற்கையான வட்டிவீதம் நிலவும் என்ற கருத்தை விக்சல் மெல்ல மெல்லக் கைவிடும்படி செய்தன. மேலும் பணத்தினுல் அளிக்கப்பட்டும் பெறப்பட்டும் வரும் இயற்கை வீதமே முதலுக்கான இலாபவீதமாகவும் அமையும் என்ற கருத்தினையும் அவர் மேற்கொண்டார். விளக்கமாகக் கூறினுல் இயற்கை வீதம் என்பது பேராசிரியர் இர்வின் பிசர் கூறிய உற்பத்திச் செலவிற்கு மேல் வருகின்ற வருமானத்தின் வீதம் (Rate of return over cost), மற்றும் கீன்சின் முதலில் இறுதிநிலை ஆற்றல் (Marginal efficiency of capital) ஆகியவற்றிற்கு ஒப்பானதேயன்றி வேறில்லை.

விக்சல் உருவாக்கிய இயற்கை வீதம் மற்ருெரு முக்கியமான வகையிலும் தவருன ஒன்ருகும். டேவிட்சன் மற்றும் பேராசிரியர் ஹேயக் ஆகியோர் குறிப்பிட்டது போல், இயற்கை வீதத்திற்குக் குட்பட்ட இரண்டு பணிகளும் முறையே ஒன்றுக்கொன்று முரணு னவை. அப்பணிகளாவன :—

1. இயற்கை வீதம் சேமிப்பையும் முதலீட்டையும் சமநிலை யாக்குகிறது. 2. பொதுவிலை நிலையைச் சமன்படுத்துகின்றது. இயற்கை வீதம். வட்டியின் வீதத்திற்குச் சமமாக இருக்கும் வரை யில் வட்டி வீதம் விலைகளைப் பொறுத்தவயில் நடுநிலையாக உள்ளது என்பதும், அதுவிலை நிலையை உயர்நிலைக்கோ தாழ் நிலைக்கோ கொண்டு செல்லத் தூண்டுவதில்லை என்பதும் உண்மையே. மக்களின் நிலையற்ற விருப்புக்கள், எதிர் நோக்கு களுக்கு ஏற்ப விலை மாற்றங்கள் ஏற்படுகின்றன. எந்தச் சமூகம் முழுமையான உறுதிச் சமநிலை (Perfect Stationary Equilibrium) பெற்று, முதல் அல்லது உற்பத்தியில் எவ்வித மாற்றமும் இல்லாது இருக்கிறதோ, அச்சமூகம் தவிர, மற்றவை நடுநிலையான வட்டி வீதம் மாருவிலை நிலையை ஏற்படுத்துவதில்லை. ஏனென்ருல் உற் பத்தி அளவு மற்றும் வியாபாரங்கள் உயர்ந்து முன்னேறிவரும் பொருளாதாரத்தில் (Progressive Economy) விலை நிலையை மாருது வைத்திருக்க, பணப்புழக்கத்தை அதிகரித்தல் வேண்டும். மேலும்

புழக்கத்திற்குக் குறிப்பிட்ட அளவு பணம் வரவேண்டுமானுல் வட்டியில் பண வீதம் குறைக்கப்படுதல் வேண்டும். பணவியல் அதிகாரிகள் (Monetery Authority) புதிதாகக் குறிப்பிட்ட அளவு பணத்தைச் சமூகத்திற்குள் நுழைக்காவிட்டால், விலைநிலை தாழ்தல் வேண்டும். எனவே விலை நிலையைச் சமப் படுத்தும் வட்டி வீதமானது, உண்மை முதலில் தேவையைச் சேமிப்பின் அளிப்பிற்குச் சமமாக்கும் வீதத்தைவிடக் குறைவாகவே இருக்கிறது.

எனவே இயற்கை வட்டி வீதத்தின் இம்மூன்ருவது குணத்தை விட்டு விடலாம். இனிவரும் கருத்துக்களில் விக்சலின் இயற்கை வீதத்தை, முதலில் இறுதிநிலை ஆற்றலுக்குச் சமமானதாகக் கொள்ளலாம்.

இதுகாறும் இயற்கை வட்டி வீதத்தின் குணங்கள் ஆராயப்பட்டன. ஆனுல் பணவியல் பொருளாதாரத்தில் மற்ருெரு முக்கியமான வட்டி வீதம் உள்ளது. பண இயல் பொருளாதாரத்தில் இயற்கை வீதமும், பண வீதமும் ஒன்றுக்கொன்று இணைந்து செல்பவை அல்ல. எப்பொழுதுமே இரண்டிற்குமிடையே வேறுபாடு உண்டு. ஏனென்ருல் சேமிப்பின் தேவை, அளிப்பு முதலியன இயற்கையான உருவில் சந்திக்காமல், பண உருவில் சந்திக்கின்றன. ஆனுல் சமூகத்தின் பண அளவோ, நேரிடையாக வங்கி முறையால் கட்டுப் படுத்தப்படுகின்றது. அதாவது வங்கி முறை தன் விருப்பமான ஏதோ ஒரு வட்டி வீதத்தை வைக்க இயலும். இயற்கை வட்டி வீதத்திற்கும், கடன் வட்டி வீதத்திற்கும் உள்ள வேறுபாடு இரண்டு வழிகளில் வரலாம். ஒன்று இயற்கை வீதம் கடன் வீதத்திற்கு ஏற்ப மாறலாம்; அல்லது கடன் வீதம் இயற்கை வீதத்திற்கேற்ப மாறலாம். இயற்கை வீதம் மற்றும் கடன் வட்டி வீதம் இவற்றின் இடையே உள்ள வேறுபாடு, தொடர்ந்த நிகழ்ச்சிகளான விலைகள் மற்றும் உற்பத்தியில் உயர்வு அல்லது தாழ்வில் முடியலாம்.

விலைநிலை மற்றும் வட்டி வீதத்திற்கு இடையே உள்ள உறவினை மிகவும் தெளிவாக அறிந்துகொள்ள, விச்சல் செய்ததுபோல் எடுகோள்களை, எளிமையாகக் கொண்டு தொடங்குவது சிறந்ததாகும். சமூகத்தின் பண இயல் முறையினைக் கீழ்க்கண்ட குணங்களைக் கொண்டதாகக் கொள்ளலாம் :—

1. பண இயல் முறை ஒரு மூடப்பட்ட பொருளாதாரத்தில் (Closed Economy) இயங்குகின்றது. விக்சல், உலகில் தலையாய வங்கிகள் இணைந்து வேலை செய்கின்றன என்று கருதிக் கொண்

டார். ஆனால் ஆராய்ச்சியை ஒரு தனி மூடப்பட்ட பொருளாதாரத்துடன் நிறுத்திக் கொள்வது நனி சிறந்தது.

இவ்வாறு செய்வதன் வாயிலாக நாம் உலக நாடுகளின் பொருள் மற்றும் பண பேரங்களினால் (Transactions) எழும் சிக்கல்களைப் பத்திரமாக ஒதுக்கிவிடமுடியும். 2. அத்தகைய பொருளாதாரத்தில், ஒரு சுயேச்சையான நாணயம் (currency) இருக்கின்றது. எந்தவிதமான சேமிப்பும் வைத்துக்கொள்வதிலிருந்து வங்கித்துறை சுயேச்சையாக விடப்படுகின்றது. பணஇயல் அதிகாரிகள் அந்நாணயத்தை, தங்கத்திற்கோ அல்லது வேறு எப்பொருளுக்குமோ இணையாக வைத்துக்கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். பணஇயல் அதிகாரிகள் தாங்கள் பின்பற்றும் கடன்கொள்கையைப் பொறுத்தவரையில் முழு உரிமையை அனுபவிக்க முடிகின்றது.

3. கடன் உருவாக்குவதும், சட்ட அடிப்படையில் மாற்று உள்ளவைகளை (Legal tender) வெளியிடுவதும் மத்திய வங்கியின் கீழ் குவிக்கப்படுகின்றன,

4. அத்தகைய பொருளாதாரத்தில் பணக் கையிருப்பே இல்லாது எல்லா வியாபார நடவடிக்கைகளும் கடன் முறைகளில் இருக்கும் வண்ணம் கடன் முறை வளர்ந்துள்ளது.

5. தொடக்கத்தில் அச் சமூகத்தில் மாறாச் சமநிலை நிலவுகின்றது என்றும் கொள்வோம்.

அத்தகைய பொருளாதாரத்தில் விலை நிலையைப் பாதிக்கும் முக்கியமான காரணங்களாகப் பணவியல் அதிகாரிகளின் கொள்கை, நுகர்வோர் பொருள்களின் தேவை, உற்பத்திச் சேவைகளின் அளிப்பு, மற்றும் உற்பத்தித் தேவைகளின் கூட்டுறவின் விளைவு ஆகியன உள்ளன. இக்காரணங்களில் மக்கள் தொகை, உற்பத்தி ஆகியவற்றில் மாற்றங்கள் புறமாற்றங்கள் (objective) ஆகவும், எதிர்நோக்குகள், விருப்புகள், தேர்வுகள் ஆகியன அகமாற்றங்கள் (Subjective) ஆகவும் உள்ளன.

பணஇயல் அதிகாரிகளின் கைகளில் விலைநிலையைத் தூண்டுதல் செய்வதற்கு உள்ள மிகவும் முக்கியமான கருவி வைப்புக்கள், மற்றும் கடன்களின் மேல் ஆன வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்துவதே. சற்றுநேரம் வட்டிவீதங்களைப் பாகுபடுத்துவதை ஒதுக்கிவிடலாம்.

இதே முன்னுரையுடன், வட்டி வீதத்தைக் குறைப்பதனாலும், உயர்த்துவதினாலும் ஏற்படும் விளைவுகளை ஆராயலாம். மாறுபாடு

இல்லாத சமநிலை இருப்பதாகக் கொண்டுள்ளமையால், இயற்கை வட்டி வீதமும் சந்தை வட்டிவீதம் அல்லது கடன் வட்டிவீதமும் சமமாக உள்ளன. எனவே, வட்டிவீதக் குறைப்பு என்னும்போது கடன் வட்டிவீதத்தை இயற்கை வட்டிவீதத்திற்குக் குறைவாக உள்ளதாகக் கொள்ளவேண்டும். அவ்வாறே வட்டி உயர்வின் போதும் கொள்ளவேண்டும். வட்டிவீதம், விலைநிலைக்கிடையே உள்ள உறவை ஆராயும்போது விக்சலின் கோட்பாட்டையே முக்கிய ஆதாரமாகக் கொள்வோம். தேவையான இடங்களில் அவருடைய கோட்பாட்டை மாற்றிக் கொள்ளலாம்.

இந்தச் சூழ்நிலையில், விக்சல் வகுக்கின்ற பொருளாதாரக் கோட்பாடு பின் வருமாறு :—மற்ற எடுகோள்கள் மாருதிருக்கையில், உலகின் முன்னணி வங்கிகள், தங்கள் வட்டி வீதத்தை ஒரு சதம், சாதாரண வட்டி நிலையிலிருந்து குறைக்குமேயானுல், அதனை அவ்வாறு சில ஆண்டுகள் வரை வைத்திருக்குமேயானுல், அதன் காரணமாக எல்லாப் பண்டங்களின் விலையும் உயரும்; எந்த எல்லையும் இல்லாது உயர்ந்து கொண்டே செல்லும். மாருக முன்னணி வங்கிகள். வட்டி அளவினைச் சாதாரண நிலையிலிருந்து ஒரு சதம் உயர்த்துமேயானுல், அவ்வாறு சில ஆண்டுகள் வரை வைத்திருக்குமேயானுல், அதன் காரணமாக எல்லாப் பண்டங்களின் விலையும் குறையும் ; பூஜ்யத்தை அடையும் வரை குறைந்து கொண்டேவரும்.

இதனைச் சற்று ஆராயலாம். முதலில், முழுவேலை நிறைவுடனும், வளைந்து கொடுக்காத முதலீட்டுப் பருவத்தை எடுத்துக் கொள்ளலாம் அதாவது, நுகர்வோர் பண்டங்கள் மற்றும் முதலீட்டுப் பண்டங்களின் (capital goods) தொழில்கள், போட்டியிடாத வகுப்புக்கள் கொண்ட, மிகவும், நுண்ணிய வேலைத்திறமையுடையனவாக உள்ளதாகக் கொள்வோம். இந்நிலையில் சாதாரண வட்டிவீதத்தைவிட, சந்தை வட்டி வீதத்தை ஒரு சதம் உயர்த்துவதாலோ அல்லது குறைப்பதாலோ தொழிலில் விரிவோ, சுருக்கமோ ஏற்படுவதில்லை. வட்டிக் குறைப்பின் காரணமாகவும். மூலதனத்தின் மதிப்புயர்வின் காரணமாகவும், தொழில் துணிவோர் முதலீட்டுப் பண்டங்களின் உற்பத்தியினைப் பெருக்க விரும்புவார்களேயாயின் அது உற்பத்திக் காரணிகளின் விலையினை உயர்த்திவிடும். அதனுல், குறைந்த வட்டிச் செலவின் காரணமாக ஏற்பட்ட நன்மைகள் சமமாக்கப்பட்டுவிடும். அவ்வாறே நுகர்வோர் பண்டத்தொழில்களிலும், குறைந்த வட்டியினுல் ஏற்பட்ட அனுகூலங்கள், மூலதனப் பொருள்களின் விலை உயர்வின் காரணமாகச் சமன் செய்யப்பட்டுவிடும். எனவே இத்தகைய

பொருளாதாரத்தில், கடன் வட்டிவீதத்தின் முழு அளவும், பொது விலை நிலையின் மேல், எந்தக் குறிப்பான மாற்றமும் ஏற்படுத்துவதில்லை.

அடுத்து உற்பத்தி அமைப்பில் இருப்பதாகக்கொண்ட வளைந்து கொடுக்காத தொழில் நுணுக்கம் (Technical Regidity) என்ற அனுமானத்தை விட்டுவிடலாம். ஆனால் முழு வேலை நிறைவு என்ற அனுமானத்தை மட்டும் வைத்துக்கொள்ளலாம். இனி, சந்தை வட்டிவீதத்தைச் சாதாரண வட்டி வீதத்தைவிடக் குறையச் செய்வதால் ஏற்படும் விளைவுகளைக் காண்போம்.

சந்தைவட்டி வீதம் குறைக்கப்படும்போது, கடன் தேவை பல வழிகளில் வளர்ந்து வங்கிகளும் அதிகமான கடன்களை அளிக்கின்றன. பணத்தின் அளவு அதிகரிக்கும்போது, பொதுவாக, பண்டங்களின் தேவை அவற்றின் அளிப்பினைவிட அதிகரிக்கின்றது; விலை உயர்கின்றது. எனவே, விக்சலின் வாதம், பொது விலை நிலை மற்றும் தொடர்விலை நிலைகளின் (Relative Level of Prices) மாற்றத்தினை, பண்டங்களுக்கான தேவை மற்றும் அளிப்பின் மூலம் விளக்க இயலும் என்பதே. "எந்த ஒரு குறிப்பிட்ட பண்டத்தின் விலை உயர்வோ அல்லது தாழ்வோ, அப்பண்டங்களின் தேவை மற்றும் அளிப்பின் இடையே இருந்த சமநிலையை மாறச் செய்கின்றது என்று எண்ணப்படுகின்றது. இச்சமநிலை உண்மையிலேயே மாறியிருக்கலாம் அல்லது மாறும் என்று முன் கூட்டியே தீர்மானிக்கப்படலாம். இந்நிலையில், எது ஒவ்வொரு பண்டத்தின் தனித்த நிலையில் மட்டும் உண்மையாக இருக்கின்றதோ அது நிச்சயமாக எல்லாப் பண்டங்களின் ஒட்டுமொத்த நிலையிலும் உண்மையாகவே இருத்தல் வேண்டும். அளிப்பினைவிட ஏதோ ஒரு காரணத்தினால் ஏற்பட்ட, பொதுத் தேவையின் மிகுதியான தன்மையின் காரணமாகப் பொதுவிலை நிலையும் உயர்கின்றது."

வட்டிவீதம் வீழ்ச்சியடையும்போது, முதல் மதிப்பு உயர்கின்றது; மூலதனப் பொருள்களின் உற்பத்தி தூண்டப்படுகின்றது. ஏனென்றால் மூலதனத்திற்குக் கிட்டும் இலாப ஈவு வட்டி வீதத்தைவிட அதிகமாக உள்ளது. நாம், முழு வேலை நிறைவு என்ற நிலையில், ஆய்வினைத் தொடங்கி உள்ளமையால், உற்பத்திக்காரணிகளை, நுகர்வோர் பண்டத் தொழில்களிலிருந்து, மூலதனப் பொருள் தொழில்களுக்கு மாற்ற வேண்டுமாயின், அவைகளுக்கு அதிக ஊதியம் (Remuneration) கொடுத்தல் அவசியமாகின்றது

இவ்வாறு, தொழிலாளர், கச்சாப்பொருள்கள், மற்றும் நிலம் ஆகிய வற்றின் அதிகரித்த தேவை அவைகளின் விலையினை உயர்த்து கின்றது. மேலும் தொழில் துணிவோர், உற்பத்திக் காரணி களுக்கு, அதிகரித்த ஊதியம் கொடுக்க இயலும். வட்டிக் குறை வின் காரணமாக, தொழில் துணிவோர்கள், முன்தந்த அதே மொத்த வட்டித் தொகைக்கு, இப்போது அதிகமான அசல் தொகையைக் கடனாகப் பெற இயலும். நீண்ட பருவ முதலீட்டைப் பொறுத்தவரையில் இது மிகவும் சாதாரணமான தொன்றாகும். உதாரணமாக, ஓர் இரயில்வே நிறுவனம், கடன் பத்திரங்களின் மூலம் நான்கு சத வட்டிக்குப் பதிலாக மூன்று சத வட்டிக்குக் கடன் வாங்குவதாகக் கொள்வோம். இதனால் அதிகக் கடனும் பெற இயலும். உற்பத்திக் காரணிகளுக்கு, 331/3 சதம் பணம் கூடுதலாக வும் கொடுக்க இயலும். எனவே மூலதனப் பொருள்களின் உற் பத்தி தூண்டப்படுகின்றது; அவைகளின் விலையும் உயர்கின்றது.

மறுபக்கத்தில், உற்பத்திக் காரணிகளின் மூலதனப் பொருள் தொழில்களுக்கு மாறியதால், நுகர்வோர் பண்டங்களின் உற்பத்தி குறைகின்றது. ஆனால் தொழிலாளர்கள் நிலச்சொந்தக்காரர்கள் கச்சாப்பொருள் உரிமையாளர்கள் ஆகியோரின் வருமானம் அதி கரிப்பதால், நுகர்வோர் பண்டங்களின் தேவை அதிகரிக்கின்றது. எனவே, நுகர்வோர் பண்டங்களின் விலை அதிகரிக்கின்றது. இவ் வாறு மூலதனப் பொருள்களின் ஒவ்வொரு உற்பத்தி அதிகரிப்பும், மக்களின் வருமானத்தை உயர்த்தி, நுகர்ச்சிப் பொருள்களின் தேவையை அதிகரிப்பதால் ஒவ்வொரு முறையும் நுகர்வோர் பொருள்களின் விலை நிலையில் புதிய உயர்வு (அதிகரிப்பு) ஏற்படு கின்றது.

இவ்வாறு, சாதாரண வட்டி வீதத்தில் சந்தையில் ஏற்படும் வீழ்ச்சி, பொருள்களின் விலையில் ஒரு கூட்டு உயர்வை ஏற்படுத்து கின்றது. இத்தன்மை சந்தை வட்டிவீதம், குறைவாக இருக்கும் காலம் வரை தொடர்ந்து இருந்து வருகின்றது. தொழில் துணி வோரின் உற்பத்திச் செலவு அதிகரித்த போதிலும் அவன் தன் னுடைய பொருளுக்காக அதிக விலையைப் பெறுகின்றான். விலை உயர்வுக்கு முன்னால் அவன் எந்நிலையில் இருந்தானோ அதே நிலையில்தான் இருக்கின்றான். எனவே பண்டங்கள் மற்றும் சேவை களின் பணத்தினால் எழும் தேவை (Money demand) எந்தப் பரு வத்திலும் அவைகளின் விலையில் தொடர்ந்த ஏற்றம் காணப்படு கின்றது. இப்போது, வட்டி வீதம் சாதாரண நிலைக்கு வரு மாயின், அங்கு விலைகளின் வீழ்ச்சிப் போக்கு காணப்படாது ஏனெனில் புதிய ஒப்பான விலைகள் (Relative prices) முன்ன

மேயே நிலைநிறுத்தப்பட்டிருக்கும். விலை உயர்வும், எல்லாப் பொருள்களின் மேலும் சமமாக நிறுவப்பட்டிருக்கும். ஒப்பான விலைகள் புதிய சமநிலையினை ஏற்படுத்தியிருப்பதால் வட்டிவீதம் சமநிலையைப் பாதிக்க இயலாது. தொழில் துணிவோர்கள், தங்கள் பொருள்களின் விலைஉயரும் என்று நம்புவதால் உற்பத்திக்காரணிகளுக்கு, மேலும் அதிகவிலையைக் கொடுக்க முன்வருவார்கள்.

இந்தக் கூட்டு விலை உயர்வுப் போக்கு நிறுத்தப்பட வேண்டுமாயின், வட்டி வீதத்தை அதனுடைய பழைய நிலைக்குக் கொண்டு வருவது மட்டும் போதாது. பழைய நிலையினை விடச் சற்று உயர்ந்த நிலையில் அதனைப் பொருத்த வேண்டும். ஏனென்றால், விலைகள் உயருவது எதிர்பார்க்கப்படும்போது வட்டி வீதத்தை முன் நிலைக்குக் கொண்டு வருவது என்ன பலனை ஏற்படுத்துமோ, அதே பலன்தான் குறைந்த வட்டி வீதத்தினால் விலை உயராது இருக்கும் போது ஏற்படுகின்றது.

மூலதனப் பொருள்கள் உற்பத்தி அதிகரிப்பினால் ஏற்படும் சேமிப்பு உயர்வு, பலவந்தமான சேமிப்புதானா? என்ற பிரச்னையில் நுழைதல் அவசியமில்லை. வேலை நிறைவு இருக்குங்கால் உற்பத்திக் காரணிகளை, நுகர்வுப் பொருள் தொழில்களிலிருந்து உற்பத்தியான பொருள் தொழில்களுக்குப் பங்கீடு செய்கையில், நுகர்ச்சி தடைப்படுத்தப் படுவதால், சமூகத்தை முழுமையாகப் பார்க்கையில் பலவந்தமான சேமிப்பு இருக்கிறது. ஆனால் தனி ஒருவரின் கண்ணோட்டத்தில், அங்கு பலவந்தமான சேமிப்பு கிடையாது.

தற்போது வேலை நிறைவு என்ற அனுமானத்தை விட்டு விட்டால் உழைப்பு அல்லது ஏதாவது பயன் படுத்தப்படாது இருப்பதாகக் கொள்ளலாம்.

வேலை வாய்ப்பின்மை நுகர்ச்சிப் பொருள் தொழில்களில் மட்டும் இருந்தால் மேலும் நுகர்ச்சிப் பொருள் தொழிலின் உற்பத்திக் காரணிகளை, மூலதனப் பொருள் தொழில்களுக்கு மாற்ற இயலாத நிலைமை இருக்குமாயின், அப்போது சந்தை வட்டி வீதத்தின் குறைப்பால், இரண்டு வகைத் தொழில்களிலுமே உற்பத்தி குறைப்பால் அதிகரிக்காது. ஆனால் உற்பத்திக்காரணிகளை மாற்ற இயலுமேயானால், பின்னர் மூலதனப் பொருள்களின் உற்பத்தி அதிகரிக்கும். நுகர்ச்சிப் பொருள்களின் உற்பத்தி அவ்வளவாகப் பாதிக்கப்பட மாட்டாது. ஆனால் அவைகளின் தேவை அதிகரிக்கும். எனவே இரண்டுவகைப் பொருள்களின் விலையுமே அதிகரிக்கும்.

வேலைவாய்ப்பின்மை மூலதனப் பொருள தொழிலில் இருக்கு மாளுல், மூலதனப்பொருள்களின் உற்பத்திமட்டும் அதிகரிக்கும். நுகர்ச்சிப் பொருள்களின் தேவை அதிகரித்து, அவைகளின் விலை யும் உயர்வு அடையும்.

இரண்டு வகைத் தொழில்களிலும் வேலைவாய்ப்பின்மை இருந்து, உற்பத்திக்காரணிகளை ஒரு தொழிலிலிருந்து மற்றொரு தொழிலுக்கு மாற்ற இயலாது இருக்குமாயின், வட்டி வீதத்தின் வீழ்ச்சி, இரண்டுவகைத் தொழில்களின் உற்பத்தியையும் அதிகரிக்கும். இப்பொருள்களின் விலை உயர்வு படிப்படியாக நடைபெறும்.

இனி, பயன்படுத்தப்படாத காரணிகள் இரண்டு வகைத் தொழில்களிலும் இருக்கின்ற காரணிகளை ஒரு தொழிலிலிருந்து மற்றொரு தொழிலுக்கு மாற்றக்கூடிய உண்மையான சூழ் நிலைக்குச் செல்லலாம். வட்டி வீதம் வீழ்ச்சியின் காரணமாக, மூலதனப் பொருள்களின் உற்பத்தி முதலில் அதிகரிக்கும். இதனுல் இப் பொருள்களின் உற்பத்தியில் ஈடுபட்ட அனைவரின் வருமானமும் அதிகரிக்கும். அவர்கள் அதிகரித்த வருமானத்தின் ஒரு பகுதியை நுகர்ச்சிப் பொருள்களில் செலவிட்டு மீதத்தைச் சேமிக்கின்றனர். எனவே நிதானமான விலை உயர்வுப் போக்கு, இரண்டு வகைப் பொருள்களிலும் காணப்படும். பொருளாதாரம், வேலை நிறைவு பெற்ற பின்னரும் கூட விலைகளில் கூட்டுயர்வுப்போக்கு, முன்னர் விவரித்த அதே முறையில் ஏற்படும்.

இதுகாறும், சந்தை வட்டி வீதம் இயற்கை வட்டி வீதத்தை விடக் குறைந்தால் ஏற்படும் விளைவுகளைக் கண்டோம். குறைந்த வட்டி, வளர்ச்சிப் போக்கினை ஏற்படுத்துகின்றது என்பதைக் கண்டோம். பொது விலை நிலை உயர்ந்து, உற்பத்திக்காரணிகள் ஒரு தொழிலில் இருந்து மற்றொரு தொழிலுக்குச் செல்வதால், ஒப்பான விலைகளிலும் மாற்றம் ஏற்படுகிறது. மொத்த உற்பத்தி, பயன்படுத்தப்படாத காரணிகள் இருக்கும் வரை உயர்ந்து கொண்டே செல்லும். இப்பொழுது தீர்க்க வேண்டிய பிரச்சினை என்னவெனில் எவ்வளவு காலம் இந்தக் கூட்டுயர்வுப் போக்கு நீடிக்கும் என்பதே. வரம்பற்று அது நீடிக்குமா? அல்லது மூல தனப் பொருள்களின் அதிகரித்த உற்பத்தியினுல், நிலவுகின்ற வட்டி வீதத்தில் மேலும் மூலதனத்தைப் பயன்படுத்த முடியாத நிலைமையின் காரணமாக, புதிய நிலையான சமநிலை படிப்படியாக ஏற்படுத்தப்படுமா? தனி மனிதர்கள் தற்போதைய விலையே எதிர் காலத்திலும் நிலையாக இருக்கும் என்று எதிர்பார்த்தார்களாளுல்,

மூலதனத்திற்குக் கிடைக்கும் இலாபம் குறைந்து கொண்டே செல்லும் போக்கின் காரணமாக ஏதோ ஒரு நிலையில் உற்பத்திக் காரணிகள் நுகர்ச்சிப் பொருள் தொழில்களிலிருந்து மூலதனப் பொருள் தொழில்களுக்குச் செல்வது முற்றுப்பெறும். விலைகளின் உயர்வு நின்று பொருளாதாரம் நிலையான சமநிலையை அடையும். புதிய சமநிலை ஏற்படுவதற்குச் சிறிது காலம் செல்லும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால், தனி மனிதர்கள், குறிப்பாகத் தொழில் துணிவோர்கள், விலை உயர்ந்துகொண்டே செல்லும் என்று கருதினால், அதன் காரணமாக கூட்டுப்போக்கு வரம்பின்றித் தொடரும்.

வங்கிகள், நிரந்தரமாகத் தங்கள் வட்டி வீதத்தை இயற்கை வட்டி வீதத்திற்குமேல் வைத்திருப்பார்களேயானால், இதுகாறும் விவாதித்ததற்கு நேர்மாறான விளைவுகள் ஏற்படும். விலை, மற்றும் உற்பத்திச் சுருக்கம் ஆகியவற்றில் கூட்டுப்போக்கு நிகழும்.

எனவே மேற்கொண்டுள்ள அனுமானங்களின்படி, பண ஆக்கத்திற்கோ அல்லது சுருக்கத்திற்கோ எவ்வித எல்லையும் கிடையாது. விலை நிலை, மிகத் தெளிவாக, வங்கிகளின் கருணையை எதிர்பார்த்து இருக்கும்.

உண்மையான உலகில், இதுகாறும் கண்ட கூட்டுப்போக்கு இருப்பதில்லை. ஏனெனில் மேற்கொண்ட சட்டதிட்டங்கள் உண்மையான உலகில் இல்லை. "கற்பனை உலகத்திற்குத் தேவையான உண்மைகள் உலகில் இல்லாமையால், தன்னுடைய தோற்றங்களை அனுபவத்தினால் தெளிவாக்க இயலாது" என்று விக்சல் அவர்களே கூறியுள்ளார். விக்சலின் கொள்கைகள் அப்பட்டமான தன்மையனவாக இருந்தபோதிலும், அதிலும் உண்மைகள் நிறைய உள்ளன. வட்டி-விலை ஆகியவற்றின் இடையே உள்ள உறவைத் தெளிவாக அறிந்து கொள்ள ஆழ்ந்த ஆராய்ச்சி செய்யவேண்டும். உற்பத்தி, மற்றும் விலைகளின் போக்கைக் கட்டுப்படுத்தும் கருவி என்ற வகையில் வட்டி வீதத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவதாக அவருடைய கோட்பாடு அமைந்துள்ளது. ஏனென்றால் உண்மை உலகில், விக்சலின் பல அனுமானங்கள் பல்வேறு அளவுகளில் நிறைந்துள்ளன. மத்திய வங்கியின் வளர்ச்சி, பண அளவு, மற்றும் வட்டி வீதத்தைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான அளவிற்கு, வங்கித்துறைக்கு ஏராளமான அதிகாரங்களைக் கொடுத்துள்ளது. உலோகப் பணத்தின் புழக்கம் நிறுத்தப்பட்டு, மாற்ற இயலாத காகிதப்பணம் புழங்க ஆரம்பித்ததனாலும், கடன் வசதி பெருகியதாலும், உலோக இருப்பு வைத்துக்கொள்ளும் முறை முன் இருந்தது போன்று சிறப்பாக இயங்கவில்லை.

வட்டி வீதம்-விலை நிலைக் கோட்பாட்டில் விக்சலின் முக்கியமான பங்கு என்னவெனில் விலை மாறுதல்களுக்குக் காரணமான சந்தைவட்டி வீதம் இயற்கை வட்டி வீதத்தைக் காட்டிலும் எவ்வளவு கூடுதலாக உள்ளது என்பது தவிர, சந்தை வட்டியில் உயர்ந்த அளவு மட்டும் தனித்தானதல்ல என்பதுவே. சந்தை வட்டியினைப்பற்றிய இந்தத் தொடர்புக் கோட்பாடு (Relative coneept) வெளியிடும் உண்மை விக்சலின், வட்டி, மற்றும் விலைகளைப் பற்றிய கோட்பாட்டிற்கு மாறுபட்டதாகக் கூடத் தோற்றமளிக்கின்றது. உண்மை என்னவெனில், சந்தை வட்டி வீதமும் பொது விலையும் நேரிடையாக மாறுகின்றது; இரண்டுமே கூட்டாக உயர்கின்றன அல்லது வீழ்ச்சியடைகின்றன. வணிகம் சுறுசுறுப்பாக இருக்கையில் விலைகள் உயர்கின்றன. முதலுக்குக் கிடைக்கும் இலாபமும் உயர்வாக உள்ளது. பணத்திற்கான வட்டி வீதம், சிறிதுகால இடைவெளிவிட்டு, அதே போக்கினை மேற்கொள்ளுகின்றது. "ஒரே வார்த்தையில் கூறுவதானால், பணத்திற்கான வட்டி வீதம், வெளிப்படையாகக் காணும்போது உயர்வாகத் தோன்றினாலும், உண்மையில் அது பெரும்பாலும் குறைவே. மேலும் அது வெளிப்படையாகத் தாழ்வாகத் தோன்றும்போது உண்மையில் உயர்வாக இருக்கிறது"—விக்சல்

இதுகாறும் வட்டிவீதம்—சிக்கலை, சில சுலபமான அனுமானங்களின் வழியே பார்த்தோம். இனி, ஆராய்ச்சி உண்மையான சூழ்நிலைக்குப் பொருத்தமாக இருக்க வேண்டுமெனில், இந்த அனுமானங்களை எவ்வாறு மாற்ற வேண்டும் என்று கவனிக்க வேண்டும்.

முதலாவதாக, நாணய இருப்பு, உண்மை உலகில் இருக்கின்றது. முற்றிலும் வளர்ச்சி பெற்ற கடன் திட்டத்தை நாம் பெற்றிருக்கவில்லை. ரொக்க நாணய இருப்புக்கான காரணங்கள், அவசியம் முதலியன நமக்குத் தெரிந்தனவே. நாணய இருப்பிலான ஆர்வம், நிச்சயமற்ற தன்மையின் விளைவே. நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கவும், ரொக்க விருப்பு (Liquidity Preference) அதிகரிக்கின்றது. இது முதலீட்டின் கூட்டுப் பெருக்க வளர்ச்சியைத் தடை செய்கின்றது.

மேலும், வங்கிகள் உலோக இருப்புக் கொள்வதை முற்றிலும் கைவிட இயலாது. வங்கிகள் கடன் அளிக்கும் சக்திக்கும் ஓர் எல்லை இருக்கின்றது. அவைகள் எல்லையற்று தங்களுடைய கடன் வழங்கும் சக்தியை நீட்டிக்க முடியாது. அதாவது பெருக்கம் அல்லது சுருக்கம் என்ற கூட்டுப்போக்கு வரம்பின்றி நடைபெற இயலாது.

மத்திய வங்கிக்கு, மற்ற வங்கிகளைக் கட்டுப்படுத்தும் சக்தி போதிய அளவு இல்லாது இருக்குமாயின், மத்திய வங்கியின் நடவடிக்கைகள், மற்ற வங்கிகளின் எதிர் நடவடிக்கைகளின் காரணமாகப் பயனற்றதாக ஆக்கப்படலாம் ஆனால் இந்தச் சிக்கல், மத்திய வங்கி நன்கு வளர்ச்சி பெற்ற நாடுகளில் அவ்வளவு முக்கியமானதன்று. காகிதச் செலாவணி வெளியீடு, மற்றும் இறுதி நேர உதவி அளிப்பு ஆகிய அதிகாரங்களைப் பெற்றிருப்பதனால் மத்திய வங்கிகள், வங்கி முறையின் மேல் நல்ல முறையில் கட்டுப்பாடு செய்ய இயல்கின்றது.

உண்மை உலகில் உள்ள மற்றொரு குழப்பம் என்னவெனில், ஒரே வட்டிவீதம் என்பதே இல்லை. நாம் முன்னர்க் கண்டது, காலக்கெடுவிற்கு ஏற்றாற்போலும், எதிர்பாரா விளைவுகளின் தன்மைக் கேற்பவும், பல்வேறு வட்டி வீதங்கள் உள்ளன. வட்டிவீத வேறுபாடுகளின் முக்கியத்துவமும் நாம் அறிந்ததே. குறைந்த சேமிப்புச் செலவின் காரணமாக, குறுகியகாலக் கடன் வட்டிவீதம், நீர்மைத்தன்மையுடைய பண்டங்களின் மேலான முதலீட்டில் எவ்வித மாற்றமும் ஏற்படுத்துவதில்லை. நிலை முதலின் மேலான முதலீட்டில், நீண்டகாலக் கடன் வட்டி வீதம் நிச்சயமாக மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. வங்கித்துறை, குறுகிய காலக்கடன் மேல் கொண்டுள்ள கட்டுப்பாடுகள் தனித்தன்மையுடையதாக இருந்த போதிலும், அக்கட்டுப்பாடு, நீண்டகாலக் கடன் மேல் முற்றுப் பெறவில்லை. எனவே முதலீட்டு வளர்ச்சியினைத் தூண்டிக்கக் கூடிய வங்கித்துறையின் திறமை வரையறுக்கப்பட்டதாக உள்ளது.

கற்பனையான உதாரணத்தில் சாதாரணமான வட்டி வீதம் கூட்டுப்போக்கு நடைபெறும் காலத்தில் நிலையாக இருப்பதாகக் கருதிக்கொண்டோம். ஆனால் இது உண்மையன்று. சந்தை வட்டி வீதத்திற்கேற்ப, முதலின் இறுதிநிலைத் திறமை (Marginal Efficiency of capital) அல்லது சாதாரணமான வட்டி வீதம் மாறுபாடு அடைகின்றது. சந்தை வட்டிவீதம் முதலின் இறுதிநிலைத் திறமையைவிடக் குறைவாக இருக்குமேயானால் முதலீடு பெருகுகின்றது. ஆனால் முதலீடு பெருகியதன் காரணமாக முதல் இறுதிநிலைத்திறமை வீழ்ச்சியடைந்து, சந்தைவட்டி வீத அளவிற்கு வந்து விடுகின்றது. இத்துடன் கூட்டுப்போக்குத் தன்மை முற்றுப் பெறுகின்றது. உற்பத்தி, மற்றும் வேலைவாய்ப்பு மேலும் மேலும் பெருகவேண்டுமாயின், சந்தை வட்டி வீதத்தைத் தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருதல் வேண்டும்.

அடுத்து, பன்னாட்டுத் தொடர்பில் ஏற்படக்கூடிய குழப்பங்களைக் கவனித்தல் வேண்டும். உலகிலுள்ள எந்தப் பொருளாதார

மும் வெளிநாடுகளுக்கும் மூடப்பட்டதன்று. உண்மையில், எந்த நாடு, தொழிலில் பெரிதும் வளர்ச்சியடைந்துள்ளதோ, அந்தநாடு பன்னாட்டுப் பொருளாதாரத்தில் பெரிதும் தொடர்பு கொண்டிருக்கும். எனவே, ஒருநாட்டின் பொருளாதாரத்தைச் சீர்படுத்த மேற்கொள்ளப்படும் பண இயல் கொள்கைகள் பிறநாட்டுப் பண இயல் கொள்கைகளை விட்டு முற்றிலும் பிரிவு படுத்தப்பட்டு இருக்க இயலாது. அவைகளுக்குள்ளே பொது நாணயத்தொடர்பு இருக்குமேயானால் இவ்வுறவு மேலும் பெருகும். ஒரு நாட்டின் வட்டி வீதம் குறைவாக இருக்குமேயானல், அதன் காரணமாக முதலீடு செய்யக்கூடிய நிதி, அந்த நாட்டிலிருந்து பிறிதொரு நாட்டிற்குச் செல்லக்கூடும். ஒரு நாட்டின் விலைநிலை மிகவும் உயர்ந்து இருக்குமாயின் அதன் காரணமாக வெளிநாடுகளிலிருந்து பண்டங்கள் இறக்குமதி செய்தல் ஏற்படும். உள்நாட்டுவிலைநிலை, பிறநாடுகளின் விலைநிலையிலிருந்து முற்றிலும் தனித்து இயங்க இயலாது. பன்னாட்டுத் தங்கத்தரம் (International gold standard) நீக்கப்பட்டமையாலும், பன்னாட்டு வாணிபத்திற்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளின் காரணமாகவும் உலகச் சண்டைகளுக்குப் பின்னர், வெளிநாடுகளின் பொருளாதாரம் மூடப்பட்ட தொன்றாகவே உள்ளது. மத்தியவங்கிகள் தற்காலம் பணஇயல் கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு, மேலும் பல உரிமைகள் பெற்றுள்ளன. எனவே, அவை விலை உற்பத்தியினைக் கட்டுப்படுத்துவதில் பெரிதும் பலம் பெற்றுள்ளன.

இத்தகைய பணஇயல் காரணிகளைத் தவிர இன்னும் தொழில் நுணுக்க, மனவியற் போக்கிலான மற்றும் சில நிறுவனக்காரணிகளும் பல உள்ளன. இவைகள் தொழில் வளர்ச்சியின் முன்னேற்றத்தைத் தடைப்படுத்துவனவாக உள்ளன. வட்டிவீதக் குறைப்பின் எந்த அளவும், வளர்ச்சிப் போக்கினை ஓரளவிற்கு மேல் செல்லாமல் இவைகள் தடைப்படுத்துகின்றன. முதலாவதாக, உற்பத்திச்சாதனங்கள், ஒரே தன்மையுடையனவாக இருப்பதில்லை. பல சமயங்களில் அவைகள் ஒன்றுக்கொன்று மாற்றிக்கொள்ளக்கூடிய தன்மையுடையவையாகவும் இருப்பதில்லை. இவ்வாருக, சில வகைத் தொழில்களில், உற்பத்திக் காரணிகளின் அளிப்பு நெகிழ்ச்சி பூஜ்யத்தை நெருங்கியிருக்கும். இன்னும் பல தொழில்களில் பயன்படுத்தப்படாத காரணிகளும் இருப்பதுண்டு. மேலும் பொருளாதாரத்தில் பல வளைந்து கொடுக்காத தன்மைகள் காணப்படுகின்றன. உற்பத்திக் காரணிகளின் விலைகள் வளைந்து கொடுப்பதில்லை. அவைகளின் அளிப்பு, மற்றும் தேவைத் தொடர்பினில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப, அவைகள் விரைந்து நகருவதில்லை

மேலும் உண்மையான பொருளாதார உலகம் நிலையாக இல்லாது, சுழற்சியுடையதாக இருக்கின்றது. உற்பத்தி, மற்றும் வேலை வாய்ப்பு நிர்மாணிப்பதில், எதிர்நோக்குகள் (Expectations) முக்கியமான பங்கு வகிக்கின்றன. பண இயல் அதிகாரிகளின் கொள்கைகளின் நிரந்தரத்தன்மையில் பொதுமக்கள் நம்பிக்கை கொள்வதில்லை. எனவே மக்களின் நீர்மைத்தன்மை விருப்பம் உயருகின்றது. வட்டிவீத வீழ்ச்சியின்றியே முதலீடு தூண்டப்படுகின்றது.

இதுகாறும் விவாதித்த குழப்பமான காரணங்கள், அடிப்படைக் கோட்பாட்டை அதாவது விலைப்போக்கு, மற்றும் உற்பத்தியின் கட்டுப்படுத்தத் தகுந்த வட்டி வீதக்கொள்கையினை மேற்கொள்வதன் மூலம் வங்கித்துறை செயலாற்ற முடியும் என்பதனைப் பயனற்றதாக்கி விடவில்லை. இந்தச் சூழ்நிலையில், இந்தக் காரணங்கள் உண்மை உலகம் என்ன என்பதைச் சுட்டிக் காட்டவும், வட்டிவீதக் கொள்கை, கூட்டுப்போக்குக் கொள்கையினை, வரம்பு கடந்து செல்வதாகக் காட்டவும் உதவுகின்றது. இக்கூட்டுப் போக்கின் தன்மை கற்பனை உலகில் கண்டதைவிடச் சிறிது தீவிரம் குறைந்து காணப்படும் என்பதனையும் குறிப்பிடல் வேண்டும். வங்கித்துறை கடன் வழங்கும் சட்டதிட்டங்களை மாற்றுவதன் மூலமும், பண அளவினை மாற்றுவதன் வாயிலாகவும் மூலதனப் பொருள்கள மற்றும் நுகர்ச்சிப் பொருளகளின் உற்பத்தி அளவைத் தூண்டமுடியும். அவ்வாறே பண்டங்களுக்கான மொத்தத் தேவைகளையும் கட்டுப்படுத்த முடியும். எனவே வட்டி வீதம் என்பது பணஇயல் அதிகாரிகளுக்குப் பொதுவிலை நிலை, தொடர்பு விலை நிலை ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்குக் கிடைத்துள்ள முக்கியமான கருவியாகும்.

7. வட்டி விதமும் விலை நிலையும் (தொடர்ச்சி)

வட்டிவித வேறுபாடுகளின் மூலம் பண இயல் அதிகாரிகள் எவ்வாறு பல நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள இயலும் என்பதைக் காண்பது அவசியம் ஆகும்.

பெரும்பாலான நாடுகளின் முக்கியமான பிரச்சினை என்ன வெனில், எவ்வாறு பொருளாதார உயர்வுகளையும், மந்தங்களையும் கட்டுப்படுத்துவது என்பதும், கிடைக்கின்ற இயற்கை வளங்களை எவ்வாறு தொடர்ந்து நல்ல முறையில் பயன்படுத்துவது என்பதும் ஆகும். பணஇயல் கொள்கைகளைக்கொண்டு, மேலான உற்பத்தியினையும் வேலைவாய்ப்புக்களையும் ஏற்படுத்துவதில் இதுகாறும் நாம் வெற்றிபெறவில்லை. தனித்து நின்று உயர்ந்த பட்சப் பொருளாதார நலத்தைக் கொடுக்கக்கூடிய இயற்கைச் சக்திகள் இந்த முதலாளித்துவ உலகத்தில் உள்ளன என்பதனையும் நாம் நம்புவதற்கில்லை. அரசு அல்லது அரசின் ஆணையாளர்களினால் திட்டவட்டமாக மேற்கொள்ளப்படும் பணஇயல் கொள்கை பொருளாதார முறை அமைதியாகவும் ஒழுங்காகவும் நடப்பதற்குத் தேவையானது என்றும் நாம் நம்புகின்றோம். உற்பத்திப் போக்கினையும் விலைகளின் போக்கினையும் நயப்படுத்தும் கருவியாகப் பணஇயல் அதிகாரிகளின் கைகளில் பல்வேறு வட்டி வீதங்கள் உள்ளன என்பதனையும் முன்னரே குறிப்பிட்டோம். இனி, பணஇயலின் இம் முக்கியக் கருவியை எவ்வழிகளில் பயன்படுத்தலாம் என்பதனையும், அவற்றில் எது நடைமுறைக்கு உகந்ததாகவும் விரும்பத்தருந்ததாகவும் இருக்கும் என்பதனையும் காணலாம்.

வணிகச் சுழற்சியின் தன்மையினைக் குறித்தும், அதற்கான காரணங்கள் குறித்தும் விரிவாகப் பார்க்க வேண்டியதில்லை. வணிகச்சுழற்சியின் காரணத்தை முழுமையாக விளக்கவேண்டுமெனில், பல்வேறு பொருளாதாரக் காரணிகளைப் பற்றி ஆராயவேண்டும் ஆயினும் பெரும்பான்மையான பொருளாதார நிபுணர்களால் ஒப்

புக்கொள்ளப்பட்ட, மிகவும் முக்கியமான காரணி ஒன்றே ஒன்று தான். அது பணம், மற்றும் வணிகக் கடன் என்னும் காரணியாகும். பணமும் வணிகக் கடனும் நம்முடைய பொருளாதார முறையில் முக்கியமான நிலையில் உள்ளன. பணமும் வணிகக்கடனும் பொருளாதார முறையில் உள்ள பல்வேறு சந்தைகளையும் இணைக்கின்றன. பணம் தற்காலத்தையும் எதிர்காலத்தையும்கூட இணைக்கின்றது. தேவையும் அளிப்பும் பணத்தினால்தான் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இன்று வணிகமுறை பல்வேறு வழிகளில் ஏராளமான பணத்தை உண்டுபண்ணும் சக்தியினைப் பெற்றிருக்கின்றது. சென்ற அத்தியாயத்தில்கூட வட்டி வீதத்தை உயர்த்துவதாலோ தாழ்த்துவதாலோ, வணிகத்துறை விலைநிலையினையும் உற்பத்தியினையும் தூண்டமுடியும் என்பதனைக்கண்டோம். எனவே, பெரும்பான்மையான பொருளாதார அறிஞர்கள், வட்டி வீதத்திற்கும் விலைநிலைக்கும் உள்ள இந்தத் தொடர்பைக்கொண்டு வணிகத்துறையின் கடன் கொள்கையையே விலை ஏற்றத்தாழ்வுகளுக்குக் காரணம் என்று நினைப்பது இயற்கை. வணிகச்சூழலை மையமாகக் கொண்ட பணஇயல் கொள்கைகளைப் பின்பற்றும் பொருளாதார அறிஞர்கள். பொருளாதார ஏற்றங்களையும் மந்தங்களையும் கட்டுப்படுத்துவதற்குப் பலவகையான வட்டிவீதங்களைப் பரிந்துரைத்துள்ளனர்.

பண இயலின் இரண்டு கொள்கைகளுடன் மனநிறைவுற வேண்டியுள்ளது. ஏனென்றால் அவைதாம் புதுமையானவையாகவும், பெரும்பாலான சிறந்த பொருளியல் அறிஞர்களினால் பின்பற்றப்பட்டவையாகவும் உள்ளன. அவை (1) விலைநிலையை நிலைபெறச் செய்வது. (2) பணம், விலை ஆக்கத்தின்போது (Price formation) நடுநிலையாயிருத்தல் என்பன ஆகும்.

விலைநிலையை நிலைபெறச் செய்யவேண்டும் என்று கூறும் பொருளியல் அறிஞர்கள், பொது விலைநிலையினை மாற்றும் சக்தி வட்டி வீதத்திற்கு உண்டு என்று நம்புபவர்களே. பணம், மற்றும் கடன் புழக்கத்தில் ஏற்படும் மாறுதல்களே விலை மற்றும் உற்பத்தியில் ஏற்றத்தாழ்வுகள் எழக் காரணமாகவும், பொருளாதார ஏற்றம் அல்லது மந்தம் நிகழக் காரணமாகவும் உள்ளன என்பது இந்தச் சிந்தனையாளர்களின் எண்ணமாகும். வங்கித்துறை, கடனைப் பெருக்குவதாலோ அல்லது சுருக்குவதாலோ பொருள்கள் மற்றும் சேவைகளின் தேவையினைப் பண அளவில் மாறச் செய்து, விலை, ஏற்றம் உற்பத்திப் போக்கினைப் பாதிக்கச் செய்கின்றது. சென்ற அத்தியாயத்தில் கண்டதுபோல, வட்டிவீதம் பொதுவிலை நிலையின் மேல் மாற்றம் ஏற்படுத்துகின்றது என்பதனை இந்தச் சிந்தனை

யாளர்கள் நம்பினர். ஒரே ஒரு மாற்றம் என்னவெனில், இவர்கள் தொடர் விலை நிலையைக் குறித்து ஆராயாது பொதுவிலை நிலையைக் குறித்து ஆராய்ந்தனர். முன்னமே பார்த்தவாறு விலைகள் உயர்ந்து செல்லும் இந்தக் கூட்டுப்போக்கு வரையரையின்றி நடைபெற இயலாது. ஏனென்றால் ரொக்க இருப்பு சுருங்குவதாலோ, அந்நாடு தங்கச் செலாவணியைப் பின்பற்றும் நாடாக இருப்பின் நிலைஉயர்வின் காரணமாகத் தங்கம் வெளியேற்றப்படுவதாலோ, வங்கிகள் வரையரையின்றிக் கடனைப் பெருக்கஇயலாது. எனவே வங்கிகள் வட்டி வீதத்தை உயர்த்திக் கடனைச் சுருக்குகின்றன. வாங்கும் சக்தியின் குறைப்பு தொழில், மற்றும் வணிகச் செயல்களை மந்திக்கச் செய்கின்றது. மக்களின் மொத்தப் பண வருமானம் சுருங்கி, பொது விலைநிலை வீழ்ச்சியடைகின்றது. விலைகள் சுருங்கும் போக்குக்கூட, கூட்டுப்போக்காகத்தான் காணப்படுகின்றது. ரொக்க இருப்பு அதிகரிப்பின் காரணமாகவோ வாணிப நம்பிக்கை திருப்ப ஏற்பட்டதன் காரணமாகவோ வட்டி வீதம் குறைக்கப்பட இயலுமேயானால் மீண்டும் விலை, மற்றும் உற்பத்தி இயற்கையான நிலையை எட்டும்வரை நீண்டகாலத்திற்கு, இந்தக் கூட்டுப் போக்கு நடைபெற்றுக் கொண்டே இருக்கும், எனவே, நடத்திச் செல்லும் திறமையைப் பொறுத்து, மத்திய வங்கியின் வட்டி வீதம் விலைகளைக் கட்டுப்படுத்தவும், மற்றும் பணம், வருமானம் ஆகியவைகளை ஒழுங்கு படுத்தவும் உதவும் மென்மையான அழகான கருவியாக இருப்பதில்லை. விலை, மற்றும் வருமானத்தின் ஏற்றத் தாழ்வுகள் கடுமையாக நிகழ்வதற்குக் காரணமாகவும், முரட்டுத்தனமான விளைவுகள் (Brutal eff cts) ஏற்படவும் வட்டி வீதம் காரணமாக உள்ளது. இத்தகைய விலை, உற்பத்தி, மற்றும் வருமானம் ஆகியவற்றின் மிகையான ஏற்றத்தாழ்வுகள் நாட்டில் பொருளாதார நலத்திற்கு ஊறு பயப்பவையாகும். இந்தச் சூழ்நிலையில்தான் பொருளாதார ஏற்றம் மந்தம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்த விலைநிலைகளை நிலைபெறச் செய்யவேண்டும் என்ற கருத்து முக்கியத்துவம் பெற்றது. மத்திய வங்கியின் வட்டி வீதத்தினுலான கட்டுப்பாட்டிலும், பன்னாட்டுத் தங்கச் செலாவணி செம்மையாக நடைபெறச் செய்வதிலும் பொருளாதார அறிஞர்கள் நம்பிக்கை இழந்தனர்.

விலைநிலையை நிலைபெறச் செய்யும் சிக்கலைப் பார்க்கும் முன்னர் வட்டி வீதத்தின் உயர்ச்சிப் போக்கே பொருளாதார வீக்கத்தின் (Boom) குலைவுக்குக் காரணம் என்ற கருத்தைப் பற்றிய திறனாய்வைக் காண்போம், பொருளாதார ஏற்றம் குலையக் காரணமாக இருந்தவைகளுள் வட்டி வீதத்தின் உயாச்சியும் ஒரு காரணம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. ஆனால் சீர்குலைவுக்கு முக்கிய

காரணம், 'கெயின்ஸ்' அவர்கள் குறிப்பிட்டதுபோல, "முதலின் இறுதிநிலைத் திறன் திடீரென்று வீழ்ச்சியடைவதே" ஆகும். பொருளாதார ஏற்றத்தின் பின்பகுதியில். மூலதனப் பொருள்களின் விலை உயர்வைச் சரிக்கட்ட, மூலதனப் பொருள்களின் இறுதிநிலைத் திறன் உயர்வடையும் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். மூலதனப் பொருள்களின் இறுதிநிலைத்திறன் வீழ்ச்சியடையத் தொடங்கியதும், மக்களின் ரொக்க இருப்பு விருப்பம் தீவிரமடைந்து வட்டி வீதம் உயர்கின்றது. எனவே மூலதனப் பொருள்களின் இறுதிநிலைத்திறனும் வட்டிவீத உயர்வும் ஒரே சமயத்தில் நடைபெற்றாலும், இச்சூழ்நிலைக்கு முக்கிய காரணமாகக் கருதப்படுவது, மூலதனப் பொருள்களின் இறுதிநிலைத் திறனின் சீர்குலைவே ஆகும். பொருளாதார மந்தகாலத்தில் மிகவும் குறைவான வட்டி வீதம் கூட பொருளாதாரத்தைப் பழைய நிலைக்குத் திருப்பக் கொணராததற்குக் காரணமும் இதுவேயாகும். அதாவது பொருளாதார ஏற்றத் தாழ்வுகளுக்குக் காரணம் மன இயலேயன்றி, பண இயல் அன்று. (Psychological but not monetary)

இனி விலைநிலையை நிலைபெறச் செய்யவேண்டியவற்றைக் குறித்துப் பார்ப்போம். விலைநிலையை நிலைபெறச் செய்யப் பலவழிகள் உள்ளன. சிலர் மாறுத நிலையுடைய விலைநிலையையும், இன்னும் சிலர் பெல்ல உயரும் விலைநிலையையும், பின்னும் சிலர் மெதுவாகக் குறையும் விலைநிலையையும் பரிந்து உரைத்துள்ளனர். பொது விலைநிலையை நிலைநிறுத்தும் எந்தக் கோட்பாட்டின் நோக்கமும் பணத்தின் மதிப்பை ஒரு குறிப்பிட்ட அளவில் நிலைக்கச் செய்வது மட்டுமாக இருந்தால் போதாது. அக்கோட்பாடு, உற்பத்தி, மற்றும் வேலைவாய்ப்புக்களைப் பெருக்கவும் பயன்படவேண்டும். விலைகள், மற்றும் உற்பத்திச் செலவுகளுக்கு இடையே உள்ள வேறுபாடுகள் சமமாக இருக்குமாறு செய்வதிலும், பொருள்கள் உற்பத்தி செய்வதிலும், சேவையிலும், நியாயமான இலாபம் கிட்டும்படிச் செய்வதிலும் உள்ள சிக்கலே விலைநிலையை நிலைபெறச் செய்வதில் உள்ள சிக்கலாகும். இதையே வேறுவிதமாகக் கூறினால் பல்வேறு விலைகளின் இடையே முறையான உறவு இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிடின் பொருளாதார அமைப்பில் சமனற்ற நிலை ஏற்பட்டுவிடும். உதாரணமாக 1929-30-இல் அமெரிக்காவில் ஏற்பட்ட பொருளாதாரக் குலைவிற்குக் காரணம், ஊதியம் மற்றும் சம்பளங்களில் தொடர்ச்சியான உயர்ச்சி இல்லாது, இலாபம் மட்டும் மிகவும் அதிகமாக உயர்ந்ததே. இனி, பண இயல் கொள்கையின் துணையுடன் வட்டிவீதத்தைக் கருவியாகக் கொண்டு எவ்வாறு விலைநிலையை நிலைபெறச் செய்யலாம் என்பதனைக் காணலாம்.

பொது விலைநிலையை நிலைபெறச் செய்யவேண்டும் என்பவர்களின் முக்கியமான வாதம், வங்கிகள் தங்களுடைய வட்டிவீதத்தைச் செயல்படு (Active) நிலையிலும், செயல்படா (Passive) நிலையிலும் கட்டுப்படுத்த வேண்டும் என்பதாகும். செயல்படு நிலையில் விலைகளை உயர்த்தவும், உற்பத்தியினை அதிகரிக்கவும் முதலில் வட்டிவீதம் குறைக்கப்படுதல் வேண்டும் என்றும், மேலும் பொருளாதார உயர்ச்சி அபாயகரமான கட்டத்தை அடையும் முன்னர் அது உயர்த்தப்படுதல் வேண்டும் என்றும், மேலும் இவ்வாறு உற்பத்தி மற்றும் விலைகளின் நிலையை நிலைபெறச் செய்தல் வேண்டும் என்றும் யோசனை கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்த யோசனையில் பல சிக்கல்கள் உள்ளன. முதலாவதாக, பொருளாதார உயர்ச்சியின் தீவிரத் தன்மையைச் சுட்டிக் காட்டும் உண்மையான குறி எண்ணைக் கண்டுபிடிப்பது கடினமான காரியமாகும். பொது விலைநிலை என்பது தெளிவற்ற, பரவலான ஒன்றாகும். இது சராசரிகளின் சராசரியாகும். தொடர்பான விலைகளின் நிலை குறித்தோ, சில கூட்டான பொருள்களின் முக்கியத்துவத்தைக் குறித்தோ இக்கருத்து எந்த ஒளியையும் கொடுக்கவில்லை. மேலும் இன்றைய உலகில் விலைகளின் போக்கு, இலாபப் போக்கு கருதும் மக்களின் எதிர்நோக்குகள், விலை மற்றும் உற்பத்தியில் வட்டி வீதத்தைக் காட்டிலும் அதிகமான மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. அத்தகைய காலங்களில் சமநிலையைக் கொணர மிகவும் கடுமையான வட்டிவீத வேறுபாடுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். ஆனால் இது வணிக உலகில் தொல்லைகளை ஏற்படுத்துகின்றது. மேலும் பெரும்பாலான காலங்களில் வட்டி வீதத்தின் மேல் குறிப்பாக நீண்டகால வட்டிவீதத்தின் மேல் உள்ள வங்கித் துறையின் கட்டுப்பாடு முழுமையானதன்று. எனவே பல்வேறு வட்டி வீதங்களின் துணைகொண்டு பொது விலைநிலையை நிலைபெறச் செய்ய வங்கிகள் முயற்சி செய்வதன் பலன் ஐயத்திற்குரியதாகும்.

செயல்படா வகையில் (Pa sive Aspect) பொது விலைநிலையின் மாறுதல்களுக்கேற்ப, சமநிலையைக் காப்பாற்றும் வண்ணம் ஈடு செய்யும் முறையில் வட்டிவீதம் மாற்றப்படுதல் வேண்டும் என்ற கருத்துக் கூறப்பட்டுள்ளது. பேராசிரியர் இர்விங் பிஷரின் உண்மை வீதக் கோட்பாடு இதற்கு ஒத்துவருவதாகும். பேராசிரியர் பிஷர் உண்மை வட்டியினையும் பண வட்டியினையும் பாகுபடுத்துகின்றார். பிஷரின் கூற்றுப்படி உண்மை வீதம் என்பது, குறிப்பிட்ட பண்டங்களின் தொகுப்பினால் கூறப்படுவதும், பணத்தின் மதிப்பு மாறுபாட்டிற்கேற்பப் பரவலாக ஏற்றத்தாழ்வு அடைவதுமாகும். அவருடைய உண்மை வீதம் வட்டிவீதத்தை மட்டும் சரிசெய்து பெறப்பட்டதன்று; விலை மாறுதல்களுக்கான

சரிசெய்த முதலையும் பெறக்கூடிய ஒன்ருகும். இந்த வகையில் தான் உண்மை வட்டிவீதம், உண்மை ஊதியத்தைவிட மாருன ஒன்ருக உள்ளது.

பிஷரின் உண்மை வீதக் கோட்பாட்டின் குறைபாடுகள் பேராசிரியர் அடார்க்கர் அவர்களினுல் தெளிவாக்கப்பட்டுள்ளது. முதலாவதாக விலை மாறுதல்களுக்கான முதலையும் சேர்த்துக்கொண்டது பிஷர் செய்த தவருகும். பெரும்பான்மையான சமயங்களில் முதல் திருப்பப்படுவதில்லை. அல்லது நீண்ட நாட்களுக்குப்பிறகு தான் திருப்பப் படுகின்றது. உதாரணத்திற்குக் கடன் பத்திரங்களைக் குறிப்பிடலாம். அதனுல்தான் கடனளித்தவரும் கடன் பெற்றவரும் பணத்தின் மதிப்பு வேறுபாடுகளினுல் அதிகமாகப் பாதிக்கப்படுவதில்லை; அல்லது பலனடைவதில்லை. பேராசிரியர் அடார்க்கர் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர் :-

"உண்மை என்னவெனில், பணமுதல் என்பது அது குறுகிய காலத்ததோ நீண்ட காலத்ததோ தொடர்ச்சியான ஒன்ருக இருக்கின்றது. அது நடமாடும் நிதி; அது உண்மை முதலில் நீண்ட காலத்திற்கோ தொடர்ச்சியான குறுகிய பருவங்களுக்கோ கடனளிப்போரின் விருப்பிற்கேற்பத் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுகின்றது".

முதலை விட்டுவிட்டு வட்டியினை மட்டும் கணக்கிற்கு எடுத்துக் கொண்டால் பொது விலைநிலையில் ஏற்படும் மாறுதல்கள் நிச்சயமாக முக்கியத்துவம் வாய்ந்தவைதாம். கடன் கொடுத்தவரைப் பொறுத்த வரையில் வட்டி அவருக்கு ஒரு முறையான-தொடர்ந்த வருமானமாக இருப்பின், பணத்தின் மதிப்பில் ஏற்படும் மாறுதல்கள் அவருக்கு முக்கியமானவையாகும். அவ்வாறே கடன் பெற்றவருக்கு உற்பத்திச் செலவில் ஒரு கூறு என்ற வகையில் அவை முக்கியமானவையாகும். இந்த வகையில் உண்மை வீதம் என்பது உண்மை ஊதியக் கருத்துப்போலவே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஆனுல் அசலைச் சார்ந்த உண்மை வீதம், ஒரு காரணத்திற்காக முக்கியமானதன்று. பொது விலைநிலையில் உயர்வு ஏற்படும் போது, தொழிலை நடத்துகின்ற தொழில்துணிவோர், கடனளித்தவரின் செலவின் மேல் இலாபம் அடைவதில்லை ஆனுல் மற்ற உற்பத்திக் காரணிகளின் விலை முறையாக உயராததன் காரணமாகவே உண்மையில் அதிக இலாபம் அடைகின்றனர்.

வங்கித்துறைக்கு வழிகாட்டியாக உண்மை வீதத்தைக் கொண்டோமென்ருலும் அதுவும் பல கேடுகளுக்கு (absu dities) இட்டுச் செல்லும். இவ்வாருகப் பொது விலைநிலை 10 சதம் உயர்ந்

தால் மேலும் உண்மை வீதம் 5 சதமாக நிறுவப்படவேண்டியிருப்பின், அதன் காரணமாக பண வீதத்தை 15.5 சதமாக வைத்தல் அவசியமாகும். மேலும் இந்தக் கொள்கை, பொது விலைநிலை மாறுதலுக்கு முக்கியமான காரணமாக வட்டி வீதமே இருக்கின்றது என்ற உண்மையினையே ஒதுக்கிவிட்டது. உண்மை வீதம் இயற்கையான நிலையில் இருக்கவேண்டிப் பணவீதத்தை மாறுன நிலையில் வைத்தல் வேண்டும் என்பது பொருளற்ற ஒன்ருவதுடன் சுற்றுவழியான ஆய்வும் ஆகும். பொது விலைநிலையில் ஏற்படும் மாறுதல்கள் பணவீதத்தினுல் ஏற்படும் மாறுதல்களினுல் அல்ல என்ருலும், பணவீக்கத்தை 15.5 சத அளவிற்கு மிகவும் அதிகமாக உயர்த்துவது தேவையற்றதாகும். பணவீக்கத்தைச் சிறிதளவு உயர்த்துவது விலைகளின் உயர்ச்சிப் போக்கைத் தடுக்கப் போதுமானதாகும்.

இதுகாறும் விலைநிலையை நிலைபெறச் செய்ய உதவும் ஒரே ஒரு கருவியைப் பற்றித்தான் ஆராய்ந்தோம். ஆனுல் இது தவிர இன்னும் சில பண இயல், மற்றும் பண இயலற்ற கருவிகள் உள்ளன. அவை வரிவிதிப்பு, பொதுப்பணிக் கொள்கை முதலியவையாகும். விலையை நிலைபெறச் செய்யும் முயற்சியில் பல தொல்லைகள் அடங்கியுள்ளன. விலையை நிலைபெறச் செய்வதனுல் வேலைவாய்ப்பும் உற்பத்தியும் உயர்ந்து செல்லும் போக்கில் நிலைக்கச் செய்ய முடியும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. ஆனுல், இதற்காக நாம் தளர்ச்சியடைய வேண்டியது இல்லை. விலையை நிலைபெறச் செய்தல் பொருளாதார முறையில் உள்ள எல்லா நோய்களுக்கும் மருந்தாகாது. எனினும் நன்முறையில் அமைந்த பொருளாதார முன்னேற்றம் பெறுதல் நன்று.

இனி நாம் ஆஸ்திரியப் பொருளாதார அறிஞர் பேராசிரியர் ஹேயக் அவர்களின் நடுநிலைப் பணக்கோட்பாட்டை ஆராய்வோம். நடுநிலைப் பணக்கோட்பாட்டின் நோக்கம் தொழிலில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைச் சமமாக்க உதவும். இவர் வணிகச் சுழல் பண இயல் கூறுகளால் மட்டும் நிகழ்வது என்று நம்பவில்லை. இவர் நிலையான பணம் என்ற கோட்பாட்டை ஒதுக்கிவிட்டு நடுநிலைப்பணம் என்ற கோட்பாட்டை எடுத்துக் கொள்கின்ருர். பேராசிரியர் ஹேயக், சந்தை வட்டி வீதத்தைச் சமநிலை வட்டி வீதத்தைவிடக் குறைவாகக் கொள்வதன் மூலம், மூலதனப்பொருள்களின் உற்பத்தியினையும் அதிகரிக்க முடியும் என்று நம்புகின்ருர். உற்பத்திக் காரணிகள் நுகர்வோர் பொருள் உற்பத்தியிலிருந்து மூலதனப் பொருள் உற்பத்திக்கு மாற்றப்படுகின்றன. இது நமக்குத் தெரிந்ததே. ஆனுல் பேராசிரியர் ஹேயக், இது தொடர்ந்து நடைபெற இயலாது என்று நம்புகின்ருர். சிறிது சிறிதாக

தொழில் துணிவோரின் கடன்கள் சம்பளமாகவும், வட்டியாகவும், வாடகையாகவும் கொடுக்கப்படுகின்றன. இத்தகைய வருமானம் பெறுவோரின் நுகர்ச்சிப் பொருள்களின் தேவை விரிவடைகின்றது. இப்பொருள்களின் பற்றாக்குறை மூலதனப் பொருள்விலை உயர்வைக்காட்டிலும் இவைகளின் விலை உயர்வு வீதம் அதிகமாக இருக்கும்படிச் செய்கின்றது. நுகர்ச்சிப் பொருள்களின் உற்பத்தியைவிட மூலதனப் பொருள்களின் உற்பத்தி அதிகமாக உள்ளது. உற்பத்தி அமைப்பு மிகவும் கடினமாக ஆகின்றது. உற்பத்தி அமைப்பில் ஏற்படும் வளர்ச்சிகள் முடிவடைவதில்லை. இலாபம் குறித்த எதிர் நோக்குகளில் உள்ள முதல் தவறுகள் வெளிப்படுகின்றன. மேலும் வங்கிகள் வரையரையின்றிக் கடன்களை வழங்கவும் முடிவதில்லை. எனவே அவர்கள் வட்டி வீதத்தை உயர்த்தி, கடன் அளிப்பைச் சுருக்குகின்றார்கள். இக்காரணங்களால் பொருளாதார ஏற்றம் ஒரு முடிவிற்கு வருகின்றது. இவ்வாறு பேராசிரியர் ஹேயக்கின் கருத்தின்படி ஏற்றத்திற்கும் மந்தத்திற்குமான விளக்கங்கள் இரண்டாகும். முதலாவது வங்கித்துறை செயற்கையாக வட்டிவீதத்தைக் குறைப்பதன் மூலம், பண அளிப்பு அதிகரித்து உற்பத்தி அமைப்பு குலைவதற்கும், செல்வங்கள் தவறான முறையில் பங்கிடுவதற்கும் காரணமாக அமைகின்றது. இது முடிவில் பொருளாதார ஏற்றத்தின் குலைவிற்கும் வழியாகின்றது. இரண்டாவது, சேமிப்புக் குறைவின் காரணமாகப் பொருளாதார ஏற்றம் நீடித்திருக்க முடியாது. மூலதனப் பொருள் தொழில்களில் ஈடுபட்டிருப்போரின் வருமானம் சேமிக்கப்படாது, நுகர்ச்சிப் பொருள்களின் தேவையை அதிகரிக்கச் செய்கின்றது. எனவே பேராசிரியர் ஹேயக் வணிகச் சுழலைக் கட்டுப்படுத்தக் கூறுவதாவது; "வங்கிகள் செயற்கையாகப் பண அளிப்பை அதிகரிக்காமல் பயனுள்ள பண அளவைப் பொருளாதார அமைப்பில் நிலையாக அமைக்க வேண்டும்." தற்காலத்திய (Current) சேமிப்பு அளவையும், தற்காலத்திய முதலீட்டு அளவையும் சமமாக வைத்திருத்தல் வேண்டும். தற்காலத்திய சேமிப்பையும், தற்காலத்திய முதலீட்டையும் சமநிலையில் வைக்க உதவுவதும், மேலும் பயனுள்ள பண அளவை மாறாக வைத்திருக்க உதவுவதுமான வட்டி வீதமே 'சமநிலை வட்டி வீதம்' என்று சொல்லப்படுகின்றது. சந்தை வட்டி வீதமும், சமநிலை வட்டி வீதமும் சமமாக இருக்கையில் பணம் விலைகளைப் பொறுத்தவரையில் நடுநிலையாக இருப்பதாகச் சொல்லப்படுகின்றது.

இனி, பேராசிரியர் ஹேயக்கின் வணிகச்சுழல் கோட்பாடு பற்றிய திறனாய்வைக் காண்போம். சமநிலை வட்டி வீதத்தையும், நடுநிலைப் பணத்தையும் அமுலுக்குக் கொண்டு வந்தால் என்ன

ஆகும் என்பது குறித்துப் பார்க்கலாம். சமநிலை வட்டி - வீதம் என்ற கருத்தே குழப்பமான ஒன்றாகத்தான் இருக்கின்றது. நடுநிலைப் பணத்திட்ட முறையின் விளக்கத்தைப் பொறுத்தவரையில் நாம் ஜே. இ. மீட் (J. E. Mead:) அவர்களைப் பின்பற்றலாம்.

"நடுநிலைப் பணத்திட்டம் என்பது தனிமனிதர்கள், நிறுவனங்கள், அரசாங்கம் ஆகியவைகளின் தீர்மானங்களைத் தன்னுடைய செயல்கள் மூலமாகவோ, செயல்கள் இன்றியோ நடைபெறச் செய்யும் ஒன்றாகும். அது அத்தீர்மானங்களின் விளைவுகளைப் பணமில்லாப் பொருளாதாரத்தில் எவ்வாறு இருக்குமோ அவ்வாறு இல்லாமல் நேர்மாறாக இருக்குமாறு செய்கின்றது."

முதலாவதாக, சமநிலை வட்டிவீதம், மொத்தப் பயனுள்ள பண அளவு மாறாதிருக்கச் செய்தல், அதே சமயம் நடுநிலைமைத் தன்மையை நிலை நிறுத்தச் செய்தல் ஆகிய இரு பணிகளையும் செய்ய இயலுமா என்பது மிகவும் சந்தேகத்திற்குரியது. இவற்றில் பயனுள்ள பணம் என்பது பணச்சுற்றின் எண்ணிக்கையைப் பொறுத்தது. இவ்வெண்ணிக்கை மாறிக்கொண்டே இருப்பதாகும். வணிகத்துறை இதனைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவருவதற்குப் பல இடையூறுகள் உள்ளன. இதனைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப் போடப்படும் திட்டங்களில் தவறுகள் நிகழுமாயின் அதன் விளைவுகள் பணப்பெருக்க அல்லது சுருக்கப் போக்குகளை ஏற்படுத்திவிடும். இரண்டாவதாக, சமநிலை வட்டிவீதம் உண்மைச் சேமிப்பையும் முதலீட்டையும் சமமாக்குவதும் பயனுள்ள பண அளவை நிலையாக வைத்திருப்பதும் நடைமுறையில் சாத்தியமன்று.

பயனுள்ள பண அளவு நிலையான முன்னேறும் பொருளாதாரத்தில், பொது விலைநிலை குறிப்பிட்ட காலவரையில் வீழ்ச்சியடையும். உற்பத்தி நிலையாக இல்லாது மாறிக்கொண்டிருக்கும் காலம் வரை இது கடுமையான பின் விளைவுகளை ஏற்படுத்தும். நாகரீக உலகில் விஞ்ஞான முன்னேற்றத்தின் காரணமாக, உற்பத்தி அதிகரிப்பு என்பது மிகவும் சாதாரணமான தொன்றாகும். தற்போது தனித்தொழில்களின் உற்பத்தி அதிகரிக்கும் போது அவற்றின் உற்பத்தியான அலகுகளின் உற்பத்திச் செலவு குறையும். பண அளவு நிலையாக இருப்பதன் காரணமாக, விலைநிலையும் வீழ்ச்சியடையத்தான் வேண்டும். ஆனால் வங்கித்துறை பொருள்களின் தனித்த விலைகளைக் குறைக்க இயலாது. எனவே குறைந்த உற்பத்திச் செலவில் உற்பத்தியாகும் பொருள்களின் விலை குறையும் என்பதற்கு எந்த உத்திரவாதமும் இல்லை. இப்பொருள்களுள்

சிலவற்றினுடைய விலை அவைகளின் உற்பத்திச் செலவிற்குமேல் வைக்கப்பட்டிருக்குமானால் நடுநிலைப் பணத்திட்டத்தின் விளைவு, உற்பத்திச் செலவு குறையாத பொருள்களின் விலைகளைக் குறைக்க முயற்சி செய்வதாக அமையும். இவ்வாறு விலைகளுக்கும் உற்பத்திச் செலவுகளுக்கும் இடையே உள்ள சமன்பாடு பாதிக்கப்படும். ஆயினும் விலைகளுக்கும் உற்பத்திச் செலவுகளுக்குமிடையே நிகழக் கூடிய சமனற்ற நிலை, அப்பொருளாதார அமைப்பில் நிறைவுப் போட்டி (Perfect competition) இருப்பின் ஏற்படாது. ஆனால் நிறைவுப் போட்டியிருப்பதாகக் கொள்ளும் எடுகோள் உண்மைக்குப் புறம்பானதாகும்.

மேலும், ஒரு குறிப்பிட்ட அளவு பணப்புழக்கம், கூலியின்மேல் ஏற்படுத்தக்கூடிய விளைவுகளையும் நாம் ஆராயவேண்டும். பேராசிரியர் ஹேயக்கின் ஆராய்ச்சிக் கட்டுரையின்படி, உற்பத்திச் சக்தியின் அதிகரிப்பு விலைநிலையைத் தாழச் செய்கின்றது, இதற்குச் சராசரி பணக்கூலி நிலையாக இருத்தல் வேண்டும். ஆனால் தொழிலாளிகளோ மனோதத்துவ ரீதியில், விலைகள் குறைந்தால் கூட, மாறாத கூலி, நிலையை எதிர்ப்பவர்களாக இருக்கிறார்கள். மாறாக, அவர்கள் மாறாத விலை நிலையினையும், உயர்ந்து செல்லும் கூலியினையும் விரும்புகின்றார்கள். மேலும் சமநிலை பாதுகாக்கப்பட வேண்டுமெனில் உற்பத்திச் சக்தி அதிகரிக்கையில் அலகு வழிக்கூலி (Piece rate wage) குறைதல் வேண்டும். ஆனால் முறையான அமைப்பைக் கொண்ட சக்திவாய்ந்த தொழில் சங்கங்களையுடைய தொழிலாளிகளோ, காலவாரியான, மற்றும் அலகுவாரியான கூலிகள் இரண்டின் பணக்கூலி உயரவேண்டும் என்று கோருகின்றார்கள். இவ்வாறு ஏற்படும் இடையூறுகளையும் சிக்கல்களையும் எவ்வாறு சரிசெய்வது என்பது தெரியவில்லை.

மேலும் சில ஒப்பந்தங்கள் பண அடிப்படையில் நீண்ட காலப் பருவத்திற்கு உறுதி செய்யப்படுகின்றன. உதாரணமாக, கடன் பத்திரங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய வட்டி வீதம், பணத்தின் அடிப்படையில் உறுதிசெய்யப் படுகின்றது. பணவழி விலைகள் வீழ்ச்சியடையும்போது, கடன் பத்திரங்கள் வைத்திருப்போர் உண்மைவழிப் பொருள்கள், மற்றும் சேவைகளின் அடிப்படையில் கணக்கிட்டுப் பார்க்கும்போது, மாறான வீதங்களில் அதிகமான வட்டியினைப் பெறுகின்றனர். இந்நிலை சிலர் வீழ்ச்சியடைவதற்கும் வழிகோலும். நிலைப் பண உற்பத்திச் செலவு பெருகுவதன் காரணமாகப் பல தொழில்கள், மற்றும் வணிக நிறுவனங்களின் இயற்கையான இலாபம் குறைகிறது. இத்தகைய பின் விளைவு தொழிலுக்கு மிகவும் சேதத்தை உண்டாக்குவனவாம்.

நடுநிலைப் பணத்திட்டத்தின் காரணமாக ஏற்படக்கூடிய, சில மோசமான விளைவுகள் நிலைத்த தன்மையினையும், முன்னேற்றத்தையும் ஏற்படுத்த நடுநிலைப் பணத்திட்டம், சமனற்ற நிலைக்கும் குறைபாடுகளுக்கும் இட்டுச் செல்வது போலத் தோன்றுகிறது. பேராசிரியர் ஹேயக்கின் நடுநிலைப் பணத்திட்டக் கோட்பாடு நிறைவுப் போட்டி இருப்பதாகவும், பொருளாதார அமைப்பு, இரப்பரைப் போன்று நெகிழ்ச்சியுடையதாக இருப்பதாகவும் கற்பனை செய்து கொள்கின்றது. பண இயல் கொள்கைகளைப் புரிந்து கொள்வதற்கு, பண்ட மாற்றுப் பொருளாதாரக் கொள்கைகள் பயன்படுமா என்பது மிகவும் ஐயத்திற் குரியது. பண்ட மாற்றுப் பொருளாதாரம் என்பது நிலையான பொருளாதாரம் அன்று; விருப்பத்தில் மாற்றங்கள், பழக்கத்தில் மாற்றங்கள், கண்டு பிடிப்புக்களில் மாற்றங்கள் ஆகியவை பண்டமாற்றுப் பொருளாதாரத்திலும் நிகழ்கின்றன. பண்ட மாற்றுப் பொருளாதாரத்தில் கூட பலவகைப் பொருள்கள் பலவகை மனிதர்களுக்கு மதிப்புச் சேமிப்பு பொருள்களாகப் பயன்படுத்தப் படுமாதலால் அங்கும் சமநிலை இருக்க இயலாது. இது பணஇயல் பொருளாதாரத்தில் அதனைவிட உண்மையாக இருக்கும். பேராசிரியர் ஹேயக், உண்மையான உலகம் எதிர் நோக்கா நிகழ்ச்சிகள் பல கொண்டது எனபதையும், தற்காலப் பொருளாதார நடத்தைகளில் எதிர்நோக்குகள் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பதனையும் முற்றிலும் ஒதுக்கிவிட்டதால், பணத்தின் மதிப்புச் சேமிப்புப் பணிக்கு அவர் எந்தவித முக்கியத்துவமும் கொடுக்கவில்லை. பணத்தைப் பதுக்கி வைத்தல் குறித்தோ, மக்களது உயர்ந்த பண ரொக்க விருப்பு குறித்தோ எதுவுமே அவருக்குத் தெரிந்ததாகத் தெரியவில்லை. நடுநிலைப் பணத்திட்டத்தில்கூட, பணத்தைப் பதுக்கி வைத்தல் ஓரளவிற்கு இருக்கக்கூடும். இப்பதுக்கல் பண இயல் அதிகாரிகள், பண அளவை அதிகரித்து, குறுக்கிடாதிருப்பின், முதலீட்டுச் செயல்களைக்கூடத் தடை செய்கின்றது. எனவே பண வழிப் பொருளாதாரமும், மாறாச் சமநிலையும் இணைந்து இருப்பது பொருந்தாது.

பேராசிரியர் ஹேயக், நடுநிலைப் பணத்திட்டத்தைப் பரிந்துரைக்க நினைத்ததின் முக்கியமான நோக்கம், உண்மைச் சேமிப்பிற்கும் உண்மை முதலீட்டிற்கும் இடையே சமநிலையை ஏற்படச் செய்து, அதன் மூலம் கட்டாய சேமிப்பைத் தடை செய்ய வேண்டும் என்பதே. பேராசிரியர் கெயின்ஸின் பொதுக் கோட்பாட்டைப் படித்தவர்கள், உண்மைச் சேமிப்பும் உண்மை முதலீடும் எப்போதும் சமமாக இருப்பதால், அவற்றைச் சமமாக்க முயற்சிப்பதன் மூலம் எந்த நோக்கமும் நிறைவேறாது என்பதனை நன்கு

அறிவர். முதலீட்டின் ஒவ்வொரு அதிகரிப்பும் உடனுக்குடன் சேமிப்பையும் அதிகரிக்கச் செய்கின்றது. எனவே பணஇயல் அதிகாரிகளின் திட்டங்கள் முதலீட்டை வளரச் செய்வதற்குத் தான் இருக்க வேண்டும். அவ்வாறு செய்யின சேமிப்பும் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளும்; அல்லது தானே வளர்ச்சியடையும். எனவே சமநிலை வட்டி வீதம் என்ற கருத்தோ, இயற்கை வட்டி வீதம் என்ற கருத்தோ பயனுடையதன்று. இவை முழுவேலை நிறைவுடைய, நிலையான பொருளாதாரத்திற்கு வேண்டுமானால் பயன்படலாம்.

பேராசிரியர் ஹேயக் குறிப்பிடுவதுபோல் இன்றயை உலகின் தொழில், மற்றும் வாணிப வளர்ச்சிக்குப் பெரிதும் காரணமாக இருப்பது, வளர்ச்சி பெற்ற வங்கித்துறையும், வங்கிக் கடன் திட்டமும் தான். எனவே வங்கித்துறை செயல்படாது இருக்கவேண்டும் என்று பண இயல் அதிகாரிகள் கூறுவது அறிவுடைமையாகாது. திடமான கடன் கொள்கையை மேற்கொள்வதன் மூலம், வங்கித் துறை, பயன்படுத்தாத வளங்கள் இருக்கும்வரை, தொழில் நடவடிக்கைகளைத் தூண்ட முடியும். முழுவேலை நிறைவு என்னும் எடுகோளும் உண்மைக்கு மாறானது. அதாவது உயர்ந்த அளவு உற்பத்தியினைப் பெறவும், முழுவேலை நிறைவினை நோக்கிச் செல்லவும் வங்கித்துறையின் தீவிரமான தலையீடு தேவை யாகிறது.

எனவே நிலையான பணத் திட்டங்கள், முற்றும் நடு நிலைப் பணத்திட்டங்கள் ஆகியவைகளை ஒதுக்கி விடலாம். நம்முடைய நோக்கம், நம்மிடையே உள்ள வழிகளின் மூலம் குறிப்பாகத் தகுந்த வட்டிவீதக் கொள்கையின் மூலம், முழுவேலை நிறைவை ஏற் படுத்துவதாக அமையவேண்டும். பொருளாதார மந்தங்களைப் பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிராது, பொருளாதார ஏற்றத்தை முழுவேலை நிறைவு ஏற்படும்வரையில் எவ்வாறு தக்கவைத்துக் கொள்வது என்பது குறித்தே சிந்திக்க வேண்டும், இக்கருத் தினையே பேராசிரியர் கெயின்ஸ் அவர்கள் கொண்டிருந்தார்கள். அதனால்தான் பொருளாதார ஏற்றத்தைச் சரிசெய்யக் கவலைப் படாது, அக்காலத்திற்கு உயர்ந்த வட்டி வீதத்தைப் பரிந்துரைக் காது குறைந்த வட்டி வீதத்தையே பரிந்துரைத்தார். வட்டி வீதத்தை, முதலின் இறுதிநிலைத் திறன் அளவிற்குத் தொடர்ந்து குறைத்துக் கொண்டே வருதல் வேண்டும், அவ்வளவில்தான் வேலை நிறைவும் அமைந்திருக்கும்.

ஆயினும் வேலை நிறைவு என்னும் இலட்சியத்தைப் பணஇயல் கொள்கைகளினால் மட்டும் அடைந்துவிட முடியாது. ஒரு திட

மான, தீவிரமான பண இயல் கொள்கையுடன் இன்னும் சில வழிகளும் சேர்க்கப்படுதல் வேண்டும். முதலீட்டு விகிதத்தையும் நுகர்ச்சிவிருப்ப விகிதங்களையும் தூண்டுகின்ற காரணிகளைப் பெருக்க வேண்டும். ஏனெனில் இவை இரண்டும் தாமாகவே, மொத்த வருமானத்தையும் மொத்த வேலை வாய்ப்புக்களையும் தீர்மானிக்கின்றன. நுகர்ச்சி விருப்பத்தினைப் பல வழிகளில், குறிப்பாக—சமமான செல்வப் பங்கீடு நுகர்வோருக்குக் கடனளித்தல் போன்றவைகளின் மூலம் தூண்ட முடியும். முதலீட்டு வீதத்தைத் தகுந்த கடன் கொள்கையின் மூலமும் பெருக்க இயலும். ஆயினும் முதலாளித்துவ முறையில் உள்ள சில காரணங்கள் இவை சுமுகமாக முன்னேருதவாறு தடைசெய்கின்றன. இவற்றில் முக்கியமானது, மக்களின் எதிர்நோக்கு என்னும் மனோதத்துவக் காரணமாகும். இன்றைய உலகில் எதிர் காலத்தைக் குறித்த எதிர்நோக்குகள் வர்த்தக அளவினைப் பெரிதும் பாதிக்கச் செய்கின்றன. வாணிக நம்பிக்கை அதிகமாக இருக்கும்போது தொழில் மற்றும் வாணிகம் சுறுசுறுப்பாக இயங்க வேலைவாய்ப்புக்கள் பெருகுகின்றன. பின்னர் ஏதோ சில தெரியாத காரணங்களால், வாணிக நம்பிக்கை தகர்க்கப்படுகின்றது. முதலில் இறுதிநிலைத் திறன் தொடர்ந்து வீழ்ச்சியடையவும் மக்களின் ரொக்க நீர்மை விருப்பு அதிகரிக்கின்றது. உற்பத்தி குறைந்து கடுமையான வேலைவாய்ப்பின்மையும், பொருளாதாரச் செல்வங்களின் கழிவும் ஏற்படுகின்றன. பெரும்பாலான நேரங்களில், மக்களின் நம்பிக்கை எக்காரணத்தினுல் தகர்ந்ததோ அது உண்மையாக இருப்பதில்லை. மக்களிடம் மட்டும் எதிர்காலத்தைக் குறித்துப் பல்வேறு எண்ணங்கள் இருக்குமேயானுல், இந்த எதிர்நோக்குகள், வளமான எதிர்காலத்தைக் குறித்த எண்ணங்களில் தவறுகள் அல்லது மோசமான எதிர்காலம் என்ற எண்ணத்தில் நிகழும் தவறுகள் ஆகியவற்றினுல் தொழிலுக்கோ, வணிகத்திற்கோ எந்த ஊறும் ஏற்படாது. அப்படியிருப்பின் வளமான எதிர்காலம் என்ற எண்ணத்தில் ஏற்படும் தவறுகளும், மோசமான எதிர்காலம் என்ற எண்ணத்தில் ஏற்படும் தவறுகளும் ஒன்றையொன்று சரி செய்துவிடும். ஆனுல் உண்மையில் இந்தத் தவறுகள் ஒரே திசையில் நகர்கின்றன.

தனித்தன்மை நிறைந்த பொருளாதாரத்தில் மக்களின் எதிர்நோக்குகளைத் திறமையாகக் கட்டுப்பாடு செய்வது மிகவும் கடினமாகும். "முதலீட்டு அளவினைக் கட்டுப்பாடு செய்வதைத் தனி

யார் கைகளில் விட்டுவிடுவது பத்திரமானதன்று''. என்று கெயின்ஸ் முடித்துள்ளார். தொழில் அமைப்பு சீரழியாது காக்கப் படவேண்டுமானல் ஓரளவிற்கு மத்திய மயமாக்கப்பட்ட பொருளாதாரத் திட்டமிடுதல் தேவைதான். தற்போது பெரும்பாலான நாடுகள் முற்றிலும் ருஷ்ய வழியிலும் செல்லாது, அதே சமயம் முற்றிலும் முதலாளித்துவ வழியிலும் செல்லாது, இரண்டு வழிகளையுமே மேற்கொள்வது மகிழ்ச்சிக்குரியதேயாகும்.

8. வளர்ச்சி குறைந்த நாடுகளில் குறைந்த வட்டிவிகிதங்கள்

வளர்ச்சி குறைந்த நாடு என்பதன் பொருள், வருவாயில் பின் தங்கிய, அல்லது வறுமையான மக்களின் சராசரி உண்மை வருமானம் மிகக் குறைந்த நாடு எனலாம். வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கென்றே சில இயல்புகள் உண்டு. அவற்றில் ஒன்று, மூலதனத்தின் இருப்பும் முதலீட்டின் விகிதமும் குறைவாக இருக்கும். முதலீட்டின் விகிதம் 3 - 6 சதவிகிதம் என்று சொல்லலாம். இந்தியா போன்ற சில நாடுகள் இந்த இயல்புகளையுடையனவாக இருக்கின்றன. அதனுல் இந்தியா ஒரு வளர்ச்சி குறைந்த நாடு என்று சொல்லாம்.

மூலதனம் பற்றுக்குறையாக இருந்தாலும்கூட வளர்ச்சி குறைந்த நாடுகளில் வட்டிவிகிதம் பொதுவாகக் குறைவாக இருத்தல் ஓர் அதிசயமான புதிராகவே தோன்றுகிறது. மூலதனத்தின் அளிப்பானது குறைந்த அளவு உண்மை வருமானத்தில் வரையறை செய்யப்பட்ட உள்நாட்டுச் சேமிப்புக்களின் பருமனைப் பொறுத்திருக்கிறது. உண்மை வருமானத்தின் அளவு குறைவாக இருப்பதன் காரணம் மிகக் குறைந்த உற்பத்தித் திறன். அதற்குக் காரணம் மூலதனத்தின் குறைந்த அளிப்பும் உபயோகமுமாகும். இதைத்தான் "வறுமையின் விடவட்டம்" (Vicious Circle) என்று கூறுகிறுர்கள்.

வளர்ச்சி குறைந்த நாடுகளில் மூலதனம் கிடைப்பது அருமையாக இருந்தாலும், தராதர வட்டிவிகிதம் குறைவாக இருப்பதைத் தொன்மை வட்டிவிகிதக் கோட்பாட்டின் உதவியைக் கொண்டு விளக்கிக் கூறலாம். கீன்சின் வட்டிக் கோட்பாடு பெரும்பாலும் வளர்ச்சி குறைந்த நாடுகளுக்கு ஒவ்வாது. ஏனென்ருல் கீன்சின் கோட்பாட்டிலடங்கிய எடுகோள்கள் வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அமைப்புக்களில் காணப்படமாட்டா. முதற்கண்,

கீன்ஸ் பொருளாதார அமைப்பு பணவாக்கத்திற் குட்பட்டது என்றும், கொடுக்கல் வாங்கல்கள் எல்லாம் பணச்சாதனத்தின் மூலமே நடைபெறுவதாகவும் எண்ணிக் கொள்கிறார். அதற்கு மாறாக, வளர்ச்சி குறைந்த நாடுகளின் பொருளாதார அமைப்பில் மிகுதியான பகுதி பணவாக்கப்படுத்தப் படாததாகவும், வட்டிவிகித மாறுதல்கள் பொருளாதார முயற்சிகளையும், தன்மைகளையும் எந்த விதத்திலும் பாதிக்காதவையாகவும் இருக்கின்றன. மேலும் கீன்சு பணச்சந்தை, மிகுந்த உயர்நிலையில் ஒழுங்குபடுத்திய அமைப்பாகவும், அவைகளின் கிளைச் சந்தைகள் உண்டியல்களுக்கும், பத்திரங்களுக்கும் இயங்கிவருவதாகவும் எண்ணிக் கொள்கிறார். அவ்விதச் சந்தையில் ரொக்க விருப்போ அல்லது பணத்தின் தேவையோ வட்டிவிகித மாறுதல்களுக்கு ஏற்றபடி இசைந்து செயல்படும். முக்கியமாக, பணத்தின் ஊகவாணிகத்தேவை மிகவும் வட்டி நெகிழ்வுடையதாகவும் இருக்கிறது. வளர்ச்சி குறைந்த நாடுகளில் பணச்சந்தையானது, 'இல்லாமை' என்ற காரணத்தினாலேயே முக்கியமாகத் தோன்றுகிறது. உண்டியல் சந்தை, பத்திரங்கள் சந்தை போன்ற சில உபசந்தைகள் அவ்வளவு சிறப்பு வாய்ந்தனவாக இருப்பதில்லை. இக்காரணங்களினால்தான் பணத்தின் ஊக வாணிகத் தேவையின் முக்கியம் குறைந்ததாயும், பணவிகிதத்தை நிர்ணயிக்கக் கூடியதாயும் கீன்சின் ரொக்க விருப்பக் கோட்பாட்டில் காணப்படுவதுபோல் இருப்பதில்லை.

வளர்ச்சி குறைந்த நாட்டின் பணம், வட்டி முதலிய சிக்கல்களை ஆராய்வதற்கு கீன்சின் கோட்பாடு ஒரு உகந்த கருவியாக இல்லை என்று தள்ளிவிட்டு, இப்போது நாம் தொன்மைக் கோட்பாட்டைச் சற்றுக் கவனிக்கலாம்.

வட்டியின் தொன்மைக் கோட்பாட்டின்படி வட்டிவிகிதம் மூலதனத்தின் அளிப்பு, தேவை என்ற இரண்டு சக்திகளினால் நிர்ணயிக்கப் படுகிறது என்று நமக்குத் தெரியும். வளர்ச்சி குறைந்த பொருளாதார அமைப்பில் வட்டிவிகிதம் குறைவாக இருப்பதற்கு அடிப்படை விளக்கம் யாதெனில், மூலதனத்தின் அளிப்பு குறைவாக இருப்பது போலவே அதன் தேவையும் அதேபோல் குறைவாக இருப்பது. முதலீட்டுக்காக மூலதனம் தேவைப்படுவது குறைவாகக் காரணம் முதலீடு செய்யத் தூண்டும் சக்தி குறைவாக இருப்பதுதான்; அல்லது கீன்ஸ் சொல்வதுபோல் முதலீட்டின் இறுதிநிலைத்திறன் குறைவாக இருப்பதுதான். முதலீட்டத்திற்கு ஊக்குவிப்புப் பலவீனமாக இருப்பதற்குக் காரணம் பேராசிரியர் நர்க்சே விளக்கியதுபோல வளர்ச்சி குறைந்த நாட்டில் பண்டங்களுடையவும் பணிகளுடையவும் சந்தை மிகவும் சிறிதளவாக இருப்பதெனலாம். ஓர் அங்காடியின் அளவை அடிப்படையை

நிர்ணயிப்பது உற்பத்தித்திறன், வருமானம் இவைகளின் மட்டமே (நிலையே) யாகும். பெருவாரியான மக்களின் உண்மை வருமான அளவு மிகக் குறைவாக இருப்பதால் முதற்செறிவுடன் கூடிய நுட்பவினை முறை உற்பத்தியின் மூலம் செய்யக்கூடிய சந்தை உற்பத்திக்கு வேண்டிய மொத்தத் தேவை யில்லாமல் போய்விடுகிறது.

விருத்தி செய்யப்பட்ட நுட்பவினை முறை உற்பத்தியில் மூலதனத்தை இலாபத்துடன் கையாளத் தடுக்கவோ, தைரியமிழக்கச் செய்யவோ ஒரு சிறு அளவுள்ள சந்தையால் முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டுக்கள் எவ்வளவோ காண்பிக்க முடியும். கையினால் செய்த செருப்புக்களுக்குப் பதிலாக, ஒரு தொழில் முயல்வோன், மிக விலையுயர்ந்த நல்ல தரமான செருப்புக்களை உற்பத்தி செய்தாலும் மக்களின் வறுமை காரணமாகத் தடைப்படும் தேவை அந்தத் தொழில் முயல்வோனை ஏராளமான நட்டத்திற் குள்ளாக்கி விடும். மற்றோர் எடுத்துக்காட்டைப் பார்க்கலாம். தனி முதலாளிகள் இந்தியாவில் மோட்டார்களையும் டெலிவிஷன் செட்டுகளையும் உற்பத்தி செய்ய மிகப் பெருந்தொகையை முதலீடு செய்ய விரும்பலாம். ஆனால் இப்போதைய பொருளாதார முன்னேற்றத்தின் நிலையில் மிகச் சிலரே இம்மாதிரியான போகப் பொருள்களை அனுபவிக்க முடியுமாதலால் முதலீடு செய்யும் விருப்பம் நிறைவேறாமல் போய்விடலாம். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற தொழில் முன்னேற்றங் கண்ட நாடுகளில் உற்பத்தி செய்கின்ற பல பொருள்கள் வளர்ச்சி குறைந்த நாடுகளில் விற்பனையாகலாம். ஒரு சில வாரங்களுக்கோ, சில நாட்களுக்கோ இயந்திர அமைப்பைப் பயன்படுத்தி ஓர் ஆண்டுக்குத் தேவையான நுகர் பொருள்களை உற்பத்தி செய்துவிடலாம். இதனால் இந்த இயந்திர அமைப்பு ஓர் ஆண்டில் ஏனைய மாதங்களுக்கு வேலையற்றுக் கிடக்க நேரிடும். பேராசிரியர் நாக்சே, சிலி' நாட்டிலிருந்து ஓர் எடுத்துக்காட்டை விளக்குகிறார். அந்நாட்டுக்கு ஓர் ஆண்டுக்குத் தேவையான ஒருவித இருப்புப் பண்டத்தைப் புதிய ரோலிங் மில் (சுழல் ஆலை) ஒன்று மூன்று மணி நேரத்திலேயே உற்பத்தி செய்து விடுகிறதாம். இதுமாதிரி சில லத்தீன் அமெரிக்க நாடுகளில் வெளி நாட்டாரால் அமைக்கப்பட்ட சில இயந்திர அமைப்புக்கள் அந்நாடுகளின் தலச்சந்தைகள் மிகச்சிறியனவாக இருந்தமையால் திருப்பி எடுத்துக்கொள்ளப்பட்டன. இம்மாதிரிச் சூழல்களில் முதலீட்டுக்கு ஏற்படும் குறைந்த பணத்தேவை முதல் கிடைப்பருமையின் விளைவுகளை ஓரளவு போக்கி விடுகிறது; அதன் காரணமாக வட்டிவிகிதமும் தாரதரம் குறைந்த மட்டத்திலேயே நின்று விடுகிறது.

ஒரு வளர்ச்சி குறைந்த நாட்டில் வேலையின்மையின் அளவு அதிகமிருப்பதால் முதலைவிடத் தொழிலாளர் மலிந்து காணப் படுகின்றனர். இதனால் இந்த மலிவான தொழிலாளர்களை உபயோகப்படுத்திக் கொள்வது கிடைக்கும் முதலை உபயோகப் படுத்திக் கொள்வதைவிட இலாபமுள்ளதாக இருக்கிறது. இதன் விளைவாக முதலின் தேவை மிகக் குறைந்த நிலையிலேயே இருக் கிறது.

வெளிச் சிக்கனங்கள் என்று சொல்லப்படுகின்ற மின்சாரம், தண்ணீர் அளிப்பு, போக்குவரத்து தொடர்புச் சாதனங்கள், சாலை கள், வங்கி இன்னும் நிதிக் கழகங்கள், பயிற்சி பெற்ற உழைப்பு முதலியவைகள் வளர்ச்சி குறைந்த நாடுகளில் இல்லாமையினால் முதலீட்டின் பெருக்க அளவு தடைப்படுகிறது. தொழிற்பகுதிக்கு வேண்டிய முதலீட்டுக்கு இச்சாதனங்களனைத்தும் தேவைப்படு கின்றன. இவைகளின்றேல் தனியார் முதலீடு வெளிவரவே வராது. ஒழுங்கான மின்சக்தி அளிப்பில்லையானாலும், போக்கு வரத்து தொடர்புச் சாதனங்கள் மிகத் தாழ்ந்த நிலையில் இருந்து பண்டங்களைச் சந்தைக்குக் கொண்டு செல்லக்கூட முடியாத நிலையில் இருந்தால் தனித் தொழிற்சாலை வைக்க எந்தத் தனி யாரும் (தொழில் முயல்வோரும்) முன் வரமாட்டார்.

9. பொதுவுடைமைச் சமூகத்தில் வட்டி

இதுவரையில் வட்டியின் சிக்கல்களைத் தனியார் சொத்துரிமை (போட்டியில்லாத) தடையிலாத் தொழில் முயற்சி என்ற அடிப்படையில் ஆராய்ந்து வந்தோம். ஒரு தனித்த பொருளாதாரத்தில் வட்டி கொடுத்தல் மிகமுக்கியம்; இல்லையானால் முதல் அளிப்பு முன் வராது என்ற முடிவுக்கு வந்தோம். அதனுடன் வட்டி என்பது, முதல் அளிப்பவருடைய துய்ப்புத் தவிர்ப்புக்காகக் கொடுக்கப்படும் பணம் இல்லை என்றும் சொன்னோம். முதலுக்கு ஓர் இயற்கையான வருமானம் இல்லை. வட்டியானது தனியார் சொத்தின் அமைப்பைப் பொறுத்திருக்கிறது.

முதலாளித்துவச் சமூகத்தில் வட்டி வழங்கப் பெறுவதற்கு ஒரு தனிப் பெருங்காரணம் எந்த ஒரு தொழிலிலும் முதலை ஈடுபடுத்தி இலாபத்தை உண்டாக்க இருக்கும் ஒரு வாய்ப்புத்தான். நாம் முன்பே பார்த்ததுபோல முதலீடு செய்யும் வாய்ப்பு மட்டுமே வட்டிக்குக் காரணமன்று. முதலீடு செய்ய ஒரு வாய்ப்பும் இல்லாச் சமூகத்தில்கூட வட்டிவிகிதம், அளவு மீறிய நுகர்வுத் தேவையை அடக்குவதற்காகத் தேவைப்படுகிறது. இதுவரையில் வட்டி விகிதத்தின் பொருளாதாரத் தோற்றத்தைக் கண்டோம். சமூகப் பார்வையின் அடிப்படையில் முதலாளித்துவ சமூகத்தில் வட்டி விகிதத்தின் முக்கிய இயல்பானது, அது வகுப்பு வருமானம் என்பதே. அது, செல்வம், வருமானம், வாய்ப்பு இவற்றில் ஏற்றத் தாழ்வையும், வாரம் பெறுவோர், உழைப்பாளிகளுக்குள் எதிர்ப்பு மனப்பான்மையையும், இன்னும் சில சமூகப் பிரச்சினைகளையும் விளைவிக்கின்றது.

வட்டி பொதுவாக ஒரு தனித்த சமூகத்தில் புதிய குண நலன் என்று கருதப்படுகிறது. ஆதலால் அநேகர் பொதுவுடைமைச் சமுதாயத்தில் வட்டி இராது என்று உறுதியாய்ச் சொல்லுகின்றார்கள். இக்கருத்து இரண்டுவித விளக்கங்களுக்கு இலக்காகிறது.

அது, அக்கருத்தைக் கொண்டுள்ளவர்களுக்கே தெளிவாக்க முடியாதபடி அமையலாம். முதல் விளக்கமாவது பொதுவுடைமையில் வட்டி, வகுப்பு வருமானமாக இராது. இரண்டாவது விளக்கமாவது, வட்டி விகிதம் ஒரு வகுப்பு வருமானமில்லை என்பதோடு பொருளற்றதும் பயனற்றதுமாகும். இந்த இரு கருத்துக்களையும் ஆராய்ந்து எதை ஏற்றுக் கொள்வது என்று முடிவு செய்வோம். இதை முடிவு செய்யுமுன் பொதுவுடைமைச் சமூதாயத்தின் இயல்பைச் சிந்திக்கலாம்.

பொதுவுடைமைச் சமூதாயம் என்றால் அந்தச் சமுதாயத்தில் எல்லாவிதமான உற்பத்திச் சாதனங்களும் மொத்தமாக அரசுக்குச் சொந்தமாகவும், சமூகத்திற்குப் பலனளிக்கக் கூடிய வகையில் செயல் படுத்தப்படவும் வேண்டும் என்று நாம் கருதுகின்றோம். அச்சமுதாயத்தில் உற்பத்தி முழுமையும் ஒரு மத்திய திட்ட அதிகாரியால் நடத்தப்பட்டும், கட்டுப்படுத்தப்பட்டும் வரும். இச்சமுதாயத்தில் இலாபம், அதாவது எந்தவிதத் தரகரின் இலாபமும் இராது. இச்சமுதாயத்தில் நுகர்வோர் பொருள்கள் தனியார் வசம் இருக்க அனுமதிக்கப்படும். வேலைக்கும் உணவுக்கும் பண்டமாற்றுப் பொருளாதாரத்தில் தேவையான அளவுக்குத் தேர்ந்தெடுக்கும் உரிமையைக் குடிமக்கள் அனுபவிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம்.

பொதுவுடைமைப் பொருளாதாரம் என்பது ஒருவிதத்தில் திட்டமிட்ட பொருளாதாரமென்றாலும் அதைப் போன்றது அன்று. ஒவ்வொன்றும் ஒரு முடிவான நோக்கைக் கொண்ட பலவகைப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரமாயிருக்கிறது. சமுதாயத்தின் ஒரு சிறிய பகுதிக்காகவே வேண்டுமென்று திட்டமிட்ட பொருளாதாரத்தைச் செயல்படுத்தலாம். அடிமைத்தனம் காணப்படும் சமுதாயத்தில் ஒரு சிறிய உயர்குலப் பிரிவினர் தங்கள் விருப்பிற்கேற்பச் சமுதாயம் முழுவதுக்கும் ஒரு திட்டமிட்டு அடிமைகளைப் பற்றி நினைக்காமல் தொழிற்சாலையை ஏற்படுத்தலாம். பொதுவுடைமைச் சமுதாயத்தின் முடிவு ஒரு சிலருடைய நன்மைக்காக அல்லாமல் பலருடைய நன்மைக்காக அமையும். இப்போது பொதுவுடைமைக்கு இலக்கணங் காண்போம்.

ஒரு பொதுப் பொருளாதாரத் திட்டத்தின்படி அசலான உற்பத்திச் சாதனங்கள் முழுச்சமுதாயத்திற்குச் சொந்தமாக்கப்பட்டு, சமுதாயத்திற்குப் பிரதிநிதியாகவும், பொறுப்புள்ள வகையிலும் செயல்படுத்தும் உறுப்பைக் கொண்ட சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப்புதான் பொதுவுடைமை. அது மட்டுமன்றி சமுதாயத்

தின் அத்தனை உறுப்பினர்களும் சம உரிமை அடிப்படையில் பொதுவுடைமை நோக்கின் திட்டமிட்டு உற்பத்தி செய்த விளைவு களைப் பங்கு போட்டுக்கொள்ள வகை செய்யப்பட்டும் இருக்க வேண்டும்.

அப்படிப்பட்ட ஒரு சமுதாயத்தின் பொருளாதாரக் கட்டமைப் பிலுள்ள எல்லா விவரங்களையும் பற்றி இங்கு ஆராய வேண்டிய தில்லை. பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பு பணவாக்கப் பொருளாதார அமைப்பு என்று கூட எளிதில் நாம் கொள்ளலாம். உபயோகப்படுத்தும் பணம் உழைப்புப் பணமாகவோ அல்லது வேறு எந்த விதப் பணமாகவோ இருக்கலாம், நுகர்வோருக்குத் தடையிலாச் சந்தையில் விருப்ப விலைக்குப் பொருள் பங்கீடு செய் யப்படுவதாக வைத்துக் கொள்வோம்.

இவ் வடிப்படைக் கருத்துக்களை வைத்துப் பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பில் வட்டி என்பது வகுப்பு வருமானமாக இருக்கிறதா என்பதைப்பற்றி ஆராய்வோம். வட்டி, வகுப்பு வரு மானமாக இருக்க முடியாதென்பது தெரிந்ததே. முதலின் தனிச் சொத்துரிமையிலிருந்தோ அல்லது நிலத்துக்கே சொந்தமான பொருள் உற்பத்திச் சாதனத்திலிருந்தோ கிடைக்கும் வருமானமே வட்டி. உற்பத்திச் சாதனங்கள் கூட்டாக அரசுக்குச் சொந்தமாக இருப்பதால் தனித்த எவரும் வட்டி என்ற வருமானத்துக் குரிய வராகார். அதே காரணத்திற்காக வாரமும் கூட வகுப்பு வருமான மாக இராது. எந்த விதமான சொத்து வருமானமும் பொதுவுடை மைச் சமுதாயத்தில் காணப்பட மாட்டாது. இருந்தாலும், சொந்த வருமானமாக வட்டியைக் காண்பது முடியாத ஒன்று இல்லை. ஆனால் அது மிகக் குறைந்த அளவே இருக்கும். பொதுவுடை மைச் சமுதாயத்திலும் சிலர் அவர்கள் வருமானம் அனுமதிக்கும் அளவைவிடத் தற்போதே நுகர்வதற்கு விரும்புகிறவர்கள் இருக்க லாம். அதேபோல இன்னும் சிலர் தங்கள் வருமானம் அனுமதிப் பதை விட மிகக் குறைந்த அளவே தற்போது நுகர விரும்புவார் கள். பிறகு அந்த நிறைந்த மிச்சத்தைப் பிற்காலத்தில் அதிக மாக நுகரப் பயன்படுத்துவார்கள். இந்த இருசாரருக்குமிடையே கடன் கொடுக்கல் வாங்கல் நல்ல முறையில் ஏற்படலாம். ஓரளவு வட்டி விகிதத்தைக் கூடக் கடன் வாங்குகிறவர்கள் கொடுக்கவும் கடன் கொடுப்போர் கேட்கவும் இசைவார்கள். இவ்வாறு நுகரும் நோக்கிற்காக ஏற்படும் காரியம் பலகாரணங்களினால் அதிக முக்கி யத்துவம் வாய்ந்ததாக இராது. முதலாவது, ஒரு தடையில்லாச் சந்தையில் இவ்வாறு கொடுக்கல் வாங்கல் ஏற்படுமா என்பதே ஐயப்பாடு. அரசு அவ்வாறான ஒரு சந்தையை அனுமதியாது.

இரண்டாவதாக, மக்களின் வருமானங்கள் ஒரு குறித்த காலத்திற்கு நிரந்தரமாகவே இருக்கும். பொது உடைமைச் சமுதாயத்தில் தனி மனிதர்களுக்கிடையே உள்ள செல்வ ஏற்றத்தாழ்வு மிகக் குறைவே. ஆகையால், கடன் கொடுப்போரும் கடன் வாங்குவோரும் தங்களின் நுகர்வை வீணுகத் தற்போதைக்கும் வருங்காலத்திற்குமிடையே தகாத முறையில் பிரித்துக் கொள்ள மாட்டார்கள். இறுதியாக அப்படியே கடன் கொடுக்கல் வாங்கல் ஏற்பட்டாலும் மத்திய திட்ட அதிகாரிகளினுல் உற்பத்தி செய்து பிரித்துக் கொடுக்கிற பொருள்களின் அளவின் மீது ஒருவித விளைவும் இராது. ஏனென்றுல் நுகர்வுப் பொருள்களின் மொத்தத் தேவையில் மாற்றம் எதுவும் ஏற்படாது. ஆகையால், நாம் கடன் வட்டி என்பதை ஒதுக்கிவிட்டு, பொது உடைமைச் சமுதாயத்தில் வட்டி ஒரு வகுப்புக்குச் செலுத்திய தொகை என்பது நீங்கிப் போய்விடும் என்றும், பொருளாதார வகுப்புக்களுக்கிடையே ஏற்படும் சமூகக் கெடுதல்களாகிய செல்வ ஏற்றத்தாழ்வு, பகைமை முதலியனவும் கூடவே அழிந்து விடும் என்றும் உறுதியாக உரைத்திடலாம்.

ஆனுல் வட்டி ஒரு சமுதாயம் முழுமைக்கும் பயன்படும். நாம் வட்டியை, சுற்றுவழி உற்பத்தியின் இறுதி நிலை உற்பத்தித்திறனுக்கும், முதலாளித்துவ மற்ற உற்பத்தியின் இறுதிநிலை உற்பத்தித்திறனுக்கும் உள்ள வேறுபாடு என்று கருதுவோமானுல், அது பொது உடைமைச் சமுதாயத்திலுங்கூடக் காணப்படும், ஏனென்றுல் இந்தச் சமுதாயத்திலுங் கூட உற்பத்தி செய்யும் முறை (வகை) சுற்றுவழியில்தானிருக்கும். இவ்வாறு மிகுந்த ஆக்கம் உயர்ந்த கூலியாகவும் அல்லது குறைந்தவிலை நுகர்வுப் பொருள்களாகவும் அனுபவிக்கப்படுகின்றன கூலியாகப் பங்கிட்டுக் கொடுக்கப்படுவதினுல் அது வட்டி இல்லை என்று சொல்ல முடியாது. பாம்பாவர்க் எடுத்துச் சொல்வது போல, முதலாளித்துவச் சமுதாயத்தில் சொத்து வித்தியாசமாகப் பிரிக்கப்பட்டு வட்டி அதிக அளவுக்கு ஒரு சில சொந்தக்காரர்களுக்கே கிடைக்கிறது. பொது உடைமைச் சமுதாயத்தில் ஒரு சமதொகைக்கு எல்லோருக்குமே மொத்த வட்டியில் சமமாக, ஆனுல் சிறு அளவே பங்கு கிடைக்கிறது என்ற ஒரு வேறுபாட்டைக் காண்கிறேம்,

வட்டி விகிதம் ஒரு வகுப்பைச் சார்ந்த தொகையாக இல்லாவிட்டால் பொது உடைமைச் சமுதாயத்தில் அதற்கு ஒரு முக்கியத்துவம் இராது. இந்தக் கருத்து உபயோகமற்றதா? இல்லை. இந்தக் கருத்து முக்கியமற்றதுமில்லை, பயனற்றதுமில்லை. அதனுடைய குறிக்கோள் உச்சநிலைப் பயன் என்றுல் அது பொது உடைமைச் சமுதாயத்திற்கு மிக முக்கியமாகும். பொது உடைமைப் பொருளாதார அமைப்பு முதலாளித்துவச் சமுதாயத்தின் தொழிற்

கட்டமைப்பினும் வேறுபட்ட தொழிற் கட்டமைப்பு என்றாலும், முதலாளித்துவச் சமுதாயம் தீர்க்க வேண்டிய அதே சிக்கல்களைத் தான் முதலாளித்துவத் தொழிற்கட்டமைப்பும் சமாளிக்கவேண்டிய தாக இருக்கிறது. இருவகையான பொருளாதார அமைப்புக்களும் இரு சிக்கல்களுக்கும் தீர்வு காணவேண்டும். (a) பயன் தரும் கருவிகளைப் பல கைத்தொழில்களுக்கும் நடப்பு நுகர்வுக்குப் பங்கீடு செய்து கொடுப்பதோடு, நடப்புப் பொருள்களுக்கும் எதிர் காலப் பொருள்களுக்கும் பங்கீடு செய்து தரவேண்டும். (b) பொரு ளாதார அமைப்பில் உள்ள எல்லா உறுப்பினர்களுக்கும் உற்பத்தி செய்த செல்வத்தைப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும். இந்த இரு சிக்கல்களும் ஒன்றை ஒன்று தழுவியதும், பாதிப்பதுமாகும் எனவே எந்த ஒரு சமுதாயத்தில் செல்வம், வருமானங்களின் ஏற்றத்தாழ்வு இருக்கிறதோ, அச்சமுதாயத்தின் பெருவாரியான பயன் தரும் கருவிகள் அனைத்தும் பணக்காரர்களின் விருப்பத்தை நிறைவு செய்யப் பயன்படுத்தப்படுமே யல்லாது, ஏழை மக்களின் எளிய தேவைகள் கூட நிறைவேற்றப் படாமல் போகும்.

பொதுவுடைமைச் சமுதாயத்தில் நாட்டு வருமானம் எவ்வாறு பங்கிடப்படுகிற தென்பதைக் கவனிக்க வேண்டியதில்லை. இச் சமுதாயத்தில் சொத்தின் வருமானங்கள் இல்லை என்பதாலும், பயன்தரும் வேலையில் எல்லா உறுப்பினர்களுக்கும் சமமான பங்கு உண்டு என்பதாலும் நாட்டு வருமானம் மிக நல்ல முறையில் உறுப்பினர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும். செல்வம், வருமா னங்களின் ஏற்றத்தாழ்வு மிகக் குறைவாகவே இருக்கும். அத ளுல், பயன் தரும் சாதனங்களை எவ்வாறு பங்கிடலாம் என்ற பொருளில் இனிக் கவனத்தைச் செலுத்துவோம்.

மையத் திட்ட அதிகாரி இல்லையாளுல் பல கைத்தொழில்கள், தொழில்களுக்கிடையே சாதனப் பங்கீட்டுச் சிக்கலை விலைமுறை என்ற ஓர் இயந்திர முறையினுல் (உக்தியால்) முதலாளித்துவம் தீர்த்துவிடுகிறது. விலை என்பது அளிப்பு தேவை என்ற நிலைகளின் ஒரு குறி அல்லது காட்டி. ஒரு தனிப்பொருளின் தேவைக்கும்அளிப் புக்கு மிடையே உள்ள சமநிலை அப்பொருள்களின் விலைகளின் ஏற்ற மாறுதல்களைச்செய்வதன் மூலம் ஏற்படுத்த முடியும். அதைப் போலவே பல கைத்தொழில்களுக்கிடையே கருவிகளைப் பங்கிடு வது தராதர விலைகளின் நிலையினுல் முடிகிறது. நுகர்வுப்பொருள் உற்பத்திக்கும் முதற் கருவிப்பொருள்கள் உற்பத்திக்கும் இடையே பயன்தரும் கருவிகளின் பங்கீடு வட்டி விகிதத்தினுல் நிர்ணயிக்கப் படுகிறது. முதலீட்டின் தொகை வட்டி விகிதத்தின் முதலீட்டின் இறுதி நிலைத் திறனைப் பொறுத்திருக்கிறது. அதாவது வட்டி

விகிதம் இரண்டாவது முக்கிய பணியை யுடையதாகிறது. அனேக முதற்கருவிப் பொருள் தொழில்களிடையே சாதனங்களைப் பங்கிடுதலை அது(வட்டிவிகிதம்) நிர்ணயிக்கிறது. நடப்பு வட்டி விகிதத்தைக் கொண்டு இலாபந் தரக்கூடிய தொழில்களை மேற்கொள்ள அது தொழில் முயல்வோருக்கு உதவுகிறது.

ஒரு பொதுவுடைமை அரசு கூட, பயன்தரு சாதனங்களின் பங்கீட்டுச் சிக்கலுக்குத் தீர்வுகாணவேண்டும். பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பு உற்பத்தியில் உச்சத் திறனை அடைய வேண்டுமானால் தேவை அளிப்பு என்ற நிலைகளைக் காட்டக்கூடிய விலை உக்தியைக் கையாள வேண்டும். தற்போது ஒரு பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பில் நடப்புப் பொருள்களையும் எதிர்காலப் பொருள்களையும் உற்பத்தி செய்வதை நிர்ணயிக்கும் காரணிகளை மட்டும் ஆராயலாம்.

முதலாவதாக, பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பில் சமுதாயத்தின் வரம்புக்குட்பட்ட மொத்த உற்பத்திச் சாதனங்கள் மூலதனப் பாதுகாப்புக்கும், நிகர முதலீட்டுக்கும் எவ்வளவு ஒதுக்கி வைக்க முடியும் என்பதைத் திட்ட அதிகாரிகள் நிர்ணயிக்க வேண்டும். பொதுவுடைமைச் சமுதாயத்தில் முதலீட்டுத் தொகையை நிர்ணயிப்பதைத் தனி ஒருவரில்லாமல் அரசு செய்கிறது. அரசாங்கம் முதலீட்டுச் செலவை இருவிதத்தில் ஈடு செய்கிறது. அரசாங்கம் வரிகளாகவும், கடன்களாகவும் திரட்டலாம்; அல்லது பொதுமக்கள் மீது பணமாக வரிவிதிப்புச் செய்யாமல் அவர்களைத் தங்கள் வருமானம் முழுவதும் செலவு செய்ய விட்டு விட்டு அரசுக்கு வேண்டிய பணத்தை அவர்களுக்கு விற்கும் பொருள்களின் மீது விலைகளைச் சரிப்படுத்தலே உகந்த முறை. பொதுவுடைமைச் சமுதாயத்தில், முதலாளித்துவ முறையில் இருப்பதுபோல் இல்லாமல், நிகர முதலீட்டின் தொகையைத் தேவைக்கும் வட்டிக்குமிடையே வட்டி விகிதத்தின் மூலம் செயல்படும் தானியங்கிக் காரணிகள் நிர்ணயிப்பதில்லை. பொதுவுடைமைச் சமுதாயத்தில் (1918-ல் இரஷியாவைப்போல்) சமுதாயத்தின் மூலதனக் கருவிகள் குறைவாக இருக்கும்போது அவைகளைப் பலப்படுத்த அரசு பயன்தரு கருவிகளின் பெரும் பங்கை முதலாளித்துவ முறையில் செய்வதைவிட அதிகம் செலவு செய்யும். எதிர்காலத்தில் மிகுதியாகத் துய்ப்பதற்காகச் சமுதாயம் தற்போதைக்குத் தியாகம் செய்வதை அரசு முடிவு செய்கிறது.

மொத்த முதலீட்டின் தொகையை (அளவை) அரசே முடிவு செய்வதால் இறுதியாக உற்பத்தி செய்கின்ற நுகர்வுப் பொருள்களின் விலையில் வட்டியை அடக்க விலையாகக் கொள்ளலாமா?

பொதுவுடைமை முழு தேக்க நிலைச் சமநிலையை அடைந்து விட்டால், அதாவது, அதற்கு வேண்டிய முதல் கருவிகள் அனைத்தையும் பெற்றும், புது முதலைத் திரட்டாமலும் இருந்தால், முதலின் அடக்க விலை என்பது முதலைக் காத்துக் கொள்ளும் ஒரே செலவாகும் என்றால் பொருள்களின் அடக்கச் செலவில் வட்டியைச் சேர்க்க வேண்டியதில்லை. பொருள்களின் விலைகள் உழைப்பின் விலைக்குச் சமமாகும். ஆனால் உண்மையில் நிலைமைகள் தேக்கமடைந்து காணப்படுவதில்லை; மூலதனத்தின் கருவிகள் தெவிட்டு நிலையை அடைவதில்லை. முதலின் அளிப்பு எப்பொழுதுமே தேவையை விடக் குறைவாகவே இருக்கும். முதற்கருவிப் பொருள்களை மக்கள் விரும்புவதற்கு எல்லை கிடையாது. மக்கள் தொகை மிகுதி, கண்டுபிடிப்புக்கள், மக்களின் புதுத்தேவைகள் போன்றவை முதலீட்டிற்கான புதிய வழிகளைத் திறந்து கொண்டேயிருக்கின்றன. இதற்குப் பொருள், முதலின் நிகரத் திரட்டல் ஓரளவு எப்பொழுதுமே இருக்குமென்பதாகும், இந்நிலையில் பொருள்களின் விலையில் ஓர் அம்சமாக வட்டியைச் சேர்த்துக் கொள்ளலாம். அடக்கச் செலவில் ஓர் அம்சமாக வட்டி இருப்பதென்பதற்கு மொத்த உற்பத்தி ஒரு பகுதியே அரசாங்கத்தினரால் நுகர்வுப் பொருளாகப் பங்கிடப்படுகிறது என்று பொருள். அடக்கச் செலவின் ஓர் அம்சமாக வட்டியை ஏற்காவிட்டால் ஏராள முதலைக் கொண்ட பொருள்களும் பணிகளும் மிகமலிவாகும், அதனுடன் மக்களின் தேவைகளை அரசு நிறைவு செய்யமுடியாது. ஆகையினால் முதலைக் கொண்ட பொருள்கள், பணிகள் இவைகளின் விலையில் வட்டி சேர்க்கப்படவேண்டும். மூலதனச் சந்தையும் சந்தை வட்டிவிகிதமும் இல்லாததினால், உண்மையான வட்டி விகிதம் அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்படும். அது அரசிடம் உள்ள மூலதனக் கருவிகளின் அளவு, வகை இவற்றிற்குத் தக்கவாறு அமையும்; மேலும் தேவையின் நிலையையும் பொறுத்திருக்கும். சமுதாயத்தின் மூலதன உபகரணிகள் அதிகமாவதினால் அரசு வட்டி விகிதத்தைக் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைக்கும். இந்த உண்மையான வட்டி நிர்ணயத்தைப் பற்றி இங்கு ஆராயலாம்.

ஒரு பொதுவுடைமைச் சமுதாயம் வட்டி விகிதம் என்ற ஓர் உபாயத்தை வேறொரு காரணத்திற்காகவும் கையாள வேண்டும். முதலீட்டின் மொத்தத் தொகையை முடிவு செய்த பிறகு, மற்றொரு முடிவு, பல்வேறுபட்ட முதலீட்டுத் தொழில்களிடையே சாதனங்களைப் பங்கிடுதலைப் பொறுத்தது. ஒரு முதலாளித்துவச் சமுதாயத்தில் இப் பங்கீடு வட்டி விகிதத்தோடு இணைந்த முதலீட்டின் இறுதிநிலைத் திறனால் தீர்க்கப்படுகிறது. ஒரு பொதுவுடைமைச் சமுதாயத்திலுங்கூட உற்பத்தித் திறன் உச்சமாக்கப்பட வேண்டு

மானுல் மேலே சொன்னது போன்ற ஓர் உபாயம் கையாளப்பட வேண்டும்.

இப்பொழுது பொதுவுடைமைச் சமுதாயத்தில் உற்பத்திப் பெருக்கை உண்டு பண்ணுத—ஆனுல் நாகரிக வாழ்க்கைக்கு இன்றியமையாத பலவகையான மூலதனக் கருவிகள் இருக்கின்றன. இப்பிரிவைச் சார்ந்தவையே சாலைகள், மருத்துவ இல்லங்கள், பள்ளிகள், கல்லூரிகள், விளையாடுமிடங்கள், பூங்காக்கள் முதலியன. இவற்றில் ஈடுபடுத்தப்படும் முதலுக்கு வட்டி விகிதம் கிடையவே கிடையாது. இயற்கையிலேயே பொதுவுடைமைச் சமுதாயம் இவைகளில் முதலீட்டைச் செய்யவேண்டிய அளவு ஒதுக்கி வைத்திருக்கும்.

காப்பு, முதலீடு போன்ற இனங்களைத் தவிரவும், பங்கிடும் வேலையில் வட்டிவிகிதம் மிகமுக்கிய பங்கேற்க வேண்டிய விதத்தில் ஏராளமான முதலீட்டு வழிகள் இருக்கின்றன. பங்கீடு செய்ய வேண்டுமானுல் அதற்கு வட்டி விகிதம் இருக்கவேண்டிய அவசியமில்லை. பங்கீட்டைத் தன்னிச்சையாகவும், குத்துமதிப்பாகவும், அதிருட்ட வழியாகவும் செய்யலாம். ஆனுல் இவ்விதம் செய்யப்படும் பங்கீடு சீர்கேடான பங்கீடாகும், சாதனங்களும் சேதமாகும். வட்டிவிகிதம் வெள்ளாட்டிலிருந்து செம்மறி ஆட்டைப் பிரிக்கிறது என்று கூறலாம். இது மூலதனத் திட்டங்களில் நல்லவை கெட்டவைகளைப் பிரிப்பதற்கு ஒரு திரையாக அமைகிறது. அதனுடன் எதிர்காலத்தில் மிகுந்த நல்ல வகையில் உபயோகப்படக் கூடிய முதலீட்டை மாத்திரம் அனுமதிக்கிறது.

முடிந்த பொருள்களுக்குத் தடையிலா நுகர்வோர் சந்தையிருந்தால் பொதுவுடைமைச் சமுதாயத்தில் வட்டி விகிதம் கணக்கிடுவது ஒரு பெரிய முட்டுக்கட்டையாக இராது. பொருளாதார அமைப்பில் ஒவ்வொரு மூலதன நிறுவனமும் கற்பிதமான வட்டி விகிதங்களை வைத்து முதலீடு செய்யும் தொகை அளவை வெவ்வேறு அளவில் அமைக்க வேண்டும். ஒவ்வொரு வட்டிவிகிதத்திலும் எவ்வளவு முதலீடு செய்ய வேண்டுமென்று முடிவு செய்வது அந்தத் தொழிலினுடைய முதலீட்டின் இறுதி நிலைத்திறனைப் பொறுத்தது. வட்டி விகிதமும் முதலீட்டின் இறுதி நிலைத்திறனும் எந்த நிலையில் சமமாகின்றனவோ அது வரையில் முதலீடு செய்யப்படும். இறுதிநிலைத் திறன் அல்லது எதிர்பார்க்கும் விளைவு நுகர்வோரின் தெரிந்தெடுப்பைப் பொறுத்ததாக இருக்கிறது. அதாவது அவர்கள் முடிந்த பொருள்களுக்கு எவ்வளவு விலை கொடுக்க இசைகிருர்கள் என்பதைப் பொறுத்தது. கணக்கு, புள்ளி இயல் நுட்பவினை முறையின் உதவியால் ஒவ்வொரு மூல

தனத் தொழிலின் இறுதி நிலேத்திறனைக் கணக்கிட முடியும். இம் முறையானது திட்டமிடும் அதிகாரிக்குக் கற்பித வட்டி விகிதங் களில் முதலுக்குத் தேவையின் அளவைக் கொடுக்கிறது. உற்பத் தித் திட்டங்களை ஒவ்வொரு தொழிலிலும் மையத்துத் திட்ட அதி காரிக்குத் தெரியப்படுத்தவேண்டும். பிறகு அந்த அதிகாரி வேண் டியவாறு தேவைக்கேற்ப மாற்றியமைக்க உதவும். பேராசிரியர் ஹேயக் கூறுவதுபோல, மையத் திட்ட அதிகாரி வெறும் உயர்ந்த கடன் கொடுப்போர் மட்டுமன்றி, ஒவ்வொரு தொழிலிலும் செய் ய்ப்படுகிற தவறுகளுக்கும் இறுதியில் பொறுப்பும் ஆவார்.

முதலீட்டுத் தொகையையும் வட்டி விகிதத்தையும் நிர்ணயிக்க இரு வழிகளுண்டு. முதலில் மையத்துத்திட்ட அதிகாரி எவ்வளவு முதல் முதலீடு செய்யவேண்டுமென்று நிர்ணயிக்கலாம். பிறகு உண்மையான வட்டி விகிதம் முதலீட்டு இறுதிநிலேத் திறனின் அட்டவணையை நிர்ணயிக்கும். அல்லது திட்ட அதிகாரி வட்டி விகி தத்தை நிர்ணயித்து, பிறகு முதலின் மொத்த தேவையைத் தீர்மா னிக்கலாம். முதலின் தேவையும் அளிப்பும் சமமாகுமிடத்தில் வட்டி விகிதம் நிர்ணயிக்கப் படலாம்.

இந்த வட்டிவிகிதம் நுகர்வோரின் விருப்பத்தைக் கொண்டு முடிவு செய்யப்பட்டதால் இதில் தன்னிச்சையின் அம்சமிருக்கிறது. ஏனென்ருல் பொதுவுடைமைப் பொருளாதார அமைப்பில் மூல தனச் சந்தை கிடையாது. வட்டி விகிதம் மிகக் குறைவாகவோ அல்லது மிகக் கூடுதலாகவோ இருக்கலாம். சரியான அல்லது சமநிலே வட்டி விகிதத்தை ஒரேயடியாக நிர்ணயித்துவிட முடியாது. சமநிலே வட்டி விகிதம் பலவிதமான சரிக்கட்டலுக்குப் பிறகு நிர்ண யிக்கப்படும். ஒரு திட்ட அதிகாரி சரியான வட்டி விகிதத்தை நிர்ணயிக்க எதிர்காலப் பலனையும் எதிர்பார்த்தலேயும் துணையாகக் கொள்கிருர். பொதுவுடைமைச் சமுதாயத்தில் செல்வத்தின் பங்கீடு சமமாக இருப்பதாலும், இலாபம் கொள்முதல் இல்லாமையினுலும் கூடியவரையில் ஒரு நிலேத்த நிலேமையைக் காணலாம். அரசாங் கத்தினுல் ஏற்படுத்தப்பட்ட வட்டி விகிதத்தில் சில உலக சம்பந்த மான மாறுதல்கள் இருக்கலாம். மூலதன உபகரணங்கள், சமு தாயத்தின் வருமானங்கள் இவைகள் உயர்வதால் எதிர்காலத் திற்கு வேண்டியவைகளை ஏற்பாடு செய்து கொள்ள முடியும். அதா வது வட்டி விகிதத்தைக் குறைக்கலாம். பொதுவுடைமைச் சமு தாயத்தில் வட்டி விகிதம் குறைந்திருக்கக் காரணம் ரொக்கவிருப் பம் குறைந்து காணப்படுவதே.

மூலதனத்திற்குத் தடையிலாச் சந்தை இல்லாவிட்டாலுங் கூட, மூலதனப் பராமரிப்பும் நிகர முதலீடும் உச்ச மட்டத்தை

அடையாது என்று நம்புவதற்கில்லை. உண்மையில் இதைப் பற்றிய வரையில் முதலாளித்துவச் சமுதாயத்தைவிட, பொதுவுடைமைச் சமுதாயம் சிறந்த முறையில் உள்ளது என்று நம்ப இடம் உண்டு. முதலாளித்துவச் சமுதாயத்தில் முதலீடு இலாப நோக்கையே நம்பியிருக்கிறது. மொத்த முதலீட்டின் அளவைப் பெரும்பாலும் வட்டிவிகிதத்தைவிட, எதிர்பார்க்கும் இலாப விகிதமே முடிவு செய்கிறது. இரண்டாவதாக முதலாளித்துவச் சமுதாயத்தில் தனிமனிதர்கள் அவர்களுடைய சாதனங்களை நடப்பு விருப்ப நிறைவுக்கும், எதிர்கால விருப்ப நிறைவுக்குமிடையே சமமாகப் பங்கிடத் தவறி விடுகிறார்கள். அதாவது அவர்களின் விருப்பங்கள் விவேகமற்றனவாக இருக்கின்றன. பொதுவுடைமைச் சமுதாயத்தில் திட்டமிடும் அதிகாரி பொருளாதார நலத்தை உச்சப்படுத்துகின்ற வகையில் நிகழ்காலத்துக்கும் எதிர்காலத்துக்குமிடையே பயன்படும் சாதனங்களைப் பங்கிடுவார்.

இது வரையில் ஒரே வட்டி விகிதத்தைப் பற்றித்தான் கவனித்து வந்தோம். ஆனால் பொதுவுடைமைப் பொருளாதாரத்தில் நீண்டகால வட்டி, குறுகியகால வட்டி என்று இரண்டு விதமான வட்டி விகிதங்கள் இருக்கின்றன. நீண்டகால, குறுகியகால முதல், மத்திய பாங்கு மூலம் கொடுக்கப்படுகின்றது. அதோடு கூட, நீடித்த நுகர்வுக்காக அரசாங்கமும் முதல் அளிப்புச் செய்கிறது. பொதுவுடைமைச் சமுதாயத்தில் அதிக வசதிக்காக வீடுகள், மேஜை நாற்காலிகள், மோட்டார் வாகனங்கள், ரேடியோக்கள் முதலியவற்றை அரசாங்கம் கொடுக்க ஏற்பாடு செய்கிறது. இவைகளைத் தவணைக் கொள்முறையிலும் வாடகைக்கும் அரசாங்கம் கொடுக்கும். முதலாளித்துவச் சமுதாயத்தில் ஆற்றும் பங்கையே அது பொதுவுடைமைச் சமுதாயத்திலும் செய்து வருகிறது. அதாவது உற்பத்தி அடக்கச் செலவின் ஓர் அம்சமாகவும், பயன் தரும் சாதனங்களைச் சிக்கனமாக உபயோகப் படுத்துவதற்கு ஒரு காரணமாகவும் அமைகிறது.

10. வட்டி விதமும், உற்பத்தி செய்முறையும்

வட்டி விதத்திற்கும் உற்பத்திக்கும் உள்ள உறவு நேரடியாக இல்லாமல் மறை முகமாக இருக்கின்றது. ஒரு நாட்டின் உற்பத்தி, பெருமளவில் முதலீட்டையே சார்ந்து இருக்கின்றது. முதலீடு, வட்டி விதத்தைச் சார்ந்து இருக்கின்றது. எல்லா பருவினப் பொருளாதாரக் (Macro economic) கோட்பாடுகளிலும் முதலீட்டுக்கு மிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. கீன்சுக்குப் பின் வந்த பொருளாதார வல்லுநர்கள் மட்டுமல்லாமல், பண்டைய வணிகச்சுழல் கோட்பாட்டு வல்லுநர்களும் முதலீட்டையே முதன்மையாக (நாயகமாக) வைத்துத் தங்கள் கோட்பாடுகளை எழுதிச் சென்றனர்.

வட்டி விதம், இறுதி நிலை உற்பத்தித் திறன் ஆகிய இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து ஒருவன் முதலீடு செய்கிறான் என்பது தொன்மைப் பொருளாதாரக் கருத்து. முதலுக்கான தேவை அட்டவணை—வட்டி விதத்திற்கும், தேவைப்படுகின்ற பணத்தின் அளவுக்கும் உள்ள எதிரிடையான தொடர்பினைக் காட்டுகிறது. முதலின் குறைந்து செல் இறுதி நிலை உற்பத்திக் குணமே இந்த எதிரிடைத் தொடர்புக்குக் காரணம் ஆகும்.

உழைப்பின் இறுதி நிலை உற்பத்தியும், அந்த உழைப்புக்குக் கொடுக்கப்படுகின்ற உண்மைக் கூலி விதமும் சமமாக இருக்கும் அளவு வரை, உழைப்பு பயன் படுத்தப்பட்டால்தான் ஒரு நிறுவனம் மிக அதிகமாக இலாபத்தை அடையமுடியும். அது போலவே முதலின் இறுதி நிலை உற்பத்தியும், முதலுக்கான விலையும், அதாவது வட்டி விதமும் சமமாகும் அளவுக்கு முதல் பயன் படுத்தப்பட்டால்தான் அந்த நிறுவனம் மிக அதிகமான இலாபத்தை அடைய முடியும். எனவே முதலீட்டை அதிகரிக்க அதிகரிக்க, அதன் இறுதி நிலை உற்பத்தி குறைந்து கொண்டே செல்லும்

என்னும் எடுகோளை நினைவிற் கொண்டால், வட்டி வீதம் எந்த அளவுக்குக் குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு மிக அதிக மாக முதல் பயன் படுத்தப்பட்டு, நிறுவனத்தின் இலாபம் உச்ச நிலையை அடையும் என்பது புலனாகும்.

முதற் பொருள்களின் விளைவு எதிர்காலத்தில்தான் கிடைக் கிறது. இத்தகைய எதிர்காலம் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பது அப்பொருள்களின் உறுதியைப் பொறுத்திருக்கிறது. முதற் கருவியைக்கொண்டு பொருள்களை உற்பத்தி செய்யும்போது உழைப்பு, தேவையான கச்சாப் பொருள்கள், சக்தி, பொருள்களை விற்பனை செய்ய ஆகும் செலவுகள் ஆகியவைகளையும் மனத்தில் கொள்ள வேண்டும். உற்பத்தி செய்த பொருள்களை விற்று, வரும் வருவாயிலிருந்து மேற்கூறிய செலவினங்களைக் கழித்து, மீதம் உள்ள தொகையே முதற் கருப் பொருளினால் சம்பாதிக்கப்பட்ட தொகையாகும். நிகர மதிப்புத் தெரிய வேண்டுமானால் தேய் மானத்திற்கான தொகையையும் கழிக்க வேண்டும். ஆனால் மொத்த மதிப்புத்தான் கணக்கிடுவதற்கு எளிதாகவும் வழக்கமாக வும் இருக்கிறது. இவ்வாறு கணக்கிடப்பட்ட மொத்த மதிப்பு, வட்டி வீதத்தைவிட அதிகமாக இருந்தால் அந்த முதலீடு இலாப கரமானது என்றும், அப்படி இல்லாமல், வட்டி வீதத்திற்குச் சம மாகவோ அல்லது குறைவாகவோ இருக்குமானால் முதலீடு நஷ்டத்தைத்தான் கொடுக்கும் என்றும் கூறலாம். இத்தகைய நஷ்டத்தைக் கொடுக்கக்கூடிய முதலீடுகள் ஒரு நிறுவனத்தில் சலன நிலையை ஏற்படுத்துகிறது. அந்த நிறுவனம் குறைவான முதலைப் பயன்படுத்துவதன் மூலம் சலன நிலையை ஒழுங்குபடுத்த லாம். மேலும் உண்மையான உலகில் நிலவுகிற நிறை குறைப் போட்டியில், நிறுவனத்தில் பொருள் உற்பத்தி பெருகும்போது, அதற்கு ஏற்றவாறு நுகர்வோர் தேவை அதிகரிப்பதில்லை. உற் பத்தி செய்த பொருள்களை விற்பனை செய்யும் முயற்சியில் விலையைக் குறைப்பதனால் வருவாய் குறைகிறது.

இதுவரை முதலின் வேலை வாய்ப்பு அதிகரிக்கும்போது ஒரு நிறுவனத்தில் ஏற்படுகிற விளைவுகள் சொல்லப்பட்டன. இனி பொருளாதாரத்தை முழுமையாக எடுத்துக்கொண்டு ஆராயலாம். விற்பத்தியில் அளவுக்கதிகமான முதலைப் பயன் படுத்துவோமே யானால் விளைவுகள (yields) குறையும் என்றாலும், ஒரு நிறுவனத் திற்கும் பொருளாதாரத்திற்கும் (economy) ஒரு வேறுபாடு இருக் கிறது. உற்பத்தி முறைகள் சுற்று வழி முறைகளாகவோ அல்லது முதற் செறிவுள்ள (capital intensive) முறைகளாகவோ இருக்கும் போது தான் முதல் அதிகமான அளவில் பயன்படுத்தப்படுகின் றது. பொருளாதார முழுமைக்குப் பொருந்துகின்ற இந்தச் சிறப்பு

அம்சம் நிறுவனத்திற்குப் பொருந்தாது. குறைவான முதலைவிட அதிகமான முதலைக் கொண்டு உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் அடக்கவிலை குறைவாகவே இருக்கும். அதாவது கச்சாப் பொருள்கள் மற்றும் உற்பத்திக் காரணிகளினால் ஆகும் வருடாந்திரச் செலவுகளை நிலையாக வைத்துக்கொண்டால், முதற் செறிவுள்ள உற்பத்தி முறை அதிகமான பண வருவாயைக் கொடுக்கும்.

எடுத்துக்காட்டாக, ஒரு பொருளை A, B, C, என்ற மூன்று முறைகளில் செய்யலாம் என்று கொண்டால், A முறை குறைவான முதலையும், B முறை சிறிது அதிகமான முதலையும், C முறை Bயை விட அதிக முதலையும் பயன்படுத்துகின்றன. ஆனால் மூன்று முறைகளிலும் முதற் கருவிகள் 10 வருட உறுதிப்பாடு உடையன. மேற்கூறியவைகளை நினைவில் நிறுத்திப் பின்வரும் அட்டவணையை நோக்க வேண்டும். வட்டி அல்லாத மொத்த அடக்கச் செலவு மூன்று வகையான உற்பத்தி முறைகளிலும் சமமாக இருந்தாலும், அதிகமான முதற் செறிவுள்ள முறைகள் அதிக வெளிப்பாட்டைத் தருகின்றன. எனவேதான் ஓர் அலகின் உற்பத்திச் செலவு (வட்டி சேர்க்காமல்) முதற் செறிவுள்ள உற்பத்தி முறையில் மிகக் குறைவாக இருக்கிறது.

ஆனால் அடக்கச் செலவில் வட்டியும் ஒரு பகுதியாகும். வட்டி வீதம் அதிகமாக இருந்தால் மிக அதிக முதற் செறிவுள்ள உற்பத்தி முறையில், (உதாரணமாக 20 சதவீதமானால்) ஓர் அலகு உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. இந்நிலையில் குறைவான முதற்செறிவுள்ள A முறையே சிறந்தது என்றும், வட்டி வீதம் சதவீதத்திற்குக் குறையுமானால் C முறையே சிறந்தது என்றும் கூறலாம்.

மேற்கண்டவாறு வட்டி வீதத்திற்கும் முதலீட்டுக்கும் உள்ள தொடர்பு பன்னெடுங்காலமாகக் கருதப்பட்டு வந்தது. தொன்மைப் பொருளாதார வல்லுநர்கள் கருத்தும் அதுவே ஆகும். 1930-ம் ஆண்டில் இக்கருத்து பற்றி ஐயப்பாடு தோன்றியது. பிறகு நடந்த ஒரு சில கணக்கெடுப்பிலும் முதலீட்டை நிர்ணயம் செய்யும் காரணிகளில் வட்டி வீதம் முக்கியத்துவம் இல்லாதது என்று புலனாயிற்று. பல தொழிலதிபர்களை அவர்கள் முதலீட்டை நிர்ணயம் செய்யும் காரணிகளை வரிசைப் படுத்துமாறு கேட்கப்பட்டபோது வட்டி வீதத்திற்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை. இவ்வாறு கருத்தறிய விடப்படும் கேள்வித்தாள்கள் (questionaires) பல வட்டி வீதத்தின் முக்கியத்துவமற்ற தன்மையை நிரூபித்தன. நிறுவனங்களுடைய முதலீடு, வட்டி வீதம் நெகிழ்ச்சி அற்றதாய் இருக்குமாயின் வட்டி வீதம் குறைவாகவோ அதிகமாகவோ இருந்தாலும் நிறுவனம் கவலை கொள்வதில்லை.

உற்பத்தி முறை	தேவையான முதலீடு	வருடாந்திரத் தேய்மானம்	உழைப்பு, கச்சாப் பொருள்களுக்கு ஆகும் செலவு	மொத்தச் செலவுகள்	வருடாந்திர வெளிப்பாடு	ஓர் அலகு உற்பத்தி செய்ய ஆகும் செலவு (வட்டி சேராது)	மொத்த அடக்கச் செலவு			ஓர் அலகு அடக்கச் செலவு (வட்டியுடன்)		
							20%	10%	1%	20%	10%	1%
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)	(11)	(12)	(13)
A	200	20	80	100	1000	.100	140	120	102	.140	.120	.102
B	500	50	50	100	1800	.077	200	150	105	.154	.115	.081
C	800	80	20	100	1500	.067	260	180	108	.173	.120	.072

மேலும் வணிகச்சுழல் நிலைகளுக்கும், உற்பத்தி முறை மாற்றங்களுக்கும் ஏற்றவாறு வட்டி வீதம் முதலீடுகளைப் பாதிக்கும். குறிப்பாக மந்த காலங்களில் (depression periods) எச்ச ஆற்றலின் (excess capacity) காரணமாக வட்டி வீதம் முக்கியத்துவம் அற்றுப் போய்விடுகிறது. உதாரணமாக ஒரு பொருளை உற்பத்தி செய்ய 100 எந்திரங்கள் இருக்கின்றன எனக்கொண்டால், மந்த காலங்களில் பொருளின் தேவை குறைவதால் அப்போது 60 எந்திரங்கள் போதுமானதாக இருக்கின்றன. இத்தகைய காலங்களில் வட்டி வீதத்தை எந்த அளவு குறைத்தாலும் முதலீடுகள் நடைபெறா.

பிறகு எந்தக் காரணிதான் முதலீட்டை நிர்ணயம் செய்கிறது என்ற வினா எழுகிறது. எதிர்காலத்தில் நம்பிக்கை உடைய நிறுவனங்கள் முதலீடு செய்கின்றன என்று பொதுவாகக் கூறலாம். ஏனெனில் எதிர்கால விற்பனை வருவாயில் நம்பிக்கையற்றவை முதலீடு செய்யவே மாட்டா. தொழில் சம்பந்தமான எதிர்பார்ப்புக்கள் அந்த நிறுவனத்தின் கடந்தகால அனுபவத்தையே பெருமளவில் சார்ந்திருக்கின்றன. மிகச் சமீப காலத்தில் தன் பொருளுக்கு ஏற்பட்டிருக்கும் அதிகத் தேவை ஒரு நிறுவனத்தை எதிர்காலத்தில் பூரண நம்பிக்கை கொள்ளும்படிச் செய்கின்றது. தேவை தேக்கம் (Stagnant) உடைய நிறுவனம் எதிர்காலத்தில் நம்பிக்கையற்று இருக்கின்றது. இருந்தாலும், மேற்கூறியவற்றுள் முதல் வகையான நிறுவனங்கூட, தம் தொழிற்சாலைகளில் எச்ச ஆற்றல் இருக்குமேயானால் மேற்கொண்டு முதலீடு செய்வதில்லை. ஏனெனில் எதிர்காலத்தில் ஒரு நிறுவனத்தின் பொருளுக்குத் தேவை அதிகரித்தால் கூட, எச்ச ஆற்றலைப் பயன்படுத்தி அதைப் பூர்த்தி செய்யலாம். இறுதியாக, தொழில் நுட்ப முன்னேற்றங்கூட முதலீட்டைப் பாதிக்கும். ஒரு புதிய கண்டு பிடிப்பு ஒரு நிறுவனத்தின் எந்திரங்களை வழக்கிலில்லாதவைகளாக மாற்றிவிடக் கூடும். அதன் காரணமாக, நிறுவனத்தின் எதிர்காலத்தைப் பற்றிய கணிப்பு ஓரளவு மாறும். எனவே முதலீடு மேற்கூறிய மாற்றங்களுக்கு ஏற்ப மாறும்.

முடிவாக வட்டி வீதம் குறையும்போது மொத்த அலகு அடக்கச் செலவு (total unit cost) குறைவதால், தொழிற்செறிவுகொண்ட உற்பத்தி முறையினால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விலைகள் குறைகின்றன. சிறப்பாக மிக அதிகமான முதலீடுகள் கொண்ட மின்சாரக்கட்டணம், வீட்டு வாடகை போன்றவை வட்டி வீதம் குறையும்போது குறைகின்றன. ஆனால் முதலைக் குறைவாகப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களின் விலை அவ்வாறு வட்டி வீதம் குறையும்போது குறைவதில்லை. சிறப்பாக, சேவைகளின் (services) விலை குறைவதே இல்லை.

11. தனி மனிதனுடைய சேமிப்புக்கள்

"சிறுதுளி பெருவெள்ளம்" என்பது பழமொழி. சிறுகச் சிறுகச் சேர்த்தால் பெருக வாழலாம் என்பார் பெரியோர். ஆனால் இது குறித்த பொருளாதார வல்லுநர்கள் கருத்தை உணர்தல் இன்றியமையாதது ஆகும். முதலில் நாம் தனி மனிதனுடைய சேமிப்பு என்ற தொடரின் பொருளை அறிய வேண்டும். சுருங்கச் சொல்லின் வருமானத்தில் நுகர்வு போக எஞ்சியிருப்பது சேமிப்பு என்பார் கெயின்ஸ் என்னும் பொருளாதார அறிஞர். இந்த விளக்கம் தனி மனிதனுக்கும் அவன் வாழும் சமுதாயத்திற்கும் பொருந்தும். தனி மனிதனுடைய சேமிப்பு அவனுடைய வருமானத்தில் நுகர்வு போக எஞ்சியிருப்பதாகும். சான்றாக, ஒரு குறிப்பிட்ட தனிமனிதனின் ஆண்டு வருமானம் ரூ. 12,000 எனக் கொள்ளலாம். அவர் ஆண்டு ஒன்றுக்கு, நுகர்விற்குச் செலவிடும் தொகை ரூ. 10,000 ஆகிறது எனக் கொள்வோம். மிஞ்சியுள்ள தொகை ரூ. 2,000 ஓர் ஆண்டில் அவருடைய சேமிப்பு ஆகும். இதைப் போலவே நாட்டின் மொத்த சேமிப்பு நாட்டு வருமானத்திலிருந்து நாட்டு மக்களின் மொத்த நுகர்வைக் கழித்து வருகின்ற தொகைக்குச் சமமாக இருக்கும். எனவே தனி மனிதனுடைய சேமிப்பிற்கும் நாட்டின் மொத்தச் சேமிப்பிற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு எனத் தெரிகிறது. அஃதாவது நாட்டின் சேமிப்பு என்பது தனி மனிதர்களுடைய மொத்தச் சேமிப்பின் கூடுதல் என அறியலாம். இதிலிருந்து நாம் தனி மனிதரின் சேமிப்பு அதிகமானல் நாட்டின் சேமிப்பு அதிகமாகும் என்று எண்ணத் தோன்றும். இதே எண்ணத்தைத்தான் தொன்மைப் பொருளாதார நிபுணர்களும் கொண்டிருந்தனர். இதனல் அவர்கள் மக்களை அதிகமாகச் சேமிக்கத் தூண்டினர். அவர்கள் தனி மனிதருடைய சேமிப்பு நாட்டிற்கு இன்றியமையாதது என எண்ணினர்.

ஆனல் கெயின்ஸ் கோட்பாடு நேர்மாருன கருத்துடையது. கெயின்ஸ் தனி மனிதருடைய சேமிப்பு ஒரு "சமுதாயத் தீமை"

எனக் கூறுகிறார். எவ்வாறெனில் ஒரு தனி மனிதன் சேமிக்கத் தொடங்கினால் அஃது இன்னொருவருடைய சேமிப்பை அந்த அள விற்குக் குறைக்கிறது. அதனால் சமுதாயச் சேமிப்பு உயர்வதில்லை. சான்றாக, ஒருவர் மாதம் ரூபாய் 200 சேமித்துக் கொண்டிருக்கிறார் எனக்கொள்வோம். அவர் ஒரு காலத்தில் தனது சேமிப்பை ரூ. 200-லிருந்து ரூ. 300 ஆக உயர்த்துகிறார். எனவே அவர் தனது நுகர்வை ரூ. 100 அளவிற்குக் குறைத்துக் கொண்டுள்ளார் என் பதை அறியலாம். இதனால் அவரது பயனுள்ள தேவை (effective demand) ரூபாய் 100 அளவுக்குக் குறையும். இதனால் அவர் வாங்க இருந்த பொருள்களின் உற்பத்தியாளருடைய வருமானம் ரூபாய் 100 அளவிற்குக் குறையும். அவர்கள் வருமானம் இந்த அளவிற்குக் குறைந்து, அவர்கள் சேமிப்பும் குறையும். இதனால் ஒரு தனி மனிதருடைய சேமிப்பு அதிகரிப்பு, உற்பத்தியாளரு டைய சேமிப்புக் குறைவினால் சரிசெய்யப்பட்டும் நாட்டின் மொத் தச் சேமிப்பு உயராது என அறியலாம். இதனால் நாம் அறிவது யாதெனில் தனி மனிதர்கள் சேமிப்பைப் பெருக்காமல், அவர்கள் செலவை அதிகரித்து, மற்றவர்களின் வருமானத்தைப் பெருக்கி, நாட்டின் எல்லாத் துறைகளிலும் வளம்பெற உதவி செய்ய வேண் டும் என்பதாகும்.

ஆனால் இந்தக் கோட்பாடும், கெயின்ஸ் விளக்கமும் நம் நாடு போன்ற பின் தங்கிய நாடுகளுக்குப் பொருந்தாது. ஏனெனில் இங்கு நுகர்வோர் பொருள்கள் பலவற்றில் பற்றாக்குறை காணப் படுகின்றது. இந்நிலையில் மக்கள் சேமிப்பைப் பெருக்காது செல விடுவர் எனில், பயனுள்ள தேவை பெருகி விலைவாசி உயர்ந்து பொருளாதாரத்தைச் சீர்குலைத்துவிடும். எனவே நம் நாட்டிலும், பிற பின் தங்கிய நாடுகளிலும் உள்ள மக்கள் சேமிப்பைப் பெருக்க வேண்டும். இந்தச் சேமிப்பை, பாங்கு போன்ற நிதி நிறுவனங்கள் மூலமாகத் திரட்டிப் பயனுள்ள வகையில் முதலீட்டுக்குப் பயன் படுத்தினால்தான் நாடு பல துறைகளிலும் வளர்ச்சியைப் பெற முடியும்.

உபயோகிப்போர் அடக்கச் செலவு (User Cost)

உபயோகிப்போர் அடக்கச் செலவு தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் மதிப்புக் கோட்பாட்டுக்குத்தான் தேவையெனக் கருதியிருந்த கெயின்ஸ், அதன் இன்றியமையாமையை உணர்ந்து தனது நூலின் பிற்சேர்க்கையாக 6-வது அத்தியாயத்திற்குப் பிறகு எழுதியுள்ளார். இதனைக் கணித முறையில் விளக்கினால்,

தொழில் முனைவோன் உபயோகிப்போர் அடக்கச்செலவு

$A_1+(G^1-B^1)-G$ க்கு இணையாக இருக்கும்.

A_1 என்பது தொழில் முனைவோன் மற்ற தொழில் முனைவோர் களிடம் இருந்து வாங்கிய பொருள்களின் மதிப்பு ஆகும்.

G என்பது குறிப்பிட்ட கால முடிவில் அந்த மூலதனம் கருவி யின் தற்போதைய உண்மை மதிப்பு (actual value) ஆகும்.

G^1 என்பது அந்த மூலதனக் கருவியைப் பயன் படுத்தாது வைத்ததினால் அதற்கு இருந்திருக்கும் மதிப்பு ஆகும்.

B^1 என்பது அந்த மூலதனக் கருவியைப் பயன்படுத்துவதற் கும், மேம்படுத்துவதற்கும் செலவு செய்யப்பட்டுள்ள தொகை ஆகும்.

$G-(G^1-B^1)$ என்பது இயந்திரக் கருவியின் நிகர மதிப்பைவிட அதிகமுள்ள மதிப்பு ஆகும். இது தொழில் முனைவோனின் தற் போதைய முதலீடு ஆகும். இதனை I எனக் கொள்வோம். எனவே,

(1) உபயோகிப்போர் அடக்கச்செலவு அவனுடைய மொத்த விற்பனை ஆகும்.

அது A_1-I க்கு இணையாகும்.

அஃதாவது $U=A_1-I$

A_1 மற்ற தொழில் முனைவோர்களிடமிருந்து மூலதனக் கருவியை வாங்குவதற்குக் கொடுத்த தொகை ஆகும்.

I இப்பொழுது மூலதனக் கருவியில் முதலீடு செய்துள்ள தொகையாகும்.

இதனால் உபயோகிப்போர் அடக்கச் செலவு என்பது ஒரு மூலதனக் கருவியைப் பயன்படுத்தாமல் வைத்திருந்தால் இருக்கும் மதிப்புக்கும், பயன் படுத்துவதால் ஏற்படும் மதிப்புக்கும் உள்ள வேறுபாடு என அறியலாம். இதையே டட்லி டில்லார்ட் ஒரு மூலதனக் கருவியைப் பயன் படுத்தாமல் இருப்பதைவிட, இருக்கும் மதிப்பிற்குப் பயன்படுத்துவதனால் குறைகின்ற மதிப்பு உபயோ கிப்போர் அடக்கச் செலவு என வரையறுக்கிறார்.

இந்த உபயோகிப்போர் அடக்கச் செலவு நமக்கு ஒரு நிறுவனத்தின் விற்பனையாகின்ற வெளிப்பாட்டுப் பொருளின் குறுகிய கால அளிப்பு விலையை விளக்கம் செய்யப் பெரிதும் பயன்படுகிறது. அஃதாவது குறுகிய கால அளிப்பு விலை, இறுதி நிலை உபயோகிப்போர் அடக்கச் செலவிற்கு இணையாக இருக்கும்.

உபயோகிப்போர் அடக்கச்செலவு நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் இணைக்கும் காரணிகளில் ஒன்றாக அமைந்துள்ளது. தொழில் முனைவோன் அவன் உற்பத்தி அளவை நிர்ணயிப்பதில் உபயோகிப்போர் அடக்கச் செலவைக் கணக்கெடுத்துக் கொள்கிறான். அவன் உற்பத்திக் கருவிகளை இப்பொழுது பயன் படுத்துவதால் அதிகப்பயன் தருமா அல்லது பயன் படுத்தாது வைத்திருந்து பிற்காலத்தில் பயன் படுத்துவது அதிகப் பயன் தருமா என அறிய, உபயோகிப்போர் அடக்கச்செலவுக் கோட்பாட்டைப் பயன் படுத்துகிறான். இதே கோட்பாட்டில் ஒரு பகுதியை மார்ஷலும் தனது நூலில் * முதன்மைச் செலவில் ஒரு பகுதியாகச் சேர்த்துள்ளார், ஆனால் அது கணக்கிடும் முறையைப்பற்றி அவர் ஒன்றும் கூறவில்லை.

இந்தக் கோட்பாடு, உற்பத்தியை ஒழுங்கு படுத்தி அதிக லாபமடைய தொழில் முனைவோனுக்குப் பெரிதும் உதவி செய்கிறது.

---

* Ref. The General Theory of Employment, interest and money.

12. பண ஊதியமும், வட்டி விதமும்

வட்டி விதத்திற்கும் ஊதியத்திற்கும் என்ன சம்பந்தம் இருக்க இயலும் என்ற வினு எழுவது நியாயமே. 1929-ம் ஆண்டின் பொருளாதார மந்தத்திற்குப் பிறகு இரண்டிற்கும் உள்ள உறவு களைக் குறித்துப் பொருளாதரர அறிஞர்கள், குறிப்பாக பேராசிரியர் கெயின்ஸ் அவர்கள் விளக்கியுள்ளார்கள். பண ஊதியக் குறைப்பு வட்டி விதத்தை எவ்வகையில் கட்டுப் படுத்துகின்றது என்பது குறித்து அறிவது அவசியம்.

பண ஊதியம் என்பது தொழிலாளிக்கு அவனுடைய உழைப் பிற்காக, பண அளவில் கொடுக்கப்படும் ஊதியத்தைக் குறிப்ப தாகும். உண்மை ஊதியம் என்பது அப்பணத்தைக்கொண்டு அவன் வாங்கக்கூடிய பொருள்களின் அளவையும், அதனுல் அமையும் அவனுடைய வாழ்க்கைத் தரத்தையும் குறிப்பதாகும். பொருள் களின் விலை நிலை உயர்வதன் காரணமாக, பண ஊதியம் மாருதிருப் பினும், உண்மை ஊதியம் உயர்ச்சியடையும் என்பதும் உண்மை. பண ஊதியத்தை எல்லா ஆலைகளிலும் பொதுவாகக் குறைப்பதன் மூலம், உற்பத்திச் செலவைக் குறைத்துப் பண்டங்களின் விலை யினையும் குறைத்து, தேவையைப் பெருக்கி, முழுவேலை நிறை வினைப்பெற இயலும் என்ற ஓர் ஆய்வு நெடுங் காலமாக இருந்து வருகின்றது. தொன்மைப் பொருளாதார அறிஞர்கள் (classical economists) காலத்துப் பெருமக்களாலும், பின்னர் பேராசிரியர் பிகு (Pigow) அவர்களாலும் இக்கருத்து மேற்கொள்ளப்பட்டு வந்துள் ளது. வேலையின்மைக்குக் காரணமே, உயர்ந்த ஊதிய அளவுதான் என்றுகூட இவர்கள் கருதினுர்கள். பேராசிரியர் எட்வின்கேனன் அவர்களும், குறைந்த ஊதியத்தில் அதிகமான அளவிற்கு வேலை வாய்ப்பு அளிக்க முடியும் என்று நம்பினுர். நெடுங்காலமாக மாருத ஊதிய அளவே, வேலை வாய்ப்பின்மைக்குக் காரணம் என் பதும், ஊதியத்தைக் குறைப்பதன் மூலம் வேலை நிறைவை ஏற் படுத்த இயலும் என்பதும் இவர்களின் கருத்தாகும்.

பேராசிரியர் கெயின்ஸ் அவர்கள் இவ்வாதத்தில் உள்ள மிகவும் தவறான கருத்தை எடுத்துக்காட்டி யுள்ளார். தொன்மைப் பொருளாதார நிபுணர்கள் எவ்வெப்பொழுது பண ஊதியத்தில் குறைப்பு செய்யப்படுகிறதோ, அவ்வப்பொழுதெல்லாம் அது பொருளாதாரத்தின் பயனுற்ற தேவையின் மேல் எவ்வித மாற்றமும் ஏற்படுத்தவதில்லை என்றே நம்பினார்கள். உதாரணத்திற்கு, குண்டூசி செய்யும் ஆலை ஒன்றை எடுத்துக் கொள்வோம். இவ்வாலையில் பண ஊதியக் குறைப்பு செய்வதாகக் கொள்வோம். இதன் காரணமாக அவ்வாலை ஊழியர்களின் வாங்கும் சக்தி குறைய நேரிடும். ஆனால் ஊசி ஆலை ஊழியர்களின் வாங்கும் சக்தி குறைந்ததன் காரணமாக, ஊசியின் மொத்தப் பயனுள்ள தேவை குறையாது. ஏனெனில் ஊசி ஆலைத் தொழிலாளர்களின் ஊசித் தேவையானது, மொத்த ஊசித்தேவையில் மிகவும் குறைவான எண்ணிக்கையில் எடுத்துக் கொள்ளக்கூடிய ஒன்று அன்று. அதே சமயம் ஊசி ஆலைத்தொழிலாளர்களின் ஊதியக் குறைப்பின் காரணமாக, ஊசியின் உற்பத்திச் செலவு குறைந்து, ஊசியின் விலையும் குறைந்து, அவைகளின் விற்பனை பெருகி, அதன் காரணமாக மேலும் ஊசி உற்பத்தி உயர்ந்து, அத்தொழில் வளர்ச்சியுற்று வேலை வாய்ப்புக்கள் பெருகும். தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் இவ்வாய்ப்பு ஏதாவது ஒரு தொழிலை மட்டும் தனியே பிரித்து ஆய்வுக்கு உட்படுத்தப்படுமாயின் முற்றிலும் உண்மையாகவே அமையும்.

பேராசிரியர் கெயின்ஸ் அவர்கள் தீவிரமாக ஆராய்ந்து குறைகளைக் குறிப்பிட்டுள்ளார். தனிப்பட்ட ஒரு தொழிலைப் பொறுத்த மட்டிலும் இவ்வாய்ப்பு உண்மையே. அத்தொழிலின் மொத்தத் தேவையும் வேலைவாய்ப்புக்களும் உயரும் என்பது சரியானது தான். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தில் பொதுவான ஊதியக் குறைப்பு மேற்கொள்ளப்பட்டால், பின்னர் எல்லா ஊழியர்களின் ஊதியமும் அதற்குஏற்றாற்போல் குறையநேரிடும். ஊழியர்கள் குறைவான வாங்கும் சக்தியே பெற்றிருப்பதால், பொருளாதாரத்தின் மொத்தத் தேவையும் குறைய நேரிடும். ஊதியக் குறைப்பின் காரணமாக உற்பத்திச் செலவு குறைந்து விலை குறையும் என்பது உண்மையேயாயினும், அதனுடன் உழைப்பாளிகளின் வாங்கும் சக்தி குறைந்து பொருளாதாரத்தின் மொத்தத் தேவை குறையும் என்பதும் உண்மை என்பதை மறுக்க இயலாதன்றோ? ஊதியம் எவ்வாறு உற்பத்திப் பொருள்களைப் பொறுத்த வரையில் உற்பத்திச் செலவுக் காரணியாக இருக்கின்றதோ, அவ்வாறே உழைப்பாளிகளைப் பொறுத்தவரையில் தேவையின் ஆதாரமாக இருக்கின்றது. எனவே உற்பத்தியாளர்கள் பொது ஊதியக் குறைப்பு

முயற்சியினை மேற்கொண்டால் பொருளாதாரத்தின் மொத்தத் தேவை நசுக்கப்படும் என்பதை நினைவிற்கொள்ள வேண்டும். மொத்தத் தேவை நசுக்கப்பட்டால் வேலைவாய்ப்பு அளவும் தேவைக்கேற்பக் குறைய நேரிடும்.

பண ஊதியம் குறைந்ததன் காரணமாக உண்மை ஊதியம் குறைய நேரும் என்று கருதவேண்டியதில்லை. காரணம் என்னவெனில் ஒரு பக்கம் பணஊதியம் குறைக்கப்படும்போது மறுபக்கம் தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் ஆய்வுப் படியே பொருள்களின் விலையும் அதே அளவிற்குக் குறைய நேரிடுவதால், உண்மை ஊதியம் முன்னிருந்த நிலையிலேயே மாருது இருக்கின்றது. உண்மை ஊதியம் மாருது இருப்பதின் காரணமாக உற்பத்தியாளர்களின் இலாபம் உயர வழியில்லை. உற்பத்தியாளர்களின் இலாபம் உயராததால், அவர்களுக்கு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஊக்கம் இராது. உற்பத்தி பெருகாததன் காரணமாக வேலைவாய்ப்புக்களும் பெருக வாய்ப்பு இல்லை. எனவே கிடைக்கும் முடிவு என்னவெனில், பண ஊதியத்தைக் குறைப்பதன் மூலம் ஒரு பொருளாதாரத்தில் நிலவிவரும் வேலை வாய்ப்பின் அளவை உயர்வடைச் செய்ய இயலாது. எனவே தொன்மைப் பொருளாதார அறிஞர்களின் தீர்வு, இப்பிரச்சினையைத் தீர்ப்பதாக அமையவில்லை. தொன்மைப் பொருளாதார ஆய்வின் முக்கியமான குறைபாடு, மொத்தப்பயனுள்ள தேவையினைப் பற்றிய கோட்பாட்டை அறியாமையாகும். அதற்குக் காரணம் அவர்கள் ஒரு குறிப்பிட்ட தொழிலை மட்டும் எடுத்துக் கொண்டு ஆராய்ந்ததே யாகும்.

பேராசிரியர் கெயின்ஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளவாறு பண ஊதியத் திறனைப் பொதுவாகக் குறைப்பதன் மூலம் உழைப்பாளிகளின் உண்மை ஊதியம் குறைவதில்லை. உண்மை ஊதியம் குறையாத வரையில், உற்பத்தியாளர்களுக்கு உற்பத்தியைப் பெருக்க ஊக்கம் கிட்டப்போவதில்லை; வேலைவாய்ப்புக்களும் பெருக வழியில்லை. எனவே மற்றவை மாருதிருப்பின் உண்மை ஊதியமும் வேலை வாய்ப்பின் அளவும் எதிர் மறையில் மாறுபடும் என்று கெயின்ஸ் குறிப்பிட்டுள்ளார். அதாவது உண்மை ஊதியம் குறையும்போது வேலைவாய்ப்புக்கள் பெருகும் என்பதும், உண்மை ஊதியம் உயரும்போது வேலைவாய்ப்புகளைப் பெருக்க, பண ஊதியத்தைக் குறைக்க வேண்டும் என்பதும் தேவையில்லை. பண ஊதியத்தை நிலையாகக் கொண்டே சமூகத்தின் மொத்தப் பயனுள்ள தேவையினைப் பெருக்குவதன் மூலம் வேலைவாய்ப்பு அளவினைப் பெருக்க முடியும் என்று குறிப்பிடுகின்ருர். சமூகத்தின் மொத்தப்

பயனுள்ள தேவையினை அரசிறைக் கைக்கோளின் (Fiscal policy) மூலமும், பணவாக்கக் கைக்கோளின் (Monetary policy) மூலமும் பெருக்க இயலும் என்று கூறுகின்றார். அதே சமயம் கூட்டுப் பேரங்களின் மூலம் பண ஊதியத்தை நிலையாகக் கொள்ள முடியும். மொத்தப் பயனுள்ளதேவை உயர்ந்து, அதே சமயம் பண ஊதியம் நிலையாக இருக்குமாயின் உண்மை ஊதியம் குறைய நேரிடும். எவ்வாறெனில் குறுகிய காலத்தில் தொழிலமைப்பு தொழிற் கருவிகள் உற்பத்தி முறைகள் முதலியன பொதுவாக மாறுவதில்லை. எனவே உற்பத்தியாளர்கள் மொத்தப் பயனுள்ள தேவையின் உயர்விற் கேற்ப உற்பத்தியைப் பெருக்கும்போது இறுதிநிலை உற்பத்திச் செலவு உயர்கின்றது. அதன் காரணமாக உற்பத்தியாளர்கள், தங்கள் உற்பத்திப் பொருள்களின் விலைகளை உயர்த்த நேரிடுகின்றது. பொருள்களின் விலை உயர்வு, உண்மை ஊதியத்தைக் குறைக்கின்றது. பண ஊதியத்தைக் குறைக்க மேற்கொள்ளப் படும் முயற்சிகள், உழைப்பாளர்களால் கடுமையாக எதிர்க்கப்படுகின்றன. ஆனால் உண்மை ஊதியக் குறைப்பு அவர்களுக்குத் தெரிவதில்லை. பண ஊதியக் குறைப்பு அவர்கள் தங்கள் கடனைத் திருப்பித் தருவதனையும் பாதிக்கின்றது. எனவே எவ்வகையில் பார்த்தாலும் மொத்தப் பயனுள்ள தேவையினை உயர்த்துவதன் மூலம் வேலைவாய்ப்புக்களைப் பெருக்குவதே, பணஊதியத்தைக் குறைப்பதைக் காட்டிலும், சிறந்த முறையாகத் தோன்றுகிறது.

வேலை வாய்ப்பின் அளவை நிர்ணயம் செய்யும் மூன்று காரணிகள் இறுதிநிலைத் துய்ப்புநாட்டம் (Marginal propensity to consume), முதலீட்டின் இறுதிநிலைத் திறன் (Marginal efficiency of capital), மற்றும் வட்டிவீதம் (Rate of interest) ஆகியனவாகும். பணஊதியக் குறைப்பு மூன்றையுமே பாதிக்கின்றது என்றாலும், இவற்றில் வட்டிவீதமே முக்கிய காரணியாக அமைந்திருப்பதாலும் இவ்விரண்டின் தொடர்பு குறித்து விரிவாகக் காணலாம்.

பொதுவாக, பண ஊதியக்குறைப்பு வேலைவாய்ப்பின் அளவில் ஏற்படுத்தும் சாதகமான விளைவுகளுடன் வட்டி வீதக் குறைப்பினையும் குறிப்பிடுதல் வேண்டும். பண ஊதியக் குறைப்பு பொதுவிலை மட்டம் தாழ்வதற்குக் காரணமாக அமைகிறது. அதன் விளைவாக, பணத்திற்கான அன்றாடக் கொடுக்கல் வாங்கல் தேவை Transactions motive) குறைகின்றது. பொருளாதாரத்தில் பணத்தின் அளிப்பு மாறாதிருக்கும் பொழுதும், கொடுக்கல் வாங்கலுக்கான பணத்தேவை குறையும்போதும், ஊக நோக்கங்களுக்கு அதிகமான பணம் கிடைக்கின்றது. அதாவது ஊக நோக்கங்களுக்கானபணத்தின் அளிப்பு அந்நோக்கத்திற்குத் தேவையான பணத்தைவிட

அதிகமாக இருக்கின்றது. இதன் விளைவாக, வட்டி வீதம் குறைகின்றது. வட்டி வீதம் குறைய, முதலீடும், வேலைவாய்ப்புக்களும் தூண்டப்படுகின்றன. இவ்வாறு பொதுப்பண ஊதியக் குறைப்பு வட்டி வீத வீழ்ச்சியை ஏற்படுத்துவதையே "கெயின்ஸ் விளைவு" (Keynes effect) என்று குறிக்கப்படுகின்றது. கெயின்ஸ் விளைவாவது: பொதுப் பண ஊதியக் குறைப்பு எவ்வளவிற்கு அதிகமாகச் செய்யப்படுகின்றதோ, அந்த அளவிற்கு விலைகள் குறையும்; விலைகள் எவ்வளவு அதிகமாகக் குறைகின்றனவோ, அவ்வளவு அதிகமான அளவிற்குக் கொடுக்கல் வாங்கல் தேவைக்கான பண அளவு ஊக வணிக நோக்கங்களுக்குக் கிடைக்கும்; எவ்வளவு அதிகமான அளவிற்குப் பணம் கொடுக்கல் வாங்கல் நோக்கங்களிலிருந்து விடுபடப்படுகின்றதோ, அதே அளவிற்கு அல்லது வீதத்தில் வட்டி வீதம் வீழ்ச்சியடையும்.

கெயின்ஸ் விளைவு குறிப்பிடும் மூன்று கருத்துக்கள் ஆய்வுக்குரியன. முதலாவதாக வட்டி வீத வீழ்ச்சி, கொடுக்கல் வாங்கல் தேவை நோக்கத்திலிருந்து விடுபடும் பணத்தின் அளவை மட்டுமின்றி, ரொக்க விருப்ப வளைவுக் கோட்டின் தன்மையையும் பொறுத்ததாகும். வட்டிவீத வீழ்ச்சியானது ஊகவாணிப நோக்கத்திற்குத் தேவையான பணத்தின் வட்டி வீத நெகிழ்ச்சி (Interest elasticity) யினையும் பொறுத்துத்தான் அமைகிறது. அதாவது ஊக வாணிப நோக்கத் தேவைப்பணம் வட்டிவீத நெகிழ்ச்சி யுடையதா நெகிழ்ச்சியற்றதா என்பதைப் பொறுத்ததாகும். ஊகவாணிப நோக்கத்திற்குத் தேவையான பணம், வட்டி வீதம் நெகிழ்ச்சி யுடையதாக இருப்பின் வட்டிவீதம் அதிகமாகக் குறையாது. சாதாரணமாகப் பேர நோக்கிலிருந்து ஊகவாணிப நோக்கத்திற்காகப் பணம் விடுவிக்கப்படும்போது, வட்டிவீதம் மிகவும் குறைதல் வேண்டும். ஆனால் அதே சமயம் மக்களின் ரொக்க விருப்பம் அதிகரிப்பதன் காரணமாக, ஊகவாணிப நோக்கத்திற்குத் தாராளமாகப் பணம் கிடைத்த போதிலும் வட்டிவீதம் அதிகமாகக் குறையாது. அதாவது ஊகவாணிப நோக்கத்திற்குத் தேவையான பணம் வட்டி நெகிழ்ச்சியடையதாய் இருப்பதால் வட்டிவீதம் அதிகமாகக் குறையாது. மக்கள் குறைந்த வட்டி வீதத்தில் அதிகமான பணத்தை ஊகவாணிப நோக்கிற் கொள்ள விரும்புகிறார்கள். அதற்குமாறாக ஊகவாணிப நோக்கிற்குத் தேவையான பணம் வட்டி நெகிழ்ச்சியற்றதாய் இருப்பின், வட்டிவீதம் பெரிதும் குறையும். இதற்குக் காரணம் ஊகவாணிப நோக்கிலிருந்து பேர நோக்கிற்குப் பணம் விடுபடும்போது மக்களின் ரொக்க விருப்பம், பணம் அதிக அளவில் கிடைத்தாலும், குறைவாக இருப்பதால் பணத்தின் தேவை அதிகரிப்பதில்லை. எனவே வட்டிவீதம் பெரிதும்

வீழ்ச்சியடைகின்றது. இரண்டாவதாகப் பண ஊதியக் குறைப்பின் காரணமாகவும், விலைவீழ்ச்சியின் காரணமாகவும் வட்டி வீதம் பேரளவில் குறையலாம். ஆனால் வேறு காரணங்களினால், பண ஊதியக் குறைப்பு, தொழில் துணிவோர்களின் இலாப எதிர் நோக்கைப் பாதிக்குமேயானால் வட்டிவீதக் குறைப்பு பொளாதாரத் தின் முதலீட்டையும் வேலை வாய்ப்புக்களையும் பெருக்காது.

மூன்றாவதாக, ஊதியக் குறைப்பு வட்டிவீதத்தில் ஏற்படுத்தும் விளைவும், அதன் பின்விளைவாக வேலைவாய்ப்பின் அளவில் ஏற்படும் மாறுதல்களும், பணக் கோட்பாட்டு வழியே (Monetary route) அமைவதாக கெயின்ஸ் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஊதியக் குறைப்பு பேர நோக்கத்திற்கான பண அளிப்பைக் காட்டிலும் பணத்தேவையைக் குறைக்கின்றது. இதன் விளைவாக வட்டிவீதம் குறைக்கப்படுகின்றது. வட்டிவீதக் குறைப்பு முதலீட்டையும், வேலைவாய்ப்புக்களையும் தூண்டுகின்றது. இவ்வாறு ஊதியக் குறைப்பு, வட்டிவீதத்தைக் குறைப்பதன் மூலம் பொருளாதாரத் தின் முதலீட்டையும் வேலைவாய்ப்புக்களையும் பெருக்குகின்றது. ஆயினும் வட்டிவீதக் குறைப்பு, ஊதியக்குறைப்பு மூலமாக ஏற்படு தல் வேண்டாம்—என்பதே கெயின்ஸ் அவர்களின் வேண்டுகோ ளாகும். இதனை முறையாகத் திட்டமிடப்பட்ட - நன்றாக மேற் கொள்ளப்பட்ட பணவியல் கொள்கையின் மூலமே ஏற்படுத்த முடியும். உதாரணமாக மத்திய வங்கி, நாட்டின் பணஅளிப்பை அதிகரிப்பதின் மூலமாக வட்டிவீதக் குறைப்பு நேரியவழியில் செய்ய லாம். எனவே கெயின்ஸ் அவர்கள் நெகிழ்ச்சியுடைய பணஇயல் கொள்கைவழியினையே நெகிழ்ச்சியுடைய ஊதியக் கொள்கையினை விடச் சிறந்ததாகக் கருதுகின்றார்.

தீவிரமாக ஆராய்கையில் இரண்டு கொள்கைகளும் ஒன்று தான் என்றபோதிலும், நம் முன் உள்ள சிக்கல், எது நடை முறைக்கு மிகவும் உகந்த ஒன்று. நெகிழ்ச்சியுடைய ஊதியக் கொள்கையா? அல்லது நெகிழ்ச்சியுடைய பணவியல் கொள் கையா? ஊதியக் கொள்கை குறைபாடுகளும், அல்லல்களும் நிறைந்ததாக கெயின்ஸ் கருதுகின்றார். ஊதியக் குறைப்புக் கொள்கை, தொழிற்சங்கங்களினால் கடுமையாக எதிர்க்கப் படலாம். தொழிலுறவில் மிகவும் மோசமான உரசல்கள் ஏற்படலாம். அதற்கு மாறாக, பணவியல் கொள்கை எவ்விதமான எதிர்ப்பையும் எந்த மூலையிலிருந்தும் ஏற்படுத்துவதில்லை. எனவேதான் முட் டாள்களே பணவியல் கோட்பாட்டிற்குப் பதிலாக, ஊதியக் குறைப் புக் கோட்பாட்டை விரும்புவார்கள் என்று கெயின்ஸ் மிகவும் கடுமையாகக் கூறியுள்ளார்.

தொன்மைப் பொருளாதார நிபுணர்களின் கருத்தைப் பிரதி பலித்து, பண ஊதியத்தைக் குறைத்து, நுகர்ச்சி வேட்கையை அதிகரிப்பதின் வாயிலாக, வேலை வாய்ப்பைப் பெருக்க முடியும் என்று 'பிகு' வெளியிட்ட கருத்து, "பிகுவிளைவு" எனக் கூறப்படு கிறது. இதனை மறுத்து எவ்வாறு பொது ஊதியக் குறைப்பு வட்டி வீதத்தைக் குறைத்து மூலதனப் பெருக்கையும் வேலைவாய்ப்புப் பெருக்கத்தையும் ஏற்படுத்தும் என்று கெயின்ஸ் கூறிய கருத்து 'கெயின்ஸ் விளைவு' எனவும் வழக்கில் உள்ளது. இவ்விரண்டு கருத்துக்களுமே இன்று நடைமுறைக்கு ஒவ்வாதன. தொழிற் சங்கங்கள் வலிமையாக உள்ள இந்நாளில் ஊதியக் குறைப்பு என் பது நினைத்தும் பார்க்க முடியாத ஒன்றாகும். ஊதியக் குறைப்பின் மூலம் வேலைவாய்ப்புக்களைப் பெருக்க இயலாது எனினும், ஊதியம் உயர்ந்து கொண்டே செல்லும் போக்கு ஓரளவிற்காவது தடை செய்யப்படுதல் வேண்டும் என்பதும், அது ஓரளவிற்கு விலை மட்டத்தை நிலை நிறுத்தப் பயன்படும் என்பதும்—உண்மை. இவ் வாறு பொருளாதார அறிஞர்களின் ஆராய்ச்சி நேரடியான பலன் தரக்கூடிய ஒன்றையும் அளிக்காது போயினும், பண ஊதியத்திற் கும் வட்டி வீதத்திற்கும் உள்ள தொடர்பினை நன்கு விளக்கப் பயன்பட்டுள்ளது என்பது மறுக்க இயலாத உண்மையாகும்.

BIBLIOGRAPHY

1. S. Lakshminarasimhan—"The Theory of Interest".
2. J. M. Keynes—"The General Theory of Employment, and Money"
3. Henry Hazalitt—"Failure of New Economics"
4. George N. Halm—"Monetary Theory" II Edition.
5. L. H. Henry—"The History of Economic Thought"
6. Eric Roll—"A History of Economic Thought"
7. Alexander Gray — "The Development of Economic Doctrine"
8. Gardner Ackley—"Macro economic Theory"
9. Thomas F. Durnburg & Duncan M. Mc Dougall } "Macro Economics".
10. Lawrence R. Klein—"The Keynesian Revolution"
11. Mark Blaug—"Economic Theory in Retrospeet" II Edition.
12. R. J. Ball—"Inflation and the Theory of Money"
13. Dudley Dillard — "The Economics of J. M. Keynes The theory of Monetary Policy"
14. J. K. Mehta—"Fondations of Eeonomics" Vol. II
15. Sir Dennis Robertson— Essays in Money and Interest Edition 1966.
16. F H. Hahn & F. P. R R. Brechling — "The Theory of Interest Rates" (Edited).

கலைச் சொற்கள்

A

Absolute — முழுமையான
Active — செயற்படு
Adjust — சரிப்படுத்தல்
Agio — காலக்கழிவு
Alternative forms — மாற்று வடிவங்கள்
Aspect — தோற்றம்
Assert — உறுதியாய்ச் சொல்
Assumption — எடுகோள்

B

Bank — வங்கி
Bank rate — வங்கிவீதம்
Barter maket — பண்டமாற்றுச் சந்தை

C

Cannon law — புனித விதி
Capital — அசல் அல்லது முதல்
Circulating capital — புரளும் முதல்
Fixed Capital — நிலையான முதல்
Physical Capital — சட முதல்
Capital equipment — முதற்கருவி
Capital goods — முதற்கருவிப் பொருள்கள்
Capital market — மூலதனச் சந்தை
Capital maintenance — மூலதனப் பராமரிப்பு
Capital project — மூலதனச் சட்டம்
Capital intensive — முதற் செறிவு கொண்ட
Capitalism — முதாளித்துவ முறை

Central Planning Authority	—	மையத்திட்ட அதிகாரி
Characteristics	—	இயல்புகள்
Cheap Money Policy	—	மலிவான பணக்கோள்
Classical Theory	—	தொன்மைக் கோட்பாடு
Class income	—	வகுப்பு வருமானம்
Competition	—	போட்டி
Perfect Competition	—	நிறைநிலைப் போட்டி
Concept	—	சமூகக் கருத்து
Constituients	—	கூறுகள்
Consumption	—	நுகர்வு
Credit	—	நாணயம்

D

Deflation	—	பணவாட்டம்
Demand	—	தேவை
Device	—	உபாயம்
Discreation	—	விவேகம்
Distribution	—	பங்கீடு
Durable consumption	—	நீடித்த நுகர்வு

E

Economy	—	பொருளாதாரம்
Economic Welfare	—	பொருளாதார நலன்
Progressive Economy	—	முன்னேறிவரும் பொருளாதாரம்
Effect	—	விளைவு
Elements	—	மூலகம்
Entrepreneur	—	தொழில் முயல்வோன்
Exchange	—	பண்டமாற்று
Excess capacity	—	எச்ச ஆற்றல்
Exploitation	—	சுரண்டல்
External Ecnomics	—	வெளிச்சிக்கனங்கள்

F

Factors	—	காரணிகள்
Factors of production	—	உற்பத்திக் காரணிகள்
Fallacy	—	தவறான வாதம்
Flow	—	ஓட்டம்
Flexibility	—	வளைந்து கொடுக்கும் தன்மை

Formulation — தெளிவுரை
Fund — நிதி
National subsistence fund — தேசிய பிழைப்பு நிதி

G

Goods — பொருள்கள்
Capital goods — முதற்கருவிப் பொருள்கள்
Consumer goods — நுகர்வோர் பொருள்கள்
Government Security — அரசுப் பத்திரம்

H

Hicks — இக்சு
Henry Hazlitt — என்றி ஆஸ்லிட்
Hoarding — குவித்தல்
Hawtry — ஆட்ரி
Hypothetical — கற்பிதமான
Hire purchase — தவணைக் கொள்முறை

I

Increased product — மிக்குற்ற ஆக்கம்
Individualistic economy — தனித்த பொருளாதாரம்
Income — வருவாய்
Interest — வட்டி
Interest elasticity — வட்டிவீத நெகிழ்ச்சி
Gross Interest — மொத்த வட்டி
Net Interest — நிகர வட்டி
Rate of interest — வட்டி வீதம்
Contractual rate of interest — ஒப்பந்த வட்டி வீதம்
Natural rate of Interest — இயற்கை வட்டி வீதம்
International gold standard — பன்னாட்டுத் தங்கத்தரம
Keynes — கீன்சு (கெயின்ஸ்)

L

Labour — உழைப்பு
Stored up labour — சேமிக்கப்பட்ட உழைப்பு
Labourer — உழைப்பாளி
Labour intensive — உழைப்புச் செறிவு கொண்ட

Legal tender — சட்ட அடிப்படையில் மாற்று உள்ளவைகள்

Liquidity preference — ரொக்க விருப்பம்
or
நீர்மை விருப்பம்

Limitted — வரையறை செய்யப்பட்ட

M

Macro economics — பருவினப் பொருளாதாரக் கொள்கை

Marginal — இறுதி நிலை

Marginal efficiency — இறுதிநிலைச் செயல் திறன்

Marginal productivity — இறுதிநிலை உற்பத்தித்திறன்

Marginal utility — இறுதிநிலைப் பயன்பாடு

Market — சந்தை

Maintenance — காப்பு

Mass production — மிகுந்த உற்பத்தி

Maximum efficiency — உச்சநிலைப் பயன்

Mede — மீட்

Mechanism — சாதனம்

Money — பணம்

Monetary authorities — பணவியல் அதிகாரிகள்

Mosaic Law — யூதச் சட்டம்

N

Net accumulation — நிகரத் திரட்டல்

O

Organisation — கட்ட அமைப்பு

Output — வெளிப்பாடு

P

Passive — செயற்படா

Phenomenon — நூதனக்காட்சி

Policy · கைக்கோள்

Potent factor — சக்தியுள்ள காரணி

Price level — விலைமட்டம்

Process — செயல் முறை

Production — உற்பத்தி
Factors of Production — உற்பத்திக் காரணிகள்
Produced factors of production — உற்பத்தி செய்யப்பட்ட உற்பத்திக் காரணிகள்
Means of Production — உற்பத்திச் சாதனங்கள்
Round about method of production — சுற்றுவழி உற்பத்திமுறை
Productivity — உற்பத்தித் திறன்
Physical — சட உற்பத்தித்திறன்
Marginal — இறுதிநிலை-உற்பத்தித் திறன்
Propensity — மனச்சார்பு
Profit — இலாபம்
Gross profit — மொத்த இலாபம்
Net profit — நிகர இலாபம்
Proposition — கூற்று
Counter proposition — எதிர்க்கூற்று

Q

Quantity of Money — பணத்தின் பரிமாணம்

R

Return — விளைவு
Rent — வாரம்
Resource — வளப்பொருள்கள்
Return — விளைவு
Rigidity — இணக்கமின்மை

S

Satisfaction — விருப்ப நிறைவு
Saturation — தெவிட்டு நிலை
Security market — பத்திர அங்காடி
Securities — பத்திரங்கள்
Sensitive — உணர்ச்சி உள்ளதான
Speculative motive — யூகவாணிக ஊக்கி
Spot transaction — உடன் நடவடிக்கை
Standard of living — வாழ்க்கைத் தரம்
Stock — இருப்பு
Subjective — பொருள் சார்பற்ற அல்லது மனச் சார்புள்ள

Supply — அளிப்பு
Surplus — உபரி
Synthesis — தொகுப்பு

T

Technique — தொழில் நுட்பம்
Terms — கெடு
Theory — கோட்பாடு
Thesis — விவரணம்
Antithesis — எதிர் விவரணம்
Time deposit — காலங்குறிவைப்பு
Time lag — இடைக்காலம்
Time preference — காலத்தேர்வு
Trade cycle — வணிகச்சுழல்
Transaction — காரியம் (பேரம்)
Transaction motive — பேர ஊக்கி

U

Under developed — வளர்ச்சி குறைந்த
Uniform — ஒரு படித்தான
Utility — பயன்பாடு
Marginal Utility — இறுதிநிலைப் பயன்பாடு

V

Value — மதிப்பு
Net — நிகர மதிப்பு
Vice versa — மறுதலையாக

W

Wages — கூலி
Wages Fund — கூலிநிதி
Waiting — காத்திருப்பு, காத்திருத்தல்
Welfare — நலம்

Y

Yield — விளைவு

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

சென்னை

✱

பின்வரும் பொருள்களில்
பட்டப்படிப்பிற்குரிய நூல்கள்
விரைவில் வெளிவரும்

கணிதம்	—	41	நூல்கள்
இயற்பியல்	—	28	,,
வேதியியல்	—	39	,,
தாவரவியல்	—	30	,,
விலங்கியல்	—	40	,,
பொறியியல்	—	50	,,
வரலாறு	—	45	,,
அரசியல்	--	34	,,
பொருளாதாரம்	--	83	,,
வணிகவியல்	—	36	,,
புள்ளியியல்	—	16	,,
உளவியல்	—	8	,,
புவியியல்	—	18	,,